
https://t.me/tamilpdfebooks
முத்துலட்சுமி ராகவன்
அழகான ராட்சசியே...
பாகம் - III

https://t.me/tamilpdfebooks

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

அழகான ராட்சசியே...! பாகம் - 3

உரிமை : ஆசிரியருக்கு

பொருள்	:	நாவல்
மொழி	:	தமிழ்
முதல் பதிப்பு	:	டிசம்பர் 2014
வெளியீடு	:	லட்சுமி பாலாஜி பதிப்பகம் 68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு, சி.ஐ.டி. நகர், தி.நகர், சென்னை - 600 035 செல் : 95669 42486
நூலின் அளவு	:	1x8 கிரவுன்
தாள்	:	11.6 kg புக் பிரிண்ட்
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்தப்பக்கங்கள்	:	400

விலை : ₹ 200/-

லேசர் டைப் செட் : விஜி கிராஃபிக்ஸ், மதுரை.

அச்சிட்டோர் : பாரதி அச்சகம், சென்னை-5.

https://t.me/tamilpdfebooks

முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது.... இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்...

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ... திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்...

இப்படிக்கு
முத்துலட்சுமி ராகவன்

https://t.me/tamilpdfebooks

ஆசிரியர் கடிதம்...

குடத்துக்குள் எரியும் விளக்கு - III

என் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

இவன் எனது அன்புச் சகோதரன்.. கூடப் பிறக்காதவன் என்ற போதிலும் நெருங்கிய உறவில் ஒன்று விட்ட தம்பியாக வந்து வாய்த்தவன்.. என் கணவரின் தங்கையை மனந்திருப்பவன்..

'ஸ்ரீனிவாஸ் தேவாம்சம்..'

இந்தப் பெயர் திரையுலகை சேர்ந்தவர்களுக்கு மிகப் பரிச்சயமானது.. சீனிவாசன் என்ற பெயரைக் கொண்ட இவன்.. 'நா.. தே..' என்ற பெயரில் கல்கண்டு இதழில் துணுக்குகளையும்.. பல சுவையான செய்திகளையும் எழுதிய தேவாம்சம் பெரியப்பாவின் மகன்.. ஒளிப்பதிவாளர் பி.சி. ஸ்ரீராமின் சிஷ்யனான இவன் தனது மூத்த மகனுக்கு தனது குருவின் பெயரையே வைத்திருக்கிறான்.. 'ஸ்ரீராம்..' இதுதான் இவனது மூத்த மகனின் பெயர்..

தன் பெயரையும் தனது தகப்பனாரின் பெயரையும் இணைத்து 'ஸ்ரீனிவாஸ் தேவாம்சம்..' ஆக மாறியிருக்கும் இவன்.. 'ஸ்ரீ' என்ற பெயரில் பல திரைப்படங்களில் ஒளிப்பதிவாளராக பணியாற்றியிருக்கிறான்..

'ஐஸ்..'

'ஸ்ரீ' காமெராமேனாக பணியாற்றிய இந்தப் படத்தை.. திண்டுக்கல் தியேட்டரில் முதல்நாளில் முதல் ஷோவில் பார்த்தேன்.. படத்தின் ஒவ்வொரு காட்சியிலும் இது என்னுடைய தம்பி ஒளிப்பதிவு பண்ணியது என்ற பரவசம் உண்டானது..

ஸ்ரீனிவாசனுக்கு ஆர்ட் பிலிம் மீது ஆழ்ந்த ஈடுபாடும் பிரேமையும் உண்டு.. இயக்குநராக மாறவேண்டும் என்ற லட்சியம் இவனுக்குள் தீயாக எரிந்து கொண்டிருக்கிறது.. அடிக்கடி இவன் உருவாக்கி வைத்திருக்கும் கதைகளைப் பற்றி காட்சி அமைப்புடன் என்னிடம் விவரிப்பான்.. 'கட்..' 'ஆக்சன்..' முதலான அத்தனை

https://t.me/tamilpdfebooks

வார்த்தைகளும் கதைக்கு இடையில் வந்து என்னை படப்பிடிப்புத் தளத்தில் கொண்டு போய் நிறுத்தும்..

மணிக்கணக்கில் கதை சொல்பவன்.. அதை போனில் தான் சொல்வான்.. நேரில் இவனை நான் இருமுறைதான் பார்த்திருக்கிறேன்..

புதுமணத் தம்பதியினரான நானும், என் கணவரும் தேவாம்சம் பெரியப்பாவின் வீட்டுக்கு விருந்துக்குப் போனபோது முதன் முதலாக இவனை சந்தித்தேன்.. அப்போது பெரியப்பா திருநெல்வேலியில் வசித்து வந்தார்..

ஸ்ரீனிவாசன் அப்போது சின்னஞ் சிறுவனாக இருந்தான்.. அதற்கப் பின்னால் பல வருடங்கள் கழித்து இவன் என்னிடம் போனில் பேசிய போது திருநெல்வேலியில் நான் எழுதிய சிறுகவிதையை மறக்காமல் நினைவில் வைத்திருந்து சொன்னான்..

அடிக்கடி போனில் பேசுவான்.. அத்தனை பேச்சுக்களும் சினிமா சம்பந்தமான அவனது அதீத ஆர்வத்தின் வெளிப்பாடாகவே இருக்கும்.. அவன் பார்த்த உலகச் சினிமாக்களின் கதைகளை என்னிடம் விவரிப்பான்..

“கத்தி முனையில் நடக்கிறதைப் போல ஒரு சப்ஜெக்ட்டுக்கா..”

ஒரு காலகட்டத்தில் இதை அடிக்கடி சொல்லுவான்.. அந்தக் கதையை படமாக்கும் தருணம் இது வரை அவனுக்கு வாய்க்க வில்லை..

திறமையான ஒளிப்பதிவாளன்.. உலகத்தின் பல நாடுகளை சுற்றி வந்தவன்.. இவனைப் பற்றி எழுதப் போகிறேன் என்று சொன்ன போது.. வேண்டாம்க்கா என்று மறுத்தவன்..

“நிறைய இண்டர் வியூக்களை நான் அவாய்டு பண்ணியிருக்கேன்க்கா.. முக்கியமான சேனல்களின் அழைப்புகளை நிராகரித்திருக்கிறேன்.. நான் எதைச் சாதித்து விட்டேன்க்கா. அவங்களுக்கு இண்டர்வியூ கொடுக்க..?” என்று கேட்டான்...

https://t.me/tamilpdfebooks

விளம்பரங்களைத் தேடும் சினிமா உலகில்.. பேட்டிகளைத் தவிர்க்கும் வித்தியாசமான திறமையாளன் இவ்ன..

ஸ்ரீனிவாஸ் தேவாம்சம்
கோயம்பேடு, சென்னை.
போன் : 99621 55200

இதுதான் இவனது முகவரி.. குடத்துக்குள் விளக்காக இருக்கும் இந்த திறமை சாலிக்கு தக்க வாய்ப்புக் கிடைத்தால் கோபுரத்தின் விளக்காக ஒளிர் விடுவான்.. ஒளிப்பதிவாளனாக இவன் தன்னைப் பதிவு செய்து கொண்டுதான் இருக்கிறான்.. நிற்க நேரமில்லாமல் ஒடிக் கொண்டிருக்கும் இவனுக்குள் இயக்குனராகும் கனவு அமிழ்ந்துள்ளது..

அப்படியொரு வாய்ப்புக்கிடைத்து இவன் இயக்குநரானால் அந்தப் படத்தின் முதல் நாளைய முதல் காட்சியினைப் பார்க்கும் முதல் ஆளாக நானிருப்பேன்..

இரண்டாவது முறையாக இவனை இரண்டு வருடங்களுக்கு முன்னால் சந்தித்தேன்.. அறிவு ஜிவிகளுக்கு அடையாளமான தாடி மீசையுடன் இருந்தான்.. 'அக்கா' என்று என்னை மிக எளிதாக அடையாளம் கண்டு கொண்டான்..

குடத்துக்குள் விளக்காக இருக்கும் இவனது திறமை வெளிப்படும் நாள்வரவேண்டும்..

– நட்புடன் –

முத்துலட்சுமி ராகவன்

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com
website : www.muthulakshmiraghavan.com

https://t.me/tamilpdfebooks

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

அழகான ராட்சசியே...!

பாகம் - 3

69

சொன்ன சொல்லைத் தாங்கிடாத..
அழகான ராட்சசி நீ....

நரேந்திரன் அசைவற்று நின்றான்.. அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவனையே பார்த்தபடி நின்றவளின் விழிகளில் வந்து போன ஓராயிரம் உணர்வலைக்களுக்கான அர்த்தம் என்னவென்று அவனுக்குப் பிடிபடவே இல்லை...

அவளது கருவிழிகளில் இருந்தது கோபமா..? இல்லை குமுறலா..?

பதிலை எதிர்பார்த்து நின்றிருந்தவனுக்குப் பதில் கொடுக்காமல் ஊர்மிளா மடமடவென்று மாடிப்படிகளில் ஏறிப் போய் விட்டாள்..

“இதுவும் சரிதான்..” என்றாள் அகல்யா..

“இத்தனை பேருக்கு முன்னாலே நீ கேள்வி கேட்பன்னு எதிர்பார்த்திருக்க மாட்டா.. அதான் மாடி

https://t.me/tamilpdfebooks

ரூமுக்குப் போயிட்டா.. தனியா உன்கிட்ட விளக்கம் சொல்லலாம்ன்னு நினைக்கிறாளோ என்னவோ.. நீ போப்பா..”

அகல்யா குத்தலாக சொன்னாள்.. அவளது தொனியில் தெரிந்த கிண்டலில் அருண்குமார் அகல்யாவை முறைத்தான்..

“அப்படி அண்ணி நினைச்சா.. அதில தப்பென்னம்மா இருக்கு..? ஹஸ்பெண்டு அண்ட் வொய்புக்குள்ள ஆயிரம் பெர்சனல் இருக்கும்.. மத்தவங்க அதில தலையிடக் கூடாது..”

“நீ சொல்கிறதும் சரிதாண்டா அருண்.. ஆனா.. நரேந்திரன் எல்லோரையும் நிற்க வைச்சு அவங்க முன்னாலே கேள்வி கேட்டுட்டானே.. அதுக்கான பதிலை அவ எல்லோருக்கும் முன்னாலே கொடுத்தாதானே நரேந்திரனுக்கு அது மரியாதையாய் இருக்கும்..? இப்படித் தனியா வா பேசிக்கலாம்ன்னு போனா நம்ம வீட்டில வேலை செய்கிறவங்களே என்ன பேசுவாங்க..?”

“ஒன்றையும் பேசமாட்டாங்க..” எரிச்சலுடன் வெடித்தாள் அர்ச்சனா..

“பேசறதுக்கு என்ன இருக்கும்மா..?”

“ஏண்டி..? ராதா யார்ங்கிற கேள்வி இருக்கே..”

அகல்யா வெகு சாமர்த்தியமாக ராதாகிருஷ்ணன் என்ற பெயரை ராதாவாக மாற்றிக் காட்டினாள்.. அந்த சூட்சுமத்தை அங்கிருந்தவர்களால் உணரமுடியவில்லை.. அகல்யா அப்படியொரு விளையாட்டை ஆடிக்

https://t.me/tamilpdfebooks

கொண்டிருக்கிறாள் என்பதே அங்கிருந்த யாருக்கும் தெரியாது.. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்டிருக்கும் சிறு பிணக்கை அகல்யா ஊதிப் பெரிதாக்குகிறாள் என்பதுதான்..

ஏற்கனெவே ஒருமுறை ராதா என்ற ஊர்மிளாவின் தோழியை ராதாகிருஷ்ணன் என்று விளையாட்டுக்குச் சொன்னதாக அகல்யா நடத்தி முடித்திருந்த நாடக காட்சியால்.. அதைப்போல எதையோ நினைத்துக் கொண்டு நரேந்திரன் ஊர்மிளாவிடம் கேள்வி கேட்டு விட்டான் என்றே அங்கிருந்தவர்கள் நினைத்தார்கள்..

"நீ ஏம்ப்பா நிற்கிற..? மாடிக்குப் போ.." எள்ளலுடன் சொன்னாள் அகல்யா..

இந்த அம்மா வாயை வைத்துக்கொண்டு சும்மா இருந்தால் தேவலாம் என்று அருண்குமாருக்கும், அர்ச்சனாவிற்கும் தோன்றியது.. மற்றவர்களோ கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு எரிகிற தீயில் எண்ணையை ஊற்றாவிட்டால் அவள் எப்படி அகல்யா ஆவாள் என்று பல்லைக் கடித்தார்கள்..

"அண்ணி வர்றாங்க.." அர்ச்சனா பதட்டத்துடன் சொன்னாள்..

எதற்காக இந்த பதட்டம் என்ற நினைவுடன் திரும்பிப் பார்த்த் நரேந்திரனின் கண்கள் இடுங்கின..

அங்கே ஊர்மிளா கையில் பெட்டியுடன் இறங்கிக் கொண்டிருந்தாள்..

https://t.me/tamilpdfebooks

“இந்தக் கொடுமையை எங்கேயும் கண்டதில்லை..” என்றாள் அகல்யா..

‘ஆமாமாம்.. நீயிருக்கும் இடத்தில நடக்கிற கொடுமைகள் வேற எங்கேயும் நடக்காதுதான்..’ வனிதா பொருமினாள்..

“கட்டின புருசன் கேள்வி கேட்டா பெட்டியைத் தூக்கிக்கிட்டு ஒரு பெண்டாட்டியாகப் பட்டவ வீட்டை விட்டு வெளியே போகக் கிளம்புவாளா..? இது பிளாக் மெயிலால்ல இருக்கு... என் இஷ்டத்துக்கு நான் இருப்பேன்... நீ கேள்வி கேட்டா பெட்டியைத் தூக்கிக்கிட்டுப் போயிருவேன்னு மிரட்டறதைப் போலல்ல இருக்கு..”

“அம்மா..”

“என்னையேண்டி அடக்கப் பார்க்கிற.. நாளைக்கு ஊர், உலகத்தில பெண்டாட்டியை அடக்கத் தெரியாதவன்னு உன் அண்ணனைப் பத்தியில்ல பேசப் போகறாங்க..”

“யாரும் எதுவும் பேச மாட்டாங்க.. பேச இதில என்ன இருக்கு..?”

“நிறைய இருக்குடா அருண்.. நீ விவரம் புரியாம பேசற.. நரேந்திரன் வெளிநாட்டுக்குப் போயிருந்தப்ப அவனோட பெண்டாட்டியைப் பார்க்க அவ கூடப் படிச்ச பிரண்டு வந்தாப்புலயாம்.. ரெண்டுபேரும் வீடு தங்காம பெங்களூரைச் சுத்தி வட்டம் போட்டுக்கிட்டு இருந்தாங்களாம்.. திரும்பி வந்த நரேந்திரன் அதைப்

https://t.me/tamilpdfebooks

பத்தி பெண்டாட்டிகிட்ட கேள்வி தேட்டானாம்... நீ எப்படி என்னைக் கேள்வி கேட்கலாம்ன்னு அவ பெட்டியைத் தூக்கிக்கிட்டு கிளம்பிட்டாளாம்ன்னு பேச மாட்டாங்களா..?"

அப்படியெல்லாம் பேசுவார்கள் என்று நரேந்திரனின் மனதில் பதியும்படி போதித்தாள் அகல்யா... அவள் போதனையை என்றுமே அவன் கேட்டுக் கொண்டதில்லை... அன்றும் அதுபோல எதையும் பேசாமல் மௌனமாக நின்றிருந்தவனின் மனதில் ஒரே ஒரு கனல்தான் இருந்தது..

அது.. அவன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல மறுத்து ஊர்மிளா பெட்டியோடு வீட்டை விட்டு வெளியேறுகிறாள் என்பது..

ஊர், உலகம் பேசும்படி அவன் மனைவி நடந்து கொண்டிருக்க மாட்டாள் என்பதை அவன் சர்வ நிச்சயமாக நம்பினான்.. அப்போதும் ஊர்மிளாவைப் பார்க்க வந்தது தோழன்தான்.. அவன் பெயர் ராதாகிருஷ்ணன் என்றே அவன் நினைத்திருந்தான்.. அதில் அவன் தவறேதும் காணவில்லை..

அவனுக்கு வேண்டியதெல்லாம் அவன் கேட்ட கேள்விக்கான நேரடியான பதில் மட்டுமே..

அவன் சொன்னதற்கு.. ஆமாம்.. ராதாகிருஷ்ணன் என்னுடன் படித்த என் தோழன்..! நம் திருமணத்திற்கு வரமுடியாததினால் என்னைப் பார்க்க வந்திருந்தான்..

https://t.me/tamilpdfebooks

அவனுக்கு நான் நமது ஊரைச் சுற்றிக் காட்டினேன் என்று அவள் நிமிர்வாக பதில் சொல்லியிருந்தால்.. அப்படியா..? உன் நண்பனுக்கு ஒரு விருந்து கொடுக்கலாம்... என் சார்பாக அவனை இன்வைட் பண்ணு என்று சொல்லியிருப்பான்..

அருண்குமார் முகம் சுளிக்கும்படி.. அர்ச்சனாவின் மனது கெட்டுப்போகும்படி.. வீட்டிலுள்ள வேலையாள்கள் வேடிக்கை பார்க்கும்படி ஒருநாளும் அவன் மனைவியின் செயல்பாடுகள் இருந்திருக்காது என்பதை அவன் அறிந்து வைத்திருந்தான்.. ஒருவேளை அவனில்லாத தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு... அகல்யா அப்படியொரு மாயையை உருவாக்கி வைத்திருந்தால்.. நரேந்திரனின் 'அப்படியா...?' என்ற ஒற்றைக் கேள்வியிலும்.. விருந்து அழைப்பிலும்.. அந்த மாயை அறுந்து விழுந்து விடுமே என்ற திட்டம்தான் நரேந்திரனுக்கு..

இவை எதுவுமில்லாமல் அகல்யா சொன்னது பொய்யாக இருக்கும் பட்சத்தில் அதை அனைவரின் முன்னிலையிலும் அம்பலப் படுத்தி அவளின் முகத்திரையை கிழித்துக்காட்ட வேண்டும் என்ற வன்மமும் நரேந்திரனின் மனதில் இருந்தது..

எவ்வளவு தைரியமிருந்தால் நரேந்திரனின் மனைவி மீது இப்படிப்பட்ட பழியை அகல்யா சுமத்துவாள்..? அதற்கான தண்டனையை அவளுக்கு கொடுக்க வேண்டாமா..?

https://t.me/tamilpdfebooks

இவை எவற்றிற்கும் வழியின்றி ஊர்மிளா பெட்டியைக் கையில் தூக்கியபோது... நரேந்திரனின் கோபம் அகல்யாவிடமிருந்து ஊர்மிளாவின் மீது புலம் பெயர்ந்தது..

'உனக்கும்.. எனக்குமிடையில் இருக்கும் உறவு இவ்வளவுதானா..? ஒரு கேள்வி கேட்டால் அதற்குப் பதில் சொல்லாமல் நீ என்னை விட்டுப் போய் விடுவாயா..?'

நரேந்திரனின் கனல் கக்கும் விழிகளைக் கண்ட அகல்யா இனி அவள் காய் நகர்த்த வேண்டிய அவசியமேயில்லை என்று குதூகலித்தாள்.. வத்திக்குச்சி பற்றி விட்டது..

ஊர்மிளாவின் முகம் கடினமாக இருந்தது.. அத்தனை பேரின் முன்னிலையில் அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் கிளம்பிய அந்த அழகான ராட்சசியின் மீது நரேந்திரனின் மனதில் வன்மம் பிறந்தது.. அவள் அவனுடைய மரியாதைக்கு பங்கம் விளைவித்து விட்டாள் என்ற கோபம் காட்டுத்தீயாக அவனுக்குள் பற்றிக் கொண்டது..

"இத்தனை பேர் முன்னாடியும் எடுத்தெறிஞ்சதைப் போல கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாம போகிறாளே.. கொஞ்சமாவது புருசனோட மானம், மரியாதை என்னாகிறதுன்னு நினைச்சுப் பார்த்தாளா..?"

நரேந்திரனின் மனதிலிருந்ததைச் சொன்னாள் அகல்யா.. அர்ச்சனாவோ ஊர்மிளாவைத் தடுக்கப் போனாள்..

https://t.me/tamilpdfebooks

"அண்ணி.."

அவள் ஓரடி எடுத்து வைக்க முனைந்தபோது நரேந்திரனின் அனல் பார்வை அவளைத் தடுத்து நிறுத்தி விட்டது..

அருண்குமாரோ கையைப் பிசைந்தான்... அர்ச்சனாவைப் போல அவனால் ஊர்மிளாவை தடுத்து நிறுத்த முடியாது.. அதனால்..

"அண்ணா.. ராதாகிருஷ்ணன்ங்கிறது.." என்று நரேந்திரனிடம் விளக்கம் சொல்லப் போனான்..

"உன்னைக் கேட்டேனா..?" கடுமையான நரேந்திரனின் கேள்வி அவனை விலக்கி நிற்க வைத்து விட்டது..

யாரையும் பார்க்காமல்.. நிமிர்ந்த நன்னடையும்.. நேர் கொண்ட பார்வையுமாக நரேந்திரனைப் பிரிந்து விட்டாள் ஊர்மிளா.. ஓர் பார்வை பார்க்கவில்லை.. ஓர் சொல்லை உதிர்க்கவில்லை..

எதுவும் இல்லாமல் எனக்கும்.. உனக்கும் இடையில் எதுவுமே இல்லையென்று பிரிந்து போனவளை மனமாற வெறுத்தான் நரேந்திரன்..

ஊர்மிளா வாசல் கேட்டைத் தாண்டினாள்.. நரேந்திரன் மாடிப் படிகளில் மடமடவென்று ஏறிப் போய் விட்டான்.. அகல்யா அப்பாடா என்று ஹால் சோபாவில் உட்கார்ந்தாள்.. அவள் முகத்தில் நிலவிய திருப்தியைக் கண்ட வனிதாவிற்கு பூரிக்கட்டையைக் கொண்டுவந்து

https://t.me/tamilpdfebooks

அகல்யாவின் முகரையைப் பெயர்த்தால் என்ன என்ற வெறி கிளம்பியது..

"பொம்பளையாய்யா இந்தம்மா..? வாழ வந்த பொண்ண.. வாழ விடாம துரத்தியடிச்சுட்டு சந்தோசம் கொண்டாடறதைப் பாரேன்.." ரமேஷிடம் பொருமினாள்..

"இது பொம்பளைன்னு யாரு உனக்குச் சொன்னது..? ஆயிரம் ஆம்பளைகளுக்குச் சமம் இந்தம்மா.." ரமேஷ் விளக்கம் சொன்னான்..

அர்ச்சனாவாலும்.. அருண்குமாராலும் எதையும் செய்யமுடியவில்லை.. அவர்கள் நரேந்திரனின் கண் பார்வைக்கு கட்டுப்பட்டவர்கள்.. அவனது விழி சொல்லும் கட்டளையை மீறியறியாதவர்கள்..

"இங்கே என்னதான் நடக்குதும்மா..?" அருண்குமார் தலையைப் பிடித்தான்..

"யாருக்குடா தெரியும்..? உங்கண்ணன் விவரமானவன்.. வெளிநாட்டுக்குப் போனவன் உன் அண்ணியைக் கண்காணிக்க ஆள் ஏற்பாடு பண்ணியிருக்கலாம்... இவ வீடு தங்காம ஊர் சுத்தறதைத் தெரிஞ்சுக்கிட்டு கேள்வி கேட்டிருக்கலாம்.. எனக்கு மட்டும் ஜோசியமா தெரியும்..? நானும் உங்க கூடத்தானே இந்த வீட்டில் இருக்கிறேன்.. உங்களுக்குத் தெரியாதது எனக்கு மட்டும் தெரிந்து விடுமா..?"

அகல்யாவா பதில் சொல்ல சளைப்பாள்..? எந்தத் திக்கிலிருந்து எப்படிப்பட்ட கேள்விகள் வந்தாலும்

https://t.me/tamilpdfebooks

சளைக்காமல் பதில் சொல்வதில் அவளுக்கு நிகர் அவள்தான்..

அவளென்ன ஊர்மிளாவா.. ஒரு கேள்விக்குப் பதில் சொல்லாமல் கணவனை விட்டுப் பிரிவதற்கு..?

அவள் அகல்யா..! இது அகல்யாக்களுக்கான உலகம்..!

“ராதாகிருஷ்ணன்னு ஏம்மா அண்ணன் சொல்லனும்..?”

“அவன் சொன்னால்.. உன் அண்ணி வாயில என்ன லட்டா இருந்துச்சு..? இல்லைங்க.. ராதாகிருஷ்ணன்னு எனக்கு யாரையும் தெரியாது.. ராதாவைத்தான் தெரியும்ன்னு சொல்ல வேண்டியதுதானே.. இதில என்னடா வீம்பு வேண்டிக்கிடக்கு..? உண்மையைச் சொல்ல எதுக்குத் தயங்கனும்..? பயந்து ஓடனும்..?”

வேதாளம் தேவாரம் ஓதியது.. அகல்யா நியாயம் பேசினாள்.. அதுதானே என்ற எண்ணத்தை மகனுக்கும்.. மகளுக்கும் வரவைத்தாள்.. எதனால் நரேந்திரன் யார் அந்த ராதாகிருஷ்ணன் என்று கேட்டான் என்ற ஆராய்ச்சியின் பக்கமே அருணையும்.. அர்ச்சனாவையும் போகவிடாமல் செய்து விட்டாள்..

“அன்னைக்கு நான் கூடத்தான் ஒரு கிண்டலுக்கு ராதாவை ராதாகிருஷ்ணன்னு சொன்னேன்.. அதைப் போலதான் உங்க அண்ணனும் கேட்டிருப்பான்.. தப்பா எதுவும் கேட்கலையே.. யாருன்னு கேட்டா இன்னாருன்னு சொல்ல வேண்டியதுதானே..? பெயரை மாத்திச் சொன்னா

https://t.me/tamilpdfebooks

பிழைதிருத்தம் செய்ய வேண்டியதுதானே..? அதை விட்டுட்டு நான்தான் மைசூர் மகாராணி.. என்னை நடு வீட்டில் நிற்க வைச்சு நீ எப்படி கேள்வி கேட்கலாம்ன்னு ஒரு பெண்டாட்டி பெட்டியைத் தூக்கிக்கிட்டு போகலாமா..?"

அகல்யா சொன்ன மற்றவைகளுக்கு செவி சாய்த்தாலும்.. இதற்கு மட்டும் அருணும், அர்ச்சனாவும் செவி சாய்க்கவே இல்லை..

"அம்மா போதும்.. ஏற்கனெவே அண்ணனுக்கும் அண்ணிக்கும் இடையே பிரச்னை ஆரம்பிச்சிருச்சு... நீங்க வேற அதை ஊதி ஊதி பெரிசு பண்ணாதீங்க.." கண்டிப்புடன் சொன்னான் அருண்குமார்..

"அதைத்தான் நானும் சொல்றேன்.. சும்மாவே உங்களுக்கு அண்ணியைக் கண்டா ஆகாது.. சான்ஸ் கிடைச்சிருச்சுன்னு சின்ன விரிசலை பெரிய அகழியா மாத்திராதீங்கம்மா.." அர்ச்சனா கவலைப்பட்டாள்..

"எனக்கு வேற வேலையே இல்லைன்னு நினைச்சீங்களா..? இதுதான் என் வேலையா..?"

கோபிப்பதைப் போல பிள்ளைகளை பற்றிவிட்ட அகல்யாவிற்கு அதுதான் வேலையாக இருந்தது.. நரேந்திரனின் மனதிலிருந்த கனல் குறைந்து விடாமல் அவள் பார்த்துக் கொண்டாள்.. பற்றியெரிந்த தீயில் தினமும் எண்ணையை ஊற்றிக் கொண்டே இருந்தாள்.. அதுவரை நரேந்திரனைப் பற்றிக் கண்டு கொள்ளாதவள்..

https://t.me/tamilpdfebooks

அவனுக்கான பணிவிடைகளை ஓடி ஓடிச் செய்தாள்.. சாப்பிடுப்பா என்று தட்டைப் போட்டு பரிமாறி உபசரித்தாள்.. கூடவே..

"ஏன் நரேந்திரா.. இந்தப் பொண்ணு எங்கேதான் போயிருப்பா..? அவ அப்பா வீட்டுக்குப் போயிருப்பாளா.. இல்ல.. ராதா உன்கூட நியுயார்க்குக் கிளம்பி வந்துடறேன்னு அந்த ராதாகிட்டப் போயிருப்பாளா..?" என்று தூண்டி விட்டபடி ஆழம் பார்க்கவும் செய்தாள்..

திருச்சியில் சோமசுந்தரத்தின் வீட்டுக்கு ஊர்மிளா போய் சேர்ந்து விட்டாளா என்ற விவரத்தை விசாரிக்க நினைக்கும் நரேந்திரன் அதை வேண்டாமென்று ஒதுக்கி விடுவான்..

'எங்கே போகப் போகிறேன்னு என்னிடம் சொல்லி விட்டாப் போனா..?'

அவனுக்குள் தீ எரியும்.. அது அவளைத் தேடும் தீ..! அவளைத் தழுவத் துடிக்கும் தாபத்தீ..! அவளின் சரசத்தில் குளிக்க விழைகிற மோகத்தீ..! அவனுடன் இருபத்தி நான்கு மணி நேரமும் இழைந்து கொண்டிருந்தவளின் பிரிவைத் தாங்க முடியாத வேட்கைத் தீ..!

அல்லும் பகலும் அந்த அழகான ராட்சசியை மட்டுமே நினைத்தான் நரேந்திரன்.. காலையில் கண் விழிக்கும் போதே அவள் முகம் நெஞ்சினில் எழுந்தது.. கனவிலும் மறையாத அந்த முகத்தைப் பார்க்க முடியாமல் அவன் வெறி கொண்டு துடித்தான்.. அவளைத் தேடிச் சொல்ல முடியாமல் சுயமரியாதை அவனைத் தடுத்தது..

https://t.me/tamilpdfebooks

'நானா அவளை போன்னு சொன்னேன்..? அவளாப் போனா.. அவதான் என்னைத் தேடித் திரும்பி வரனும்..'

ஊர்மிளா திரும்பி வரவில்லை..

தனிமையென்னும் நட்டாற்றில் நரேந்திரனை விட்டு விட்டு அவள் பிரிந்து நின்று விட்டாள்.. தாய்க்குப் பின்னால்.. தாயினும் சாலப் பரிந்து அன்பு காட்டிய காதல் மனைவி பிரிந்ததில் நரேந்திரன் மீண்டும் தனியனானான்..

70

மொட்டவிழ்ந்த வாசம் போல..
நெஞ்சினிலே நேசம் கொண்ட..
அழகான ராட்சசி நீ....

ஊர்மிளா சுவரில் சரிந்து சாய்ந்து அமர்ந்தாள்.. பூங்குழலியின் இதயம் பதறியது.. கணவனுடன் முகமெல்லாம் மலர.. மறுவீட்டுக்கு வந்து போன மகளின் முகமா இது என்று நிலை குலைந்து போனாள்..

"பூங்குழலி.. எடுடி அந்த அறுவாளை.."

சோமசுந்தரம் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு கர்ஜித்தார்..

"அப்பா.. ரிலாக்ஸ்.." அவர் கைபிடித்து நாற்காலியில் உட்கார வைத்தாள் ராதா..

https://t.me/tamilpdfebooks

"ரிலாக்ஸா இருக்கிறதா..? எப்படிம்மா..? பூப்போல இருந்தாம்மா என் பொண்ணு.. அவ பாட்டுக்கு தானுண்டு.. தன் படிப்புண்டுன்னு இருந்தாளே.. இந்தக் கோடிஸ்வரன் வந்து பெண்ணைப் பார்த்தாரு.. பொய்யைச் சொல்லிக் கட்டிக்கிட்டுப் போனாரு.. இப்ப என் மக கண்ணில சிரிப்பில்லாம திருப்பி அனுப்பியிருக்காரு.. அந்த மனுசனை சும்மா விடச் சொல்றியாம்மா..?" சோமசுந்தரம் வெடித்தார்..

"அவர் அனுப்பலைப்பா.. ஊர்மிளாதான் கிளம்பி வந்திருக்கா.." ராதா விளக்கம் சொல்ல முயன்றாள்..

சோமசுந்தரம் கோபச் சிரிப்பு சிரித்தபடி பூங்குழலியைப் பார்த்தார்.. அவள் விசனத்துடன் விம்மினாள்..

"கேட்டுக்கிட்டியா பூங்குழலி.. நம்ம ராதா என்ன சொல்லுது தெரியுமா..? அவர் ஒன்னும் ஊர்மிளாவை அனுப்பலையாம்.. நம்ம மகளாத்தான் கிளம்பி வந்திருக்காளாம்.."

"அப்பா.."

"நாட்டு வழக்கம் தெரியாம பேசறயே ராதா.. உனக்கென்னம்மா தெரியும்..? நீ பிறந்து வளர்ந்ததெல்லாம் டவுனில.. எங்க ஊரு பழக்கத்தைப் பத்தி உனக்கு எதுவும் தெரியாது.."

"என்னப்பா சொல்கிறீங்க..?"

"அம்மா.. கல்யாணம்ன்னு ஆனா.. எப்பவுமே இந்த விளம்பரப் படத்தில வர்றதைப் போல சிரிச்சு.. மகிழ்ந்துக்

https://t.me/tamilpdfebooks

கிட்டே இருக்க முடியுமாம்மா..? ஆயிரம் சண்டை சச்சரவுகள் வரத்தான் செய்யும்.. எப்பல்லாம் புருசனுக்கும்.. பெண்டாட்டிக்கும் இடையே சண்டை சச்சரவுகள் வருதோ.. அப்பல்லாம் பெண்டாட்டியாகப் பட்டவ பொட்டியைத் தூக்கத்தான் செய்வா.. இது காலம்.. காலமா.. எல்லாக் குடும்பத்திலயும் நடக்கிற சங்கதிதான்.."

"அதைத்தான் நானும் சொல்கிறேன்ப்பா.. வெயிட் பண்ணலாம்.. எல்லாம் சரியாகிடும்.."

"ஊஹூம்.. இது சரியாகிற சங்கதியில்லையம்மா.."

"என்னப்பா இப்படிச் சொல்கிறீங்க..? நீங்கதானே இது எல்லா ஃபேமிலியிலயும் நடக்கிற இன்ஸிடென்ட்ன்னு சொன்னீங்க.."

"சொன்னேன்தான்... அப்படி பொண்டாட்டி பொட்டியைத் தூக்கும்போது புருசன்காரன் கையைக் கட்டிக்கிட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருப்பான்னு சொல்லலையே.."

சோமசுந்தரத்தின் வார்த்தைகளில் ஊர்மிளாவின் மனம் வலித்தது.. அவள் மனக்கண்ணில் அவள் பெட்டியுடன் வெளியேறுவதை கூர்மையான பார்வையுடன் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்த நரேந்திரனின் தோற்றம் வந்து நின்றது..

"அப்பா.." சோமசுந்தரத்தின் சூட்சுமமான வார்த்தைகளில் ராதா வியந்து போனாள்..

"ஆமாம்மா.. பொண்டாட்டி கோவிச்சுக்கிட்டு பொட்டியைத் தூக்குவா.. புருசன்காரன் அதை பிடுங்கிப்

https://t.me/tamilpdfebooks

போட்டு வழி மறிப்பான்.. அதையும் மீறி அவன் இல்லாத சமயத்தில அவ கோவிச்சுக்கிட்டு தாய் வீட்டுக்கு வந்திட்டா பின்னாடியே ஓடி வந்து கூப்பிட்டுக்கிட்டுப் போவான்.. இதுதாம்மா நாட்டு வழக்கம்..! உன் தோழி விசயத்திலே இப்படியா நடந்திருக்கு..?"

ராதா ஊர்மிளாவை பார்த்தாள்.. ஊமையின் பாடலைப் போல விழிகளில் வலியுடன் அவளை ஏறிட்ட ஊர்மிளாவின் நிராசையான முகம் அவள் நெஞ்சில் பதிந்தது..

"தோத்துட்டேண்டி.."

ராதாவிடம் வந்து கதறியவளை தேற்ற முடிந்தவரை தேற்றி ஆறுதல் சொல்லி சாப்பிட வைத்தாள் ராதா.. ஊர்மிளா சாப்பிட மறுத்தாள்.. வலுக்கட்டாயமாக ஊட்டி விட்டாள்..

"எனக்கென்னன்னு இருந்தாருடி.. நான் பெட்டியைத் தூக்கிக்கிட்டு கீழே வர்றேன்.. நிற்கிற இடத்தை விட்டு ஓர் அடிகூட நகரலைடி.. செஞ்சு வைச்ச சிலையாட்டம் நின்றாரு.." ஊர்மிளா குமுறினாள்..

"லீவ் இட்.. இப்போதைக்கு எதையும் பேச வேண்டாம்.. நீ ரெஸ்ட் எடு.. டூ டேஸ் போகட்டும்.. அதுக்குப் பின்னாலே உன் ஹஸ்பெண்டிடம் பேசிப் பார்க்கலாம்.." என்றாள் ராதா..

"பேச்சா..? எதைப்பத்தி பேசனும்..?"

"ஊர்மி.. இப்ப நீ கோபத்தில இருக்கேடி.."

"இது நியாயமான கோபம்.."

https://t.me/tamilpdfebooks

"இல்லைன்னு நான் சொன்னேனா..? எனக்கென்னவோ நீ கன்சீவ் ஆகியிருக்கிற விசயத்தை மட்டுமாவது உன் ஹஸ்பெண்டிடம் சொல்லியிருக்கலாம்ன்னு தோணுது.."

"சொல்லியிருந்தா.. என்ன பண்ணியிருப்பார்ன்னு நினைக்கிற ராதா..?"

ராதா மௌனமானாள்.. கணவனும், மனைவிக்குமான அந்தரங்க உரிமைப் போராட்டத்தில் அவர்களைப் பெற்றவர்களே மூன்றாம் மனிதர்களாக விலகி நிற்க வேண்டும் எனும்போது.. தோழி எந்த அளவில் உள் புகுந்து கருத்து சொல்ல முடியும்..?

"என் வயிற்றிலே இருக்கிற குழந்தையைக் காட்டி.. என் புருசனை நான் கைக்குள்ள போட்டுக்கிட்டேன்னு அந்த அகல்யா பேசுகிறதுக்கா இந்த விவரத்தை நான் அவருக்குச் சொல்லனும்..?"

"ம்ப்ச்..! என்ன மாதிரியான இன்டீசண்ட் பீபுள்.."

ஊர்மிளாவின் ஓய்ந்த தோற்றத்தில் ராதாவின் மனம் துயரம் கொண்டது.. அவள் யோசித்தாள்.. ஊர்மிளாவின் சுயமரியாதை காயப்பட்டிருப்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது... அவளின் நம்பிக்கை ஆட்டம் கண்டிருந்தது.. எந்தக் காதல் கணவன் யார் என்ன சொன்னாலும் அவளை கேள்வி கேட்க மாட்டான் என்று அகல்யாவிடம் சவால் விட்டாளோ.. அந்தக் காதல் கணவன் அகல்யா சொன்னதைப் போலவே.. வீட்டின் ஹாலில் அவளை நடுநாயகமாக நிறுத்தி வைத்து.. வீட்டில் இருந்த அனைவரின் முன்னிலையிலும் கேள்வி கேட்டு விட்ட கொடுமையில் அவள் துவண்டிருந்தாள்..

https://t.me/tamilpdfebooks

"ராதா.. எனக்கொரு ஹெல்ப் வேணும்.. செய்வியா..?"

சோகையாக கேட்ட தோழியை கடிந்து கொள்வதைப் போல முறைத்துப் பார்த்தாள் ராதா..

"அடிதான் வாங்கப் போற.. என்கிட்டக் கேட்கிறதில உனக்கேண்டி இத்தனை தயக்கம் வருது..? என்ன செய்யனும்..? சொல்லு.. என்கூட நியூயார்க் வந்து விடுகிறயா..? அங்கே உனக்கு வேலை வாங்கித்தர்றேன்.."

'நியூயார்க்கா..?'

ஊர்மிளாவின் மனம் பதறியது... அவ்வளவு தொலைவில் சென்றால் அவளுடைய நரேந்திரன் அவளைத் தேடி வருவானா..?

இந்தக் கேள்வி நெஞ்சில் எழும் போதே..

'அவன் தேடி வரனும்னு நீ எதிர்பார்க்கிறயா..?' என்று அவள் மனம் அவளைப்பார்த்து கை கொட்டிச் சிரித்தது..

அவனைப் பிரிந்து வந்து முழுதாக அரை நாள்கூட ஆகியிருக்கவில்லை.. அதற்குள் அவன் அவளைத் தேடி வரமாட்டானா என்ற ஏக்கம் மனதில் சூழ்வதை திகிலுடன் உணர்ந்தாள் ஊர்மிளா..

அவளது வைராக்கியத்தின் வலிமை இவ்வளவு பலவீனதானதா..?

"இல்லேடி.. நான் அங்கே வரலை.." ஊர்மிளா உடனடியாக மறுத்து விட்டாள்..

https://t.me/tamilpdfebooks

அதை எதிர்பார்த்திருந்ததைப் போல ராதாவின் முகத்தில் இளநகை வந்தது.. அவள் மேற்கொண்டு ஊர்மிளாவை வற்புறுத்தவில்லை..

"வேணாம்ன்னா விட்டு விடு.. வேற என்ன செய்யனும்..?" இதமாக வினவினாள்..

"திருச்சிக்குப் போகனும்டி.. தனியாப் போக ஹெல்த் கண்டிசன் இடம் கொடுக்கலை.. வாந்தி, மயக்கமா இருக்கு.. திருச்சி வரைக்கும் துணைக்கு வர்றியா..?" கெஞ்சுதலாக கேட்டாள் ஊர்மிளா..

ராதா தோழியின் கைவிரல்களைப் பற்றி அமைதிப் படுத்தினாள்.. அவள் முன்னரே எச்சரித்திருந்ததால் ராதாவின் அத்தை வீட்டில் ஊர்மிளாவை எதுவும் கேட்கவில்லை.. அவர்கள் இரவில் பயணமானார்கள்.. ராதாவின் மாமா அவருடைய காரையும்.. டிரைவரையும் அனுப்பி வைத்திருந்தார்..

மிதமான வேகத்துடன்.. மேடு, பள்ளத்தில் கார் குலுங்கி விடாமல் டிரைவர் காரை ஓட்டினான்.. ஊர்மிளா பின் சீட்டில் சரிந்து ராதாவின் தோளில் தலை சாய்த்திருந்தாள்.. வானில் பவனி வந்த முழுநிலவு.. கணவனைப் பிரிந்து சென்ற ஊர்மிளாவுக்கு துணைக்கு வருவதைப் போல கூடவே வந்தது..

திருச்சியில் கார் நுழைந்தபோது விடிந்து விட்டிருந்தது.. சோமசுந்தரத்தின் வீடு இருந்த தெருவில் வாசல் தெளித்து கோலம் போட ஆரம்பித்திருந்தார்கள்..

https://t.me/tamilpdfebooks

பூங்குழலியும் வீட்டு வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.. கோலத்தை ஒட்டி வந்து நின்ற காரைக் காண்டதும் முகம் மலர்ந்து நிமிர்ந்தாள்.. ஊர்மிளா கணவனுடன் தாய்வீட்டுக்கு சீராட வந்திருக்கிறாள் என்ற நினைவுடன் திரும்பி வீட்டுக்குள் பார்த்து குரல் கொடுத்தாள்..

"என்னங்க.. நம்ம ஊர்மிளா வந்திருக்கா.. பாருங்க.."

சோமசுந்தரம் அப்போதுதான் எழுந்து.. வாசல் பக்கம் வந்து கொண்டிருந்தார்.. காலை வேளையில் உலாவப் போய் விட்டு வருவது அவரின் தினப்படி பழக்கம்.. உலாவப் போகிறேன் என்ற பெயரில் அந்த ஏரியாவாசிகளை பொதுவுடைமைக் கருத்துக்களைச் சொல்லி பயமுறுத்தி.. உலாவ விடாமல் ஒட்டி விடுவதற்காக அவர் போகிறார் என்று நரேந்திரன் ஊர்மிளாவிடம் கிண்டலடித்திருக்கிறான்.. சோமசுந்தரம் அதைத்தான் செய்து கொண்டிருந்தார் என்பதால் கணவனை செல்ல முறைப்பு முறைத்து விட்டு லேசாக சண்டை போட்டிருக்கிறாள் ஊர்மிளா..

"எங்கப்பாவை கேலி செய்யலைன்னா உங்களுக்கு வேலையே ஓடாதா..?"

அன்றும் அதுபோல உலவாப் போகிறேன் பேர்வழி யென்று ஏரியா மக்களிடம் மைக் இல்லாமல் பொதுவுடமை கருத்துக்களைப் பேசி.. தண்ணீர், புகை.. போன்ற எதுவுமில்லாமல் அவர்களை கலைந்து ஓட வைக்கும் நோக்கத்துடன் வீட்டு வாசலுக்கு வந்து கொண்டிருந்த சோமசுந்தரத்தின் காதில் தேனாறு பாய்ந்தது..

https://t.me/tamilpdfebooks

"ஊர்மிளா.. வந்திருக்காளா..?"

அவர் சந்தோசத்துடன் கார் கதவைத் திறக்கப் போனார்.. பூங்குழலி அவர் கையைப் பிடித்துக் கிள்ளி விட்டு.. சேலை முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்..

"இருக்கிற புழுக்கத்தில இது வேறயா..?" சோமசுந்தரம் தலையில் அடித்துக் கொண்டார்..

"மாப்பிள்ளை காரில இருப்பார்.. அதனால.. முதல்ல அவரை வாங்க மாப்பிள்ளைன்னு கூப்பிட்டுட்டு.. அப்புறமா ஊர்மிளாகிட்டப் பேசுங்க.." முணுமுணுத்தாள் பூங்குழலி..

"இல்லைன்னா மனுசன் கோவிச்சுக்கிட்டு திரும்பவும் ஊரைப் பார்த்துப் போயிருவாரா..?" சோமசுந்தரத்தின் விதண்டாவாதமான கேள்வியில்..

"அச்சாணியமாய் பேசாதீங்க.." என்று பதறினாள் பூங்குழலி..

கார் கதவைத் திறந்து கொண்டு ஊர்மிளாவும், ராதாவும் மட்டும் இறங்கியதைப் பார்க்கும் போதே சொன்னதைப் போலவே ஏதோ அச்சாணியமாக நிகழ்ந்திருக்கிறது என்று பூங்குழலிக்குப் புரிந்து விட்டது..

நரேந்திரன் காரில் இல்லை என்பது புரிந்தவுடனே.. அவள் வாய் வரை..

"மாப்பிள்ளை எங்கேம்மா..?" என்ற கேள்வி வந்து விட்டது..

https://t.me/tamilpdfebooks

பூங்குழலி அவசரமாக அதை உள்ளே தள்ளினாள்.. அவளின் கூரிய விழிகள் மகளின் முகத்தை ஆராய்ந்தன.. அதில் மலர்ச்சியில்லை.. பெற்றவளின் மனதுக்கு ஏதோ சரியில்லை என்பது புலப்பட்டு விட்டது..

"அப்பா.." காரை விட்டு இறங்கிய ராதா பாசத்துடன் அழைத்தாள்..

"வாம்மா ராதா.. எப்ப வெளிநாட்டில இருந்து வந்த..?" சோமசுந்தரம் ஆச்சரியத்துடன் அவளை வரவேற்றார்..

"ஊர்மிளா.."

கோலப் பொடி கிண்ணத்தை வாசல் காம்பவுண்டு சுவரின்மீது வைத்து விட்டு மகளின் தோளை அணைத்துக் கூப்பிட்டுக் கொண்டு வீட்டுக்குள் போனாள் பூங்குழலி.. அவள் ராதாவை கண்டு கொள்ளவில்லை..

'ராதா வந்திருக்கிறா பாரு..' என்று சொல்ல வாயெடுத்த சோமசுந்தரம் மனைவியின் செய்கையில் முகம் மாறினார்..

பூங்குழலி அவ்வாறு வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளியை வாவென்று அழைக்காமல் போகிற ஆளல்ல..

"நீ எங்கேம்மா ஊர்மியைப் பார்த்த..?"

"பெங்களூருக்குப் போயிருந்தேன்ப்பா.."

"ஓ.. உன்னைப் பார்த்ததும் உன் தோழிக்கு திருச்சி ஞாபகம் வந்திருச்சா..? சேர்ந்தே போகலாம்ன்னு உன்கூட கிளம்பி வந்தாளா..?"

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரத்தின் கேள்விக்கு ராதா பதில் சொல்லவில்லை..

"வீட்டுக்குள்ளே போய் பேசலாமாப்பா..?" என்று கேட்டாள்..

சோமசுந்தரத்தின் நெற்றியில் கோடுகள் விழுந்தன.. முகம் இறுக்கமாக தலையை மேலும்... கீழுமாக அசைத்தபடி வீட்டுக்குள் போனார்.. ராதா அவரை பின்தொடர்ந்தாள்.. உள்ளே சோமசுந்தரம் கண்டகாட்சி அவரை உலுக்கி விட்டது..

"அம்மா.."

பூங்குழலியின் மடியில் முகம் புதைத்து ஊர்மிளா கதறிக் கொண்டிருந்தாள்.. அக்கம் பக்கம் சத்தம் கேட்டுவிடக்கூடாது என்பதற்காக ராதா கதவை அடைத்தாள்.. சோமசுந்தரம் பதறினார்.. மகளின் அருகே உட்கார்ந்தார்.. தாயின் மடியில் முகம் புதைத்திருந்தவளின் முகத்தை நிமிர்த்தி.. கண்ணீரில் நனைந்திருந்த அவள் முகத்தை தோளில் கிடந்த துண்டால் துடைத்து விட்டார்.. கண்ணீரின் ஈரத்தில் முகமெங்கும் படிந்திருந்த அவளின் கலைந்த தலைமுடியைக் கோதி சீராக்கினார்..

"அப்பா.."

ஊர்மிளா விம்மினாள்.. நிற்காமல் பெருக்கெடுத்த அவளின் கண்ணீரில் அவளின் காதலின் தோல்வி எழுதப்பட்டிருந்தது..

சோமசுந்தரம் ரௌத்ரமானார்.. நான் அப்போதே சொன்னேனே கேட்டாயா என்பதைப் போன்ற சொல்லிக்

https://t.me/tamilpdfebooks

காட்டும் வார்த்தைகளை அவர் வாய் சொல்லவே இல்லை.. என் பேச்சை மீறி திருமணம் செய்து கொண்டால் அவனைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று முடிவெடுத்தாயே.. இப்போது என்ன ஆனது பார்த்தாயா.. என்று அவர் குத்திக் காட்டவே இல்லை.. மாறாக கொந்தளித்தார்..

71

ஒட்டி உறவாடியவனை..
விட்டுப் பிரிந்து விட்ட
அழகான ராட்சசி நீ....

“இந்த சோமசுந்தரத்தை என்ன நினைச்சுக்கிட்டாரு.. என் மகளை கண்ணீர் விட வைச்சு திருப்பியனுப்புவாரு.. நான் பார்த்துக்கிட்டு பேசாமல் இருப்பேன்னு நினைச்சாரா..? கேக்கறேன்.. போய் கேட்கறேன்.. நல்லா நாலு வார்த்தை கேட்டு விட்டு வந்தாத்தாண்டி என் மனசு ஆறும்..”

சோமசுந்தரம் பெங்களூருக்குக் கிளம்பத் துடித்தார்.. ஒரு வகையில் நரேந்திரனும் அதைத்தான் எதிர்பார்த்தான்.. சண்டை போடவாவது அவர் வர வேண்டும்.. அவரிடம் அவன் பக்க நியாயத்தைச் சொல்லி அவன் மனைவியை அனுப்பி வைக்குமாறு கேட்க வேண்டும் என்று நினைத்தான்.. சோமசுந்தரம் கையைக் கட்டிக் கொண்டு

https://t.me/tamilpdfebooks

சும்மா இருக்க மாட்டார் என்பது அவனுக்கும் தெரியும்.. நியாயம் கேட்க கிளம்பி வருவார்.. அவனிடம் போர் முரசைக் கொட்டுவார்.. அப்படி அவர் கொட்டும்போது அவனும் அவன் மனதிலிருப்பதைக் கொட்ட வேண்டும்..

நரேந்திரன் அவர் வரவுக்காக காத்திருந்தான்.. அகல்யா தினமும் அவனிடம் தோண்டித் துருவிக் கேள்விகளைக் கேட்டாள்..

"ஏன் நரேன்..! அந்த மனுசர் உன்னைப் பார்க்க கம்பெனிப் பக்கம் வந்தாரா..?"

"எந்த மனிதர்..?" அவன் நிதானமாகக் கேட்டான்..

துளைக்கும் அவன் பார்வையில் அகல்யா சற்று நடுங்கித்தான் போனாள்.. நாக்கைக் கடித்தபடி மரியாதை சேர்த்து..

"உன் மாமனாரைத்தான் சொன்னேன்ப்பா.." என்றாள்

"மாமனார்ன்னா சொன்னீங்க..? மனிதர்ன்னுல்ல சொன்னீங்க..?"

நரேந்திரன் லேசான முகச் சுளிப்புடன் கை கழுவ நகர்ந்தான்.. பின்னாலேயே ஓடிய அகல்யாவின் மனதில்..

'அந்த ஆள் மனிதரில்லாம.. சிங்கம், புலி, கரடியா..?' என்ற வினா எழத்தான் செய்தது..

'ஷூச்..!' ஒற்றைவிரலை வாய் மேல் வைத்து எழுந்த வினாவின் தலையில் தட்டி அதை மனதுக்குள் அமுக்கிக் கொண்டாள்..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனே முன்னால் போனால் கடிப்பவன்.. பின்னால் போனால் உதைப்பவன்.. அவனைப் போலவே அவனுடைய மாமனாரும் அமைந்து விட்ட கொடுமையில் அகல்யா வெகு நாள்கள் தூக்கமில்லாமல் தவித்திருக் கிறாள்.. அந்த மாமனாரை அருமை பெருமையாக நரேந்திரன் நினைக்கக்கூடும் என்பதை மறந்து விட்டுப் பேசியவள் தன் சிற்றறிவை நொந்து கொண்டாள்..

“ஏதோ வாய் தவறி வந்திருச்சுப்பா.. உன் பெண்டாட்டிதான் உன் கேள்விக்கு பதில் சொல்லாம.. உனக்கெல்லாம் என்ன கணக்குன்னு கிளம்பிப் போயிட்டா.. அவளோட அப்பா சும்மாவே சத்தம் போடற மனுசன்.. இப்ப பொண்ணு போயி வேப்பிலை அடிச்சா சும்மாவா இருப்பாரு..? சாமியாட இங்கே வந்து சேர்ந்திருக்க மாட்டாரா..? இன்னுமா வரலை..? நான் நினைக்கிறேன் நரேந்திரா.. உன்பெண்டாட்டி திருச்சிக்குப் போயிருக்க மாட்டா.. அவ பிரண்டோட சேர்ந்து நியூயார்க்குக்கு பறந்திருப்பா.. எதுக்கும் நீ விசாரித்துப் பாரேன்..”

‘இதை விசாரிக்க வேற செய்யனுமா..?’ நரேந்திரனின் மனம் இறுகி விட்டது..

அகல்யா அதைத்தானே எதிர்பார்த்தாள்..? திருச்சியில் அவனுடைய மனைவி இருக்கிறாள் என்ற நினைவே வராமல்.. அவள் திருச்சிக்குப் போயிருப்பாளா.. இல்லை.. அவளுடைய தோழனுடன் நியுயார்க்குக்கு போயிருப்பாளா என்ற சஞ்சலத்தை நரேந்திரனின் மனதில் வர வைத்தாள் அவள்..

https://t.me/tamilpdfebooks

"பொண்ணைக் கண்டிருந்தா இந்நேரத்துக்கு அந்த மனுசர்.. தப்புப்பா தப்பு.. உன் மாமனார்.. இங்கே வந்து குதிச்சிருக்கனுமே.. அந்த வகையில யாருக்கும் அஞ்சாத மனுசராச்சே அவரு... ம்ஹீம்... அவருக்கு அவரோட பொண்ணு வீட்டை விட்டு வெளியே போனது தெரியலையோ என்னவோ.."

நரேந்திரனின் வெட்டும் பார்வையில் அகல்யாவின் பேச்சு நின்று விட்டாலும்.. அவள் நினைத்ததை சாதித்து விட்டாள்.. சோமசுந்தரத்திற்கு போன் போட்டு ஊர்மிளாவைப் பற்றிப் பேச நினைத்திருந்த நரேந்திரன் அந்த நினைப்பை மறந்து விட்டான்..

அகல்யா பேசுவதை அவன் காதில் போட்டுக் கொள்வதில்லை என்றாலும் அதிலிருந்த ஒரு லாஜிக் அவனை யோசிக்க வைத்தது.. அது சோமசுந்தரம் தன் கோபத்தை அடக்கிக் கொள்ளும் மனிதரல்ல என்பது.. ஊர்மிளா திருச்சிக்குப் போயிருந்தால்.. மறு நொடியே புயல்போல அவர் கிளம்பி பெங்களூருக்கு வந்து நின்றிருப்பாரே.. ஏன் வரவில்லை..?

"அவர் வரட்டும்ப்பா.." ஊர்மிளா தீர்மானமாக சொல்லி விட்டாள்.

"அது வரைக்கும் என்னைப் பொறுமையா இருக்கச் சொல்கிறாயாம்மா..?" கண்சிவந்தார் சோமசுந்தரம்..

"வேறு வழியில்லைப்பா.. நீங்க பொறுமையாத்தான் இருந்தாகனும்.. நான் கிளம்பி வந்து ரெண்டு நாளாகுது.. இன்னும் என்னைத்தேடனும்னு அவர் நினைக்கலை..

https://t.me/tamilpdfebooks

என்கிட்டடத்தான் போனில்லை.. உங்க போன் நம்பர் அவருக்குத் தெரியுமில்லையா..? ஏன்ப்பா போன் பண்ணலை..? நான் வந்துட்டேனான்னு ஏன்ப்பா கேட்கலை..? கோபத்தோட வெளியேறினவ வேறு முடிவை எடுத்திருந்தா அப்பவும் அவர் அதைப்பத்தித் தெரிஞ்சுக்காம பேசாமத்தானே இருந்திருப்பாரு..?"

ஊர்மிளாவின் கேள்வியில் பூங்குழலி பொங்கி அழுதாள்.. சோமசுந்தரம் ருத்ரரானார்.. ராதா உதட்டைக் கடித்தபடி தோழியின் அம்மாவை சமாதானம் செய்தாள்..

"அழாதீங்கம்மா.."

"என் ஈரக்குலை துடிக்குது ராதா.. என்மகளை யாருமில்லாத அனாதைன்னு அவர் நினைச்சுக்கிட்டாரா..? பெங்களூரில் நீயிருக்கப் போய் ஆச்சு.. இல்லைன்னா ஊர்மிளா விரக்தியிலே தப்பான முடிவெடுத்து.. ஒன்று கிடக்க ஒன்று ஆகியிருந்தா எங்க கதி என்னாகிறது..? இதுக்கா என் மகளை கட்டிக் கொடுத்தேன்..?"

"இல்லேம்மா.. ஊர்மிளா தப்பான முடிவுக்கெல்லாம் போக மாட்டாம்மா.. அவ தைரியமானவ.."

"அந்த தைரியத்தைத்தான் உடைச்சு.. சுக்கு நூறாக்கி.. என் மகளை நடைபிணமாய் திருப்பி அனுப்பி வைச்சிருக்காரேம்மா.. பாரும்மா.. உன் தோழியைப் பாரு.. ஊர்மிளா இப்படியா இருந்தா..?"

மனம் வலிக்க தோழியைப் பார்த்தாள் ராதா.. வெளிறிய மேகம் போல ஊர்மிளாவின் முகம் நிறமற்று.. களையிழந்து காணப்பட்டது.. அவள் கண்களில் நிராசையுடன் கூடிய தோல்வியின் முகவரி இருந்தது..

https://t.me/tamilpdfebooks

"இல்லேம்மா.." ராதா தலையை அசைத்தாள்..

ஊர்மிளாவைப் பற்றிய இனிப்பான விவரத்தை அந்தக் குடும்பத்திற்கு அவள் சொல்ல வேண்டியிருந்தது.

அதை அறிவதன் மூலம் அந்தத் தாய் தந்தையர் மகளைப் பற்றிய துயரத்திலிருந்து கொஞ்சம் மீளலாம்.. அவள் தோழியும் தோல்வியின் சுமையிலிருந்து மீண்டு.. வரப்போகும் வாழ்நாளில் கவனம் செழுத்தலாம்..

ஊர்மிளாவே மறந்து போன.. ஊர்மிளாவைப் பற்றிய அந்த விவரத்தை நினைவூட்டினாள் ராதா..

"அவ வயிற்றிலே அவளோட குழந்தை இருக்கு.. எப்படிம்மா அவ தப்பான முடிவுக்குப் போவா..? அவ தனியாள் இல்லையேம்மா.."

"என்னது..??!!"

பூங்குழலியும்.. சோமசுந்தரமும் ஆனந்தமும்.. துயரமும் சேர்ந்த கலவையுடன்... ஒருமித்த குரலில் கேட்டார்கள்.. ஊர்மிளாவுக்கு அவள் வயிற்றிலிருந்த நரேந்திரனின் குழந்தையின் நினைவு வந்தது.. அவள் கை அனிச்சையாக அவள் வயிற்றில் படிந்தது..

"சண்டாளப்பாவி..! பிள்ளைத்தாய்ச்சியை தனியா அனுப்பி வைச்சிருக்காரு.. இதுக்கே அந்த ஆளை என்னன்னு ஒருகை பார்க்கனும்.." சோமசுந்தரம் வெறியானார்..

"இல்லேப்பா.. இது அவருக்குத் தெரியாது.." மெல்லிய குரலில் சொன்னாள் ஊர்மிளா..

https://t.me/tamilpdfebooks

"என்னது..??!!"

சோமசுந்தரமும்.. பூங்குழலியும் மீண்டும் ஒருமித்த குரலில் ஒன்றுகூடி அதிர்ந்தார்கள்..

"ஆமாம்ப்பா.. அவர் பாரின்ல இருக்கிறப்பவே ஊர்மிளா டெஸ்டை எடுத்துப் பார்த்து அவ கன்சீவ் ஆகியிருக்கிற விவரத்தைக் கன்பர்ம் பண்ணிக்கிட்டா.. அதை போனில் சொல்ல முடியாம அவளுக்கு அவளோட மாமியார் இடைஞ்சல் பண்ணிட்டாங்க.. அவர் திரும்பி வந்தவுடன் சொல்ல வாய்திறந்தா.. அவர் அவளைப் பேசவிடாம கேள்வி கேட்டு.. பெட்டியைத் தூக்க வைச்சிட்டாரு.."

ராதா விவரித்தாள்.. பூங்குழலி மகளை அணைத்து.. அவளிடம் எத்தனை மாதம் என்பதைப் போன்ற விவரங்களைக் கேட்டுக் கொண்டாள்.. சோமசுந்தரம் மகளை டாக்டரியம் அழைத்துப் போனார்..

ராதா திருச்சியில் ஒரு வாரம் தங்கியிருந்தாள்.. அவளுடைய பெற்றோர் வீட்டில் இருப்பதாகத்தான் பெயர்.. பொழுது விடிந்ததும் ஊர்மிளாவைப் பார்க்க ஊர்மிளாவின் வீட்டுக்கு ஓடி வந்து விடுவாள்.. இரவு வரை தோழியுடன் நேரத்தைச் செலவிடுவாள்.. தூங்குவதற்கு அவளுடைய தாய் வீட்டுக்குப் போய் விடுவாள்..

"ஊர்மி... நாளைக்கு நான் பெங்களூர் கிளம்பியாகனும்.."

சங்கடத்துடன் சொன்னாள் ராதா.. நகரும் மேகங்களை இலக்கில்லாமல் பார்த்துக் கொண்டிருந்த ஊர்மிளா திரும்பி தோழியின் முகத்தைப் பார்த்தாள்..

https://t.me/tamilpdfebooks

ஆறுதலாக அவளருகில் இருந்த தோழியும் பிரியப் போகிறாள் என்பதில் அவள் கண்களில் வேதனை அப்பியிருந்தது..

"இப்போதும் கேட்கிறேன்.. என்னுடன் நியூயார்க் வந்து விடுகிறயா..? நீ வருகிறதா இருந்தா டெபுடேசனை முடித்துக்கிட்டு உடனடியா நியூயார்க் போய் விடலாம்..."

மறுப்பாக தலையை அசைத்தாள் ஊர்மிளா.. அவள் முகத்தில் திடம் இருந்தது.. பழமையும், புதுமையும் கலந்து பிரகாசிக்கும் தமிழகத்தின் பெண்மையின் மிளிர்தல் இருந்தது..

"இல்லை ராதா.. ஒன்று நான் அவர்கூட இருந்திருக்கனும்.. பிரிந்து வந்திருந்தா அப்பா, அம்மா கூடத்தான் இருக்கனும்.. அதுதான் முறை.. என்னைக்காவது அவர் என்னைத் தேடி வந்தா.. என்னை கேள்வி கேட்கிறது அவராக இருக்கக் கூடாது.. அவரை கேள்வி கேட்கிறதைப் போல நான் இருக்கனும்.."

ஊர்மிளா தெளிவாகப் பேசினாள்.. தீர்க்கமான முடிவை எடுத்தாள்.. அப்படிப்பட்டவளைத்தான் அவள் எங்கேயிருக்கிறாளோ என்ற எண்ணத்தை நரேந்திரனின் மனதில் அகல்யா விதைத்தாள்..

"போனவ எங்கே போனாங்கிற விவரம் கூடத் தெரியலையே.. திருச்சிக்குத் தேடிப் போனா.. அவ அங்கேயில்லாம நியூயார்க்குக்கு பறந்திருந்தா என்ன செய்கிறது..? அந்த மனுசன்.. அதான் தம்பி.. உன் மாமனாரு.. தாம் தும்ன்னு வானத்துக்கும்.. பூமிக்குமா குதிச்சு வைச்சா யார் பதில் சொல்கிறது..?"

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் பதில் சொல்ல அஞ்சுகிறவன் அல்ல.. ஆனால் ஒருவேளை.. ஊர்மிளா திருச்சிக்குப் போகாமல் வெளிநாட்டிற்குப் போயிருந்தால்.. அந்த விவரத்தைத் தாங்கி நிற்க அவனால் முடியாது.. அதனாலேயே அவன் திருச்சிக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர்த்தான்..

"அவர் தேடி வராம எந்தச் செய்தியையும் அவருக்குச் சொல்லக் கூடாது.." தீர்மானமாகச் சொல்லி விட்டாள் ஊர்மிளா..

அவள் சொல்வதில் இருந்த நியாயத்தில் சோமசுந்தரமும்.. பூங்குழலியும் மௌனமாகி விட்டார்கள்.. சோமசுந்தரம் மகளுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கிக் கொடுத்தார்.. பூங்குழலி அவள் வாய்க்குப் பிடித்தபடி ருசியான உணவுகளைச் சமைத்துப் போட்டாள்.. ஊர்மிளாவைப் பெற்றவர்கள் அவளைத் தாங்கிக் கொண்டார்கள்..

"உன்னை விட்டுப் போக மனமில்லை ஊர்மி" ராதா தோழியின் கையைப் பிடித்துக் கொண்டாள்..

மாலை வேளையில் கூட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த பறவைகளை அண்ணாந்து பார்த்தாள் ஊர்மிளா.. ஒவ்வொரு பறவைக்கும் வெவ்வேறு கூடு.. அவை ஒன்றாகப் பறந்தாலும் கூடென்று வரும் போது பிரிந்துதானே வசிக்க வேண்டும்..?

"நீ என்னைப் பற்றிக் கவலைப்படாம போயிட்டு வா.." தோழியிடம் சோகையாக சிரித்தாள் ஊர்மிளா..

https://t.me/tamilpdfebooks

ராதாவின் மனம் நைந்தது.. அவள் மனது பால்யகாலத்திற்கு திரும்பியது.. அன்று போல இன்றும் இல்லையே.. ஏன் என்று அவள் தவித்துப் போனாள்.. ஊர்மிளாவின் சிக்கலில்லாத சிக்கலான வாழ்வில் அவளை தனித்து நிற்க வைத்து விட்டு அவள் மட்.டும் ராபிட்சனைத் தேடிப் பயணப் படுவதா..? அவளால் அது முடியுமா..?

"நான் நரேனிடம் பேசிப் பார்க்கிறேண்டி.."

"வேண்டாம்.."

"இது சின்னப் பிரச்னைதான் ஊர்மிளா.."

"இப்போது பெரிய பிரச்னையாகி விட்டது ராதா.. கௌரவப் பிரச்னையாகி விட்டது.. எனக்காக மற்றவர் பரிந்து பேசி அவர் என்னைத் தேடி வருகிறதா இருந்தால் என் சுயகௌரவம் செத்து விடும் ராதா.. அதுக்கப்புறம் நான்.. நானாய் வாழ முடியாது.."

ஊர்மிளாவின் உறுதியை மாற்ற விரும்பாமல் பெங்களூருக்கு பயணப்பட்டு விட்டாள் ராதா.. போவதற்கு முன்னால் தஞ்சைக்குப் போய் அமிர்தாவை பார்த்தாள்..

"ஹேய்.. எப்போடி இந்தியாவுக்கு வந்த..?" அமிர்தா ராதாவை கட்டிக் கொண்டாள்..

"வந்து ஒன் மன்த்தாகுது.."

"அடிப்பாவி..! இத்தனை நாள் கழித்தா என்னைப் பார்க்க வந்த..? உன்னை என்ன செய்தா தேவலாம்..? உனக்குத் தெரியுமா..? நம்ம ஊர்மிக்கு மேரேஜ் ஆகிருச்சு..

https://t.me/tamilpdfebooks

அவ பெங்களூரில் இருக்கிறா.. அவ ஹஸ்பெண்ட் பிக்மேன்.. யு நோ..”

“ஐ நோ ஆல்.. அமிர்தா.. ஊர்மிளா இப்ப பெங்களூரில் இல்லை.. திருச்சியில் அவ பேரண்ட்ஸோட இருக்கா..”

“உனக்கு எப்படித் தெரியும்..? நீ அவளைப் பார்த்தியா..?”

“ம்ம்ம்.. அவ மேரேஜீக்கு இன்வைட் பண்ணியிருந்தா.. அப்ப வர முடியலை.. உன்னிடம் கேட்டப்ப நீயும் சரியா பதில் சொல்லலை..”

“அது ஒரு கலாட்டாக் கல்யாணம் போல ஆகிருச்சுப்பா.. ஊர்மிளாவோட ஹஸ்பெண்ட் பெரிய கோடிஸ்வரர்.. அதை மறைச்சு ஊர்மிளாவோட அப்பாகிட்ட அவர் ஒரு தொழிலாளின்னு சொல்லிப் பெண் கேட்டு.. ஏழை போல நடிச்சு கல்யாணம் வரைக்கும் கொண்டு போயிட்டார்.. நான்தான் பெண்ணுக்கு தோழி..! நாங்க பெங்களூர் போய் இறங்கறோம்.. அங்கே பார்த்தா பேலஸ் போல கல்யாண மண்டபம்.. ஊர்மியோட அப்பா சண்டைக்குப் போயிட்டார்.. என்னத்தைச் சொல்ல..? ஒருவழியாய் கல்யாணம் நல்லபடியா நடந்து முடிஞ்சிருச்சு..”

“பட்.. அவ நல்லபடியா வாழலை.. இப்ப திருச்சிக்கு திரும்பிவந்துட்டா..”

“என்னடி சொல்ற..?”

https://t.me/tamilpdfebooks

“பெங்களூருக்கு டெபுடேசன் பேஸிக்கில் வந்தேன் அமிர்தா.. ஊர்மிளாவையும் பார்த்தேன்.. அவ ஹஸ்பெண்ட் அப்ராட் போயிருந்தார்..”

ராதா நடந்தவற்றை விவரித்தாள்.. அமிர்தா பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்தாள்.. ஒரு தோழியை மற்றொரு தோழியிடம் ஒப்படைத்தாள் ராதா..

72

கல்நெஞ்சம் உனில் வைத்து..
காதலையே எனில் வைத்த..
அழகான ராட்சசி நீ....

தோட்டத்து காய்கறிச் செடிகளைப் பார்த்தபடி வாசல் படியில் அமர்ந்திருந்தாள் ஊர்மிளா.. பச்சைப் பசேலென்ற செடிகளின் அழகு எப்போதும் ஊர்மிளாவின் மனதில் உற்சாகத்தையே உண்டாக்கும்.. அந்த உற்சாகம் இப்போது ஊர்மிளாவின் மனதிற்குள் புகுந்து கொள்ள தயங்கி நின்றது.. அவளது இமையோரக் கனவுகள் காணாமல் போய் அங்கே சோகம் குடி கொண்டிருந்தது..

‘ஒரு மாதம் ஓடிப் போயிருச்சு..’

ஊர்மிளாவின் மனம் கணக்குப் போட்டது.. இந்த ஒரு மாதமும் தெருவில் கார் சப்தம் கேட்டால் அது

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனின் காராக இருக்குமோ என்று ஓடிப் போய் பார்ப்பாள்.. தூங்கும்போதும் அவளது செவி.. அவனது கை கதவைத் தட்டுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்.. சிறிய ஒலியிலும் புரண்டு எழுந்து கதவைப் பார்ப்பாள்..

மகளின் ஆவலையும்.. துடிப்பையும்.. காணாததைப் போலக் கண்டு கொண்டிருந்த பூங்குழலியின் உயிர் துடித்தது..

பூங்குழலியும் ஒரு பெண்..! காதலாகி.. கசிந்துருகிய கணவனுடன் வாழ்ந்து கொண்டிருப்பவள்.. பெற்றவர் களுக்கு செல்ல மகளாய் இருந்தவள்.. திருமணத்திற்குப் பின்னால் ஓர்நாள் கூட பிறந்த வீட்டில் தங்கியதில்லை.. பெற்றவர்களைப் பார்க்க வேண்டும் என்று கிளம்பிப் போவாள்.. நேரம் செல்லச் செல்ல.. அவள் மனம் சோமசுந்தரத்திடம் தாவி விடும்..

'இப்ப என்ன செய்துகிட்டு இருப்பார்..? சாப்பிட்டிருப்பாரா..?'

இப்படி ஓடும் நினைவுகள் கடைசியில் வந்து..

'என்னை நினைச்சிருப்பாரா..?' என்பதில் வந்து முடியும்..

அதற்கு மேல் அவளுக்கு இருப்புக் கொள்ளாது.. எப்படிக் கிளம்புவது என்று அவள் தவித்துக் கொண்டிருக்கும் போதே வாசலில் சோமசுந்தரத்தின் சப்தம் கேட்டு விடும்..

"இந்தப் பக்கம் ஒரு வேலையா வந்தேன்.. அப்படியே குழலியைக் கூப்பிட்டுக்கிட்டுப் போகலாம்ன்னு.." அவர் இழுப்பார்..

https://t.me/tamilpdfebooks

வீட்டில் உள்ளவர்கள் சிரித்தபடி பூங்குழலியை அவருடன் அனுப்பி வைப்பார்கள்.. மனதுக்குள் பெருமை பொங்கி வழிய சோமசுந்தரத்தின் சைக்கிளின் பின் சீட்டில் ஏறிக் கொள்வாள் பூங்குழலி..

போகும் வழியில் சோமசுந்தரம் அவளுக்கு பூ வாங்கித் தருவார்.. நேராய் வீட்டுக்குப் போகாமல் காவிரியாற்றின் கரையில்.. மணலில் உட்கார்ந்து கதை பேசுவார்கள்.. சில நாள்களில் அவர், அவளை சினிமாவுக்கு அழைத்துச் செல்வார்.. கணவனின் கை விரல்களுடன் விரல் கோர்க்க. அவர் தோளில் தலை சாய்ந்து சினிமா பார்ப்பதை பரம சுகமாக நினைப்பாள் பூங்குழலி..

அது போன்ற உணர்வுகளும், நினைவுகளும், ஏக்கங்களும், பெண்களுக்கு மட்டுமே சொந்தமானவை..

அவை ஊர்மிளாவிற்கும் இருக்குமல்லவா..?

அதை வெளியில் சொல்லாமல் மனதுக்குள் மறைத்து.. ஒரு சிறு சப்தத்திலும் கணவனின் காலடி யோசையைத் தேடி ஏமாறிச் சோரும் மகளைக் கண்டு மனம் நைந்தாள் பூங்குழலி..

வைராக்கியத்துடன் இருந்தாலும்.. மனம் முழுவதும் நரேந்திரனைப் பற்றிய நினைவுகளுடனும்.. அவன் மீதான காதலுடனும் இருந்தாள் ஊர்மிளா.. அவனைப் பற்றி எந்தவொரு வார்த்தையையும் பேசாமல் இறுகிப் போனவளாய் மௌனத்தில் உறைந்திருக்கும் மகளின் மனதில் கணவனின் மீதான காதல் உறைந்திருக்கிறது என்பதை கண்டு கொண்டாள் பூங்குழலி..

https://t.me/tamilpdfebooks

“இவதான் இப்படி இருக்கிறான்னா.. நீங்களும் அவ போக்கிலேயே போனா எப்படிங்க..?” தயக்கத்துடன் சோமசுந்தரத்திடம் பேச்சை ஆரம்பித்தாள்..

“வேறென்ன செய்யலாம்ன்னு நினைக்கிற..?” சோமசுந்தரத்தின் கூர்மையான பார்வை மனைவியை துளைத்தது..

“அதில்லைங்க.. வாயும், வயிறுமா இருக்கிற பொண்ணு..” பூங்குழலியில் கண்கள் கலங்கின..

சோமசுந்தரம் நிதானித்தார்.. மனைவி சொல்வதை அவர் நினைத்துப் பார்க்காமல் இல்லை.. அதே சமயத்தில்.. இந்த மாதிரியான உடல்நிலையுடன் இருக்கும் மனைவிக்கு மனவேதனையைத் தந்து பிறந்தவீட்டுக்கு ஓடி வர வைத்து விட்ட நரேந்திரனை மன்னிக்கவும் அவரால் முடியவில்லை.

“பிள்ளைத் தாய்ச்சிப் பொண்ணுக்கு புருசன் பக்கத்தில இருக்கனும்னு ஆசை இருக்காதா..?”

அவளும் அது போல்தான் இருந்திருக்கிறாள் என்பதை குறிப்பில் உணர்த்தினாள் குழலி..

“இருக்கும்தான் குழலி.. அதை உன் மக வாய்திறந்து சொன்னாளா..?”

“அவ எப்படிங்க சொல்வா..? நாமதான் அதைப் புரிஞ்சு..” பூங்குழலி இழுக்க..

“சொல்லு.. அதைப் புரிஞ்சுக்கிட்டு என்ன செய்யனும்கிற..?” சோமசுந்தரம் ஊக்குவித்தார்..

https://t.me/tamilpdfebooks

உணர்வுகள் துடைக்கப்பட்ட அவரின் இறுகிய முகத்திலிருந்து பூங்குழலியால் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.. அவர் கோபமாய் இருக்கிறாரா.. இல்லை குணசாலியாய் பேசுகிறாரா என்று புரியாமல் குழம்பியபடி..

"நீங்கதான் மாப்பிள்ளைக்கு போன் போட்டுத் தகவலைச் சொல்லாமில்ல.." என்று சொல்லி விட்டாள்..

"என்னை யாருன்னு நினைச்சேடி..?" சோமசுந்தரம் கர்ஜித்தார்..

"மெல்லப் பேசுங்க.. ஊர்மிளா காதில் விழுந்திரப் போகுது.." பூங்குழலி பயந்தாள்..

சோமசுந்தரம் குரலைத் தாழ்த்திக் கொண்டாலும் கோபம் குறையாதவராகப் பேசித் தள்ளினார்..

"நிச்சயமாச் சொல்லுவேண்டி.. எப்போத் தெரியுமா..? என் பெண்டாட்டி எங்கேன்னு உன் மருமகன் நம்ம வீட்டு வாசப்படியிலே வந்து நின்னுக் கேக்கட்டும்.. அப்போ இந்த தகவலைச் சொல்றேன்.. அதுவரைக்கும் இங்கேயிருந்து புறா விடு தூது கூட உன் மருமகன் இருக்கிற திசைப் பக்கம் போகாது.."

"ஊர்மிளாவுக்காக பாருங்க.."

"அவளுக்காகத்தான் பார்க்கிறேன்.. இல்லேன்னா எனக்கிருக்கிற கோபத்தில பெங்களூருக்குப் போய் அந்த கோடிஸ்வரன் சட்டைக் காலரைப் பிடிச்சு.. இதுதான் நீ குடும்பம் நடத்தற லட்சணமான்னு கேட்டுட்டு

https://t.me/tamilpdfebooks

வந்திருப்பேன்.. பெரிய மனுசனாம்.. பெரிய மனுசன்.. பணம் காசு இருந்தாப் போதுமாடி..? குணமிருக்கனும்..”

சோமசுந்தரத்தின் கொதிப்பில் பூங்குழலி நரேந்திரனைப் பற்றிய பேச்சை எடுப்பதையே விட்டு விட்டாள்.. ஊர்மிளாவோ.. மனதுக்குள் இருக்கும் ஏக்கத்தையும், காதலையும் வெளிக்காட்டாமல் இறுகிப் போன முகத்துடன் வீட்டை வளைய வந்தாள்.. நாளாக.. ஆக.. அவளின் மனவேதனை அதிகரித்துக் கொண்டே இருந்தது.. திருச்சியில் அவளும், நரேந்திரனும் சுற்றிய இடங்களின் நினைவுச் சுவடுகள் அவளை அலைக்கழித்தன..

அந்த நேரத்தில்தான் அவளைப் பார்க்க வந்தாள் அமிர்தா.. தோழியை பரிசோதித்தவள் அவளுக்கான மருந்து, மாத்திரை, டானிக்குகளை எழுதிக் கொடுத்தாள்.. அவள் கை பிடித்து..

“தஞ்சாவூரிலே எனக்கு ஒரு வேலை வாங்கிக் குடு அமிர்தா..” என்று கெஞ்சுதலாக கேட்டாள் ஊர்மிளா..

“ஏண்டி..? இங்கேன்னா.. உங்களுக்குன்னு சொந்த வீடு இருக்கு.. அப்பாவோட புத்தகக் கடை இருக்கு.. பழகினவங்க இருக்கிறாங்க..”

“கூடவே நரேனோட நினைவுகளும் இருக்கே..”

துயரத்துடன் சொன்ன தோழியை கூர்ந்து பார்த்தாள் அமிர்தா.. அலைபாயும் அவள் மனக் கடலை.. அவள் விழியசைவில் அமிர்தாவினால் கண்டுணர முடிந்தது..

அவள் யோசித்தாள்.. வழி கிடைத்தது.. அதை தோழியிடம் சொன்னாள்..

https://t.me/tamilpdfebooks

"என் ரிலேடிவ் ஸ்கூல் நடத்தறாங்க.. அதில் உனக்கு டீச்சர் போஸ்ட் வாங்கித் தரேன்.. நீ எம்.எஸ்.ஸி. பி.எட்.. உடனே அப்பாயிண்ட் பண்ணிக்குவாங்க.. வீடும் பார்த்து வைக்கிறேன்.. இந்த மன்த் எண்டில நீங்க கிளம்பி வாங்க.."

அமிர்தா சொன்னதைச் செய்தாள்.. தஞ்சையில் ஊர்மிளாவுக்கு வேலை கிடைத்தது.. வீடும் கிடைத்தது.. சோமசுந்தரத்திடம் அவள் தயங்கியபடியே குற்ற உணர்வுடன் விவரம் சொன்னபோது அவர் இதமாக புன்னகைத்து மகளின் தலைமுடியை கோதிவிட்டார்..

"இதுக்கு ஏம்மா இவ்வளவு தயங்கற..? உனக்கு எங்கேயிருக்கனும்னு தோணுதோ.. அங்கே நாம் இருக்கலாம்.."

"அப்பா.." நன்றியுடன் அவர் கரங்களில் முகம் புதைத்துக் கொண்டாள் ஊர்மிளா..

"நீ அமைதியா இருக்கனும்.. அதுதான் எங்களுக்கு முக்கியம்.."

"ஆனாப்பா.. உங்க புத்தக்கடை..?"

சோமசுந்தரம் எந்த அளவுக்கு அவருடைய புத்தகங்களையும், அந்தப் புத்தகக் கடையையும் நேசித்தார் என்பதை அறிந்து வைத்திருந்த ஊர்மிளா குரல் நடுங்கக் கேட்டாள்..

"புத்தகக் கடை எங்கே போகப் போகுது..? வீட்டை வாடகைக்கு விட்டுரலாம்.. புத்தகக்கடையைக் கவனிக்க ஆள் போட்டுரலாம்.. வாரம் ஒருதடவை வந்து நான்

https://t.me/tamilpdfebooks

கணக்கு வழக்கைப் பார்த்துட்டுப் போய்க்கறேன்.. தஞ்சாவூர் எங்கே இருக்கு..? திருச்சியில இருந்து கூப்பிடு தொலைவிலதான இருக்கு.. அங்கே போக நாம எதுக்காக மலைக்கனும்..?"

ஊர்மிளாவின் குற்ற உணர்வை ஊதித் தள்ளினார் சோமசுந்தரம்.. ஊர் விட்டு ஊர் போகும் மகளின் முடிவை வெகு இலகுவாக ஏற்றுக் கொண்டார்.. அவளுக்காக அவளுடைய பெற்றோர் குடி பெயர்ந்தார்கள்..

தஞ்சையில் அமிர்தா பார்த்து வைத்திருந்த வீடு.. அழகாகவும் வசதியாகவும் இருந்தது... ஊர்மிளா வேலைக்குப் போய் வர ஆரம்பித்தாள்... மெல்ல அந்த வாழ்க்கைக்கு அவர்கள் பழகிப் போனார்கள்.. ஊர்மிளாவின் வயிறு வளர்ந்தது.. பிரசவ நாளும் நெருங்கியது.. அமிர்தாவின் கவனிப்பில் அவள் வேலை பார்த்த மருத்துவ மனையிலேயே பிரசவத்திற்காக சேர்ந்தாள் ஊர்மிளா..

விடியலை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் நரேந்திரனின் மகன் பிறந்தான்.. தகப்பனின் சாயலை தனதாக்கிப் பிறந்திருந்த குழந்தையைக் கண்டதும் ஊர்மிளாவின் முகம் விகசித்தது... அவள் விழிகள் மலர்ந்தன..

"அவங்கப்பாவைப் போலவே இருக்கானில்லம்மா..?"

ஆனந்தத்துடன் பூங்குழலியிடம் கேட்டபடி குழந்தையை ஏந்திக் கொண்டவளைப் பார்த்ததும்.. கண்கள் பனிக்க கணவரை ஏறிட்டாள் பூங்குழலி.. இருவரின் பார்வைகளும் பேசிக் கொண்டன..

https://t.me/tamilpdfebooks

"இப்பயாவது அவருக்குத் தகவல் சொல்லுங்களேன்.." பூங்குழலி கெஞ்சினாள்..

"எவருக்கு..?" தெரியாதவரைப் போல கேட்டார் சோமசுந்தரம்..

'இந்த மனுசருக்கு இருக்கிற அழும்பிருக்கே..' பூங்குழலிக்கு அழுகை வந்து விடும் போல இருந்தது..

"ம்ம்ம்.. வழியில் போகிற யாருக்கோ சொல்லி விடச் சொல்கிறேன்.. எல்லாம் நம்ம மருமகனுக்குத்தான் சொல்லச் சொல்கிறேன்.." கோபத்துடன் சொன்னாள் பூங்குழலி..

"அதாவது நம்ம பேரனோட அப்பாவுக்குச் சொல்லனும்கிற.." அடாவடி சோமசுந்தரம் விடாமல் விளக்கம் கேட்டார்..

"அப்பா சாமி.. உங்களுக்கு கோடி புண்ணியமா போகும்.. இப்படி வில்லங்கம் வீராச்சாமியா வியாக்கினம் பேசிக்கிட்டு இருக்காம.. அவருக்குத் தகவல் சொல்லி விடுங்க.." பூங்குழலி கை குவித்து விட்டாள்..

"அதை நம்ம பேரனோட அம்மா சொல்லட்டும்டி.." என்று சொல்லி விட்டார் சோமசுந்தரம்..

ஊர்மிளாவிடம் பஞ்சாயத்து போனபோது.. அவள் கை அணைவிலிருந்த மகனின் முகத்தையே பார்த்தபடி பேசாமல் இருந்தாள்.. அவள் முகம் இறுகியது..

"வேண்டாம்மா.." மறுத்து விட்டாள்..

"நான் சொல்லலை..?" வெற்றி முரசு கொட்டினார் சோமசுந்தரம்..

https://t.me/tamilpdfebooks

"உங்களுக்கு சந்தோசம் கொண்டாடுமே.." பூங்குழலி பல்லைக் கடித்தாள்..

"இருக்காதா பின்னே..? அவ யாரு.. என் மகள்டி.. ரோசத்திலேயும் கோபத்திலேயும் என்னைக் கொண்டிருக்கா.." சோமசுந்தரம் தோள் தட்டினார்..

"எப்படியோ போங்க.."

அதற்குப் பின்னால் பூங்குழலி அந்தப் பேச்சை எடுக்கவில்லை..

சுரேந்திரன் பிறந்து வந்து ஊர்மிளாவின் தொலைந்து போன சிரிப்பை மீட்டுக் கொடுத்திருந்தான்.. அவன் வளர.. வளர.. அவனது மழலையிலும்.. விளையாட்டிலும் தன்னை மறந்து குதூகலம் கொண்டாள் ஊர்மிளா..

"அம்மா.. இவனைப் பாருங்களேன்.. பொககை வாயைத் திறந்து என்னமா பேசறான் தெரியுமா..?"

அவனது ஒவ்வொரு செய்கையிலும் மகிழ்ந்து போய் விடுவாள் ஊர்மிளா.. மகனை இமைப் பொழுது கூடப் பிரிய மாட்டாள்.. பூங்குழலியின் பொறுப்பில் விட்டுவிட்டு வேலைக்குப் போக யோசிப்பாள்... பள்ளியிலேயே ஆயாவை ஏற்பாடு பண்ணிக் குழந்தையை தன்னுடன் தூக்கிக் கொண்டு போய் விடுவாள்..

'நான் பார்த்துக்க மாட்டேனா..' பூங்குழலியின் மனம் வருந்தினாலும்.. மகளின் மனநிலையை புரிந்து கொண்டவளாக எதுவும் சொல்ல மாட்டாள்..

ஊர்மிளாவின் உலகமாக சுரேந்திரன் ஆகிப் போனான்.. அவளது சிந்தையெல்லாம் மகனின் மீதே

https://t.me/tamilpdfebooks

இருந்தது.. மகனுக்காக அவள் எதையும் செய்ய சித்தமாக இருந்தாள்..

அதனால்தான் அவனுடைய சிகிச்சை என்று வந்த போது அவனையே பிரிந்து நிற்க மனம் துணிந்தாள்..

சோமசுந்தரமாகட்டும்... பூங்குழலியாகட்டும்... என்றாவது ஒருநாள் நரேந்திரன் ஊர்மிளாவைத் தேடி வருவான் என்று நினைத்தார்களே தவிர.. அவன் மகனைத் தேடி வருவான்.. மனைவியைக் குற்றம் சாட்டிவிட்டு அவனைத் தூக்கிப் போவான் என்று கொஞ்சம்கூட நினைத்துப் பார்க்கவில்லை..

நினைத்துப் பார்க்காததெல்லாம் நிகழ்வதுதானே வாழ்க்கை..? நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் அது எப்படி வாழ்க்கையாகும்..?

தஞ்சைக்கு மகளுக்காக அவர்களை வரவைத்ததும் அந்த வாழ்க்கைதான்... அதே தஞ்சையை விட்டு திருச்சிக்கு அவர்களை திரும்பிப் போக வைத்ததும் அந்த வாழ்க்கைதான்..

நரேந்திரனின் முகத்தைக் கூடப் பார்க்க மாட்டேன் என்று ஊர்மிளாவை வைராக்கியம் கொள்ள வைத்ததும் அந்த வாழ்க்கைதான்.. அதே நரேந்திரனின் பின்னால் மகனுக்காக அவளைப் போக வைத்ததும் அந்த வாழ்க்கைதான்...

வாழ்க்கை வகுத்து வைத்திருக்கும் திருப்பங்களைப் பற்றி யாரால் கணிக்க இயலும்..?

https://t.me/tamilpdfebooks

73

காற்றோடு காதல் சொல்லியும்..
நேற்றோடு எனை நிறுத்திவிட்ட
அழகான ராட்சசி நீ....

நரேந்திரன் சாப்பிட வந்தான்.. சுரேந்திரனுக்கு ஸ்பூனில் இட்லியை விண்டு ஊட்டி விட்டபடி கதை பேசிக் கொண்டிருந்த ஊர்மிளா மகன் சொன்ன எதையோ கேட்டு மனம் விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தாள்.. சிரிக்கும்போது அவளின் கண்களும் சேர்ந்து சிரிப்பதைக் கண்ட நரேந்திரன் அவளை கூர்மையாக பார்த்தபடி சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்..

அவன் பார்வையில் ஊர்மிளாவின் சிரிப்பு நின்று விட்டது... அதில் அவன் முகம் கடுத்தான்.. மகனைப் பார்த்தான்.. மகனோ தகப்பனைக் கண்டதும் சிரித்தான்..

"நீ சிரிக்கிற..? உன் அம்மாவானா சிரிப்பை முழுங்கறா.. ஏண்டா..? என்னைப் பார்த்தா அவளுக்கு வில்லனைப் போல இருக்கா..?" என்று கேட்டு வைத்தான் நரேந்திரன்..

'பிள்ளைகிட்டப் பேசுகிற பேச்சைப் பார்..' ஊர்மிளாவின் முகம் சிவந்து விட்டது..

அதை விழுங்கி விடுபவனைப் போல பார்த்த நரேந்திரனின் பார்வையில் தடுமாறியது அவளின் பெண்மனம்..

https://t.me/tamilpdfebooks

"பேசாம சாப்பிடச் சொல்லுடா..." தட்டைப் போட்டபடி மகனிடம் சொன்னாள்..

"சாப்பிதுங்க.." சுரேந்திரன் அவன் பங்குக்கு உபசரித்தான்..

"பாருடா.. இவரு எனக்கு ஆர்டர் போடறதை.." நரேந்திரன் கை நீட்டி மகனை இழுத்துக் கொண்டான்..

"சுரேன்..! யூனிபார்ம் அழுக்காயிரும்.." ஊர்மிளா நரேந்திரனை முறைத்தபடி குரல் கொடுத்தாள்..

'நேராச் சொல்ல மாட்டாளாமா..' நரேந்திரன் அவளை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான்..

'பார்வையைப் பாரேன்..' ஊர்மிளாவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது..

அதை மறைத்தபடி முகத்தை கடுமையாக வைத்துக் கொண்டு பரிமாறினாள்.. அவளைப் பார்த்தபடியே சாப்பிடுகிறேன் பேர்வழியென்று டிபனை சுரேந்திரனின் யூனிபார்மில் போட்டு வைத்து ஊர்மிளாவின் பலத்த கண்டனப் பார்வைக்கு ஆளானான் நரேந்திரன்..

"ஒன்னுத் தானாத் தெரியனும்... இல்லேன்னா.. சொல்றதைக் கேட்டாவது தெரிஞ்சுக்கனும்.. இரண்டும் இல்லாம இப்படி முறைச்சு முறைச்சுப் பார்த்துக்கிட்டு.. தட்டு எங்கேயிருக்குன்னு கூடப்பார்க்காம சாப்பிட்டா இந்தக் கதிதான்.."

ஊர்மிளா மகனைத் திட்டியபடி அவனுடைய கையையும் வாயையும் துடைத்து விட்டு.. அவனுடைய

https://t.me/tamilpdfebooks

யூனிபார்மில் ஒட்டியிருந்த டிபன் துகளை கைக்குட்டையில் தட்டி விட்டு.. தண்ணீரில் கழுவி விட்டு சுத்தம் செய்தாள்..

தான் ஒன்றும் செய்யவில்லையே என்ற குழப்பம் சுரேந்திரனுக்கு.. அவனை அம்மா திட்டுகிறாள் என்ற உணர்வுடன்..

"அப்பாம்மா..?" என்று நரேந்திரனின் பக்கம் கைகாட்டி விட்டான் அவன்..

"நீ சொல்லித்தான் தெரியனுமாடா கண்ணா.. எல்லாத்தையும் பார்த்துக்கிட்டுத்தானே இருக்கேன்.." ஊர்மிளா உதட்டைச் சுழித்தபடி நொடித்தாள்..

அந்த உதட்டுச் சுழிப்பிற்கே தன் அத்தனை சொத்தையும் எழுதி விடலாம் போலச் சொக்கிப் போனான் நரேந்திரனாகப்பட்ட சுந்தரபுருசன்..

"ஏண்டா டேய்... அப்பாவையே காட்டிக் கொடுக்கிறயா..?" என்றான்..

மகனைக் கொஞ்சுவதைப் போல ஊர்மிளாவிடம் ஒட்டிக் கொள்ள முயன்றான் நரேந்திரன்.. அவளோ எட்டி நின்றாள்.. நரேந்திரன் முகம் கடுத்தான்..

'இது ஒன்னு இருக்கு இவ கிட்ட..' பல்லைக் கடித்தவன்..

"என்னை வில்லன் ரேஞ்ஜிலேயே வைக்கிறாடா உன் அம்மா.." என்று மகனிடம் குற்றம் சொன்னான்...

தகப்பன் எதைச் சொல்கிறான் என்பது புரியா விட்டாலும்.. அவனை திடிர் பஞ்சாயத்து தலைவராக ஆக்கி விட்டதற்காக.. ஊர்மிளாவைப் பார்த்து..

https://t.me/tamilpdfebooks

"வொய்..?" என்று கை குவித்தான் குட்டி சுரேந்திரன்..

அவனின் அரட்டலைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்ட வில்லை ஊர்மிளாவுக்கு.. மத்தாப்பூ போல முகம் ஒளிர மகிழ்ந்து போனாள்...

"இது பெரிய ஆளகிருச்சு.. அம்மாவையே மிரட்டுது.." மகனின் தலையில் செல்லமாக முட்டிச் சிரித்தாள்..

அவன் ஒருவன் அங்கே இருப்பதை உணராதவர் களாக தாயும், மகனும் கொஞ்சிக் குழாவியதில் நரேந்திரனின் கடுப்பு அதிகரித்தது.. ஏகத்துக்கும் கடுப்பானவன்..

"என்னடா.. உங்கம்மாவுக்கு பிள்ளை போதும்ன்னு சொல்லாமல் சொல்லுகிறாளா..? அந்தப் பிள்ளையைக் கொடுத்த புருசன் வேணாமா..?" என்று கொதித்தான்..

'கடவுளே..' ஊர்மிளாவின் முகம் அந்தி வானமானது.

அவள் இப்போது நேரடியாகவே நரேந்திரனை முறைத்தாள்.. அதற்காகத்தானே அவன் அவளை வம்புக்கு இழுத்தான்..? அவனும் பதிலுக்கு விட்டுக் கொடுக்காமல் முறைத்தான்..

"என்னடா சொல்றா உங்கம்மா..?" கோட்டை மடிக்க வேறு செய்தான்..

அவனது திட்டம் என்னவென்பதை ஊர்மிளாவால் யூகிக்க முடிந்தது.. அவனுக்கும்.. அவளுக்கும் இடையில் எழும்பியிருக்கும் சுவரை உடைக்க வேண்டும்..

https://t.me/tamilpdfebooks

'அது அவ்வளவு எளிதானதா..?' ஊர்மிளாவின் முகம் கடினமானது..

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த நரேந்திரனின் முகமும் கடினமானது..

"சுரேன்.. உனக்கு ஸ்கூலுக்கு நேரமாச்சு.. கிளம்பு.." கண்டிப்புடன் சொன்னாள் ஊர்மிளா..

"அதாவது.. அவனைக் கூப்பிட்டுக்கிட்டு நான் இடத்தைக் காலி பண்ணிடனும்.. அதானே உன் ஆர்டர்..?"

நரேந்திரன் ஊர்மிளாவைப் பார்த்துக் கேட்டான்... ஓர் நொடி அவனை நிமிர்ந்து பார்த்தாள் ஊர்மிளா.. நீண்ட நாள்களுக்குப் பின்னால் அவளிடம் நேரடியாகப் பேசுகிறான் அவன்.. அத்தனை தினங்களாய் அவளுடன் அவன் நேரடியாய் பேசியதில்லை... சுரேந்திரனை ஊடே வைத்துத்தான் கணவனும் மனைவியும் பேசிக் கொள்ளுவார்கள்..

திடிரென்று உடைந்த தடுப்புச் சுவரில் ஏதும் பேச முடியாமல் உதட்டைக் கடித்தாள் ஊர்மிளா.. நரேந்திரனே தொடர்ந்து பேசினான்..

"நீ செய்கிறது ரொம்பவும் ஓவர்ன்னு உனக்கேத் தெரியலையாடி..? தெரிஞ்சும் தெரியாததைப் போல நடிக்கிறயா..?"

கோபமான அவனது கேள்வியில் ஊர்மிளாவின் தடுமாற்றம் விடைபெற்று ஓடி விட்டது.. அவளின் பழைய நிமிர்வு மீண்டுவிட்டது..

https://t.me/tamilpdfebooks

"நடிக்கிறேனா..? நானா..? எனக்கு நடிக்கத் தெரியாது.. எங்கப்பா அதைச் சொல்லிக் கொடுத்து வளர்க்கலை..?"

சூடான அவளது பதிலில் அவன் இன்னும் சூடாகிப் போனான்..

"இப்ப எதுக்காகடி உன் அப்பாவைப் பத்திப் பேசற..? எப்பவும் அவர் மகளாவே இருப்பியா..? கொஞ்சமாச்சும் என் பெண்டாட்டிங்கிற நினைப்பு உன் மனசில வரவே வராதா..? எப்பப் பாரு.. எங்கப்பா.. எங்கப்பாதான்.. ஒரு நாளாவது உன் மகனோட அப்பாவைப் பத்தி நினைச்சுப் பார்த்திருப்பியா..?"

'என்ன தேவைக்கு..?' ஊர்மிளாவின் விழிகள் அலட்சியமாக அவனைப் பார்த்தன..

"எனக்கு வேலையிருக்கு.." அவள் நகரப் போனாள்..

"ஏய்ய் நில்லு.." அவன் தடுத்தான்..

"உனக்குத்தான் வேலையிருக்கு.. எனக்கு ஒன்னுமேயில்லை பாரு.. உன் மனசில என்னதாண்டி நினைச்சுக்கிட்டு இருக்கே..?"

"எதையும் நினைக்கலை.."

"என்னை நினைக்கலைன்னு சொல்கிறயா..?"

ஊர்மிளா பதில் சொல்லவில்லை.. அவனின் கேள்விகள் எல்லை கடந்து அவள் போட்டுக் கொண்டிருக்கும் வேலியை உடைக்க முயலும் போதெல்லாம் அவள் பதில் சொல்வதை தவிர்த்து விடுவாள்..

https://t.me/tamilpdfebooks

“கல்நெஞ்சக்காரி..” அவன் குமுறினான்..

‘நானா..?’ அவள் இதயம் துடித்தது..

“பேசாமலே வதைக்கிறயேடி... கிட்ட வந்தா என்னவோ ரேப் பண்ண வருகிற வில்லனை ஹீரோயின் பார்க்கிறதைப் போல பார்த்து வைக்கிற.. அதையும் மீறி கையைப் பிடிச்சா பிள்ளையைக் காட்டி என்னைத் தொட நினைக்கிறாயான்னு மனசை உடைக்கிற.. ராட்சசி..! அழகான ராட்சசி..! உனக்கு மனசுங்கிறதே இல்லையாடி..”

“இருந்தது..”

அவனது பேச்சின் வலிதாங்காமல் அவள் சொல்லி விட்டாள்..

“இருந்தது.. ஒரு காலத்திலே எனக்கும் மனசிருந்தது.. அது பூப்போல இருந்தது.. என்னைக்கு உங்ககூட வாழன்னு அந்த வீட்டில அடியெடுத்து வைச்சேனோ.. அன்றைக்கிருந்தே அது கல்நெஞ்சா மாறிருச்சு..”

“ஊர்மிளா..”

“பேசு.. பேசுன்னு சொல்கிறீங்களே.. என்ன பேச..? எதைப் பேச..? இன்னும் அந்த ராதாகிருஷ்ணன் யார்ன்னு நீங்க கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லலை.. மறந்து போயிருச்சா..? பதில் கிடைக்கலைன்னாலும் பரவாயில்லைன்னு கேள்வி கேட்ட நீங்க நினைக்கலாம்.. அந்தக் கேள்வியை என் காதால் கேட்ட நான் நினைக்க முடியாது.. ஐ ஆம் ஸாரி.. நான் ராட்சசியாவே இருந்துட்டுப் போறேன்..”

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா சரேலென்று பூஜையறைக்குள் போய் விட்டாள்.. அவள் மனக்கதவைத் திறக்க மாட்டாள் என்பதில் பெருமூச்சு விட்ட நரேந்திரன் மகனை கீழே இறக்கி விட்டான்.. சுரேந்திரன் பூஜையறைக்குள் போனான்.. ஊர்மிளா அவனுக்கு குங்குமமும் திருநீரும் கலந்து நெற்றியில் சின்னப் பொட்டைப் போல தீற்றி விட்டு.. அவன் கை குவித்து கடவுள்களை வணங்கச் செய்தாள்..

மகனைத் தூக்கியபடி அவனிடம் எதையோ பேசியபடி வந்தவளின் முகத்தில் மலர்ச்சி மீண்டிருந்தது.. அவளையே உறுத்துப் பார்த்தபடி மகனை வாங்கிக் கொண்டான் நரேந்திரன்.. அப்போது அவன் கைபட்டதில் நெருப்புப் பட்டதைப் போல அவள் விலகிக் கொண்டாள்..

"வேணும்னா பாத்ரூமுக்குள்ள போய் முழு சோப்பையும் கரைச்சு என் கை பட்ட இடத்தைக் கழுவி விடு.." மனம் பொறுக்காமல் பல்லைக் கடித்தபடி யோசனை சொன்னான் நரேந்திரன்..

அவள் முகம் சிகப்போடு பதில் சொல்லாமல் பேசாமல் நின்றாள்.. நரேந்திரனின் பார்வை அவள் மேல் படிந்து சுரேந்திரனின் மீதும் படிந்தது..

"இவன் எனக்குப் பிறந்தவன்.."

அழுத்தம் திருத்தமாக அவன் சொன்னதில் என் கைபட்டு விட்டதற்கே குதித்து விலகுகிறாயே.. இவன் உனக்கும், எனக்குமான உறவில் பிறந்தவன் என்ற செய்தி இருந்தது..

https://t.me/tamilpdfebooks

"ஸ்ஸ்ஸ்.." ஊர்மிளா லஜ்ஜையுடன் அடக்கினாள்..

அவனா அடங்குவான்..? அந்த அழகான ராட்சசியால் அவன் மனதில் பொங்கும் அடக்க முடியாத தாபத்தீயில் பொசுங்கிக் கொண்டிருந்தவன் அந்த கோபத்தை அப்படியே அவள்மீது கொட்டினான்..

"என்ன 'ஸ்ஸ்ஸ்..'? நான் என்ன இல்லாததையா சொல்லிட்டேன்..?"

"ஆமாமாம்.. இருக்கிறததைத்தான் சொல்லிட்டிங்க.."

ஊர்மிளாவின் மனதில் ராதாகிருஷ்ணன் யார் என்ற கேள்வி எழுந்தது.. ராதாவிற்கும்.. ராதாகிருஷ்ணனுக்கும் இருக்கிற வித்தியாசத்தை தெரிந்து கொள்ளாதவன் இவன் என்கிற நினைவில் அவள் முகம் கடுத்தது..

முதல் நொடியில் லஜ்ஜை கொண்டிருந்தவளின் முகம்... மறுநொடியில் கடுத்ததில் நரேந்திரனுக்கு ஆயாசமாக இருந்தது..

"உண்மையில் கோபப்பட வேண்டியது நான்.. அதைச் செய்யாமல் இயல்பா உன்னிடம் பேசிப் பழக நினைக்கிறேன்.. நீதான் உச்சாணிக் கொம்பில ஏறுகிற.." என்றான்..

"எதுக்குக் கோபப்படனும்..?" நிதானமாக வினவினாள் ஊர்மிளா..

"நீங்க இல்லாத நேரத்திலே என் பிரண்டோட நான் கூத்தடிச்சேனே.. அதுக்காக கோபப்படறிங்களா..?"

"ஏய்ய்ய்.." அவன் சினந்தான்..

https://t.me/tamilpdfebooks

"அப்படி நான் சொன்னேனா..? இல்லை அப்படித்தான் உன்னைக் கேள்வி கேட்டேனா..? நான் கேட்ட கேள்வியே வேறு.."

"ஹ..! அந்தக் கேள்வி ஒன்றும் என்னைக் கௌரவப் படுத்துகிற கேள்வி இல்லை.. எனக்கும் சுயமரியாதை இருக்கு.."

"அந்த மரியாதை எனக்கில்லையா..? நான் பாரினில் இருக்கிறேன்.. உன்னோடு போனில் பேச முடியலை.. உன் போன் சுவிட்ச் ஆஃப் ஆகுது.. நான் எப்பக் கேட்டாலும் உன் பிரண்ட் ராதாகிருஷ்ணன் கூடப் பேசிக்கிட்டு இருக்கிறதா என் சித்தி சொல்கிறாங்க.."

"ஓ.." இகழ்ச்சியாக உதட்டைக் குவித்தாள் ஊர்மிளா..

"உங்க சித்தி வாக்கு தெய்வ வாக்கு..! இல்லையா..? என்னைப் பத்தி அவங்க சொன்னா அவங்களை ஏன்னு கேட்காம.. அவங்க சொன்னது உண்மையா.. பொய்யான்னு வீட்டில் இருக்கிற அத்தனை ஆள்களையும் கூப்பிட்டு வைச்சு அவங்க முன்னாலே என்னைக் கேள்வி கேட்பீங்க.. அப்படித்தானே.."

ஊர்மிளாவின் கொதிப்பில் பல்லைக் கடித்தான் நரேந்திரன்.. அவன் என்ன செய்ய நினைத்தான் என்பதை அவள் கேட்டிருக்கிறாளா..? அவள்பக்க நியாயத்தையே சொல்கிறவள் கொஞ்சமாவது அவன் பக்கமும் ஏதேனும் நியாயம் இருக்கக் கூடும் என்று யோசித்துப் பார்க்க முனைந்திருக்கிறாளா..?

"இது அநியாயம்டி.." அவன் வெறுப்புடன் சொன்னான்..

https://t.me/tamilpdfebooks

"எனக்கு நீங்க செய்தது நியாயமா இருந்தால் மட்டுமே இது அநியாயமா இருக்கும்.. போய் என் அப்பாவிடம் கேட்டுப் பாருங்க.. அவர் சொல்வார்.. நியாயம் எது.. அநியாயம் எது என்பதை.." ஊர்மிளா உதட்டைச் சுழித்தாள்..

"மிரட்டுகிறயா..?" ஒரு மாதிரியான புயலை உள்ளடக்கிய குரலில் கேட்டான் நரேந்திரன்..

"அதையேன் நான் செய்யனும்..? நான் பிள்ளைக்காக இங்கே இருக்கிறேன்.. மத்தபடி இந்த வீட்டுக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.. உங்களை மிரட்ட நான் யார்..?"

ஒட்டாத குரலில் சொல்லி விட்டு உள்ளே போய் விட்டாள் ஊர்மிளா.. கண்கள் சிவக்க.. மகனை பள்ளியில் விடக் கிளம்பினான் நரேந்திரன்..

74

எனக்கும் உனக்கும் என்ன உறவென்று..
ஏட்டிக்குப் போட்டியாக கேட்டுவைக்கும்
அழகான ராட்சசி நீ....

அகல்யா கைகளைப் பிசைந்தாள்.. செல்போனில் அடுத்த நம்பர்களை அழுத்தினாள்.. அவள் பெயரைக் கேட்டதுமே அனைத்து இணைப்புகளும் துண்டிக்கப் பட்டதில் அவளுக்குள் ஆத்திரம் கிளம்பியது..

https://t.me/tamilpdfebooks

'எல்லாம் அந்தக் கிழவன் செய்கிற வேலை..' ஆத்திரப் பட்டாள்..

அவளால் அதை மட்டும்தான் செய்ய முடியும்.. நரேந்திரனின் கம்பெனிகளின் பக்கம் போய் விட முடியாது.. அங்கே கஜேந்திரனின் ஆளுகை இருந்தது.. முக்கியமான பொறுப்புக்களை இன்னமும் தன் வசத்திலேயே வைத்திருந்தார் அவர்.. சில கம்பெனிகள் அவர் பெயரில் இருந்தன.. கிழட்டுச் சிங்கமான அவரிடம் நரேந்திரன் பணிவையும், மரியாதையையும் மட்டுமே காட்டி வந்தான்.. அவர் நரேந்திரனின் குரு.. அனைத்து மானவர்.. நரேந்திரன் குருப் ஆஃப் கம்பெனிஸின்.. மூலமான கஜேந்திரன் இண்டஸ்ட்ரிஸின் மேனேஜிங் டைரக்டர் என்பதினால் நரேந்திரன் குருப் ஆஃப் கம்பெனிஸின் மேல்பட்ட தொழிலாளர்கள் முதல் அடிமட்டத் தொழிலாளர்கள் வரை அனைவருமே அவரின் ஆணைக்குக் கீழ்படிந்தனர்.. அருண்குமாரால் அந்தக் கோட்டைக்குள் அங்கே வேலை செய்பவன் என்ற ரீதியில் மட்டுமே போய்வர முடிந்தது.. மற்றபடி அவன் தனது உறவு முறையை கம்பெனியில் சொல்லிக் கொண்டதில்லை..

'ச்சே..! அந்த ஆளை கோடிஸ்வரன்னு நம்பி ஏமாந்துட்டு.. இப்படி எதுக்கும் சொந்தம் கொண்டாட முடியாம தள்ளி நிக்கறேன்..'

அகல்யாவின் மனதில் பதட்டம் வந்தது.. நரேந்திரன் அந்த வீட்டை விட்டுப் போய் ஆறுமாதங்களாகி விட்டன.. முதலில் அதை கண்டு கொள்ளாமல்தான் இருந்தாள் அகல்யா.. திடிர், திடிரென வெளியூர் பயணங்களை

https://t.me/tamilpdfebooks

மேற்கொள்ளும் நரேந்திரன் அதைப்பற்றி அகல்யாவுக்கோ.. மற்றவர்களுக்கோ சொல்லமாட்டான்.. பெங்களூரில் இருந்தால் வருவான்.. வேலை வந்தால் கிளம்பிப் போய் கொண்டே இருப்பான்..

'நாடோடி..' இப்படித்தான் அகல்யா அவனை நினைப்பாள்..

'ஒரு இடத்தில் உட்கார்ந்து சாப்பிட முடியாத பிழைப்பு.. என்ன பிழைப்பு..'

இப்படி இகழ்ச்சியாக நினைப்பவள்.. அந்த நாடோடி கொடுத்த பணத்தில் உட்கார்ந்து சாப்பிட்டாள்.. உயர்ந்த விலையில் வைரங்களை வாங்கிப் பூட்டிக் கொண்டாள்.. காஞ்சிப் பட்டில் நகர்வலம் வந்தாள்..

அவையெல்லாம் என்றும் நிலைக்க வேண்டு மென்றால் நரேந்திரன் அந்த வீட்டில் நிலைக்க வேண்டும் என்பதே அவளின் தீவிரமான குறிக்கோளாக இருந்தது..

அதற்காகத்தான் ரம்யாவை அவனுடன் பழக விட்டு அவள்மூலம் அவனை அந்த வீட்டில் இருத்திக் கொள்ள முயன்றாள்.. நரேந்திரனோ ஒரு கனல் கக்கும் பார்வையிலேயே ரம்யாவை ஓரம் கட்டி நிறுத்தி விட்டான்..

"எங்கே போயிருப்பான்னு தெரியலையே.."

அகல்யா திகிலுடன் வாய் விட்டுப் புலம்பினாள்.. இரண்டு மாதங்களுக்கு மேல் நரேந்திரன் வெளிநாட்டில் தங்கியதில்லை.. இதைப்போல ஒருமுறை அவன் மாதக் கணக்கில் மாயமாகி யாரும் அறியாத வண்ணம் அவனது திருமண ஏற்பாடுகளை பிரம்மாண்டமாக செய்து முடித்து..

https://t.me/tamilpdfebooks

விடிந்தால் திருமணம் என்ற நிலையில் அகல்யாவிற்கும்.. அவள் பிள்ளைகளுக்கும் விவரம் சொல்லி.. ஊர்மிளாவின் கழுத்தில் தாலி கட்டி மனைவியாக்கி கொண்டதை நினைத்துப் பார்த்தவளுக்கு திகில் அதிகரித்தது..

நரேந்திரன் மாதக் கணக்கில் வீட்டுக்கு வராமல் இருந்ததைக் கூட அவளால் தாங்கிக் கொண்டிருக்க முடியும்.. அவனுடைய பொருள்களும், உடைமைகளும் அந்த வீட்டிலிருந்து வெளியேறியதைத்தான் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

நரேந்திரன் கிளம்பிப் போன இரண்டாம் மாதமே அந்த வீட்டிலிருந்த அவன் பொருள்களை ஏற்றிச் செல்ல லாரி வந்தது.. அகல்யா சப்தம் போட்டாள்.. நரேந்திரனின் அறைச் சாவியை கையில் வைத்திருந்த அவனுடைய செக்ரட்டரி அகல்யாவை பொருட்படுத்தவே இல்லை..

“என் மகன் வீட்டில் இல்லாதப்ப அவன் பொருள்களை நீ எடுத்துக்கிட்டுப் போக நான் அனுமதிக்க மாட்டேன்..” அகல்யா குறுக்கே நின்று கை மறித்தாள்..

“அம்மா அவங்களை அவங்கவேலையைச் செய்ய விடுங்க..”

அருண்குமார் அகல்யாவை இழுத்து விட்டு, செகரட்டரியிடம் மன்னிப்புக் கேட்டு வைத்தான்..

“என்னடா செய்கிற..?” அகல்யா பொங்கினாள்..

“அண்ணன் எனக்குப் போன் பண்ணியிருந்தாரும்மா.. அவரோட திங்ஸை பேக் பண்ணி அனுப்ப அவரோட செகரட்டரி வருவாங்க.. அவங்களுக்கு ஹெல்ப் பண்ணுன்னு சொன்னாரு..”

https://t.me/tamilpdfebooks

“உன்கிட்டப் பேசினானா..? எப்படிடா..? நான் போன் போட்டா அவன் நம்பர் கிடைக்கலியே..”

“வேற சிம் மாத்தியிருக்காரு..”

“அந்த நம்பரை என்கிட்டக் கொடு.. நான் அவனிடம் பேசுகிறேன்..”

“வேண்டாம்.. உங்களிடம்தான் முக்கியமா சொல்லக் கூடாதுன்னு அண்ணன் சொல்லியிருக்காரு..”

“டேய்.. நான் உன் அம்மாடா..”

“பட், அவர் எனக்கு பாஸ்..! ஆபிஸ் ரகசியங்களை வெளியே சொல்ல முடியாது.. ஐ ஆம் ஸாரி..”

அருண்குமார் மறுத்து விட்டான்.. செக்ரட்டரியின் ஏளனப் பார்வையில் அகல்யா முகம் கருத்தாள்.. அவளை கண்டு கொள்ளாமல் செகரட்டரி கையில் இருந்த பேப்பரில் சொல்லப்பட்டிருந்த அத்தனை பொருள்களையும்.. நரேந்திரனின் உடைகள் அடங்கிய பெட்டிகளையும் சரிபார்த்து லாரியில் ஏற்றி விட்டு.. அறையைப் பூட்டிச் சாவியை கையில் எடுத்துக் கொண்டாள்..

“அதான் இருந்த சாமானையெல்லாம் ஏத்தி விட்டாச்சே.. இன்னும் என்ன இருக்குன்னு ரூமை பூட்டிச் சாவியைக் கொண்டு போகிற..? இங்கே கொடு..” சாவியை வாங்கிக் கொள்ள கை நீட்டினாள் அகல்யா..

“ஊஹீம்.. சார் சொன்ன திங்ஸெல்லாம் பேக் பண்ணி அனுப்பிட்டாலும் முக்கியமான எதையாவது சார் சொல்லாமல் விட்டிருக்கலாம்.. திடிர்ன்னு நினைவு

https://t.me/tamilpdfebooks

வந்து எடுத்து அனுப்பச் சொல்லலாம்.. அதனால் சாவி என்னிடமே இருக்கட்டும்ன்னு சார் சொல்லியிருக்கார்..” செக்ரட்டரி அகல்யாவை நம்பாத பார்வை பார்த்தபடி சொன்னாள்..

‘எல்லாம் அவன் கொடுக்கிற திமிர்..’ அகல்யாவின் ரத்தம் கொதித்தது..

அவள் வீட்டிலேயே ஒரு அறை பூட்டப் படுகிறது.. அதன் சாவி நரேந்திரனிடம் வேலை பார்க்கும் ஒரு நபர் வசம் இருக்கிறது.. அவள் அந்தச் சாவியை அகல்யாவிடம் தர மறுக்கிறாள் என்றால் அந்த வீட்டில் அகல்யா என்ன நிலைமையில் இருக்கிறாள்..?

‘வாடகைக்கு குடியிருந்தாக்கூட.. இப்படிப்பட்ட அராஜகம் நடக்காது..’ அவள் பொருமினாள்..

அலட்சியப் பார்வையுடன் செகரட்டரி படியிறங்க முற்பட்டாள்..

“அதுக்குள்ளே கிளம்பனுமா..? ஒரு கப் காபி சாப்பிட்டுட்டுப் போகலாமே..” அகல்யா அவளிடம் கொஞ்சினாள்..

அகல்யா அப்படித்தான்.. காரியம் ஆக வேண்டுமானால் கழுதையாக அவள் நினைப்பவர்களின் கால்களையும் பிடிப்பாள்.. அதிலெல்லாம் மான, ரோசம் பார்க்க மாட்டாள்..

அந்த செகரட்டரி அகல்யா போலில்லையே.. அவள் அதையெல்லாம் பார்ப்பவளைப் போல இருந்தாள்..

https://t.me/tamilpdfebooks

அகல்யாவை முறைத்தாள்.. உன் காபி யாருக்கு வேண்டும் என்பதைப் போல உதாசீனப் பார்வையை பார்த்தாள்..

"பாரு வனிதா.. இந்தம்மாவுக்கு இப்படியாப்பட்ட ஆளுகதான் தோது.. என்னமாப் பாக்குது அந்தப் பொண்ணு.." வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மாதுரி வனிதாவின் காதை கடித்தாள்..

வனிதாவுக்கும் அதே எண்ணம்தான் என்றாலும் அவள் மாதுரியின் வார்த்தைகளுக்கு ஆமாம் என்று தலையாட்டவில்லை..

காலையில்தான் மாதுரி டிரைவர் ரமேஷின் முன்னாலே வனிதாவை 'அக்கா' என்று அழைத்து வைத்திருந்தாள்.. ஒன்றும் தெரியாத குழந்தையைப் போல முகத்தை வைத்துக் கொண்டிருந்தவளின் கன்னத்தில் நான்கு அப்பு அப்ப வேண்டுமென்ற கோபம் இன்னமும் வனிதாவின் மனதில் கனன்று கொண்டிருந்தது.. அப்படி 'அக்கா' என்று அழைத்தவள் வனிதாவைப் பார்த்து அழைக்காமல், டிரைவரைப் பார்த்தபடி அழைத்ததில் வனிதாவின் ரத்த அழுத்தம் எகிறி விட்டது..

'இருக்குடி உனக்கு.. நீ பப்பா..! நான் உனக்கு அக்காவா..?'

அவள் பல்லைக் கடித்தபடி மாதுரியை துவம்சம் பண்ண நல்லதொரு சமயத்திற்காக காத்துக் கொண்டிருந்தாள்..

அப்படி ஓடு மீனை ஓட விட்டு.. உறுமீன் வரும் வரை.. காத்திருக்கும் கொக்காக அவள் மாறியிருப்பதை அறியாத பப்பாவான மாதுரி வனிதாவிடம் பழமைபேச

https://t.me/tamilpdfebooks

விழைய.. வனிதாவோ.. 'யாரடி நீ மோகினி..!' என்ற வெறுப்புப் பார்வையுடன் சமையலே கண்ணாகினாள்.. அதை கண்டுகொண்டு ஒதுங்காமல் மாதுரி வனிதாவின் தோளைத் தட்டி அழைத்தாள்..

"அங்கே பாரு வனிதா.. நம்ம வீட்டம்மா போடற நாடகத்தை.."

வனிதா அசூசையோடு மாதுரியின் கையைத் தட்டி விட்டாள்.. அதில் மாதுரி முகம் மாறிப் போனாள்..

"ஆமாண்டி.. உனக்கெல்லாம் மூணுவேளையும் சோற்றைப் போட்டு, இருக்க இடமும் கொடுத்து.. நல்ல நாள்.. திங்க நாளைக்கு புதுத்துணி வாங்கிக் கொடுத்து.. மாதம் பொறந்தா டாண்ணு ஆயிரக்கணக்கில சம்பளமும் கொடுத்தா.. நீ அவங்க போடறது நாடகம்ன்னு பேசுவ.. நீ பேசலைடி.. உன் கொழுப்பு பேசச் சொல்லுது.."

வனிதா போட்ட போட்டில் மாதுரி அரண்டு போனாள்.. அன்றுவரை அகல்யாவிற்கு எதிரான அத்தனை புறம் பேசல்களுக்கும் காதைக் கொடுத்துக் கொண்டிருந்த வனிதா எப்போது அகல்யாவின் அடி வருடியாக மாறினாள் என்று தெரியாமல் பேந்தப் பேந்த விழித்தாள்..

"இருடி.. இப்பவே அவங்களைக் கூப்பிட்டு நீ ஆடற நாடகத்தைப் பிட்டுப் பிட்டு வைக்கறேன்.. அவங்களையா நாடகம் போடறாங்கன்னு சொன்ன..? நீதாண்டி நாடகம் போட்டுக்கிட்டு இருக்க.."

"நான் நாடகம் போடறேனா..?"

https://t.me/tamilpdfebooks

"ஆமாம்.. நீ நாடகம்தான் போடற.."

ரமேஷைக் கண்டதும் மாதுரி கண்களை ஒரு மாதிரி கிறக்கமாக போதை தளும்ப 'சில்க்' மாதிரி வைத்துக் கொண்டு.. அவன் கவனத்தைக் கவரும் விதத்தில் உரக்கப் பேசி.. சிரித்து.. மயக்க முற்படுவதை நினைவு கூர்ந்தபடி பல்லைக் கடித்தாள் வனிதா..

"வேணாம் வனிதா.. நானே எனக்கென்னன்னு இருக்கறேன்.."

"நான் மட்டும் நீ வேலைக்கென்னன்னு இருக்கிறன்னா சொன்னேன்..? உண்கிறதும், உறங்கறதும், இந்த வீட்டிலதான்ங்கிறதை மறந்துட்டு.. எதுக்காக இந்த வீட்டிலே இருக்கிறோம்ங்கிற நினைப்பில்லாம.. தரைக்கு வலிக்குமோன்னு கூட்டித் துடைச்சுக்கிட்டு.. டிவி சீரியல் ஒன்னு விடாம பாத்து முடிச்சுட்டு.. நேரா நேரத்துக்கு கொட்டிக்க மட்டும் டாண்ணு வந்து நின்னுடறயே.. நீ எனக்கென்னன்னு இருக்காம எப்படி இருக்க..?"

விட்டால் வனிதா மாதுரியை கொத்து புரோட்டா போட்டு விடுவாள் என்று அஞ்சிப் போன மாதுரி அவசரமாக வாயை மூடிக்கொண்டு நகரத்தான் போனாள்.. ஆனால்.. விதிஅவளை ரமேஷின் ரூபத்தில் அங்கேயே நிறுத்தி வைத்தது..

"ஏன்க்கா.. இப்படி கோவிச்சுக்கற..? அக்கா நீ சொன்னா.. தங்கச்சி நானு கேட்டுக்க மாட்டேனாக்கா..? சொல்லுக்கா.. அக்கா நீ இருக்கிற தைரியத்திலதான.. சின்னப் புள்ளயான நானு இந்த வீட்டிலே குப்பை

https://t.me/tamilpdfebooks

கொட்டிக்கிட்டு இருக்கேன்.. பெரியவளான நீ நல்லது கெட்டதை எடுத்துச் சொல்வ.. பச்சைப் புள்ளையான எனக்கு வழி காட்டி விடுவங்கிற தைரியத்திலதான நானு உன் சேலை முந்தானையைப் பிடிச்சுக்கிட்டு சுத்திச் சுத்தி வர்றேன்.. தாயைப் போல இருந்தவ.. பச்சைப் புள்ளய கடிஞ்சு பேசினா நான் எங்கேக்கா போவேன்..?"

ஏற்ற இறக்கத்துடன் பேசியவளின் பேச்சு பேச்சாக இருக்க.. கண்கள் ஆலவட்டம் ஆடியதில் அந்தப்பக்கம் ரமேஷ் நின்று கொண்டிருக்கிறான் என்பதை வனிதா புரிந்து கொண்டாள்.. கொதித்துப் போனவள்.. தோசைக் கரண்டியை எடுத்து கேஸ் ஸ்டவ்வின் தணலில் வைத்தாள்.. ஆலவட்டம் போட்டுக் கொண்டிருந்த மாதுரியின் பார்வை அந்தப் பக்கம் திரும்பினால்தானே அதைப் பார்ப்பதற்கு..?

அவள் ரமேஷின் பார்வையை தன் காந்தப் பார்வையால் இழுக்கும் முயற்சியில் இருந்தாள்.. வனிதா சூடான தோசைக் கரண்டியை எடுத்து இயல்பாக வைப்பதைப் போல மாதுரியின் கையில் வைத்து அழுத்தி விட்டாள்..

"ஸ் ஆ..! வனிதா...!"

மாதுரி அலறியபடி கையை உதறினாள்.. பதறிப் போன ரமேஷ் என்னவென்று பார்க்க அருகில் வர முனைந்தான்.. நிமிர்ந்து அவனைப் பார்த்த வனிதாவின் உக்கிரமான பார்வையில் அதைவிடப் பதறிப் போனவனாக வந்த வேகத்தில் பின்னால் போனான்..

https://t.me/tamilpdfebooks

ஆடி.. அசைந்து திரும்பிப் பார்த்த வனிதா.. அலட்டிக் கொள்ளாமல் மாதுரியைப் பார்த்து விழி விரித்தாள்..

“இங்கேயென்னடி பண்ணிக்கிட்டு இருக்கிற..? உன்னை வீட்டை கூட்டித் துடைக்கச் சொல்லி அப்பவே அம்மா சத்தம் போட்டாங்களே.. நீ அங்கேயிருக்கன்னுல்ல நான் நினைச்சேன்.. அடுப்படி பக்கம் வராதேடி.. இன்னைக்கு கரண்டி சூட்டோடு போச்சு.. இதில்லாம கொதிக்கிற குழம்பு உன்மேல கொட்டியிருந்தா என்ன ஆகியிருக்கும்..?”

‘என்ன ஆகியிருக்கும்..!’

அந்த நினைவில் அரண்டு போனாள் மாதுரி.. வனிதா விடுக்கும் அப்பட்டமான எச்சரிக்கையில் அவளுக்கு குளிரும் காய்ச்சலும் சேர்ந்து வந்து விடுவதைப் போல ஆகிவிட்டது..

‘யார்கிட்ட வைச்சுக்கிட்டாலும் சமையல்காரிகிட்ட பகையை வைச்சுக்கக் கூடாது போல..’

75

வீம்பிலே பிறந்து வந்து..
வெறும் கனவை எனில் விதைக்கும்..
அழகான ராட்சசி நீ....

https://t.me/tamilpdfebooks

"ஆமாம்.. அதென்னடி.. சூடு பட்டவுடனே வனிதான்னு அலர்ற..? அதுக்கு முன்னாலே.. அக்கா.. உன் சொக்கான்ன..? நீ பச்சைப் புள்ளையா..?"

ரமேஷை முன்னால் வைத்துக் கொண்டே வனிதா கேள்வி கேட்கவும் மாதுரி நழுவப் பார்த்தாள்.. வனிதா விடவில்லை..

"எங்கேடி போற..?"

"வீட்டைக் கூட்ட வனிதா.. அம்மா சொன்னாங்களே.."

"அதை அப்பச் சொன்னாங்க.. இப்பச் சொல்லலை.. இம்புட்டு நேரம் கழிச்சு இப்பத்தான் அவங்க சொன்ன வேலையை தொட்டுப் பார்க்கப் போறன்னு தெரிஞ்சா உன் சீட்டைக் கிழிச்சு வீட்டுக்கு அனுப்பிருவாங்க.. எப்படி வசதி..?"

அதுதான் வசதியென்று சொல்ல மாதுரி என்ன அடி முட்டாளா..? அவள் நிற்கவும் முடியாமல்.. நகரவும் முடியாமல்..

"ஹி.. ஹி.." என்று சகிக்க முடியாத சிரிப்பைச் சிரித்து வைத்தாள்..

ரமேஷீக்கே அந்தச் சிரிப்பை சகிக்க முடியவில்லை.. அதைவிட 'பார்த்துக்க.. இந்த ரதியோட சிரிப்பை..' எனும் விதமாக அவனைத் தீர்க்கமாக பார்த்து வைத்த வனிதாவின் பார்வையின் கேலியை அவனால் சகித்துக கொள்ள முடியவில்லை..

https://t.me/tamilpdfebooks

“இப்ப என்னத்துக்கு தரையில் கிடக்கிற மீனைப் போல இப்படி நெளியற..?” வனிதா புருவங்களை உயர்த்தினாள்..

“ஒன்னுமில்ல..” மாதுரி கவனமாக வனிதா என்ற பெயரையும் சொல்லாமல்.. அக்கா என்ற விளிப்பையும் விளிக்காமல் மொட்டையாக பதில் சொன்னாள்..

வனிதாவா அதை கண்டு உணராமல் இருப்பாள்..? அவள் துளைக்கும் பார்வையுடன் மாதுரியைப் பார்த்தபடி..

“போனவாரம் உன்னைப் பார்க்க உன் சித்தப்பான்னு ஒருத்தர் வந்திருந்தாரே..” என்று சும்மா கேட்பதைப் போல கேட்டாள்..

“அவரு சித்தப்பாதான்..” ரமேஷை பார்த்தபடி சொன்னாள் மாதுரி..

அதை ஜாடையாக பார்த்தபடி அடுப்பிலிருந்த எண்ணையில் கடுகைப் போட்ட வனிதா லேசாக தண்ணீரை விசிறிவிட்டு நகர்ந்து நின்று கொண்டாள்.. எண்ணை தெறித்து சிதறியதில் மாதுரியின் கை அடுத்த அடியை வாங்கியது..

“ஸ்ஸ்ஆ.. என்ன வனிதா.. பார்த்துத் தாளிக்க மாட்ட..” கையைத் தடவியபடி வனிதாவிடம் சண்டைக்குப் போனாள்..

“நான் பார்த்துத்தாண்டி வேலை செய்யறேன்.. நீதான் பார்த்து நிற்காம.. பராக்குப் பார்த்துக்கிட்டு நிக்கிற.. அடுப்படியில நிக்கும்போது சூதானமாக நிக்கனும்னு

https://t.me/tamilpdfebooks

சொல்லித்தான் பாக்கறேன்.. நீ கேட்ட பாடாக இல்லை.. எப்ப குழம்பைத் தூக்கி உன் மேல கொட்டிக்கப் போகிறயோ தெரியலை.."

"வனிதா.."

நடுங்கிப் போனாள் மாதுரி.. ரமேஷை மறந்து நான்கடி தள்ளி நின்று கொண்டாள்.. சூடுபட்ட கை வனிதாவின் வீர, தீரத்தை அறிவுறுத்திக் கொண்டிருந்தது..

"அதென்னடி சூடு பட்டா வனிதாங்கிற.. மத்த நேரத்தில என் பேர் மறந்து போகுது..? ஒரே வருசத்தில.. ஒரே மாசத்தில.. நீயும், நானும் பொறந்திருக்கோம்.. ஒரே வயசுக்காரிகள்ல நீ பச்சைப் புள்ள..! நான் உனக்கு அக்கா.. சமயம் கிடைச்சா அம்மாவா..? அதுசரி.. உனக்கு முதல்ல உன் தங்கச்சிக்கு கல்யாணமாகி.. கையில ஒரு பிள்ளையிருக்காமே.. அந்தப் புள்ளை அவளை விட்டுட்டு உன்னை அம்மான்னு கூப்பிடுதாமே.. என்ன விசயம்..? நான் சொல்லலை.. உன் சொத்தப்பாதான் சொன்னாரு.."

"அது.. அது.."

மாதுரியின் முகம் வெளுத்து விட்டது.. கிராமத்திலே வேலை பார்க்க வந்த வெளியூர்காரனின் செண்ட் வாசனையிலும்.. சூட்டு சட்டையிலும் மயங்கிப் போன மாதுரி.. 'மயில்' போல அவனைப் பார்வையிட ஆரம்பித்தாள்.. பதினாறு வயதைத் தாண்டி இருபதில் இருந்தாலும் பார்வைக்கு பதினாறு வயது மயிலைப் போல இருந்த மாதுரியின் பார்வையை அவனும் கண்டு கொள்ள ஆரம்பித்தான்..

https://t.me/tamilpdfebooks

விளைவு.. மாதுரி வயிற்றில் ஏழாம் மாதமாக இருக்க.. வந்தவன் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போனான்.. தேடிப் போனவர்கள் அவன் குடும்பமும்.. பிள்ளை குட்டிகளுமாக இருக்கும் கதையை திரும்பி வந்து சொன்னார்கள்..

"அவன் மகளே இருபது வயசில இருக்குப்பா... பார்வைக்கு மைனர் போல பவுடரைப் பூசிக்கிட்டு இளந்தாரியப் போல இருந்தா இவளுக்கெங்கே போச்சு புத்தி..? அவன் வயசென்ன.. இந்தப் புள்ள வயசென்ன..? நாற்பத்தி ஆறு வயசுக்காரனை காதல் பண்ணிட்டு அவன் மோசம் பண்ணிட்டான்னு நின்னா.. எந்தப் பஞ்சாயத்தில நாயம் சொல்லுவாங்க..?"

மாதுரியின் உறவு முறை ஜனங்கள் திட்டித் தீர்த்தார்கள்.. வேறு வழியில்லாமல் அவசரஅவசரமாக அத்தை மகனுக்கு மாதுரியைக் கட்டிக் கொடுக்க முயன்றால்.. அவன் மாதுரியை விட்டுவிட்டு.. அவள் தங்கையை கை காட்டினான்..

"மாமா.. எனக்கு நீங்க பெத்த மயிலு வேணாம்.. ரெண்டாவதா பெத்து வைச்சிருக்கீங்களே.. இந்தக் குயிலே போதும்.." என்று அவன் சொல்லி விட.. வேறு வழியில்லாமல் மாதுரியின் தங்கைக்கு திருமணம் நடந்து விட்டது..

மாதுரி பெற்ற குழந்தையை தான் பெற்ற குழந்தையாய் அந்தத் தங்கை சொல்லிக் கொள்ள.. அவள் மேலிருந்த காதலால் அத்தை மகனும் அதை

https://t.me/tamilpdfebooks

அனுமதித்தான்.. இப்படியாகத்தானே.. விலாசம் தெரியாத குழந்தைக்கு ஒரு விலாசம் கிடைத்தது.. அந்தக் குழந்தை மாதுரியைத்தானே அம்மா என்று கூப்பிடும்..?

"என்ன மாதுரி இந்த இழுவை இழுக்கிற..?"

அவளை இழுத்த தோசைக் கரண்டியை வாகாக பிடித்தபடி வனிதா கேட்க.. மாதுரி பயந்து போனாள்..

"இல்ல வனிதா.. தங்கச்சி புள்ள.. அம்மான்னு கூப்பிடாம வேற எப்படி கூப்பிடும்..?"

"ஏன்..? பெரியம்மான்னு கூப்பிடறது..?"

வனிதா கிண்டலாக சொல்லியபடி ரமேஷை பார்த்தாள்.. அவன் அவளை ஆழமாக பார்க்க முயன்றான்.. வனிதாவின் முகம் கடுமையானது.. பத்ரகாளிபோல உறுத்து விழித்தாள்.. அவன் பயந்து போனவனாக சுவரைப் பார்த்தான்..

"பெரியம்மாவா..?" மாதுரிக்கு அழுகையே வந்து விட்டது..

அவள் காட்டிய பச்சைக்குழந்தை ஆட்டம் என்ன..? இன்று அவளை ஒரு பச்சைக் குழந்தையின் பெரியம்மாவாக ஆக்குவதா..?

'சும்மா இரு... அம்மான்னு சொல்றதுக்கு பெரியம்மான்னு பேர் படலாம்.. தப்பே இல்லை..'

அவளுடைய ஆழ்மனது அதட்டி வைத்தது.. ரமேஷை பார்க்க முயன்றாள்.. அவன் யோசனையோடு

https://t.me/tamilpdfebooks

அவள் பார்வையைத் தவிர்த்தான்.. அவளின் போதை ததும்பும் பார்வையிலே அவன் கள் குடித்த கபோதி போல ஆகி விடும் நேரங்களை நினைத்துப் பார்த்தவளுக்குத் துக்கம் பொங்கியது..

'எப்படி இருந்த என்னை இந்த வனிதா இப்படி ஆக்கிட்டாளே..'

அவளை எதுவும் செய்ய முயலாத இயலாமையில் மாதுரி கைக்கு மருந்தைத் தேடிப் போவதைப் போல அங்கேயிருந்து போய் விட்டாள்.. மற்ற நேரமாக இருந்திருந்தால், அவள் வனிதாவிற்கும்.. ரமேஷிக்குமான தனிமையை உண்டு பண்ணிக்கொடுத்து விட்டு அகன்றிருக்க மாட்டாள்..

எப்போது மாதுரி அந்த வீட்டுக்குள் காலடி வைத்தாளோ.. அப்போதிருந்து.. வனிதாவுக்கும், ரமேஷீக்குமான தனிமையான நேரங்களே இல்லாமல் போய் விட்டன.. அப்படிப்பட்ட தருணங்கள் தானாக வாய்க்கும்போது மாதுரி அத்துமீறி உள்ளே பிரவேசித்து ரமேஷின் முன்னால் வனிதாவை அக்காவென்றும் அம்மாவென்றும் அழைத்து வைத்து.. நீ அன்னை.. நான் பச்சைப் பிள்ளை என்றெல்லாம் வசனம் பேசி வனிதாவின் மேல் ரமேஷிற்கு இருக்கும் ஈர்ப்பை ஆட்டிப் பார்க்க முனைந்து விடுவாள்..

அப்போது அப்படிச் செய்ய முடியாமல் அவள் ஓடிவிட...

"வனிதா.." என்று ரமேஷ் பேச முயன்றான்..

https://t.me/tamilpdfebooks

"ஓடியே போயிரு.. சொல்லிட்டேன்.." வனிதா திரும்பிப் பார்க்காமல் எச்சரித்தாள்..

"இல்ல வனிதா.. நான் உன்மேல.."

"பேசாத.. சொல்லிட்டேன்.. கொலைவெறியில இருக்கிறேன்.. தப்பிப் பிழைக்கனும்னா தள்ளியே நில்லு.. உனக்கு என்னைப் பார்த்தா முத்தின கத்தரிக்காயா தெரியுதா..? அவளப்பாத்தா இளசான தக்காளி போல தெரியுதா..? போ.. போயி.. அவ தங்கச்சி கையில இருக்கிற புள்ள அவளுக்குப் பிறந்ததா.. இல்ல.. இந்த இளசான தக்காளிக்குப் பிறந்ததான்னு கேட்டுட்டு வா.. ஆளைப் பாரு.. நான் அவளைக் கூட ஒரு கணக்கில சேர்ப்பேன்.. உன்னை எந்தக் கணக்கிலயும் சேர்க்க மாட்டேன்.. நீயெல்லாம் ஒரு பிறவி..!.. தூ..."

"வனிதா.."

கன்னத்தில் அறை வாங்கியதைப் போல ரமேஷ் திகைத்து நின்று விட்டான்.. இது போன்ற பேச்சை அவன் எதிர்பார்க்கவில்லை என்பதை விளக்கெண்ணை குடித்ததைப் போல அஷ்ட கோணலாய் மாறிப் போன அவன் முகமே சொல்லியது..

ஆனாலும் அவனால் வனிதாவிடம் பேசாமல் இருக்க முடியவில்லை.. அவன் தொடர்ந்து கெஞ்சினான்..

"நான் என்ன புள்ள செஞ்சேன்.. அதுவா வந்து பல்லைக் காட்டிச்சு.."

"நீயும் பதிலுக்கு பல்லைக் காட்டின.."

https://t.me/tamilpdfebooks

"ஆம்பளைன்னா பதிலுக்கு பல்லைக் காட்டாம இருக்க முடியுமா..?"

"இதையே நான் சொன்னா நீ கேட்டுக்குவியா..?"

"வனிதா.."

"சொல்லு.. உன் வாயில என்ன இருக்கு..? பேசு.. இந்த வீட்டில நீ மட்டும்தான் ஆம்பளைன்னு வேலை செய்யறியா..? வேற ஆம்பளைகளே வேலை செய்யலையா..? அவங்க என்கிட்டப் பல்லைக் காட்டின தில்லையா..? நானும் பதிலுக்கு பல்லைக் காட்டவா..? நீ சொன்னதையே திரும்பிச் சொல்லவா..?"

"என்ன வனிதா இப்படியெல்லாம் பேசற..?"

"ஏன்ய்யா.. நான் இப்படிப் பேசினா ஆகாதா..?"

"இல்ல புள்ள.. உன் வாயில இருந்து இப்படியாப் பட்ட வார்த்தைகள்ளாம் வரலாமா புள்ள.."

"வந்தா என்னய்யா..? அவ வாயில இருந்து வந்தப்ப மட்டும் இனிச்சுச்சு.. என் வாயில இருந்து வந்தா மட்டும் கசக்குதா..? போய்யா போ.. உன்னைப் போல எத்தணை பேரை பார்த்திருக்கேன்.. நான் நல்லவளாம்.. என் வாயில இருந்து இப்படியாப்பட்ட வார்த்தைகள்ளாம் வரக் கூடாதாம்.. ஆனா என்னைச் சுத்தியிருக்க கூட்டம் மட்டும் வாய்க்கு வந்ததைப் பேசி கும்மியடிக்குமாம்.. அதை நான் கண்டுக்க கூடாதாம்.. காதிலயும் போட்டுக்கக் கூடாதாம்.. என்னய்யா நாயம் இது..? ஏன்..? நீங்கள்ளாம் கெட்டவங்களா..? அதை ஒப்புக்குவீங்களா..?"

https://t.me/tamilpdfebooks

வனிதாவின் ஆவேசத்தில் ரமேஷ் ஆடிப் போனான்.. அதற்கு முன்பும் அவன் அவனிடம் கோபப் பட்டிருக்கிறாள் தான்.. இந்த அளவுக்கு கோபப் பட்டதில்லை..

"உனக்கெல்லாம் வேசம் போடறவளைத்தான் பிடிக்கும்ய்யா.."

"அப்படி நான் சொன்னேனா புள்ள..?"

"சொன்னாத்தானா..? அதான் இத்தனை நாளும் நடக்கிற நாடகத்தையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கிட்டுத்தான இருந்தேன்..? பேசாம போயிரு.. எனக்கு உன் முகத்தில விழிக்கக் கூட மனசில்ல.. வெறுப்பா இருக்கு.. நீயிருக்கிற திசைப் பக்கம் தலை வைத்துப் படுத்தாக் கூட பாவம் வந்து சேர்ந்துரும்ய்யா.."

அந்த அளவுக்கா அவனை அவள் வெறுத்து விட்டாள்..?

ரமேஷிற்கு உலகமே கருப்பு வெள்ளைப்படம் போல தோன்றியது.. அந்த விரக்தியில் அவன் ஹாலில் நடந்த நாடகத்தை கவனிக்காமல் கடந்து போனான்.. அதைக் காட்ட முயற்சி செய்த மாதுரியின்

"இஸ்ஸீ.. இஸ்ஸீ.." என்ற சப்தம் ரமேஷின் கவனத்தைத் திருப்புவதற்குப் பதில் வனிதாவின் கவனத்தை திருப்பி விட்டது..

அவள் கண்ணகியாய் முறைத்தாள்.. மாதுரி அசடு வழிய..

https://t.me/tamilpdfebooks

"ஹி.. ஹி.. அம்மா பேசறதைப் பார்க்கச் சொன்னேன்.." என்றாள்..

வனிதா எரிச்சலுடன் ஹாலைக் கவனித்தாள்.. அங்கே அகல்யா நரேந்திரனின் செகரட்டரியை வளைக்க முயன்று கொண்டிருந்தாள்.. செகரட்டரி பிடி கொடுக்கவில்லை..

"உட்காரும்மா.. உன்னைப் பார்த்தா என் மகளைப் பார்ப்பதைப் போல இருக்கு.." இது அகல்யா..

"உட்காரல்லாம் நேரமில்லைங்க.. எனக்கு உங்களைப் பார்த்தா என் அம்மாவைப் பார்ப்பதைப் போல இல்லை.." இது செக்ரட்டரி..

"உன் சல்வார் அழகா இருக்கும்மா.. எங்கே எடுத்தது..? கிட்ட வா பார்ப்போம்.." இது அகல்யா..

"இது சல்வார் இல்லைங்க.. சடிதார்.. எங்கே எடுத்ததுன்னு எனக்குத் தெரியாது.. என் அப்பாவுக்குத்தான் தெரியும்.. அவர் அடுத்த வீட்டு லேடிஸ்கிட்டப் பேச மாட்டார்.. எனக்கு கிட்ட வந்து பேசறதுன்னா அலர்ஜி.." இது செக்ரட்டரி..

இப்படியே அகல்யா மீன் பிடிக்க தூண்டிலைப் போட.. செக்ரட்டரி கழுவுகிற மீனில் நழுவுகிற மீனாக பதிலைச் சொல்லி விட்டுக் கிளம்பப் போனாள்..

அகல்யா கடைசியாக அஸ்திரத்தை பிரயோகித்தாள்..

"ஏம்மா.. இந்த சாமானையெல்லாம் எங்க நரேன் எங்கே கொண்டு வரச் சொல்லியிருக்கிறான்..? அவனோட தாத்தா வீட்டுக்கா..? இதுக்கான பதிலை நீ சொன்னா..

https://t.me/tamilpdfebooks

நான் உன் கையில கத்தையாய் பணக்கட்டை கொடுத்து அனுப்புவேன்..”

செக்ரட்டரி அகல்யாவை தூசியைப் பார்ப்பதைப் போல பார்த்தபடி பதில் சொன்னாள்..

“உங்க பணம் யாருக்கு வேணும்..? நீங்க இப்படிச் சொன்னீங்கன்னு எம்.டிகிட்ட நான் சொன்னால் அவர் உங்களை எங்கே அனுப்பி வைப்பார்ன்னு நினைத்துப் பார்த்துட்டுப் பேசுங்க..”

76

தூண்டிலிலே எனை பிடித்தும்..
தண்ணீரில் தூக்கிப் போட்ட
அழகான ராட்சசி நீ....

அந்த செக்ரட்டரி கஜேந்திரனால் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப் பட்டவள்.. செக்ரட்டரி என்று இல்லை.. நரேந்திரனைச் சுற்றியிருந்த முக்கியமான பொறுப்புக்களில் வேலை பார்ப்பவர்கள் எல்லோருமே கஜேந்திரனால் நியமனம் செய்யப் பட்டவர்களே.. அவர்கள் நேர்மையின் மறுவடிவமாக இருப்பவர்கள்..

“பணத்துக்கு விலை போக வேறு ஆளைப் பாருங்க.. எங்க பாஸ் கிட்ட வேலை செய்கிறவங்களுக்கு கை நிறைய பணம் கிடைக்குது.. எங்களுக்கு அதுவே

https://t.me/tamilpdfebooks

போதும்.. எப்பவுமே நமக்குச் சொந்தமானது மட்டுமே நம்மிடம் நிலைத்திருக்கும்.."

செக்ரட்டரியின் பேச்சில் தொனித்த மறைமுகப் பொருளைப் பற்றி வனிதாவிடம் கிசுகிசுத்தாள் மாதுரி.. அகல்யாவுக்கும் அது புரிந்துதான் இருந்தது.. அவள் செக்ரட்டரியின் துணிச்சலைப் பற்றி வாய்க்கு வந்ததைப் பேசித்தள்ளினாள்.. போனை காதுக்குக் கொடுத்தபடி அறைக்குள் போனாள்.. சற்றுப் பொழுதுக்குள் அவளுக்கு நரேந்திரனின் பொருள்கள் எங்கு செல்கின்றன என்ற விவரம் கிடைத்து விட்டது..

'சொன்னைக்கா..?' அவள் யோசித்துக் கொண்டிருந்த போது..

"எப்படி அத்தை..?" என்று ஆச்சரியப் பட்டாள் ரம்யா..

"இது என்ன பெரிய ரகசியமா..? இந்த செக்ரட்டரி தான் பணம் வாங்க மாட்டா.. லாரி டிரைவர் வாங்கு வானில்ல..?" என்று இலகுவாக சொன்னாள் அகல்யா..

"அத்தை.." ரம்யா வியந்து போனாள்..

"எதுக்கும் இருக்கட்டும்ன்னு யாருக்கும் தெரியாம அந்த லாரி டிரைவர்கிட்ட மூவாயிரம் ரூபாயைத் தள்ளி.. அவன் செல்போன் நம்பரை வாங்கி வைச்சேன்.. இந்த செக்ரட்டரியா இருந்தா பத்தாயிரம் செலவாகியிருக்கும்.. இப்பப் பாரு.. எனக்கு ஏழாயிரம் மிச்சம்.."

"அத்தைன்னா அத்தைதான்.."

https://t.me/tamilpdfebooks

வெளியே பாராட்டிய ரம்யா.. மனதுக்குள்..

'இவள் ஜெகஜால கில்லாடி..' என்று நினைத்துக் கொண்டாள்..

"அந்தப் பக்கம் செக்கரட்டரி போனா.. இந்தப் பக்கம் டிரைவருக்கு போனை போட்டேன்.. அவன் போக வேண்டிய அட்ரஸை ஒப்பிச்சுட்டான்.. எனக்கென்னன்னா.. இந்த நரேந்திரனுக்கு சென்னையில என்ன வேலை..? அங்கே எதுக்காக வீடெடுத்து தங்கியிருக்கான்..? அதை முதல்ல தெரிஞ்சுக்கனுமே.."

"அப்பா என்னைத்துக்கு இருக்கார்..? அவருக்கு போனைப் போடுங்க.." ரம்யா வழி சொல்லிக் கொடுத்தாள்.

"இந்த அத்தைக்கேத்த மருமகள் நீதான்.." அகல்யா மெச்சிப் போனபடி தியாகராஜனுக்கு போனைப் போட்டாள்..

இரண்டே நாளில் தியாகராஜனிடமிருந்து போன் வந்து விட்டது.. சும்மாவும் வரவில்லை.. ரம்யாவை சென்னைக்கு அனுப்பி வைத்து விடும்படி போன் வந்தது..

"பாருக்கா.. நரேந்திரன் பெண்டாட்டியை விட்டுப் பிரிஞ்சிருக்கான்னா கதையே வேற.. டைவர்ஸ் வாங்கிட்டு.. அவனுக்கு இரண்டாம்தாரமா ரம்யாவை கல்யாணம் பண்ணி வைத்து விடலாம்.. அதுவும் உனக்காகத்தான்.. இப்ப கதையே மாறிப் போச்சே.. அவன் பெண்டாட்டியோடு ஒன்னாய் சேர்ந்துட்டான்.. சென்னையிலே தனிக்குடித் தனமும் வைத்துட்டான்.. போதாக்குறைக்கு அவங்களுக்கு மகன் வேற இருக்கான்.."

https://t.me/tamilpdfebooks

"என்னடா தம்பி சொல்ற..? அவ போகிறப்ப எதுவும் சொல்லலைடா.."

"மறைச்சிருப்பா.."

"கைகாரி.."

"அந்தப் பொண்ணு கைகாரியா இருக்கட்டும்.. இல்லை.. கால்காரியா இருக்கட்டும்.. குழந்தைன்னு ஒன்னு இருக்கிறப்ப ரம்யாவை இரண்டாம்தாரமாய் கட்டிக் கொடுக்க முடியாது.. ராம்குமாருக்கு தெரிஞ்சா என்னை அப்பான்னு கூடப் பார்க்க மாட்டான்.. தள்ளி வைச்சிருவான்.."

"பொறு தியாகு.. எனக்கு ஒரு வாய்ப்புக் கொடு.."

"கொடுத்தா..?"

"அந்த ஊர்மிளாவை ஓட்டிவிட்டு.. அந்த இடத்தில ரம்யாவை உட்கார வைச்சுக் காட்டறேன்.."

"எந்த இடமும் என் மகளுக்கு வேணாம்க்கா.. இருக்கிற இடமே போதும்.. அவளை திருப்பி அனுப்பி வை.."

"ஏண்டா தியாகு.. நீ உன் மகளைப் பத்தி மட்டுமே யோசிக்கிறயே.. உன் கூடப் பிறந்த இந்த அக்கா என்ன கதியாப் போனாலும் அதைப் பத்தி உனக்குக் கவலை யில்லைல்ல..? புரிஞ்சு போச்சுடா.. மகள்ன்னு வந்த பின்னாலே அக்கால்லாம் ரெண்டாம் பட்சம்தான்.."

"அக்கா.. என்ன வார்த்தை சொல்லிட்டக்கா.. என்னைப் பார்த்து இப்படியொரு கேள்வியை நீ

https://t.me/tamilpdfebooks

கேட்கலாமா அக்கா..? இப்ப என்னை என்னதான் பண்ணச் சொல்ற..? அந்தப் பொண்ணு நரேந்திரனோட பெண்டாட்டிக்கா.. அவனோட குழந்தையை பத்து மாதம் வயித்தில சுமந்து பெத்து வளர்த்து வைச்சிருக்கு.. அவளைப் போய் உன்னாலே அசைக்க முடியுமா..? அசைக்கவும் கூடாதுக்கா.."

"முடியும்டா தம்பி.. என்னாலே எதுவும் முடியும்.."

"அது பாவமில்லையாக்கா..?"

"என் பாவத்தை யாருடா பார்க்கிறது..?"

"எனக்கு இதில துளிக்கூட விருப்பமில்ல.. அடுத்த வாரம் நான் அங்கே வர்றேன்.. இதுக்கு மேல ரம்யாவை அங்கே விட்டு வைக்க முடியாதுக்கா.. என் மகளும் படிப்பை முடிச்சிட்டா.. என் மகளை நான் எங்க வீட்டுக்கு அழைச்சுக்கிட்டு வந்துடப்போறேன் வேற நல்ல இடத்தில மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துக் கறேன் தயவுசெய்து இனி இந்தப் பேச்சை என்னிடம் எடுக்காதே.."

"நரேந்திரன் கோடிஸ்வரண்டா.." அகல்யா கெஞ்சினாள்..

"நான் அதுக்காக என் மகளை உன்கூட அனுப்பி வைக்கலைக்கா.. அவன் வேற யாரையும் ரெண்டாம்தாரமா கட்டிட்டா உன் கதி என்னாகும்ன்னு நீ அழுது புலம்பின.. உனக்காகத்தான் என்னோட ஒரே மகளை ரெண்டாம் தாரமா கட்டிக் கொடுக்க நினைச்சேன்.. மத்தபடி அவன் யாரா

https://t.me/tamilpdfebooks

இருந்தா எனக்கென்ன..? நீ காலாகாலத்தில என் மகளை திருப்பி அனுப்பற வழியைப் பாரு.."

தியாகராஜன் போனை வைத்து விட்டார்.. அகல்யாவுடன் பிறந்து விட்டு.. இப்படிப்பட்ட எண்ணங்களுடன் தியாகராஜன் இருக்கலாமா என்று ரம்யாவிடம் கோபப்பட்டாள் அகல்யா.. அவள் ஆழ்ந்த யோசனைக்குப் பின்னால்..

"அப்பா சொல்கிறதிலயும் நியாயம் இருக்கே அத்தை.." என்றாள்..

அகல்யாவுக்கு 'சுரீர்' என்றது.. அவளுடன் இருப்பவர்கள்.. நியாய, அநியாயத்தைப் பற்றி யோசிக்கக் கூடாதே.. அதிலும் அதி முக்கியமாக ரம்யா அவற்றைப் பற்றி யோசிக்கவே கூடாதே..

ரம்யாதானே அகல்யாவின் துருப்புச் சீட்டு..!

"அவன்தான் முட்டாள்தனமா பேசறான்னா நீயும் அவனோடு கூட்டுச் சேர்கிறயே ரம்யா.. இத்தனை நாளாய் பட்ட பாடெல்லாம் வீணாய் போவதா..?"

"அதுக்கு என்ன பண்ண முடியும் அத்தை..?"

"நிறைய பண்ணலாம்.. அதுக்கு நீ என்கூட இருக்கனும்.."

'எதுக்கு..? செய்கிறதையெல்லாம் செய்துட்டு பழியை என்மேல தூக்கிப் போடறதுக்கா..?' ரம்யா உஷாரானாள்..

https://t.me/tamilpdfebooks

"உங்களாலே முடியாதது என்னால முடிஞ்சிருமா அத்தை..? எனக்கென்ன தெரியும்..? உங்க அறிவில கால்தூசிகூட எனக்கு வராதே அத்தை..? நான் உங்க கூட நின்று என்ன ஆகப் போகுது..?" சாமர்த்தியமாக பதிலாளித்தாள் ரம்யா..

அந்த புகழ்மாலையில் கிளின் போல்டாகி விட்டாள் அகல்யா..

"உனக்குத் தெரிகிறது... உன் அப்பனுக்குத் தெரியலையே.." என்ற மனத்தாங்கலுடன் அவளுடைய திட்டத்தை விவரிக்கத் தொடங்கினாள்..

"நாம சென்னைக்குக் கிளம்பிப் போகனும் ரம்யா.."

"நாமன்னா..? யார் யாரு அத்தை..? நீங்க.. அருண் அத்தான், அர்ச்சனா.. எல்லோருமா..?" கெட்டிக்காரத் தனமாக குடும்பத்தையே திட்டத்துக்குள் இழுத்தாள் ரம்யா..

"கெடுத்தியே காரியத்தை.."

"ஏன் அத்தை..?"

"அருணையும், அர்ச்சனாவையும் கூப்பிட்டுக்கிட்டுப் போனா அதுக ரெண்டும் நம்மை அம்போன்னு விட்டுட்டு 'அண்ணி'ன்னு ஓடிப் போய் அவளைக் கட்டிப் பிடிச்சு உறவு கொண்டாட ஆரம்பிச்சுருவாங்க.. அப்புறம் எங்கே நான் அவளை விரட்டறது..?" அகல்யா அலுத்துக் கொண்டாள்..

https://t.me/tamilpdfebooks

'அவ்வளவு அன்பா ஊர்மிளாவின் மீது..?' ரம்யாவுக்கு பொறாமையாக இருந்தது.. அதேசமயம் வேறொரு கேள்வியும் எழுந்தது..

"ஊர்மிளாவை விரட்டப் போறிங்களா..?" என்று கேட்டாள்..

"ஆமாம்.." பெருமையாக தலையை ஆட்டினாள் அகல்யா..

"நடக்கிற காரியத்தை பேசுங்கத்தை.." ரம்யா 'த்ச்சு' கொட்டினாள்..

"ஏன் நடக்காது..? இதுக்கு முன்னாடி அவளை விரட்டிக் காட்டலை..? இப்பவும் அதைப் போல விரட்டறதில எனக்கு என்ன கஷ்டம்..?"

"என்ன சொல்லி விரட்டுவீங்க..?"

"அவளை அவ புருசன் தள்ளி வைச்சிருந்தான்னு அவ வீட்டில வேலை செய்கிற வேலையாள்கள் முன்னாலே சொல்லுவேன்.. அவ இத்தனை வருசமா எந்தக் கள்ளக்காதலனுடன் குடும்பம் நடத்தினாள்ன்னு அதே வேலையாளுக முன்னாலே கேட்பேன்.. உன்னை நரேந்திரன் காதலிக்கிறான்.. உனக்கும், அவனுக்கும் கல்யாணம் நிச்சயமாகிருக்கு.. நரேந்திரன் உன்னைத்தான் காதலக்கிறான்.. ஊர்மிளா பிள்ளையைக் காட்டி நரேந்திரனை அவளுடன் குடித்தனம் பண்ண வைத்திருக்கிறாள் அப்படின்னு சொல்லுவேன்.. இதையெல்லாம் தாங்கிக்கிட்டு அவ அங்கே நிற்பான்னா நினைக்கிற..?

https://t.me/tamilpdfebooks

ஊஹூம்.. அவ பிள்ளையைத் தூக்கிகிட்டு நரேந்திரனிடம் சொல்லாம கொள்ளாம ஓடிப் போயிருவா.."

அகல்யாவின் பிசிறில்லாத திட்டத்தில் வெறுத்துப் போனாள் ரம்யா இது நடந்து விடக் கூடுமா என்ற யோசனை அவளுள் வந்தது.. இருந்தும் வெளியில் பல சந்தேகங்களை கேட்கலானாள்.. அவளது எல்லாவிதமான சந்தேகங்களுக்கும் அகல்யாவிடம் பதில்கள் இருந்தன..

"நரேனும், ஊர்மிளாவும் காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க.. என்னை நரேன் காதலிக்கிறார்ன்னு சொன்னா அவள் அதை நம்புவாளா..?"

"முதலில் தாங்கிக்க மாட்டா.. அதை யோசி.. எப்பவுமே காதலுக்கும் யோசனைக்கும் காத தூரம் ரம்யா.. இந்த ஊர்மிளா இருக்காளே.. அவ நரேந்திரனை உருகி.. உருகி.. காதலிக்கிறவ.. அவனுக்கு இன்னொரு பெண் மேலே காதல்ன்னு காதில விழுந்தாலே போதும்.. அந்த இடத்திலேயே உயிரை விட்டிருவா.. நாமளும் சோலி முடிஞ்சதுன்னு நிம்மதியா வந்திரலாம்.."

ஊர்மிளாவின் மரணத்தைப் பற்றி எத்தனை இலகுவாக அகல்யா பேசுகிறாள் என்று மனம் அதிர்ந்தாள் ரம்யா.. ஒரு பெண்ணின் மரணம் என்பது.. வேலை முடிந்தது என்பதைப் போல மிக இயல்பாக எடுத்துக் கொள்ள வேண்டிய ஒன்றா..?

இப்படிப்பட்ட ஒருத்தி தனது அத்தை என்பதைப் பற்றி மனதுக்குள் அருவெறுத்தாள் ரம்யா.. மற்றவர்களின்

https://t.me/tamilpdfebooks

உணர்வுகளைப் பற்றிய பிரக்ஞை இன்றி.. தான், தன் சுகம் என்று வாழும் அகல்யாவைப் பார்த்த போது ரம்யாவின் அடி மனதில் பயம் வந்தது..

"அவ அக்கம் பக்கத்தில இருக்கிறவங்களோட நினைப்பைப் பத்தி ரொம்பவும் யோசிப்பா ரம்யா.. வேலையாளுக முன்னாலே அவளோட கடந்த கால சரித்திரங்கள் அள்ளித் தெளிச்சோம்ன்னு வைய்யி.. அந்த வீட்டிலே ஒரு நிமிசம் கூட நிற்க மாட்டா.."

தனது கடந்த காலம் எப்பேற்பட்ட கறைகளைக் கொண்டது என்ற எண்ணமின்றி உற்சாகமாக திட்டம் தீட்டினாள் அகல்யா..

ரம்யாவுக்கு அந்தப் பேச்சே பிடிக்கவில்லை.. ஊர்மிளாவின் கடந்த காலச் சரித்திரம் அப்பழுக்கில்லாதது என்பதை அர்ச்சனாவின் மூலம் அவள் அறிந்து வைத்திருந்தாள்..

"அண்ணியையும்.. அண்ணனையும் பார்க்கிறப்ப ராமர், சீதையை பார்த்ததைப் போல அவ்வளவு பாந்தமாயிருக்கும் ரம்யா.." அர்ச்சனாவின் கண்களில் பிரகாசம் வரும்..

அதில் ரம்யாவின் மனதில் பொறாமை வரும்.. இதுபோன்ற அன்புடன் அவளை நேசிக்கும் நாத்தனார் கிடைப்பாளா என்று அவள் ஏக்கப்பட்டாள்.. ஊர்மிளாவுக்கு அது வாய்த்திருக்கிறது என்பதில் இயல்பான பெண் மனதின் ஏக்கம் கொண்டபொறாமை அவள் மனதில் துளிர்த்தது..

https://t.me/tamilpdfebooks

அவளும்தான் அந்த வீட்டில் இரண்டு வருடங்களுக்கும் மேலாக இருக்கிறாள்.. இது போன்ற அன்பை அர்ச்சனா ரம்யாவின்மீது காட்டியதில்லையே..

கண் முன் இல்லாத ஊர்மிளாவின் மீது அவளுடைய நாத்தனார் வற்றாத பாசத்தோடு இருக்கிறாள்... ஊர்மிளாவின் கணவனோ மாறாத காதலுடன் இருக்கிறான்.

ஏனோ தெரியவில்லை.. ரம்யாவின் மனதில் அவள் முன்பின் பார்த்தறியாத ஊர்மிளாவின் மீது மரியாதை வந்தது..

அந்த ஊர்மிளாவை அகல்யா அசிங்கப் படுத்தி ஓட வைக்கப் போகிறாளா..?

இப்படிப்பட்ட அகல்யாவை எதிர்த்து நிற்கும் முதுகெழும்பு இல்லாத கோழையா ஊர்மிளா..?

ரம்யா அதை அறிய விரும்பினாள்..

அகல்யாவைப் பின்பற்றிப் போய் அதை நேரடியாக பார்த்து உணர அவள் விரும்பினாள்.. இத்தனைக்கும் மேலாக ஒன்று இருந்தது..

ரம்யா அழகி..! அதை அவள் அறிவாள்.. நரேந்திரனின் முன்னால்.. அவனை விரும்பும் நோக்கத்தை வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டு இரண்டரை வருடங்களுக்கும் மேலாக நடமாடிக் கொண்டிருக்கிறாள்.. இருந்தும் நரேந்திரன் அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை..

https://t.me/tamilpdfebooks

இந்த அளவுக்கு அவன் மனதில் இடம் பிடித்திரும் பெண் எத்தகைய அழகோடு இருப்பாள்..?

ரம்யா ஊர்மிளாவை சந்திக்கும் முடிவை எடுத்தாள்.. அதை அறியாத அகல்யா தன் போக்கில் பேசிக் கொண்டிருந்தாள்..

"அவ வண்டவாளத்தை தண்டவாளத்திலே ஏத்தினா அவ ஓடியே போயிருவா ரம்யா.."

'உன் வண்டவாளம் எப்படிப்பட்டதுன்னு அவ பிட்டுப்பிட்டு வைத்தால் நீ என்ன பண்ணுவ..?' இகழ்ச்சியுடன் நினைத்துக் கொண்டாள் ரம்யா..

77

நீதிக்கு தலை வணங்கி..
நேர்மையிலே திளைத்திருக்கும்
அழகான ராட்சசி நீ....

இந்த உலகம் அப்படிப்பட்டது.. அவரவர் முதுகில் ஆயிரம் அழுக்கிருக்கும்.. அவர்கள் அதைப் பற்றிய எண்ணம் கிஞ்சித்தும் இல்லாமல் மற்றவர்களின் மீது படிந்திருக்கும் தூசியை சுட்டிக் காட்டுவார்கள்..

குறை சொல்வதற்கும் ஒரு தகுதி இருக்க வேண்டும்.. மகாத்மா காந்தியிடம் ஒருநாள் ஒரு பெண்மணி வந்து..

https://t.me/tamilpdfebooks

"பாபுஜி..! என் மகன் எப்போது பார்த்தாலும் சர்க்கரைக் கட்டிகளை விழுங்கிக் கொண்டிருக்கிறான்.. தாங்கள் தான் அவனுக்கு புத்திமதி சொல்லி அந்தப் பழக்கத்தை நிறுத்த வேண்டும்.. தங்களின் அறிவுரைக்கு அவன் செவி சாய்ப்பான்.." என்று வேண்டிக் கொண்டாள்..

மகாத்மாவும் "ஆகட்டும்.. நாளைக்கு உன் மகனுடன் வந்து என்னைப் பார் அம்மா.." என்று சொல்லி அந்தப் பெண்மணியை அனுப்பி வைத்தார்..

மறுநாள் அந்தப் பெண்மணி மகனுடன் வந்த போது.. அந்தச் சிறுவனிடம் இனிப்புக் கட்டிகளை அதிகம் உண்பதால் ஏற்படும் தீமைகளைப் பற்றி விவரித்த மகாத்மா காந்தி.. அதை இனிமேல் அதிகமாக உண்ண வேண்டாம் என்று அறிவுரை சொன்னார்.. அந்தப் பையனும் கேட்டுக் கொண்டான்.. அவர்கள் போனபின்பு அருகிலிருந்தவர் மகாத்மாவிடம்..

"பாபுஜி.. இந்த அறிவுரையை நேற்றே அந்தப் பையனுக்குத் தாங்கள் சொல்லியிருக்கலாமே.. இன்று எதற்காக வரச் சொன்னீர்கள்," என்று கேட்டார்..

அதற்கு பாபுஜி சொன்ன பதிலில்தான் எதற்காக இந்த உலகம் அவரை மகாத்மா என்று போற்றுகிறது என்ற செய்தி அடங்கியிருக்கிறது.. அவர் சொன்னார்..

"எனக்கும் இனிப்புக் கட்டிகளைச் சாப்பிடும் பழக்கம் இருந்தது.. அதை நிறுத்தாமல்.. அதைப்பற்றிய தீமைகளைச் சொல்லி அந்தப் பையனை நிறுத்தச் சொல்ல

https://t.me/tamilpdfebooks

முடியுமா..? அதற்கான தகுதி எனக்கிருக்க வேண்டாமா..? நேற்று முதல் நான் இனிப்புக் கட்டிகளை சாப்பிடும் வழக்கத்தை விட்டு விட்டேன்.. இன்று அதற்கான தகுதி எனக்கு வந்து விட்டது.. இப்போது நான் அவனுக்கு அறிவுரை சொல்லலாம்..”

எத்தனை பேர் இப்படி இருக்கிறார்கள்..? நம்மைச் சுற்றி இருப்பவர்களெல்லாம் கண்ணாடி மாளிகைக்குள் இருந்தபடி கல் எறிபவர்களே.. இங்கே வேதாளம் தேவாரம் ஓதலாம்.. ஆயிரம் பெண்களுடன் வாழ்பவன் ராமன் வேடம் தரிக்கலாம்.. மனம் போல வாழும் கூட்டம் மற்றவர்களுக்கு போதனை செய்யலாம்..

அகல்யாவும் அவர்களில் ஒருத்தியே.. அதுபோன்ற பிறவிகளின் பிரதிநிதி அவள்..

“அவ கடந்த காலத்திலதான் எதுவுமில்லையே அத்தை..”

‘ரம்யா சந்தேகம் கேட்டுவிட்டு அகல்யாவின் பலத்த கண்டனப் பார்வைக்கு ஆளானாள்..’

“அது உனக்கும், எனக்கும் தெரியும்.. ஊருக்குத் தெரியுமா..? அவங்க நெருப்பில்லாம புகையுமான்னு கேட்பாங்க..”

“ஓஹோ..”

“ஒரே பொய்யை திரும்பித் திருப்பிச் சொன்னோம்ன்னு வைய்யி.. அதை உண்மைன்னு நம்பிருவாங்க..”

https://t.me/tamilpdfebooks

"அப்படியா..?"

"அதனாலே.. ஊர்மிளா விக்கி, விறைச்சுப் போயி அந்த வீட்டைவிட்டு ஓடியே போயிருவா.."

"நரேந்திரன் போய் கூப்பிடுவாரே.."

"அதைச் சொல்லு... மூன்றரை வருசமா பொண்டாட்டியை பிரிஞ்சு இருந்தவன் நொடிப் பொழுதிலே ஒன்றாய் சேர்ந்துட்டானே.. இவனை எந்தக் கணக்கிலேயும் வைக்க முடியாது ரம்யா.. இவன் போய் கூப்பிடுவான்.. ஆனா.. அவ இவனைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டா.."

அகல்யா உத்திரவாதம் அளித்தாள்..

"இவர் வற்புறுத்துவாரே அத்தை.."

"இதுக்கு மேலே இந்த நரேந்திரன் போய் எவ்வளவு தான் கெஞ்சிக் கூத்தாடினாலும் அவ இவன் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டா.. இவனுடன் வாழவும் வரமாட்டா ரம்யா.."

"எப்படி அத்தனை நிச்சயமா சொல்கிறிங்க அத்தை..?"

"அவ ரோசக்கார ஏமாளி.. அந்த ஏமாளித்தனத்தை கண்டு கொண்டுதானே அவளை ரோசப்பட வைத்து சவாலுக்கு இழுத்தேன்..? அந்த ஏமாளியும் அது தெரியாம வகையா என் வலையிலே மாட்டிக்கிட்டா.. வீட்டை விட்டு ஓடிப் போனா.. அப்படியாப்பட்ட ஏமாளி அவ.. அவளைப் பத்தி நீ கவலைப்படாதே.."

https://t.me/tamilpdfebooks

அகல்யாவின் எக்களிப்பில்.. இந்த அத்தையின் அகராதியில் ரோசக்காரர்கள் எல்லோரும் ஏமாளிகள் போல இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள் ரம்யா..

அகல்யாவுக்கு என்றுமே ரோசம் போன்ற குணங்கள் எல்லாம் இருந்ததில்லை.. அது என்ன தேவைக்கு என்று கேட்கும் பிரகிருதி அவள்.. எப்படிப்பட்ட கேள்வியையும் தட்டி விட்டுப் போய் விடுவாள்.. காரியம் பெரிதா.. வீரியம் பெரிதா.. என்ற கேள்வியில் அவள் முன்னால் காரியம் தான் பெரிதாக நிற்கும்.. வீரியம் கண்ணுக்குத் தெரியாமல் ஓட்டி விடப்பட்டு விடும்..

அகல்யா போட்ட திட்டத்தில் எதுவும் நடந்து விடும் என்று ரம்யா நினைக்காவிட்டாலும்.. கூடப் போய் அந்த ஊர்மிளா எப்பேற்பட்ட அழகி என்று பார்த்துவிட வேண்டும் என்று மட்டும் நினைத்தாள் அவள்..

“சரி அத்தை.. நானும் உங்க கூட வர்றேன்.. ஆனா.. நான் எதுவும் பேச மாட்டேன்.. எதுவானாலும் நீங்கதான் பேசிக்கனும்.. சொல்லிட்டேன்..” என்ற நிபந்தனையுடன் ரம்யாவும் கூடச் செல்ல ஒப்புக் கொண்டாள்..

சென்னைக்கு தம்பி வீட்டுக்குப் போவதாகச் சொல்லிவிட்டு ரம்யாவுடன் அகல்யா கிளம்பியபோது அருணும்.. அர்ச்சனாவும் சந்தேகப் படவில்லை.. இயல்பாகவே ‘டாட்டா’ சொல்லி வழியனுப்பி வைத்தார்கள்..

https://t.me/tamilpdfebooks

அகல்யா பிறந்த வீட்டிற்குப் போகாமல் நரேந்திரனின் வீட்டிற்குப் போவாள் என்று அவர்கள் என்ன கனவா கண்டார்கள்..?

சுரேந்திரனை பள்ளியில் விட்டு விட்டு.. கம்பெனிக்குப் போக வேண்டும் என்று அப்போதுதான் நரேந்திரன் பிள்ளையுடன் கிளம்பிச் சென்றிருந்தான்.. சென்னையிலேயே அவன் தங்கியிருக்க தீர்மானித்து விட்டதில் அவனது கம்பெனியின் கிளை அலுவலகமாக இருந்த சென்னை அலுவலகம், தலைமை அலுவலகமாக மாறிக் கொண்டிருந்தது.. அங்கிருந்தே.. அனைத்து தொழில்களையும் அவன் கண்காணித்துக் கொண்டிருந்தான்..

தகப்பனும், மகனும் கிளம்பிப் போன பின்பு வெறிச்சோடிப் போயிருந்த வீட்டில.. ஹாலில் இருந்த அலமாரியை தூசி தட்டிச் சுத்தம் பண்ணிக் கொண்டிருந்தாள் ஊர்மிளா.. தேன்மொழி வீட்டைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.. கண்ணம்மா.. சமையலறையில் இருந்தாள்.. ஊர்மிளாவின் வசதிக்காக வாங்கப் பட்டிருந்த காரின் மீது சாய்ந்து நின்று பேப்பர் படித்துக் கொண்டிருந்தான் மணிவாசகம்.. வாசலில் நின்ற செக்யூரிட்டியை தள்ளி விட்டு உள்ளே வந்த அகல்யாவைக் கண்டதும்.. சென்னையின் மணிபிரவாகத் தமிழில்..

"யாரும்மே..?" என்று கேட்டபடி அகல்யாவையும், ரம்யாவையும் ஏற, இறங்கப் பார்த்தான்..

'யாரு இந்தம்மா..? பாத்தா பஜாரிக் கணக்கா கீது.. கூட வந்திருக்கிற சின்னப் பொண்ணு படு ஷோக்கா கீது..

https://t.me/tamilpdfebooks

இதுக ரெண்டும் இங்க எதுக்கு வந்திருக்குதுக.. தோரணையைப் பாத்தா சண்டை வலிக்க வந்திருக்கிறதைப் போல கீதே..'

மணிவாசகத்தின் ஆராய்ச்சிப் பார்வையில் உஷ்ணமான அகல்யா..

"மே.. மே..ன்னு ஆட்டுக்குட்டியப் போலக் கத்தினேன்னு வைய்யி.. பிளந்து கட்டிருவேன்.. யாரைப் பார்த்து மே..மேங்கிற.. நான் யாரு தெரியுமா..?" என்று அதட்டினாள்..

அகல்யாவின் அதட்டலில் மணிவாசகத்திற்கு கோபம் வந்து விட்டது.. அவன் பேப்பரைத் தூக்கிக் கடாசிவிட்டு அவளை நேரடியாகவே முறைத்தான்.. அவன் முறைத்த முறைப்பில் ஒற்றை விரலை உயர்த்திய அகல்யா..

"ஏய்ய்.." என்று எச்சரித்தாள்..

அவ்வளவுதான்.. மணிவாசகத்திற்கு சாமி வந்து விட்டது..

"சும்மா இரும்மே.. உனக்குத்தான் மருவாதி இருக்கா.. எனக்கு இல்லையா..? ஒரு சின்னப் பார்வைக்கு ஏய்ய்ன்னு கூவறயே.. இத்தப் போலதானே எனக்கும் காண்டா இருக்கும்..? வீட்டில வேலை செய்கிறவங்க.. தெரியாத ஆளுக வீட்டுக்குள்ளே வந்தா யாரும் மேன்னுதான் கேப்பாங்க.. அத்துக்கு இந்த போடு போடுற..? உன்னக் காட்டிலும் யாரும் இங்கே கொறைஞ்சவக இல்லம்மே.."

'பாருடா.. இந்த வேலையாளு.. நம்ம அத்தையம்மாளை போடற போட்டை..'

https://t.me/tamilpdfebooks

பெங்களூரில் அகல்யாவைக் கண்டால் வேலையாள்கள் அலறுவார்கள்... அகல்யா என்றால் அவர்கள் அத்தனை பேருக்கும் சிம்ம சொப்பனமாக இருக்கும்.. அப்பேற்பட்ட அகல்யாவை நரேந்திரனின் வீட்டு கார் டிரைவர் மாட்டு.. மாட்டென்று மட்டுவதை வெகு சுவராஸ்யமாக வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள் ரம்யா..

அதிகாரம் செய்தே பழக்கப்பட்டிருந்த அகல்யாவுக்கு.. ஒரு வேலையாள்.. அவனுக்கு இணையாக அகல்யாவை பேசி விட்டதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

"யாரு. யாரோட இணையாப் பேசறது..? நான் யாரு தெரியுமா..?" என்றாள்..

"அட.. இதத்தானேம்மா அப்போப் பிடிச்சு கூவிக் கிட்டே இருக்கே.. நீ யாரு..? மைசூர் மகாராணியா..? யாருன்னு சொன்னாத்தான்ம்மே தெரியும்.. அத்தச் சொல்லாம சும்மா.. நான் யாரு தெரியுமான்னு கீறல விழுந்த ரிகார்டப் போலக் கூவிக்கினு இருந்தா யாருக்கு என்ன தெரியும்..?"

மணிவாசகம் அலட்சியமாக கேட்டான்..

"நான்தான் நரேந்திரனோட அம்மா. இவ நரேந்திரனோட வருங்காலப் பெண்டாட்டி.." படு தெனா வெட்டாக தங்களை அறிமுகம் செய்து கொண்டாள் அகல்யா..

"என்னது..?!"

https://t.me/tamilpdfebooks

மணிவாசகத்திற்கு ‘என்னடா இது..’ என்று ஆகி விட்டது..

“தேன்மொழி..” என்று குரல் கொடுத்தான்..

“இன்னாய்யா..” என்றபடி அவளும் அங்கே வந்தாள்.

அகல்யாவையும் ரம்யாவையும் காட்டி அவன் தாழ்ந்த குரலில் கிசுகிசுத்ததில் அகல்யா திருப்தியாகிப் போனாள்..

‘எப்படி..? நான் போட்ட திட்டம் வேலை செய்யுதா..?’

அவள் விழிகள் ரம்யாவிடம் கேட்டன.. அவளோ அகல்யாவை மேலும் கீழும் பார்த்து வைத்தாள்..

மணிவாசகம் சொன்னதைக் கேட்ட தேன்மொழி ஆடிப் போய் விட்டாள்.. மணிவாசகத்தின் முகமும் குழப்பத்தைக் காட்டியது..

வந்திருப்பது வருங்காலப் பெண்டாட்டி என்றால் அந்த வீட்டில் இருக்கும் ஊர்மிளா யார்..? நிகழ்காலப் பெண்டாட்டியா..?

‘அப்ப இறந்தகாலப் பெண்டாட்டியா யார் இருந்திருப்பாங்க...?’ அவன் தாடையைத் தடவிக் கொண்டு யோசிக்கலானான்..

தேன்மொழியோ... “இருக்காதுய்யா...” என்று சொன்னாள்..

“ஐயாவையும், அம்மாவையும் பாத்தா... பார்வதியையும், பரமசிவனையும் பாத்ததைப் போல இருக்குய்யா... தங்கம் போல கையில பிள்ளைவேற..

https://t.me/tamilpdfebooks

இதில முக்காலமும் அவருக்கு பெண்டாட்டிமார்கள் வரிசை கட்டிக்கிட்டு இருப்பாங்கன்னு சொன்னா நம்பறதைப் போலவா இருக்கு..?"

அகல்யாவை துரத்திக் கொண்டு அவள் பின்னாலேயே வந்த செக்யூரிட்டி.. அங்கே நடந்த பேச்சு வார்த்தைகளைக் கேட்டதும் அப்படியே நின்று விட்டான்.. அவன் விழிகளிலும் கேள்வி இருந்தது..

அனைத்துச் சூழலும் அகல்யாவுக்கு சாதகமாக அமைந்து விட்ட நிலையில்.. அவள் வெற்றிப் புன் முறுவலுடன் நிமிர்ந்து நின்றிருந்தாள்.. தேன்மொழி வீட்டுக்குள் ஓடினாள்.. அவள் ஒலிபரப்பிய செய்தியில் ஊர்மிளா கை வேலையை விட்டுவிட்டு வெளியே வந்தாள்..

'வரட்டும்..' கருவியபடி தெனாவெட்டாக ஊர்மிளாவைப் பார்த்த அகல்யா அயர்ந்து போனாள்..

தேன்மொழி இந்தப் பக்கம் வர.. கரண்டியும் கையுமாக என்னவோ.. வாளேந்திய பெண் தளபதியைப் போல கண்ணம்மா அந்தப் பக்கம் வர.. நடு நாயகமாக ஊர்மிளா.. 'லேடி பாட்ஷா..' ஸ்டைலில் நிமிர்வான நடை நடந்து அங்கே வந்து நின்றாள்..

ஊர்மிளாவின் அந்த நிமிர்வில் அகல்யாவுக்கு ஆங்காரம் வந்து விட்டது..

"தூ... இப்படித் திருட்டுத்தனமா குடித்தனம் பண்ணிக்கிட்டு இருக்கியே.. உனக்கு வெட்கமாயில்லை..?" அவள் வெடிக்க..

https://t.me/tamilpdfebooks

"பல்லைக் கழட்டி விடுவேன்.." என்றாள் ஊர்மிளா..

'அப்பாடி..' மணிவாசகத்திற்கும், செக்யூரிட்டிக்கும் சுவாசம் சீரானது... அகல்யாவைத் தடுத்ததினால் அவர்களுக்கு வேலை போய்விடாது என்று நிச்சயமானதில் அவர்கள் நிம்மதியாக சண்டையை வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்..

"திருட்டுத்தனமா நான் ஏன் குடித்தனம் பண்ணனும்..? ஊர்.. உலகம் முழுவதும் இன்விடேசன் கொடுத்து.. பெங்களூரிலேயே பெரிய கல்யாண மண்டபத்திலே என்னைச் சட்டப்படி கல்யாணம் பண்ணிக்கிட்ட என் புருசன்கூடத்தான் நான் குடித்தனம் பண்றேன்.. இதில திருட்டுத்தனம் எங்கே வந்தது..?"

ஊர்மிளாவின் ஆணித்தரமான கேள்வியில் வேலையாள்களின் மனதில் நிலவிய கொஞ்ச நஞ்ச சந்தேகங்களும் அகன்று விட்டன..

78

காவேரிக் கரையினிலே..
காதலித்து பிரிந்து விட்ட...
அழகான ராட்சசி நீ....

எல்லோரும் பிள்ளையார் பிடிக்கப் போய் அது குரங்காக மாறிவிட்டதே என்று கவலைப்படுவார்கள்..

https://t.me/tamilpdfebooks

அகல்யாவோ.. குரங்கைப் பிடிக்க வந்து.. அது பிள்ளையாராக மாறிக் கொண்டிருந்ததில் கொலைவெறி கொண்டாள்..

வேலையாள்களின் முன்னிலையில் ஊர்மிளாவை கண்டபடி பேச வேண்டும்.. அவர்கள் மனதில் சந்தேகத்தை வரவழைக்க வேண்டும்.. அதில் ஊர்மிளா 'ஐயோ..' என்று துடியாய் துடிக்க வேண்டும்.. அந்த வீட்டை விட்டே ஓடிப்போக வேண்டும்..

அந்த திட்டம் ஆட்டம் கண்டு விட்டதை உணர்ந்தாள் அகல்யா.. வேலையாள்களின் மனதிலிருந்த சந்தேகம் விலகி விட்டதை அவர்களின் முகக் குறிப்பிலிருந்து அறிந்து கொண்டவள் வெகுண்டாள்..

எப்போதுமே ஊர்மிளா பழிகளைத் தாங்கிக் கொள்ள மாட்டாள்.. மற்றவர்களின் முன்னால் அவளது மரியாதை குறைவதில் பதறிப் போவாள்.. அப்படி நேர்ந்து விட்டால் அந்த இடத்தை விட்டு ஓடி ஒளிந்து கொள்வாள்.. என்பது தான் அகல்யாவின் கணிப்பாக இருந்தது..

ஊர்மிளா மட்டுமல்ல.. பழி பாவத்துக்கு அஞ்சும் நல்லவர்கள்.. மான, மரியாதை பார்ப்பவர்கள்.. சுய கௌரவம் மிகுந்தவர்கள்... எல்லோருமே இதே குணாதிசியத்துடன் தான் இருப்பார்கள்..

கேடுகெட்டவர்களுக்கு அதுதான் மிகச் சாதகமான அம்சம்.. மரியாதையை பெரிதாய் நினைக்கிறவர்களைப் பற்றி.. மரியாதை கெட்ட பிறவி.. இழிவாய் ஒரு சொல் சொல்லி விட்டால் போதும்.. அந்த இழிபிறவி.. மரியாதைப் பட்ட மனிதரை ஜெயித்து விடும்..

https://t.me/tamilpdfebooks

அப்படிப்பட்டவர்களை எதிர்த்து நிற்பது எப்படி என்பதை பாரதியார் மிக அருமையாக தமது கவிதையில் சொல்லியிருப்பார்..

'பாதகம் செய்பவரைக் கண்டால் - நீ..
பயம் கொள்ளலாகாது பாப்பா..
மோதி மிதித்து விடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா..'

அப்படி மோதி மிதிக்கும் துணிவையும்... நேர்மையையும் கொண்டவள்தான் ஊர்மிளா.. அன்று அவள் நரேந்திரனை விட்டுப் பிரிந்தாள் என்றால்.. அதற்கான காரணம்.. நரேந்திரனின் மீது அவள் வைத்திருந்த நம்பிக்கை சிதைந்து போனது..

இன்று அப்படியல்ல.. எந்தவித சவாலிலும் சிக்கிக் கொள்ளாமல்.. யார்மீதும் நம்பிக்கை வைக்காமல்.. தன் கையே தனக்கு உதவி என்று ஊர்மிளா அகல்யாவை எதிர்த்து நின்று கொண்டிருக்கிறாள்.. இந்த யுத்ததிலிருந்து ஒரு போதும் அவள் பின் வாங்க மாட்டாள்..

இதை அறியாத அகல்யா.. பழைய நினைவில் ஊர்மிளாவை விரட்டி விடலாம் என்று மனப்பால் குடித்தபடி அடுத்த அஸ்திரத்தைப் பிரயோகித்தாள்..

"கள்ளக்காதலனுடன் கொஞ்சிக் குழாவி... ஊர் சுற்றிட்டு.. அதைப் பத்திக் கேள்வி கேட்ட உன் புருசனுக்குப் பதிலைச் சொல்லாம ஊரை விட்டு ஓடினவதானே நீ..! என்னவோ உன் புருசன்.. உன்

https://t.me/tamilpdfebooks

புருசன்ங்கிறயே.. இத்தனை வருசமா அந்தப் புருசனுடன் குடும்பம் நடத்தாம எங்கே போய் ஒளிஞ்சிருந்த..?"

இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் ஊர்மிளா மடங்கி விடுவாள் என்று ரம்யாவே எதிர்பார்த்தாள்.. அகல்யா கேட்டு வைத்திருக்கும் கேள்வி அப்படிப்பட்டது.. மீண்டிருக்கும் வேலையாள்களின் நம்பிக்கையை தோண்டிப் புதைப்பது.. அகன்றிருக்கும் அவர்களின் சந்தேகங்களை வெற்றிலை பாக்கு வைத்து திரும்பவும் அழைத்து வருவது..

'இப்ப என்ன செய்யப் போறா..?'

இறுமாப்புடன் நின்றிருந்த அகல்யாவின் கன்னத்தில் "பளார்" என்ற ஊர்மிளாவின் அறை விழுந்தது..

'என்னது..??!!'

ரம்யா இமை கொட்டி விழித்தாள்.. அவளால் நடந்து விட்ட அந்தச் செயலை நம்பவே முடியவில்லை..

'அத்தையம்மா அடி வாங்கிட்டாளா..?'

இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காண பல்லவி அங்கே இல்லையே என்று அவள் ஆற்றாற்றுப் போனாள்..

'அம்மா மட்டும் இதைப் பாத்திருக்கனும்.. அவங்க மனசு நிறைஞ்சு.. இன்னைக்கு சாப்பிடாமலே நிம்மதியா தூங்கியிருப்பாங்க..'

'அடிச்சுட்டாளா..'

கன்னத்தைப் பிடித்தபடி அப்படியே நின்று விட்டாள் அகல்யா.. அவள் காதுகளில் "ஙொய்.." என்ற கோடிக் கணக்கான கொசுக்களின் ரீங்கார சத்தம் கேட்டது..

https://t.me/tamilpdfebooks

"கொன்று புதைச்சிருவேன்.." ஒற்றை விரலை ஆட்டி எச்சரித்த ஊர்மிளாவின் உடல் கோபத்தில் நடுங்கிக் கொண்டிருந்தது..

எப்போதும் அமைதி தவழும் முகத்துடன்.. அதிகம் பேசாமல் வளைய வரும் ஊர்மிளாவின் முகத்தில் ரௌத்ரம் பொங்கி வழிந்ததை அன்றுதான் அந்த வீட்டின் வேலையாள்கள் பார்த்தார்கள்..

"யாருன்னு நினைச்சே.. நீ பாட்டுக்கு வாயில வந்ததைப் பேசித் தள்ளிக்கிட்டு இருக்க..? என்ன..? நீ பேசப் பேச நான் பேசாமல் இருப்பேன்கிற நினைப்பா உனக்கு..? கொன்று புதைச்சிருவேன்.. யாரைப் பார்த்து என்ன வார்த்தை சொல்கிற..?"

"அப்படி என்னத்தை நான் இல்லாததை சொல்லிட்டேன்.."

அகல்யா முன்ஜாக்கிரதையாக இரண்டடி தள்ளி நின்று கொண்டு கேட்டாள்.. ஊர்மிளா கோபத்துடன் முன்னேவர.. அவள் பின்னால் பாய்ந்தாள்..

'ஆஹா.. எங்கத்தை ஓட்டம் பிடிக்கிறதில சூரப் புலியாய் இருக்குதே..' ரம்யா வேடிக்கை பார்த்தாள்..

"இருக்கிறதையா சொல்கிற..? தூ.. நீயெல்லாம் ஒரு பொம்பளை.. என் புருசனுக்கு அம்மான்னு சொல்லிக்கறயே.. நீயென்ன அவரை பத்து மாதம் வயித்திலே சுமந்து பெத்த அம்மாவா..?"

ஊர்மிளாவின் கேள்வியில்..

https://t.me/tamilpdfebooks

"அதானே பார்த்தேன்.." என்றாள் கண்ணம்மா..

"இந்தம்மா குணத்துக்கு.. இதுவாவது.. நம்ம ஐயாவைப் பெத்த அம்மாவாய் இருக்கிறதாவதுன்னு நினைச்சேன்.. அப்படியில்லையா..? அதுக்குள்ள இந்தம்மாதான் ஐயாவோட அம்மான்னு என்னமா 'லா' பேசுச்சு.. பெத்த பிள்ளையா இருந்திருந்தா.. மருமகள் கிட்ட பேசற பேச்சில பாந்தம் இருக்கும்.. அன்பு இருக்கும்.. மட்டு மருவாதி இருக்கும்.. இங்கதான் அத்தனையும் இல்லயே.. அப்பவே இந்தம்மா யாரோ எவரோன்னு தெரிஞ்சு போச்சே.."

"கேட்டுக்கிட்டியா.." என்றாள் ஊர்மிளா..

"நான் சொல்லலை.. உன்னை முன்னே பின்னே தெரியாத கண்ணம்மா சொல்லுது... இதுக்கு என்ன பதிலை சொல்லப்போற.. அருண்குமாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற பெண்கிட்ட இப்படித்தான் நீ பேசுவியா..?"

ஊர்மிளாவின் கேள்விக்கு.. ரம்யா 'சபாஷ்' போடப் போனாள்.. கடைசி நொடியில் அகல்யா அங்கிருங்கிறாள் என்பது புத்தியில் உறைத்ததில் சபாஷை வாபஸ் வாங்கிக் கொண்டு.. சமர்த்து மருமகளாக அகல்யாவின் பக்கத்தில் சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு நின்று கொண்டாள்..

"எங்க அருணைப் பத்தி நீ பேசாதே.." என்றாள் அகல்யா..

https://t.me/tamilpdfebooks

"ரொம்ப நல்லது.. எனக்கும் பேசனும்னு இல்லை.. அதைப் போல நீயும் இங்கே வந்து எங்களைப் பத்தி எதுவும் பேசாதே.. உன் புத்தியும் பேச்சும் கீழ்த்தரமாவே இருக்கு.. இது நாகரிகமா.. நேர்மையா.. பேசறவங்க இருக்கிற இடம்.. இங்கே உன் போல ஆளுக்கெல்லாம் இடமில்லை.."

அந்த வார்த்தைகளில் கதி கலங்கிப் போய் விட்டாள் அகல்யா.. நரேந்திரனின் வீட்டில் அகல்யாவுக்கு இடமில்லையா..? அப்படியென்றால் அவளின் கோடிஸ்வர வாழ்க்கை என்ன ஆவது..?

அந்த வெறியில் அவள் கூக்குரலிட்டாள்..

"நரேந்திரன் என் மகன்.. என் தம்பி மகளைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவன்.. அவன் வீட்டில் உனக்குத்தான் இடமில்லை.. நீ கிளம்பு.."

"அடங்கு.." என்றாள் ஊர்மிளா..

"நீ கிளம்புன்னா உடனே பெட்டியைக் கட்ட நான் பழைய ஊர்மிளா இல்லை.. என் புருசன் உனக்கு மகனா..? என் மாமனாருக்கு இரண்டாம் தாரமா வந்தவதானே நீ..? அதனாலதான் உன் புத்தி இரண்டாம் தரமாவே யோசிக்குது.. என் மாமனாரைப் போல.. என் புருசனுக்கும் இரண்டாம்தாரம் கொண்டு வர ஏன் யோசிக்கற..? என் புருசன் என் மாமனாரோட முதல் தாரத்துக்கு பிறந்தவர்.. அதனாலே அவர் இரண்டாம் தாரம்ங்கிறதையெல்லாம் நினைச்சுக் கூடப் பார்க்க மாட்டார்.. நீ உன் மகனுக்குத்தான்

https://t.me/tamilpdfebooks

இரண்டாம் கல்யாணமா இரண்டு தாரங்களை கட்டி வைக்கனும்.. ஏன்னா அருண்தான் உனக்கு.. அதாவது இரண்டாம் தாரத்துக்குப் பிறந்தவர்.. அதனால அவருக்கு இரண்டு பெண் தேடு.. என் புருசனை விட்டு விடு.. ”

ஊர்மிளா சொல்லச் சொல்ல.. தேன்மொழியும் கண்ணம்மாவும் தாழ்ந்த குரலில் அகல்யாவைப் பற்றி எதையோ பேசி சிரித்தார்கள்.. அகல்யாவுக்கு கோபம் மீறிட்டது.. ஊர்மிளா இந்த அளவுக்கு விளாசித் தள்ளுவாள் என்று அவள் எதிர்பார்த்துக் தொலைக்கவில்லை...

“ஏன் என் மகனுக்கு இரண்டு பெண் பார்க்கனும்..? அவன் என்ன உன் புருசனைப் போல வீட்டுக்கு அடங்காம ஓடிப் போகிறவளை காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்து நிற்கப் போகிறானா..? என் மகன் அப்படியெல்லாம் ஏமாற மாட்டான்.. அதனால அழகு போல ஒரே ஒரு பெண்ணைப் பார்த்து அவளுக்குத் தாலிகட்டி குடும்பம் நடத்துவான்.. உன் புருசன்தான் ஓடிப் போன உன்னாலே ஒத்தைப் பனைமரம் போல இத்தனை வருசமாய் வாழாம நின்றான்.. அவனுக்குத்தான் இரண்டாம் கல்யாணம் பண்ணி வைக்கனும்...”

எத்தனை அடி அடித்தாலும் தாங்கிக் கொண்டு அயராமல் எதிர்த்துத் தாக்கும் அகல்யாவின் பேச்சிலிருந்து ஊர்மிளா எப்படித் தப்பிக்கப் போகிறாள் என்று ரம்யாவுக்கே கவலை வந்து விட்டது..

பல்லவியை ஆட்டி வைத்த அகல்யாவுக்கே அறை கொடுத்த பெண்சிங்கமல்லவா ஊர்மிளா..! அவள் தோற்பதா..?

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா அகல்யாவை பார்த்த பார்வையே..

‘ச்சீ.. போ.. புழுவே..’ என்றது..

“சும்மா ஓடிப் போனேன்.. ஓடிப் போனேன்னு சொன்னா.. உன் பல்லு மொத்தத்தையும் பேர்த்து கையில கொடுத்துருவேன்.. எங்கே ஓடிப் போனேன்..? என்னைப் பெத்தவங்க வீட்டுக்குப் போனேன்.. உன் அகராதியில அதுக்குப் பேரு ஓடிப் போகிறதா..? இப்ப எங்கேயோ போகிறதா நீ பெத்த பிள்ளைகள் கிட்ட போக்குக் காட்டிட்டு இங்கே வந்து நிற்கிறயே.. உன்னைப் போல என்னையும் நினைச்சுக்கிட்டியா..” ஊர்மிளா சொல்லிக் கொண்டிருக்கும் போதே..

“அது உனக்கு எப்படித் தெரியும்..?” என்று தானாக வாய் விட்டு மாட்டிக் கொண்டாள் அகல்யா..

“உன் திருட்டுப் புத்தியைப் பத்தி எனக்குத் தெரியாதா..?” என்றாள் ஊர்மிளா..

“நீயெல்லாம் என்னைப் பத்தி பேசக் கூடாது.. ஒழுங்காய் புருசன்கூடக் குடும்பம் நடத்த துப்பில்லை.. நீயெல்லாம் என்னைப் பேச வந்துட்ட..” அகல்யா அழிச்சாட்டியம் பண்ணினாள்..

“உன்னைப் போல சின்னப்புத்தி படைச்ச ‘சின்ன மாமியார்’ இருக்கிற வீட்டில எப்படி நான் என் புருசன்கூட நிம்மதியாய் குடும்பம் நடத்த முடியும்..? என் மாமனாருக்கு இரண்டாம் தாரமா வந்துட்டு அவரைப் பேசிப் பேசியே கொன்ன மகராசிதானே நீ.. எனக்குக் கள்ளக்காதலன்

https://t.me/tamilpdfebooks

இருந்தானா..? எங்கே.. அதே வீட்டில இருக்கிற.. உன் வயிற்றிலே பிறந்த அருண்குமார்கிட்டயும், அர்ச்சனா கிட்டயும்.. இந்த வார்த்தையைச் சொல்லிப் பாரு.. எனக்குப் பதிலா அவங்களே பெத்த தாய்ன்னு கூடப் பார்க்காம உன்னை கொன்று புதைச்சிருவாங்க.."

"என்னடி.. என் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்து எனக்கெதிரா.. திருப்பப் பார்க்கறியா..?"

அகல்யா பயந்து போனாள்.. அவளின் பயத்தை ஆனந்தமாக வேடிக்கை பார்த்தாள் ரம்யா.. அவளுக்கு நடந்து கொண்டிருந்த வார்த்தை விளையாடலை மிகவும் பிடித்திருந்தது.. அகல்யா வாங்கும் அடிகளில் அவள் உற்சாகமாகிக் கொண்டிருந்தாள்..

'இதற்குத்தானே ஆசைப் பட்டாய் பல்லவி..'

மானசீகமாக தன் தாயை கேட்டுக் கொண்டாள் ரம்யா.. அதை உணராமல் அகல்யா தம்பி மகள் தனக்காக பரிதாபப் படுகிறாள் என்று நினைத்துக் கொண்டிருந்தாள்..

பிரளயம் என்பது எப்படி உருவாகும்..? தாங்க முடியாத சீற்றத்தில் இயற்கை வெடிக்கும் போது பிரளயம் உண்டாகும்..

ஊர்மிளாவும் அது போன்ற சீற்றத்துடன்தான் இருந்தாள்.. தாங்க முடியாத ஆழிப் பேரலைகளாய் அவளை அலைக்கழித்துக் கொண்டிருந்த துயரங்களால் பிரளயமாய் வெடித்துச் சிதறினாள்..

https://t.me/tamilpdfebooks

79

பிரளயமாய் ஆட்டிவைக்கும்..
பேரிடியாய் கோபம் காட்டும்..
அழகான ராட்சசி நீ....

"நீ சின்னப்பப்பா பாரு.. உனக்குப் பேசத் தெரியாது பாரு.. என் பிரண்ட் ராதா வந்து போனதுக்கு ராதாகிருஷ்ணன் வந்து போனதா சொல்லி வைத்த பிறவிதானே நீ... அதுக்கே உன்னை வீடு கட்டி அடிக்கனும்.. அப்படிச் செய்யாம உன்னைப் போல பிறவிகள் இருக்கிற பக்கம் தலை வைத்துப் படுத்தாலே பாவம்ன்னு விலகிப் போனேன் பாரு.. அதுதான் உனக்குத் துளிர் விட்டுப் போச்சு.. என் அப்பாவுக்கு மட்டும் தகவல் சொல்லி விட்டிருந்தேன்னு வைய்யி.. உடனே கிளம்பி வந்து உன்னைத் தொலைச்சுக் கட்டி விட்டுட்டுத்தான் மறுவேலை பார்த்திருப்பாரு.. அப்ப வரச் சொல்லாட்டி என்ன.. இப்ப சொல்லிட்டாப் போச்சு.. தேன்மொழி.. என் போனை எடு.. என் அப்பாவை வரச் சொல்றேன்.. அவர் வந்து இத்தனை வருசமாய் ஏன் நான் என் புருசனை பிரிஞ்சு வாழ்ந்தேன்ங்கிறதுக்கு இந்தம்மாவுக்கு விளக்கம் சொல்லட்டும்.. கூடவே கள்ளக்காதலனைப் பத்தி இந்தம்மா சொன்னதையும் சொல்லி வைக்கிறேன்.. அதுக்கப்புறம் இந்தம்மா இந்த உலகத்தில எந்த

https://t.me/tamilpdfebooks

மூலையிலே போய் ஒளிஞ்சாலும் எங்கப்பா விட மாட்டாரு.. தேடிப் போய் பொலி போட்டிருவாரு.."

சோமசுந்தரம் ஊர்மிளா சொன்னதையும் செய்வார்.. சொல்லாததையும் சேர்த்துச் செய்வார் என்பதில் குலை நடுங்கிப் போன அகல்யா போர் நிறுத்தம் செய்து பின்வாங்கி விடுவதே சாலச்சிறந்தது என்ற அவசர முடிவிற்கு வந்தாள்.. அதை தாழ்ந்த குரலில் அவள் ரம்யாவிடம் முணுமுணுத்தபோது அவள் இமை கொட்டி விழித்தாள்..

"நீங்களா அத்தை இப்படிப் பேசறது..? ஊர்மிளாவை ஓட ஓட விரட்டறேன்னு எனக்கு வாக்குக் கொடுத்து கூப்பிட்டுக்கிட்டு வந்துட்டு இப்ப நீங்க ஓடனும்னு சொல்கிறீங்களே.. வாட் எ ஷேம்..! என் அத்தை இப்படித் தோற்றுப் போய் பின் வாங்குவதா..?"

ரம்யாவின் ஒன்றுமறியாத சின்னக் குழந்தை போன்ற முகத்தைப் பார்த்த அகல்யாவிற்கு ஒரு முடிவிற்கும் வர முடியவில்லை..

'இவ உண்மையிலேயே எனக்குத் தைரியம் கொடுக்கிறாளா..? இல்லை.. நான் இன்னும் கொஞ்சம் வாங்கிக் கட்டிக்கனும்னு நினைக்கிறாளா..?'

ரம்யாவின் நினைவு என்னவாக இருந்தாலும்.. அதைப் பற்றிய ஆராய்ச்சியை அப்போது மேற்கொள்ளாமல் உடனடியாக அந்த இடத்தை விட்டு ஓடிப் போய் விட வேண்டுமென்று நினைத்தாள் அகல்யா..

https://t.me/tamilpdfebooks

'நாம பாட்டுக்கு லேட் பண்ணிட்டு இங்கே நின்னுக் கிட்டிருக்க.. வெளியே போயிருக்கிற நரேந்திரன் வீட்டுக்குத் திரும்பி வந்துட்டான்னா என்ன பண்றது..? இவதான் துணிச்சலா எதுத்து நிற்கிறாளே.. இப்ப நடந்ததையும் சொல்லி.. இதுக்கு முன்னாலே நடந்ததையும் சேர்த்துச் சொன்னான்னா அவன் என்னைச் சும்மா விடுவானா..?'

இதையும் தாழ்ந்த குரலில் அவள் ரம்யாவிடம் முணுமுணுத்தபோது அவள் சின்னப் பாப்பாவைப் போல விழி விரித்தாள்.. அதை விடக் கொடுமை எதுவென்றால்.. அவள் அகல்யாவை சின்னப் பப்பாவாக ஆக்கியதுதான்..

"என்ன அத்தை சின்னக் குழந்தையைப் போலப் பேசறிங்க.. நாம ஓடிப் போயிட்டா மட்டும் இந்த ஊர்மிளா இப்ப நடந்ததையும்.. இதுக்கு முன்னாலே நடந்ததையும் நரேந்திரன் அத்தானிடம் சொல்லாமல் விட்டு விடுவாளா..? அவரும் உங்களை என்னவென்று கேட்காமல் விட்டு விடுவாரா..? த்ச்சு.. த்ச்சு.. பாவம் அத்தை நீங்க.. பயத்திலே எதுவும் புரியலை உங்களுக்கு.."

ரம்யாவின் கண்களில் கேலிச் சிரிப்பிருக்க.. அவளது உதடு மட்டும் 'த்ச்சு' போட்டது.. அகல்யா பல்லைக் கடித்தாள்.. அவள் முன்னால் பதவிசாக.. 'அத்தை.. அத்தை' என்று குழைந்த ரம்யாவுக்கெல்லாம் வாய் வந்து விட்டது என்ற நினைவில்..

'எல்லாம் என் நேரம்டி..' என்று பல்லைக் கடித்தாள்..

https://t.me/tamilpdfebooks

அகல்யாவே ரம்யா சொன்னதைப் போல நிகழ்ந்து விடுமோ என்றுதான் மனதுக்குள் அஞ்சிக் கொண்டிருந்தாள்.. அதை ரம்யா புளி போட்டுத் தேய்த்து.. விளக்கிச் சொல்லவும் அவள் வெறியாகிப் போனாள்..

'இவ என்ன இதெல்லாம் நடந்து விடும்ன்னு என்னைப் பார்த்துப் பாவப்படறாளா.. இல்லை.. இதெல்லாம் நடக்கப் போகுதுன்னு புளியைக் கரைச்சு ஊத்தறாளா..?'

இரண்டாவதாகத்தான் ரம்யாவின் எண்ணமிருக்கும் என்று தோன்றியபோதும்.. அந்த நேரத்தில் அதை வெளிப் படுத்தி ரம்யாவைப் பகைத்துக் கொள்ள அகல்யா விரும்பவில்லை.. அவளுக்கு ரம்யாவின் தயவு தேவைப் பட்டது.. ஆதலால்.. ரம்யாவைப் பற்றிய ஆராய்தலை ஓரம் கட்டி விட்டு.. ஊர்மிளாவைப் பற்றிய நினைவுக்கு வந்தாள்..

'இந்த ஊமைக் கோட்டான் முதலிலாவது சும்மா இருந்தது.. இப்பக் கையிலே பிள்ளையோட இருக்குது.. அப்பவே அந்த நரேந்திரன் இவ சொல்றதுக்குத்தான் தாளம் போடுவான்.. இப்ப அவன் பிள்ளைக்கு இவ அம்மா... சொல்லவே வேணாம்.. இவ கண்ணைக் கசக்கினாலே என்னை உண்டு இல்லைன்னு ஆக்கிருவானே...'

அதிக நேரம் அங்கே தாமதிக்கலாகாது என்ற ஞானோதயத்துடன் அகல்யா வெளிநடப்பு செய்ய முயன்றாள்.. ரம்யா தடுத்தாள்..

"எங்கே கிளம்பறிங்க அத்தை.."

https://t.me/tamilpdfebooks

“அதை போற வழியில சொல்றேன்.. இப்ப வா ஓடிப் போகலாம்..”

“இது உங்களுக்கே நன்றாக இருக்கிறதா அத்தை..?”

“எது..?”

“உங்க மகன் நரேந்திரன்கூட என்னை ஓடிப் போகச் சொன்னா அதில ஒரு ‘கிக்..’ இருக்கும்.. இப்படி வயசான பொம்பளையான உங்க கூட என்னை ஓடிப் போகச் சொல்கிறீங்களே அத்தை.. வாட் எ ஷேம்..! ரம்யா இப்படியாடி உன் நிலைமை ஆகனும்..?”

ரம்யா அகல்யாவை கேலிதான் செய்கிறாள் என்பது தெள்ளத் தெளிவாக அகல்யாவுக்குப் புரியத்தான் செய்தது.. புரிந்து என்ன செய்ய..?

‘ஏம்மா.. நீ என்னை வைத்து காமெடி.. கீமெடி.. பண்றயா..?’ என்று ரம்யாவிடம் அவளால் கேட்கத்தான் முடியுமா..? கேட்டால் அவள் சும்மாதான் இருப்பாளா..?

‘அதெல்லாம் இல்லை அத்தை..’ என்று சொல்லி விட்டால் பரவாயில்லை.. அகல்யாவின் ‘கெத்து’ கொஞ்சம் தப்பிப் பிழைக்கும்.. அப்படியில்லாமல்.. அவள்..

‘ஆமாம் அத்தை..’ என்று சொல்லி விட்டால் அகல்யா என்ன ஆவாள்..? ஏற்கனெவே அடி வாங்கி.. பலத்த சேதாரத்திற்கு ஆளாகியிருக்கும் அவளின் ‘கெத்து’ சுக்கு நூறாகி காணாமல் போய் விடாதா..?

அதனால் அவள் தம்பி மகளின் கேலியை ரசிப்பதைப் போல பாவனை செய்தாள்..

https://t.me/tamilpdfebooks

"உனக்கு ஜோக் அடிக்க நேரம் காலம் தெரியாது ரம்யா.. ஆனாலும் உன் ஜோக்கைக் கேட்டா சிரிப்புச் சிரிப்பாத்தான் வருது.."

"அப்படியா அத்தை..? இந்த நிலைமையிலயும் உங்களுக்குச் சிரிப்பு வருதா..? அதுசரி.. அதுதான் துன்பம் வரும் நேரத்திலே சிரிங்கன்னு வள்ளுவர் சொல்லி வைச்சிட்டுப் போயிருக்காரே.. நீங்க சிரிங்க அத்தை.."

"அந்தச் சிரிப்பை ஒடிக்கிட்டே சிரிக்கலாம்.. வா.."

அகல்யா அவசரமாக திரும்பி நடந்தாள்.. அவளை பின்பற்றப் போன ரம்யா நின்று திரும்பி ஊர்மிளாவைப் பார்த்து சிநேகிதமாக சிரித்தாள்.. கண்ணம்மா முகவாயில் கரண்டியை வைத்தாள்..

"இன்னா தேன்மொழி..! இது அதிசயமா கீது.. இந்தக் குட்டியத்தான் நம்ம ஐயாவுக்கு ரெண்டாம்தாராம கட்டி வைக்கப் போறதா.. அந்த ரெண்டாம் தாரம் சொல்லுச்சு.. இந்தக் குட்டி என்னடான்னா நம்ம அம்மாகிட்ட பல்லைக் காட்டுது..?"

"பாசப் பறவய பறக்க விடுதுக்கா.."

"அப்படியா சொல்ற..?"

"அட.. ஆமாக்கா.. பாத்தாத் தெரியலையா..?"

"என்னமோ போ தேன்மொழி..! ஒன்னுமே புரியல உலகத்திலன்னு நம்ம சந்திரபாபு தாத்தா சொல்லி வைச்சதிலயும் ஒரு அர்த்தம் இருக்கத்தான் கீது புள்ள.."

https://t.me/tamilpdfebooks

"கீதுக்கா.. கீது.."

தேன்மொழியும், கண்ணம்மாவும்... சென்னை பாஷையில் கலந்துரையாடிக் கொண்டிருக்க.. ரம்யா ஊர்மிளாவை நோக்கிக் கை நீட்டினாள்..

"ஹாய்.. ஐ ஆம் ரம்யா.."

இறுகிப் போன முகத்துடன் ஊர்மிளா ரம்யாவின் நீட்டிய கையைப் பற்றிக் குலுக்கினாள்..

"நான் உங்களுக்கு எதிரியில்லை ஊர்மிளா.."

"சொந்தத்துக்குள்ளே யாருமே யாருக்கும் எதிரியாகக் கூடாது.."

"அது நடக்காத காரியம் ஊர்மிளா.. சொந்தம்ன்னு சொல்லிக்கிட்டு கழுத்தை அறுத்து ரத்தம் குடிக்கிறவங்க கிட்ட உறவு கொண்டாட முடியாது.. நான் உங்களைப் போல அஹிம்சா வழியில் போகிறவளில்லை..."

"நான் அஹிம்சாவாதின்னு யார் உங்களுக்குச் சொன்னது..? என் அப்பா ஒரு போராளி.. அந்த போர் குணம் அப்படியே என்னிடமும் இருக்கு.."

"அப்புறம் எதற்காக நரேந்திரன் அத்தானை விட்டு விலகிப் போனிங்க ஊர்மிளா..? இருந்து இவங்க முகத்திரையை கிழித்திருக்க வேண்டாமா..? இவங்களைக் கண்டு பயந்து ஓடிப் போனதா இவங்க சொல்லிக்கிட்டிருக் காங்களே.. அதுக்கு இடம் கொடுத்திருக்கனுமா..?"

https://t.me/tamilpdfebooks

"இல்லை ரம்யா.. நான் உங்க அத்தையைக் கண்டு பயந்து ஓடி வரலை.. என் நம்பிக்கை உடைஞ்சிருச்சு.. அதனால நான் உடைஞ்சு போனேன்.. விலகிப் போனேன்.. உங்களுக்கு இதையெல்லாம் சொல்லிப் புரிய வைக்க முடியாது.. ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கங்க.. உங்க அத்தையிடமும் சொல்லுங்க.. எனக்கு எதிரியா இருக்கிறதுக்கும் ஒரு தகுதி இருக்கனும்.. அந்தத் தகுதி உங்க அத்தையிடம் இல்லை.. இதை மறக்காம சொல்லிருங்க.."

"மறப்பேனா ஊர்மிளா.. இப்ப வெளியில போனதும் முதல் வேலையா இதைச் சொல்லிடறேன்.. எனக்கு வேறென்ன வேலை..?"

ரம்யா சிரித்த முகத்துடன் கண்ணம்மாவுக்கும், தேன்மொழிக்கும் கையாட்டி விட்டு நிதானமாக கேட்டை நோக்கி நடை போட்டாள்..

"இந்தக் குட்டிய புரிஞ்சுக்கவே முடியலைக்கா.." என்றாள் தேன்மொழி..

"ஆமாம்மே.." கண்ணம்மா அதை ஆமோதித்தாள்..

ஊர்மிளா தோளைக் குலுக்கிக் விட்டு வீட்டுக்குள் நடந்தாள்.. கைவேலையை விட்டு விட்டு மாடிக்குப் போய் விட்டாள்.. அவளுக்கு தனிமை தேவைப்பட்டது.. உறங்கிய அவளின் கடந்த கால நினைவின் சுவடுகளை அகல்யா தட்டி எழுப்பி விட்டுப் போய் விட்டாள்.. கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்க முடியாத

https://t.me/tamilpdfebooks

சோர்வுடன் ஊர்மிளா சுருண்டு படுத்து.. அப்படியே தூங்கி விட்டாள்..

எவ்வளவு நேரம்.. அப்படியே தூங்கிக் கொண்டிருந்தாளோ அவளுக்கே தெரியவில்லை... உறக்கத்தில் இருந்தவளின் நெற்றியின் மீது வலிமையான உள்ளங்கையும், விரல்களும் படிந்தன.. அந்த ஸ்பரிசத்தில் கண் விழித்தாள் ஊர்மிளா.. அவளுக்கு வெகு அருகாமையில் நரேந்திரன் நின்றிருந்தான்.. ஊர்மிளா வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்..

"சுரேன்.." அவள் கண்கள் மகனைத் தேடின..

காலையில் மகனை பள்ளியில் விட்டுவிட்டு அலுவலகம் போகும் நரேந்திரன்.. மதிய உணவுக்கு வரும் போது மகனையும் அழைத்துக் கொண்டுதான் வருவான்.. சுரேந்திரனுக்கு நண்பகலோடு வகுப்பு முடிந்து விடும்..

அன்றும் அதுபோல மகனுடன் அவன் வந்திருப்பான் என்ற நினைவில் மகனைத் தேடினாள் ஊர்மிளா..

"இல்லை.. சுரேனை அழைச்சுக்கிட்டு வரலை.. அவனுக்குக் கிளாஸ் முடிய இன்னும் டைம் இருக்கு.." என்றபடி கட்டிலில் ஊர்மிளாவின் பக்கத்தில் உட்கார்ந்தான் நரேந்திரன்..

ஊர்மிளா விலகி உட்கார்ந்தாள்.. அதில் நரேந்திரனின் முகம் கடுமையானது..

"உன் கூடப் பேசனும்.. கீழே வேலையாள்கள் இருப்பாங்க.. ரூமுக்குள் நாம தனியாப் போசிக்கிட்டு

https://t.me/tamilpdfebooks

இருந்தா அவங்க உள்ளே வர மாட்டாங்க.. அதுக்குத்தான் இங்கே உட்கார்ந்தேன்.. மத்தபடி உன் கையைப் பிடிச்சு இழுத்து.. 'ரேப்' பண்ணனும்ங்கிற உத்தேசமெல்லாம் எனக்கில்லை.." என்றான்..

ஊர்மிளா உதட்டைக் கடித்தாள்.. அவள் முகம் செவ்வானமானது.. சங்கடத்துடன் சுவரைப் பார்த்தபடி..

"என்ன பேசனும்..?" என்றாள்..

நரேந்திரனின் பார்வை கூர்மையானது.. கண்கள் இடுங்க அவளையே வெறித்தவன்..

"பேச எதுவுமே இல்லையா..?" என்று கடினமான குரலில் கேட்டான்..

ஊர்மிளா பதில் சொல்லவில்லை.. அமைதியாக இருந்தாள்..

"ஏண்டி.. வீட்டில் பிரளயமே வெடிச்சிருக்கு.. மணிவாசகம் போன் போட்டான்... செக்யூரிட்டி வாசலிலேயே வழிமறிச்சு விவரம் சொல்றான்.. வீட்டுக்குள் வந்தால் தேன்மொழியும்.. கண்ணம்மாவும் கதைகதையாய் கொட்டறாங்க.. நீயென்னடான்னா என்ன பேசனும்ங்கற..? சொல்லுடி.. உனக்கு உண்மையிலேயே பேச எதுவுமே இல்லையா..?"

நரேந்திரனின் கொதிப்பில் ஊர்மிளா திரும்பி அவனை நேருக்கு நேராக பார்த்தாள்.. அதிலிருந்த ஒட்டாத தன்மையில் நரேந்திரனின் மனம் வலித்தது..

https://t.me/tamilpdfebooks

"ஐயா.. உங்க அம்மான்னு சொல்லிக்கிட்டு உங்க அப்பாவோட ரெண்டாவது பொண்டாட்டி வந்து நம்ம அம்மாகிட்ட சண்டை போட்டுட்டுப் போனாங்கய்யா.."

மணிவாசகம் இதைத்தான் போனில் சொன்னான்.. நரேந்திரன் உடனடியாக எழுந்து வீட்டுக்குக் கிளம்பி விட்டான்.. வாசலில் வழி மறித்த செக்யூரிட்டி..

"நான் தடுக்கத் தடுக்க அந்தம்மா இன்னொரு பொண்ணோட கேட்டைத் தாண்டிப் போர்டிகோவுக்கு போயிட்டாங்கய்யா... அங்கே மணிவாசகம் தடுத்து நிறுத்திட்டான்.. அவன் கூடயும் சண்டை... நம்ம அம்மாவை பேசாத பேச்சையெல்லாம் பேசிட்டாங்க.." என்று சொல்லி நரேந்திரனின் கண்களை சிவக்க வைத்தான்..

தேன்மொழியும், கண்ணம்மாவும் அக்குவேறு.. ஆணிவேறாக நடந்த நிகழ்வுகள் அத்தனையையும் திரைக்கதை, வசனத்தோடு ஒப்பித்து விட்டார்கள்.. அவர்களுக்கும் ராதாவுக்கும் ராதாகிருஷ்ணனுக்கும் இருந்த சம்பந்தத்தைப் பற்றிச் சொல்லத் தெரியவில்லை..

"என்னவோ ராதாகிருஷ்ணன்னு சொல்லி.. அதுக்கே உன்னை வீடு கட்டி அடிச்சிருக்கனும்ன்னு அம்மா கோபப்பட்டாங்கய்யா.. எனக்குக் கள்ளக் காதலன் இருந்தான்னு நீ பெத்த பிள்ளைகள் கிட்ட சொல்லிப்பாரு.. அவங்களே உன்னை கொன்று புதைச்சிருவாங்கன்னு சொன்னாங்கய்யா.." என்றுதான் கண்ணம்மா சொன்னாள்..

'கள்ளக் காதலன்..!'

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனின் முகம் பயங்கரமாக மாறிப் போனது.. அந்த வேகத்துடன் மாடியேறி ஊர்மிளாவின் அறைக்கதவை திறந்து உள்ளே போனான்.. அவள் கட்டிலில் சுருண்டு படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள்..

80

வாளேந்தும் வீராங்கனையாய்..
வார்த்தையிலே சுழற்றியடிக்கும்
அழகான ராட்சசி நீ....

ஒரு சோகச் சித்திரம் போல சுருண்டு படுத்திருந்தாள் ஊர்மிளா.. அவள் முகத்தில் அப்பியிருந்த துக்கத்தின் ரேகைகளில் நரேந்திரன் துக்கம் கொண்டான்..

இதற்காகவா அவளைத் தேடிப் பிடித்துக் காதல் சொன்னான்..?

கண்களில் ஒளிர்வோடும்.. கலகலத்த சிரிப்போடும்.. அன்றுதான் பூத்த புதுமலரைப் போல அவனின் கருத்தைக் கவர்ந்து காதலிக்க வைத்த அந்த ஊர்மிளா எங்கே போனாள்..?

சோகமே வடிவாக.. அசோக வனத்து சீதையைப் போல.. சொந்தவீட்டிலேயே அடைக்கலம் புகுந்திருப் பவளைப் போல சொந்தமில்லாத முகத்துடன் சுருண்டு

https://t.me/tamilpdfebooks

படுத்திருக்கும் இந்த அழகான ராட்சசியின் மனதில் என்ன முள் தைத்திருக்கிறது..?

'அயோத்தியை சீதை அசோக வனத்தைப் போல நினைக்கக் கண்டோமா..?' தனக்குத்தானே துயரத்துடன் கேட்டுக் கொண்டாள்

'இவள் நினைக்கிறாளே..'

அவனது சீதையின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்.. விழித்துப் பார்த்தவள் அவனைக் கண்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து.. என்னவோ பத்துத் தலை ராவணன் பக்கத்தில் வந்து விட்டதைப் போல விலகி அமர்ந்தாள்..

'நான் உன் புருசன்டி...' நரேந்திரனுக்கு கோபம் வந்தது..

"இன்னைக்கு நீ பேசினதை... அன்னைக்கு எல்லோரின் முன்னாடியும் பேசனும்னுதானேடி அத்தனை பேரின் முன்னாலேயும் உன்னை நிற்க வைச்சுக் கேள்வி கேட்டேன்..? இன்னைக்குப் பேசினதை அன்னைக்கு நீ பேசாம விலகிப் போனதினால அவங்க எந்த அளவுக்கு துணிஞ்சிட்டாங்கன்னு பார்த்திட்டல்ல.. இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்.. நரேந்திரனின் மனைவி.. சூது, வஞ்சம், சூழ்ச்சி.. இதைப் பார்த்தெல்லாம் ஓடி ஒளிகிறவளா இருக்கக்கூடாது.. எதிர்த்து நின்று கேள்வி கேட்கிறவளா இருக்கனும்.. இப்பப் புரியுதா..? நான் ஏன் அன்னைக்கு உன்னைக் கேள்வி கேட்டேன்னு..?"

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனின் கேள்விக்கு இப்போதும் ஊர்மிளா பதில் சொல்லவில்லை.. இகழ்ச்சியாக உதட்டைச் சுழித்தபடி லேசான கோபச் சிரிப்பைச் சிரித்தாள்.. நரேந்திரனின் பொறுமை பறந்தது.. அவன் அவளை முரட்டுத்தனமாக தன் பக்கம் திருப்பினான்..

"ராட்சசி..! அழகான ராட்சசி..! இப்பவும் பதில் பேசனும்னு நினைக்கிறயாடி..? இந்தச் சிரிப்புக்கு என்ன அர்த்தம்..?"

"நாணயத்துக்கு இரண்டு பக்கம் உண்டு.." என்றாள் ஊர்மிளா..

அவள் முகத்தில் தீவிரம் வந்திருந்தது.. அதற்குக் குறையாத தீவிரத்துடன் மனைவியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் நரேந்திரன்..

'பேசட்டும்.. இவ பேசியே ஆகனும்.. அப்பத்தான இவ மனசில என்ன இருக்குன்னு எனக்குத் தெரியவரும்..'

"உங்க பக்கத்தை நீங்க சொல்லிட்டிங்க.."

"உன் பக்கத்தை நீயும் சொல்லுன்னுதான் நான் சொல்றேன்.."

"நான் சொல்லித்தான் நீங்க தெரிஞ்சுக்கனும்னா.. நமக்குள்ளே இருந்த காதலுக்கு எந்த விதமான சக்தியும் கிடையாதுன்னு அர்த்தமாகிடும்.. நீங்களும் நானும் வாழ்ந்த வாழ்க்கைக்கு எந்தவிதமான அடிப்படையும் கிடையாதுன்னு அர்த்தமாகிரும்.."

"ஊர்மிளா.."

https://t.me/tamilpdfebooks

"உங்களுக்கு ஒரு எதிர்பார்ப்பு இருக்கிறதைப் போல எனக்கும் ஒரு எதிர்பார்ப்பு இருக்குமில்லையா..?"

"இருக்கக்கூடாதுன்னு நான் சொன்னேனா..?"

"நரேந்திரனின் பெண்டாட்டி இப்படி இருக்கனும்னு நீங்க நினைக்கிறதைப் போல.. ஊர்மிளாவின் புருசனும் இப்படித்தான் இருக்கனும்னு நானும் நினைக்கலாமில்ல..?"

"நினைடி.. உன் புருசன் எப்படியிருக்கனும்னு நீ நினைக்கிறயோ.. அப்படி நான் இருப்பேண்டி.. உன் மனசில இருக்கிற அந்த நினைப்பை உன் புருசன்கிட்டச் சொல்லித் தொலைன்னுதானேடி நான் மன்றாடறேன்..?"

நரேந்திரன் ஆயாசப்பட்டான்.. ஊர்மிளா ஒரு பெருமூச்சுடன் தோள்களைக் குலுக்கிவிட்டு கட்டிலை விட்டு இறங்கப் போனாள்..

"எங்கேடி போகிற..? இங்கே ஒருத்தன் உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்கிறது உன் கண்ணில் படலையா..? என்னைப் பார்த்தா வேலையில்லாதவனைப் போல தெரியுதா..? பத்து கோடி புராஜெக்ட்டுடி.. அது சம்பந்தமான மீட்டிங்கை போஸ்ட்போன் பண்ணிட்டு ஓடி வந்திருக்கேன்.. நீ என்னடான்னா.. பேசறதை அவாய்ட் பண்றதிலேயே குறியாய் இருக்கிற.." என்று நரேந்திரன் சப்தம் போட்டான்..

ஊர்மிளா அவனது கோபத்தைப் பொருட்படுத்தாமல் எழுந்து ஜன்னல் பக்கமாக போய் நின்றாள்.. வெளியே மழை ஊற்றிக் கொண்டிருந்தது..

https://t.me/tamilpdfebooks

'சுரேன் ஸ்கூலில் இருக்கானே..' அவள் மனம் கவலை கொண்டது..

அதை நரேந்திரனிடம் சொல்லி விட முடியாது.. அவன் பேசிக் கொண்டிருக்கும் பேச்சை அவள் மதிக்க வில்லையென்று அதற்கும் அவள்மேல் குற்றம் சாட்டுவான்.. அதோடு.. அவன் பொறுப்பான தகப்பன்... சுரேந்திரனைப் பற்றிய அவனது கவலையும், அக்கறையும் ஊர்மிளாவின் அக்கறைக்கும், கவலைக்கும் குறைவானதல்ல..

வெளியே மழை வலுத்தது.. அடர்ந்த மழை நீரின் தாரைகள் நெருக்கமாக கொட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்த போது.. நீர்த்தாரைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து 'நீர் திரை'யைப் போல ஊர்மிளாவுக்குத் தோன்றியது..

'திரைதான்..!' அவள் மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்..

அவளையும், நரேந்திரனையும் பிரித்து வைத்திருக்கும் கண்ணாடி சுவரின் திரை..

கண்ணாடியின் இந்தப் பக்கம் அவள் நிற்கிறாள்.. அந்தப் பக்கம் நரேந்திரன் நிற்கிறான்.. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளலாம்.. தொட முடியாது.. ஒருவர் பேசுவதை இன்னொருவர் கேட்க முடியாது..

கொட்டுகின்ற நீர்த்தாரைகள் ஊர்மிளாவின் கடந்த கால இரவுகளில் அவள் விட்ட கண்ணீரின் தாரைகள் போல நிற்காமல் கொட்டிக் கொண்டே இருந்தன..

https://t.me/tamilpdfebooks

மழையினால் சில்லிட்டுப் போயிருந்த ஜன்னல் கம்பியில் ஊர்மிளா முகம் பதித்தாள்.. அவற்றின் சில்லிப்பை உணர்ந்தவளுக்கு என்னவோ செய்தது.. இதமான மழைக்குளிர் அவள் உடலை ஊசிபோல துளைத்து இம்சை செய்தது.. அதை அறிந்தவனைப் போல.. அவள் பின்னால் வந்து நின்று வெப்பமான மூச்சுக் காற்றோடு.. அவள் தோளின் இருபக்கமும் கை பதித்து அவளை சிறை பிடித்தான் நரேந்திரன்..

ஊர்மிளாவின் மீது சாய்ந்தாற்போல நின்றிருந்தவனின் உடல் முழுவதும் அவள் மீது ஒட்டிக் கொண்டிருக்க.. அவனது உடல் வெப்பம் இடம் பெயர்ந்து அவள் உடலுக்கு மாறி ஒரு கதகதப்பை ஊட்டிக் கொண்டிருந்தது..

'ஸ் ஆ..' ஊர்மிளா கண் மூடித் தவித்தாள்..

அவளால் அசைய முடியவில்லை.. அவளை பின்பக்கமாக நின்று அவன் சிறை பிடித்திருந்ததில் அவள் அசைந்தால், மேலும் அவன் மீது இழையத்தான் செய்வாள்.. இந்த தொடு உணர்வையே தாங்க முடியாமல் துடித்துப் போகிறவளால் அந்த நெருக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியுமா..?

"ப்ளீஸ்.." பலவீனமாக அவள் முணுமுணுத்தாள்..

அந்த அழகான ராட்சசியின் மீது அப்பிக் கிடந்தவனுக்கு அவளின் வேண்டுகோள் காதுகளில் ஏறவே இல்லை.. அவளது கூந்தலின் நறுமணத்தை முகர்ந்தவன்.. கூந்தல் காட்டில் முகம் புதைத்துப் புரட்டினான்.. ஊர்மிளா கிளர்ந்தாள்.. துடித்துப் போனாள்..

https://t.me/tamilpdfebooks

"கூந்தல் மலரின் தேனை எடுக்க..
காத்துக்கிடந்தேன்.. கால்கள் கடுக்க..
இதயம் துடிக்க.."

அவள் காதோரமாக பாடினான்.. அவனது மூச்சுக் காற்றின் வெப்பத்தை அவளின் செவி உணர்ந்தது.. அவனது இதழின் தொடுகையில் அவளின் செவி மடல் சூடாகிப் போனது.. அவனது மீசை முடிகளின் உராய்வில் அவளது செவியின் பின்பக்கம் மெதுவாக இன்பம் கொள்ள ஆரம்பித்தது..

நரேந்திரன் அவளை பின்பக்கமாக நின்ற நிலையில் தழுவிக் கொண்டான்.. அவளின் தோள் தொட்டுத் தடவிய அவனது கைகளின் அழுத்தத்தில் அவள் உடலில் தீப்பிடித்ததைப் போன்ற பரவசம் பற்றிக் கொண்டது..

"உன் மனசில என்ன காயம் இருக்குன்னு எனக்குத் தெரியலைடி.. என் மனசிலயும் காயம் இருக்கு... அது உனக்குத் தெரியுமா..? தெரிஞ்சுக்க நீ முயற்சி பண்ணினயா..?"

நரேந்திரனின் குரல்தான் அவளை குற்றம் சாட்டியது.. அவனது கையோ இறங்கி.. அவளின் வளவளப்பான இடைப் பகுதியில் அழுந்திப் படிந்தது..

'ஸ் ஆ...' ஊர்மிளா பல்லைக் கடித்துத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ளப் போராடினாள்..

"யார் வாழ்க்கையிலே மனக் காயங்கள் இல்லை..? எல்லோர் வாழ்க்கையிலயும் மனத்தாங்கல் வந்து போயிருக்குடி...

https://t.me/tamilpdfebooks

கணவன் மனைவி சண்டை இல்லாத வீடு எதுன்னு சொல்லு.. கோவித்துக்கிட்டு பேசாம இருக்கிறதும்.. நாளடைவில் கோபம் தணிஞ்சு அவங்க ஒன்றாய் சேர்ந்துக்கிறதும் எல்லோரின் வீட்டிலும் நடக்கிற நிகழ்வுதானே ஊர்மிளா..?"

அவன் சரசரமாக வினவினான்.. அவளை உறவாட அழைத்தான்.. அவனை அவள் மறுத்ததை மறந்து.. அந்த மழை நேரக்குளிரில் அவளிடம் குளிர் காய்ந்து விடத் துடித்தான்.. அவனை ஆக்ரமித்திருக்கும் மோகத்தீயின் வேட்கையை தணித்துக் கொள்ள அவளை ஆக்ரமிக்க ஆரம்பித்தான்..

"வாழ்கிறது ஒரு முறைதான் ஊர்மிளா.. அதிலே ஏற்கனெவே என்னை நான்கு வருசத்தைக் தொலைக்க வைச்சிருக்க.. இனியாவது கருணை காட்டுடி.."

நரேந்திரனின் இறைஞ்சலில் ஊர்மிளாவின் உடலும், மனமும் பாகாய் உருகின.. அவனது கைகள் அத்து மீறிப் பிரவேசிக்க ஆரம்பித்ததை உணர்ந்த ஊர்மிளா அதைக் கட்டுப்படுத்தப் போராடினாள்.. அவன் விட மறுத்தான்..

"புண்பட்டுப் போன மனக் காயத்தை கிளறி விட்டுக் கிட்டே அதை ஆறவிட மாட்டேன்னு அடம் பிடிச்சா எப்படிடீ..? அதை மறக்கடிக்க மருந்து போடனும் ஊர்மிளா.. அப்பத்தான் காயம் ஆறும்.. இதுதான் அதுக்கான மருந்துடி.."

நரேந்திரனின் சூடான முத்தத்தை தன் பின் கழுத்தில் உணர்ந்த ஊர்மிளா.. ஜன்னல் கம்பியில் கண்மூடி முகம்

https://t.me/tamilpdfebooks

புரட்டினாள்.. அவளை முரட்டுத்தனமாக தன் பக்கம் திருப்பிய நரேந்திரன் அவள் முகத்தைத் தேடி வேட்கையுடன் குனிந்த போது..

"உங்களுக்குத் தேவை இந்த உடம்புதானே.." என்று ஆவேசத்துடன் கேட்டாள்...

நரேந்திரனின் முகம் அப்படியே நின்று விட்டது.. ஊர்மிளாவின் உடல் நடுங்கியது.. அவள் விலகியாக வேண்டும்.. இன்னும் ஒரு நொடி தாமதித்தால் கூட நரேந்திரனிடம் அவள் ஒன்றி விடுவாள்.. அவன் கேட்டதை மறுக்காமல் கொடுக்க ஆரம்பித்து விடுவாள்.. அவனது வேட்கைக்கு இரையாகி மோகத்தீயில் மூழ்க ஆரம்பித்து விடுவாள்..

'கூடாது..' ஊர்மிளாவின் மனம் ஜெபித்தது..

'இது கூடாது.. எனது நான்கு வருட போராட்டத்திற்கான நியாயமும்.. தீர்வும் கிடைக்காமல் இவனுடன் நான் கலந்து விடக் கூடாது.. அது என் சுயகௌரத்தைக் கொன்று, தின்று விடும்..'

அன்று அவனுடைய ஆசைக்கு இணங்கி விட்டால் அது அப்படியே தொடர்கதையாகி நீண்டு நிலைத்து விடாதா..? அதன்பின்னால் அவனிடம் எப்படி அவளால் போராட முடியும்..?

"ராட்சசி.." அவன் வெறியுடன் அவளைத் தள்ளி விட்டான்..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா கட்டிலின் மீது போய் விழுந்தாள்.. விழுந்த வேகத்தில் விலகிய அவளது உடையில்.. வெளிப்பட்ட அவளின் மேனி அழகை அவனது கண்கள் மொய்த்தன.. அவனுக்கு கொலை வெறி வந்தது..

"அழகான ராட்சசி.." குமுறினான்..

"அப்படி என்னடி நான் கேட்கக் கூடாததை கேட்டுட்டேன்.. இன்றைக்கு டாண், டாண்னு கொடுத்துக் கட்டினயே.. அந்தத் துணிவு அன்றைக்கு எங்கேடி போயிருந்தது..? உன் அப்பா நம்ம மேரேஜ் சமயத்தில என் சித்தி சொன்ன பொய் வார்த்தைகளை அம்பலப் படுத்தலையா..? அதைப் போல நீயும் அவங்களோட பொய்களை அம்பலப் படுத்துவாய்ன்னுதானே உன்னிடம் நான் கேள்வி கேட்டேன்..?"

'என்னது..?'

ஊர்மிளாவின் புருவங்கள் சுருங்கின.. இதில் இப்படியும் ஒரு கோணம் இருக்கக்கூடும் என்று அவள் நினைத்துப் பார்க்கவில்லையே..

"என்னடி முழிக்கற..? அந்தச் சமயத்தில உங்க அப்பாம்மாவை அருணும், அர்ச்சனாவும் சாப்பிடக் கூப்பிட்டும் அவங்க சாப்பிட வர மாட்டேன்னு சொல்லிட்டாங்கன்னு என் சித்தி புளுகு மூட்டையை அவிழ்த்து விட்டாங்க. நான் என்ன செய்தேன்..? அவங்க முன்னாடியே அருணிடமும், அர்ச்சனாவிடமும் விசாரித்து சித்தியின் மூக்கை உடைத்தேனா இல்லையா..? அதைப் போலதானே உன்னிடமும் விசாரித்தேன்..?"

https://t.me/tamilpdfebooks

இல்லை என்று ஊர்மிளாவால் சொல்ல முடியவில்லைதான்.. ஆனால்.. அவள் தரப்பில் இருந்த நியாயங்கள் அவளை ஊமையாக்கி வைத்தன..

"என் கேள்விக்கு நீ பதில் சொல்லியிருக்கனும்டி.. அப்பத் தெரிந்திருக்கும்.. அவங்களுக்கு நான் எந்த அளவுக்கு பனிஷ்மெண்ட் கொடுத்திருப்பேன்னு.. அவங்க வாழ்க்கையிலே மறக்க முடியாத அளவிற்கு பனிஷ் பண்ணியிருப்பேன்.. நீ சொல்லலையே.. பதிலையும் சொல்லலை.. என் மகன் உன் வயிற்றில் இருக்கிறான்ங்கிற விவரத்தையும் சொல்லலை.. உன்னை உயிருக்குயிராய் காதலிச்சவனை பனிஷ் பண்ணிட்டு விலகிப் போயிட்டேயேடி.. உன் மனசு என்ன கல்லா..? அதில ஈரமே இல்லையா..? நீ ராட்சசிடி.. மனுஷியே இல்லை.."

அவனது வேகமான பேச்சில் விழியுயர்த்தி அவனைப் பார்த்த ஊர்மிளாவின் தோற்றம் அவனை வசீகரித்தது.. அவளைக் கட்டி அணைத்து அந்த வசீகரத்தை உணர்த்த முடியாதவனாக மனதுக்குள் அவன் பொருமினான்..

இவள்.. அழகான ராட்சசி..!'

https://t.me/tamilpdfebooks

81

உன் மனதில் முள் தைத்தால்..
என் மனதை வலிக்க வைக்கும்
அழகான ராட்சசி நீ....

காலிங்பெல்லின் ஒற்றை மணியோசையால் கதவைத் திறந்து விட்டாள் பல்லவி.. உள்ளே வந்த அகல்யாவின் முகத்தில் படிந்திருந்த கருமையை ஆசை தீர பார்த்தாள்.. இதற்குத்தானே பல்லவி இத்தனை நாளாக தவம் கிடந்தாள்..!

அகல்யாவின் சிவந்த முகம் கருக்க வேண்டும்.. அதை ஆசைதீர பல்லவி பார்க்க வேண்டும்.. பல்லவியின் நீண்டநாள் கனவல்லவா அது..?

ரம்யா வீட்டிற்கு வரப் போவதாக.. பல்லவியிடம் செல்போனில் சொல்லியிருந்தாள்.. ஊர்மிளாவிடம் விடை பெற்றவள்.. அகல்யாவை இடைவெளி விட்டுப் பின் தொடர்ந்தபடி.. நடந்த அனைத்தையும் பல்லவியிடம் பிட்டுப்பிட்டு வைத்து விட்டாள்..

"இனியும் நான் அவங்க வீட்டில இருக்கிறது வேஸ்டும்மா.. ஏற்கனெவே நரேந்திரனுக்கு இரண்டாம் மனைவியாக போக வேணுமான்னு மனசுக்குள்ள கேள்வி

https://t.me/tamilpdfebooks

இருந்துச்சு.. பெங்களூர் வீட்டில் இந்த இரண்டு வருசமா அவன் பண்ணின டீஸிங்கில போடா.. நீயாச்சு.. உன் பணமாச்சுன்னு கிளம்பி வந்துரனும்னு நிறைய நாள் ஆவேசப்பட்டிருக்கிறேன்.. உங்களைப் பாடாய் படுத்தின என் அத்தையம்மாளை ஒரு கை பார்த்து விடனும்னுதான் பல்லைக் கடிச்சுக்கிட்டு பொறுமையா இருந்தேன்.. அந்தப் பொறுமைக்கு கை மேல பலன் கிடைச்சிருச்சும்மா.. இனி நான் நிம்மதியா நம்ம வீட்டுக்கு வந்திரலாம்..”

“நிஜமாத்தான் சொல்கிறயா ரம்யா..?”

“ஆமாம்மா.. சும்மாவே அந்த நரேந்திரன் பெண்டாட்டி.. பெண்டாட்டின்னு உருகித் தள்ளுவான்.. இந்த லட்சணத்தில இவனுக்கு குழந்தைவேற இருக்கு.. இனிப் பெண்டாட்டியை விட்டுப் பிரிவானா..? பசை போல ஒட்டிக்குவான்.. நல்ல மனுசங்க அப்படித்தான் இருப்பாங்கம்மா..”

“உங்க அப்பாவும் நல்ல மனுசர்தான் ரம்யா.. அந்த அகல்யாதான் மனசெல்லாம் விசத்தை வைச்சிருக்கிற மனுஷி...”

“அப்பா ஏம்மா அவங்க சொன்னதைக் கேட்டிருக்கனும்..?”

“குற்ற உணர்ச்சி..! அக்காவுக்கு முதலில் தான் கல்யாணம் பண்ணிக்கிட்டோமேங்கிற குற்ற உணர்ச்சி.. எனக்கும் அது இருந்துச்சு ரம்யா.. அந்தப் பொம்பளை படுத்தின பாட்டில அது ஓடியே போயிருச்சு..”

https://t.me/tamilpdfebooks

“இப்ப இந்த அத்தைகாரம்மா ஊர்மிளாவோட வீட்டை விட்டு ஓடி வந்துக்கிட்டு இருக்கு.. என்ன ஓட்டம்ங்கறிங்க.. இந்த ஓட்டத்தை ஒலிம்பிக்கில ஓடினா.. நிச்சயமா அத்தைக்குத்தான் தங்கப் பதக்கத்தைக் கொடுப்பாங்க.. அப்படி ஒரு ஓட்டம்மா..”

“ஆஹா..! அந்த கண்கொள்ளாக் காட்சியை நான் காணாமல் போயிட்டேனே..”

“நான் கண்டுக்கிட்டு இருக்கேனே.. வீட்டுக்கு வந்து விலாவாரியாய் ‘லைவ் ஷோ’ வைப் போல பிலிம் போட்டுக் காட்டிவிட மாட்டேனா..?”

“வா.. வா.. உனக்காக காத்திருக்கேன்..”

“நீங்க காத்திருக்கீங்க.. இந்த அத்தை என்னைத் திரும்பவும் பெங்களூருக்கு கடத்திக்கிட்டுப் போக திட்டம் போடுது.. என்னவொரு கான்பிடென்ஸ்..!”

“அதுக்கு கான்பிடென்ஸ் இருக்கிறதுக்கென்ன.. ஒன்றுமேயில்லாத பிரச்னையை ஊதிப் பெரிசு பண்ணி.. புருசனையும், பெண்டாட்டியையும் நாலு வருசமா கண்ணில பாக்க விடாம பிரிச்சு வைச்சிருந்த மகராசியில்ல அது.. அந்தவகையில நான் பரவாயில்லை போல ரம்யா.. உன் அப்பாவின் கண்முன்னால என்னை நடமாடவாவது விட்டு வைத்ததே..”

“என்ன ஒரு வக்கிரபுத்தி இந்த அத்தையம்மாளுக்கு..”

ரம்யா வெறுப்புடன் சொன்னாள்.. இப்படிப்பட்ட புத்தியை படைத்திருப்பவளுடன் ஒரே வீட்டில் இரண்டு

https://t.me/tamilpdfebooks

வருடங்களாக தங்கியிருந்த பாவத்தை எந்த கங்கையில் போய் கரைத்து விடுவது என்று கேட்டாள்..

"நாட்டுல ஓடற அனைத்து தண்ணியும் கங்கையின் அம்சம்தான்.. நீ நம்ம வீட்டுக்கு வா.. குழாயடியில நின்றுக் குளிச்சா.. எல்லாப் பாவமும் கரைஞ்சு ஓடிரும்.." பல்லவி வழி சொன்னாள்..

"இந்த அத்தை என்னை பெங்களுருக்கு இழுத்துட்டுப் போகனும்ன்னுல்ல கனவு கண்டுக்கிட்டு இருக்குது..? பேசாம ஒரு ஆட்டோவைப் பிடிச்சு நான் வந்திரவா..?" ரம்யா யோசனையுடன் கேட்டாள்..

"வேணாம்.. வேணாம்.. அப்படி நீ வந்திட்டா.. அந்தம்மாவோட அரண்டு போன முகத்தை எப்படி நான் பார்ப்பேன்..? அதைக் கையோடு இழுத்துக்கிட்டு நீ வீடுவந்து சேர நான் வழி பண்றேன்..."

"அப்படிங்கறிங்க..?"

"ஆமாங்கிறேன்.. இந்த பல்லவி யாருன்னு நீ பார்க்கப்போகிற.."

"என்னைப் பெத்த அம்மாதானே நீங்க..? இல்லை.. அவங்களோட குளோனிங்கா..? இன்னும் பல்லவி யாருன்னு நான் பார்த்ததே இல்லையா..?"

மகளின் கேள்வியில் மனம் விட்டுச் சிரித்தாள் பல்லவி.. சேர்ந்து சிரித்த அந்த தாய், மகள் இருவரின் மனதிலும் நிறைவிருந்தது..

https://t.me/tamilpdfebooks

"இத்தனை துணிச்சலா பேசற அந்த ஊர்மிளா எதுக்காகடி இந்த அகல்யாவுக்கு பயந்துக்கிட்டு வீட்டை விட்டு வெளியில போனா..?"

"எனக்கென்னவோ அவ பயந்துக்கிட்டு போயிருக்க மாட்டான்னு தோணுதும்மா.. நம்ம அத்தைதான் ஏதாவது குறுக்குவேலை பண்ணியிருக்கனும்.. இவளைப் பார்த்தால் நல்லவளைப் போல தெரியுதும்மா.."

"பின்னே..? உன் அத்தைக்கு ஒருத்தியைப் பிடிக்கலைன்னா அவ கட்டாயமா நல்லவளாத்தான் இருப்பா ரம்யா.. இதில் உனக்கென்ன சந்தேகம்..? பாவம் அந்தப் பொண்ணு.."

"இன்னைக்கு உங்க நாத்தனாரை பாவமாக்கிருச்சு.."

"செய்யட்டும்.. செய்யட்டும்.. இவளுக்கு இதுவும் வேணும்.. இதுக்கு மேலேயும் வேணும்.. அப்பத்தான் என் மனசு ஆறும்.."

"கட்டாயம் ஆறும்மா.. இத்தனை நடந்திருக்கு.. அந்த நரேந்திரன் உங்க நாத்தனாரை சும்மா விட்டிருவானா..? பெங்களூர் வீட்டிலேயே உங்க நாத்தனாரை மாடிப்பக்கம் வரக்கூடாதுன்னு சட்டம் போட்டு வைச்சிருந்தான்.. இதுதான் என்மகன்.. என் மகன்னு சொல்லிக்கும்.. அவன் பேருக்குத்தான் அம்மாம்பான்.. மத்தபடி பாசமாய் ஓர் பார்வைகூடப் பார்க்க மாட்டான்.. இந்த அத்தையைப் பத்தி அணுப்பிசகாமல் புரிஞ்சு வைச்சிருக்கிறவன் அவன்ம்மா.. அவன் பெண்டாட்டியை

https://t.me/tamilpdfebooks

வீடு தேடி வந்து நம்ம அத்தைகாரம்மா பேசிட்டு போயிருக்கிறதுக்கு சும்மா விட்டு வைப்பான்னா நினைக்கறிங்க..?"

"ஆஹா..! அப்படியொன்னு இருக்கில்ல..?"

"யெஸ்.. இது சிறுகதையில்லை.. தொடர்கதை.. அதோட முடிவு நிச்சயமா அகல்யாவுக்கு சுபமாயிருக்காது.."

"எனக்கு அதுதான் வேணும்.."

"எனக்கு நம்ம வீட்டுக்கு வரனும்.."

"அதைச் செய்ய நாணாச்சு.. நீயேன் கவலைப்படற.. உனக்கொன்னு தெரியுமா..? நரேந்திரனுக்கு மகன் இருக்கிறான்னு தெரிஞ்சவுடனே உங்கப்பா உன்னை இங்கே கொண்டு வந்து விட்டுவிடச் சொல்லிட்டாரு.." உற்சாகமாக சொன்னாள் பல்லவி..

"தெரியும்.." என்றாள் ரம்யா..

அவள் மனதில் சோர்வு வந்தது.. கடந்த காலத்தை திரும்பிப் பார்த்தாள்.. அகல்யாவின் முயற்சிக்கு அவள் துணையாக நின்றாளே.. அவளுக்கு நரேந்திரனின் மீது காதலில்லை.. அவனுடைய பணத்தின் மீதும் ஆசையில்லை.. அப்புறமும் எதற்காக இத்தகைய வேலைகளுக்கு துணை நின்றாள்..?

'எல்லாம் இந்த அத்தைகாரியாலே..'

அகல்யாவை வெறுப்புடன் பார்த்தாள் ரம்யா.. அதைப் பாசப்பார்வையாக நினைத்துக் கொண்டு அகல்யா

https://t.me/tamilpdfebooks

'ஈ'யென்று பல்லைக் காட்டினாள்.. பதிலுக்கு பல்லைக் காட்டாமல் முகத்தைத் திருப்பிக் கொண்ட ரம்யாவின் செய்கையில் முகம் கருத்தாள்.. அதுவரை ரம்யா வெளிப்படையாக அவளின் வெறுப்பைக் காட்டியதில்லை.

'குட்டிக்கு குளிர் விட்டுப் போயிருச்சா..'

"அத்தை.. ஊர்மிளாவுக்கு எதிரியாக இருக்கிறதுக்கும் ஒரு தகுதி வேணுமாம்.. அது உங்களிடம் இல்லையாம்.."

அகல்யாவின் மனது வன்மம் கொண்டது... பல்லவியை ஓட ஓட விரட்டிவள்.. பல்லவியின் மகள் முன்னால் குறுகி நிற்பதா..?

'எல்லாம் இந்த ஊர்மிளாக் கழுதையினாலே வந்தது..'

அகல்யாவின் மனம் உலைகலனாய் கொதித்தது.. பல்லவியின் மகளையெல்லாம் அகல்யாவை அலட்சிய மாகப் பார்க்க வைத்து விட்ட ஊர்மிளாவின் தீரத்தை.. எண்ணியெண்ணி அவள் கொதித்துக் கொண்டிருந்தாள்.. செல்போன் அடித்தது.. அந்தக் கொதிப்புடன் செல்போனை காதுக்குக் கொடுத்தவள்..

"யாரு..?" என்று அடிக்கப் போகிறவளைப் போல போனைக் கடிக்காத குறையாய் வினவினாள்..

"அண்ணி.." மறுமுனையில் பல்லவியின் குரலைக் கேட்டதும்..

"யாரு.. பல்லவியா..?" என்று குளிர்ச்சியானாள்..

"என்னங்கண்ணி.. கோபமாய் இருக்கறிங்களா..? அடிக்கிறதைப் போல பேசறிங்க.." நமட்டுச் சிரிப்புடன் பல்லவி வினவியதை அகல்யாவால் அறிய முடியவில்லை..

https://t.me/tamilpdfebooks

“ஹி.. ஹி.. உன் நம்பரைப் பார்க்கலை பல்லவி..” என்று வழிந்தாள்..

“இங்கே உங்க தம்பிக்கு உடம்பு சரியில்லை அண்ணி..” இனிப்பான அல்வாவை விழுங்கியபடி பல்லவி சந்தோசமாகச் சொன்னதை இப்போதும் அகல்யாவினால் அறிய முடியாமல் போனது..

“ஏன்..? அவனுக்கென்ன..?” என்று பதறிவிட்டாள்..

இருந்திருந்து அகல்யாவுக்கு ஆதரவாக.. அவள் எதைச் சொன்னாலும் காது கொடுத்துக் கேட்கும் ஒரே ஜீவன் தியாகராஜன் மட்டும்தான்.. காது கொடுத்து கேட்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் அகல்யா கேட்கும் உதவிகளை சிரமேற் கொண்டு முடிக்கும் சகோதர வாஞ்சை கொண்டவர்..

அந்த தியாகராஜனுக்கு உடல்நலம் சரியில்லையா..?

“ஆமாம் அண்ணி.. ஒரு வாரமா அவர் படுத்த படுக்கையா இருக்காரு..”

சுறுசுறுப்பாக வீட்டுக்குள் வந்து கொண்டிருந்த கணவரைப் பார்த்த வண்ணம் அயராமல் பொய் சொன்னாள் பல்லவி..

“என்னம்மா இப்படிச் சொல்ற..? ஹாஸ்பிடலுக்குப் போனீங்களா..?”

“அங்கேதான் அட்மிட் பண்ணியிருந்தோம் அண்ணி.. நேத்துத்தான் டிஸ்ஜார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்தோம்.. எங்கே

https://t.me/tamilpdfebooks

இவர்தான் ஆஸ்பிடல் அட்மாஸ்பியர் ஒத்துக்கலைன்னு அடம் பிடிக்கிறாரே.. அதனால வீட்டில இருந்தபடி ட்ரீட் மெண்டை கண்டினியு பண்ணுகிறோம்ன்னு சொல்லி அழைச்சுக்கிட்டு வந்துட்டோம்.."

"போனவாரம் கூட அவனிடம் பேசினேனே.." நம்பாத குரலில் கேட்பாள் அகல்யா..

'உன் ஞாபக சக்தியில் இடி விழ..' பல்லைக் கடித்தாள் பல்லவி..

"அது போனவாரம் அண்ணி.. இது இந்த வாரம்.."

பல்லவியா பின் வாங்குவாள்..? அவள்தான் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க தூண்டிலை வீசி விட்டாளே..

அகல்யாவின் குழம்பிய மனதால் பல்லவியின் பொய் ஆரத்தைக் கண்டு கொள்ள முடியவில்லை.. தியாகராஜனுக்கு உடம்புக்கு முடியவில்லை என்ற செய்தியைக் கேட்டதில் அவள் ஆடிப்போயிருந்தாள்..

"நாங்க உடனே நம்ம வீட்டுக்கு வருகிறோம் பல்லவி.." என்று பரபரத்தாள்..

'நம்ம வீடா..? இது என் வீடு..' பல்லவி எரிச்சல் அடைந்தாள்..

"உடனே வர்றீங்கன்னா.. எப்படிண்ணி..? உங்க வீடு பெங்களூரிலில்ல இருக்கு..?" மறக்காமல் அக்லயாவின் வீடு சென்னையில் இல்லை.. அது பெங்களூரில் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்தியபடி அறியாத வளைப் போல வினவி வைத்தாள் பல்லவி..

https://t.me/tamilpdfebooks

அகல்யாவுக்கு இருந்த மன உளைச்சலில் அவள் அதை கண்டு கொள்ளவில்லை..

"சென்னையிலதான் நாங்களும் இருக்கிறோம் பல்லவி.." என்றாள்..

"சென்னையிலா..?" வரவழைத்துக் கொண்ட ஆச்சரியத்துடன் கேட்டாள் பல்லவி..

"ஆமாம் பல்லவி, சென்னையிலதான் இருக்கிறோம்.."

"இருக்கிறோம்ன்னா..? உங்ககூட யார் இருக்கிறாங்க அண்ணி..?" பல்லவி மீண்டும் ஒன்றும் அறியாதவளாக ஆனாள்..

"நானும், ரம்யாவும் வந்திருக்கோம் பல்லவி.."

"என்னது..? ரம்யா உங்ககூட இருக்காளா..? இப்பத்தான் அவளுக்குப் போன் போட்டேன் அண்ணி.. நம்பர் பிஸின்னு வந்துச்சு.. சரி.. முதல்ல உங்களுக்கு விவரத்தைச் சொல்லலாம்ன்னு நினைச்சேன்.." பல்லவி கதை பிணைந்தாள்..

"யார் கூடவோ பேசிக்கிட்டு இருந்தா.. பிரண்டா இருக்கலாம்.."

"இருக்கும்.. இருக்கும்.. நீங்க வர்றப்ப ரம்யாவை கையோட கூப்பிட்டுக்கிட்டு வந்துருங்க அண்ணி.. உங்க தம்பி மகள் பெயரைச் சொல்லியே புலம்பறாரு.."

பல்லவி போனில் பேசிக் கொண்டிருக்க.. உடை மாற்றிக் கொண்டு வந்து உட்கார்ந்த தியாகராஜன் புருவங்களை உயர்த்தினார்..

https://t.me/tamilpdfebooks

"மகள் பெயரைச் சொல்லிப் புலம்பறானா..? என் தம்பிக்கு என் நினைவே இல்லையா..?" அகல்யா அங்கலாய்த்தாள்..

'நீ அதிலேயே இரு..' பல்லவியால் தாங்க முடியவில்லை..

பெற்ற மகளின் பெயரைக் கூட தியாகராஜன் சொல்லக் கூடாதா..? அகல்யாவின் பெயரை மட்டும்தான் சொல்ல வேண்டுமா..?

'கொடுமை..' அவளுக்கு சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது..

எதிரே அமர்ந்து அவள் முகத்தின் உணர்வுக் கலவைகளை விசித்திரமாகப் பார்த்துக் கொண்டிருந்த தியாகராஜனை முறைத்தாள்..

'இவரை கட்டிக்கிட்டதுக்குப் பதில் சாமியாரிணியாய் போயிருக்கலாம்..'

பல்லவிக்கு அருள் வாக்குச் சொல்ல ஆசை வந்தது..

"உங்களைத்தான் முதலில் நினைச்சாரு அண்ணி.. உங்க பேரைச் சொல்லித்தான் புலம்பினாரு.. அதுக்கப்புறம் தான் ரம்யா பேரைச் சொன்னாரு.." அகல்யாவின் பொறாமை கொண்டு எரிந்த வயிற்றில் பொய்யெனும் பாலை வார்த்தாள்..

"அதானே.. பார்த்தேன்.." அகல்யா நிம்மதியானாள்..

"என் தம்பிக்கு நான்தானே உயர்த்தி.."

https://t.me/tamilpdfebooks

'நினைச்சுக்கிட்டே இரு..'

பல்லவி கோபத்துடன் போனை அணைத்து சோபாவில் விசிறினாள்.. அதை எடுத்து வைத்த தியாகராஜன்..

"ஐயாயிரம் ரூபாய் போன்டி.." என்றார்..

"அதை நீங்க கொடுக்கலை.. என் மகன் கொடுத்தான்.." என்றாள் பல்லவி..

தியாகராஜனின் முகம் கருத்தது.. குழந்தைகள் வளர.. வளர.. தான் தனிமைப்பட்டு.. பல்லவி பலப்பட்டு விட்டாளோ என்று அவர் சஞ்சலம் கொண்டார்.. எந்தத் தேவையாக இருந்தாலும் அவரிடம் சொல்லாமல் ராம்குமாரிடம் சொல்லி வாங்கிக் கொள்ளும் பல்லவியின் சமீப கால நடவடிக்கை அவரைக் காயப்படுத்தியது.. ரம்யா எப்போதுமே அவரிடம் ஒட்ட மாட்டாள்.. பல்லவியின் சேலை முந்தானையைப் பிடித்தபடி தாயை பின் தொடர்வாள்..

"உன்னை யாருடி அவனிடம் கேட்கச் சொன்னது..? என்கிட்டக் கேட்டா நான் வாங்கிக் கொடுக்க மாட்டேனா..?" என்று ஒரு கணவனின் கோபத்தோடு கேட்டார் தியாகராஜன்..

"நீங்கதானே..? கேட்டவுடனே வாங்கிக் கொடுத் துட்டுத்தானே மறுவேலை பார்ப்பீங்க..?" ஏளனமாக சொன்னாள் பல்லவி..

மனைவியின் ஏளனம் தியாகராஜனின் மனதில் தைத்தது..

https://t.me/tamilpdfebooks

"வாங்கிக் கொடுக்க வக்கில்லாதவன்னு சொல்கிறயா..?" ஒரு மாதிரியான குரலில் வினவினார்..

"வக்கெல்லாம் இருக்கு.. மனசுதான் இல்லை.." விட்டேற்றியாக பதில் சொன்னாள் பல்லவி..

"புரியலை.." தீர்க்கமாக அவளைப் பார்த்தார் தியாகராஜன்..

"உங்களுக்கா புரியாது..? நான் உங்களிடம் கேட்டிருப்பேன்தான்.. நீங்க உங்க அக்காகிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு வாங்கிக் கொடுக்கிறேன்னு சொல்லியிருப்பீங்க.." நொடித்தாள் பல்லவி..

தியாகராஜனுக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை எதிர் கொள்ள நேரிடும் போது.. இயலாமையுடன் அவர் தன்னைத்தானே நொந்து கொள்கிறார்.. தமக்கை மீதா அவரின் பாசம் எந்த அளவுக்கு அவரை கையாலாகாத கணவனாக மாற்றியிருக்கிறது என்ற கடந்த கால வரலாற்றில் அவர் இது போ.ன்ற பல தருணங்களைத் தினந்தோறும் எதிர்கொள்ள வேண்டி வருகிறது என்பதில் அவர் மனம் துன்பம் கொண்டது..

"யாரிடம் பேசிக்கிட்டு இருந்த..? ஒரு வாரமா படுத்த படுக்கையா இருக்கிறார்ன்னு சொன்னயே.. யார் படுத்த படுக்கையா இருக்கிறது..?"

பேச்சை மாற்ற விரும்பி அவர் கேட்டார்.. பல்லவி அவர் முகத்தைப் பார்க்காமல் உலர்ந்திருந்த துணிகளை மடித்து வைத்தபடி அலட்டிக் கொள்ளாமல் பதில் சொன்னாள்..

https://t.me/tamilpdfebooks

"உங்க அக்காகிட்டத்தான் பேசிக்கிட்டு இருந்தேன்.. ஒருவாரமா படுத்த படுக்கையா நீங்க இருக்கறிங்கன்னு அவங்ககிட்டச் சொல்லிக்கிட்டிருந்தேன்."

"என்னது..?" அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது..

"ஏண்டி.. புருசனைப் பிடிக்கலைன்னா அவனை படுத்த படுக்கையாய் ஆக்கி விடுவயா..?" கோபத்தில் அவருக்கு மூச்சிரைத்தது..

"பிடிக்காமல்தான் உங்க அக்கா பண்ணின அத்தனை அட்டூழியங்களையும் சகித்துக்கிட்டு உங்ககூட வாழ்ந்து.. ஒன்றுக்கு இரண்டாய் பிள்ளைகளைப் பெற்றுக் கொடுத்தேனா..?"

பல்லவியின் கோபத்தில் அவர் முகத்தில் அசடு வழிந்தது.. என்றுமே மனைவி.. மனைவிதான் என்று வெற்றிகரமாக தோல்வியைத் தழுவினார் அவர்..

82

நீ சிரிக்க.. நான் சிரித்தும்..
சிரிப்பை மறந்து முறைக்கின்ற..
அழகான ராட்சசி நீ....

தியாகராஜன் மனைவியைப் பார்த்தார்.. அவர் முகத்தைப் பார்க்காமல் கோபத்துடன் துணிகளை மடித்துக்

https://t.me/tamilpdfebooks

கொண்டிருந்த பல்லவியிடம் மயங்கிப் போனார்.. அவளே சொன்னதைப் போல.. அவருக்காக அவள் பொறுத்துக் கொண்ட துயரங்களை நினைத்துப் பார்த்தார்..

"ஹி.. ஹி.. பல்லவி.." என்றார்..

"பல்லவிங்கிற பெயரை சொல்லிப் பார்த்துக் கறிங்களா..? இல்லைன்னா பெண்டாட்டியோட பெயர் மறந்து போகுமில்ல..?" கறாராக வினவினாள் பல்லவி..

"இல்லைடி பல்லவி.."

"என்ன இல்லை..?"

"உன் பெயரை நான் மறக்கலை.."

"ரொம்ப சந்தோசம்.."

"உன்னை என்னால மறக்க முடியுமாடி.."

"நம்பிட்டேன்.."

"பல்லவி.. ஐ லவ் யு.."

பல்லவிக்கு சிரிப்பு வந்தது.. மறைத்துக் கொண்டாள். சில வருடங்களாகவே தியாகராஜன் இதுபோன்ற அசட்டுத் தனங்களை செய்ய ஆரம்பித்திருந்தார்.. மிகச் சரியாக அது எந்த வருடத்தில் ஆரம்பித்தது என்பதை நினைவு கூர்ந்தாள் பல்லவி..

அவர்களின் மகன் ராம்குமார்.. கல்லூரியில் அடியெடுத்து வைத்த முதல் வருடத்திலிருந்து ஆரம்பித்தது அது..

https://t.me/tamilpdfebooks

"அப்படியா சார்.. இதை மறுக்காம நினைவில வைச்சுக்கங்க.." முகம் மாறாமல் சொன்னாள்..

"நான் ஏண்டி மறக்கப் போறேன்..?"

"இதை உங்க அக்கா இப்ப வருவாங்கள்ல.. அப்ப நினைவு படுத்திக்கங்க.."

"அக்காவை நீதான் வரச் சொன்னியா..?"

"வினையை நானா போன் போட்டு வரச் சொல்வேனா..? அதுவா வந்திருக்குது.. வந்த வினை தம்பியைத் தேடிவந்து தம்பி மகளை ஒப்படைக்கனும்ங்கிற நினைவில்லாம அந்த நரேந்திரனோட பெண்டாட்டிக்கிட்ட சண்டை போட தம்பி மகளை கூப்பிட்டுக்கிட்டுப் போயிருக்குது.."

"என்னடி சொல்ற..?"

தியாகராஜனுக்கு கோபம் வந்து விட்டது.. அவரிடம் சில நெறிமுறைகள் உண்டு.. ஊர்மிளா நரேந்திரனை விட்டுப் பிரிந்து ஒரு வருடம் ஆனபின்னால்.. நரேந்திரன் ஊர்மிளாவை விவாகரத்து செய்து விடுவான் என்று அகல்யா அடித்துச் சொன்னதினால்.. வேறு ஒரு பெண் நரேந்திரனுக்கு மனைவியாக வந்து விட்டால் அக்காவின் நிலைமை என்ன ஆவது என்று இரண்டாம் தாரமாக மகளை நரேந்திரனுக்கு மணம் முடிக்கும் யோசனைக்கு அவர் சம்மதித்தார்..

மற்றபடி.. நரேந்திரனிடமிருந்து ஊர்மிளாவைப் பிரித்து.. அவளை வாழாவெட்டியாக்கி விட்டு.. அந்த

https://t.me/tamilpdfebooks

இடத்திற்கு மகளைக் கொண்டு வரவேண்டுமென்ற கெட்ட எண்ணமெல்லாம் அவருக்கு துளிக்கூட இருந்ததில்லை..

"இந்தக்காதான் சொன்ன பேச்சைக் கேட்காது.. என்னவோ செய்து தொலைன்னு விட்டுட்டேன்... இது எப்படி என் மகளை ஊர்மிளா வீட்டுக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போகலாம்..?"

"அதை நான் கேட்க முடியுமா..?"

"ஏய்ய்.. ரம்யா உன் மகள்டி.."

"இப்ப இப்படிப் பேசுவீங்க.. அக்கா முன்னாலே என் மகள்ம்பீங்க.. தேவையா எனக்கு..? பத்து மாதம் வயித்திலே சுமந்து பெத்தது நானு.. அக்கா கேட்டுக்கிட்டதும் கூடப் போன்னு என்னவோ விசுவாமித்திர முனிவர்கூட ராமரை தசரதன் அனுப்பி வைச்சதைப் போல ரம்யாவை அனுப்பி வைச்சது நீங்க.. விசுவாமித்திர முனிவர் தாடகையை விரட்ட ராமரை அழைத்துக்கிட்டுப் போனார்.. நீங்க என்னடான்னா வாழவந்த ஒரு பெண்ணை விரட்ட உங்க அக்கா கேட்டுக்கிட்டாங்கன்னு உங்க மகளை அனுப்பி வைச்சீங்க.."

தியாகராஜன் என்னவோ அதை அன்று மறுத்தார் தான்.. பல்லவிதான் அகல்யாவை பழிவாங்க இதைவிடச் சிறந்த வாய்ப்பு கிடைக்காது என்று ரம்யாவை அனுப்பி வைக்க தூண்டி விட்டாள்..

அதை மிக வசதியாக பல்லவி மறந்து போனது மல்லாமல் தியாகராஜனையும் மறக்க வைத்தாள்..

https://t.me/tamilpdfebooks

அகல்யாவைப் போன்ற ஒரு நாத்தனார் அமைந்து விட்ட வன்கொடுமையில்.. எலும்புக்குக் கூடத் தீங்கு நினைக்காத குணம் படைத்த பல்லவியைப் போன்ற பெண் எப்படியெல்லாம் மாற வேண்டியிருக்கிறது..?

"இப்ப என்னதாண்டி ஆச்சு.."

"ஊம்..? ஊர்மிளா உங்க அக்காவை விரட்டி விட்டுட்டா.."

"என்னது..? விரட்டி விட்டுட்டாளா..?"

"பின்னே..? வெற்றிலை பாக்கு வைத்து வீட்டுக்குள்ளே அழைத்து விருந்து சமைத்துப் போடுவாளா..? உங்க அக்கா என்ன மூன்றரை வருசம் கழித்து வீட்டுக்கு வாழவந்த மூத்த மருமகளையும், பேரனையும் பார்த்து விட்டு வரவா போனாங்க..? அவங்களை விரட்டி விடப் போனாங்க.. அவ பதிலுக்கு இவங்களை விரட்டி விட்டுட்டா.. இதில பெரிய கொடுமை என்னன்னா.. அந்த இடத்திலே என் மகளையும் உங்க அக்கா கூட்டுச் சேர்த்து நிறுத்தி வைத்திருக்காங்க.."

"அட்டூழியம்.."

"இதை உங்க அக்காகிட்ட யார் சொல்கிறது..? ரம்யா கல்யாணம் ஆக வேண்டிய பெண்.. அவளைக் கொண்டு போய் ஊர்மிளாவின் முன்னால் நிறுத்தி.. இவதான் உன் புருசனைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறவன்னு உங்க அக்கா சொல்லலாமா..? அந்தப் பெண்ணோட மனது என்ன பாடுபட்டிருக்கும்..? அது நம்ம பெண்ணோட வாழ்வை பாதிக்காதா..?"

https://t.me/tamilpdfebooks

தியாகராஜன் கொதித்துப் போய் விட்டார்.. அதை திருப்தியுடன் பார்த்துக் கொண்டாள் பல்லவி. அவரின் கைபிடித்து அந்த வீட்டுக்குள் அவரின் மனைவியாக அவள் காலடி வைத்து வாழ ஆரம்பித்த இத்தனை வருடங்களில் இப்போதுதான் முதன்முதலாக அகல்யாவுக்கு எதிராக பேச்சை அவள் பேச அவர் காதுகொடுத்து கேட்கிறார்..

'இது போதும்..'

பல்லவியின் மனதில் சாந்தம் திரும்பியது.. அவள் பழைய பல்லவியாக மாறினாள்... வாசலில் காலிங் பெல்லின் ஓசை கேட்டது.. கணவரின் முகம் பார்த்தாள்..

"உங்க அக்காதான் வந்திருக்காங்கன்னு நினைக்கிறேன்.."

"கதவைத் திற.."

பல்லவி கதவைத் திறந்தாள்.. வாசலில் அகல்யா நின்றிருந்தாள்.. அவள் முகத்தில் படிந்திருந்த கருமையையும்.. சுருக்கங்களையும் பார்த்தவள் லேசான உதட்டுச் சுழிப்போடு அகல்யாவுக்குப் பின்னால் நின்றிருந்த ரம்யாவைப் பார்த்தாள்.. அவள் வலது கையின் கட்டை விரலை உயர்த்திக் காண்பித்தாள்..

"உள்ளே போங்கண்ணி.. உங்க தம்பி உங்களுக்காகத்தான் காத்திருக்கிறார்.." மர்மச் சிரிப்புடன் சொன்னாள் பல்லவி..

"நான் வர்றேன்னு அவன்கிட்டச் சொல்லியிருப்ப.. அக்கா வருகிறான்னதும் படுத்த படுக்கையை கிடந்த என்

https://t.me/tamilpdfebooks

தம்பி எழுந்திருச்சு ஹாலில் வந்து உட்கார்ந்திருப்பான்..” பெருமையுடன் உள்ளே போனாள் அகல்யா..

‘போடி போ.. உன் தம்பி உனக்காகத்தான் காத்திருக்கிறார்..’

அகல்யாவின் முதுகைப் பார்த்துக் கருவினாள் பல்லவி.. தாயை அணைத்துக் கொண்டாள் ரம்யா..

“என்னடி..” என்றாள் பல்லவி..

“ஆடாமல் ஜெயிச்சோமம்மா..
பாடாமல் ஜெயிச்சோமம்மா..
ஓடாமல் ரன்னெடுத்தோம்..
சும்ம உக்காந்தே விண்ணெடுப்போம்..”

வாய்விட்டுப் பாடினாள் ரம்யா.. அவளுடன் சேர்ந்து சிரித்த பல்லவியின் மனதில் மகள் வீட்டுக்குத் திரும்பி விட்ட மன அமைதி வந்திருந்தது.. அவள் மகளை அணைத்தபடி வீட்டுக்குள் போனாள்..

கடுமை விரவிய முகத்துடன் தமக்கையை முறைத்துக் கொண்டிருந்த தியாகராஜன் திரும்பிப் பார்த்தார்.. மகளை அணைத்தபடி உள்ளே வந்த பல்லவியின் தோற்றத்தில் அவர் மனம் கனிந்தது.. சேய் பறவையை தாய் பறவை சிறகுக்கடியில் காத்து நிற்பதைப் போல அக்காட்சி தோன்றியது..

‘என் குடும்பம்.. என் பெண்டாட்டி.. என் மகன்.. என் மகள்ன்னு நினைக்காமல் அக்கா மேலே இருந்த பாசத்திலே என்ன காரியம் செய்யத் துணிஞ்சேன்..?’

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளாவின் வீட்டில் நடந்த நிகழ்வுகளினால் மகள் பயந்து போயிருக்கிறாள் என்று பல்லவி அவரிடம் சமிக்ஞையில் கூறினாள்.. தியாகராஜன் கண் சிவந்தார்..

அதை அறியாத அகல்யா தம்பியிடம் நலம் விசாரிக்க ஆரம்பித்தாள்.. நமட்டுச் சிரிப்புடன் பல்லவியும், ரம்யாவும் அதை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார்கள்..

“எப்படிடா இருக்க தியாகு..?” அகல்யா உருகினாள்..

“இன்னும் உயிர் போகலை..” பல்லைக் கடித்தார் தியாகராஜன்..

“என்னடா தம்பி இப்படிச் சொல்கிற..?”

“வேற எப்படிச் சொல்லச் சொல்கிற..?”

“கல்லுக்குண்டு போல இருந்தியேடா..”

“என்ன செய்கிறது..? உன் கூடப் பிறந்திட்டேனில்ல.. கல்லுக்குண்டெல்லாம்.. உப்புக் கரைசலைப் போல கரைஞ்சுதானே ஆகனும்..?”

அப்போதுதான் பேச்சு வார்த்தை போகும் திசையை அறிந்தாள் அகல்யா.. துணுக்குற்றவளாக..

“தியாகு..?” என்றாள்..

“ஏன்க்கா.. நான் உனக்கு என்ன கெடுதல் பண்ணினேன்..?” காட்டமாக கேட்டார் தியாகராஜன்..

“என் கூடப் பிறந்த ஒற்றை உடன்பிறப்பு நீ.. உன்னை விட்டா எனக்கு யாருடா இருக்கிறா..? தம்பியே

https://t.me/tamilpdfebooks

உலகம்ன்னு இருக்கிற அக்காவை தங்கத்தட்டில வைச்சுத் தாங்கலைன்னாலும்.. தரையில விடாம தாங்கற தங்கக் கம்பியாச்சேப்பா நீ.. என்னைப் பெத்தவங்களும் உயிரோடு இல்லை.. என்னைக் கட்டிக்கிட்டவரும் உயிரோடு இல்லை.. பெத்த பிள்ளைகளும் சொல்பேச்சுக் கேட்கிறதில்லை... நான் வளர்த்த பிள்ளையும் கைவிட்டுட்டு.. எவளோ ஒருத்தி பின்னாலே ஓடிட்டான்.. உன் ஒருத்தனாலேதானேடா நான் இந்த மண்ணில இன்னமும் உயிரோடு இருக்கிறேன்..? நீயில்லைன்னா என்னைக்கோ இந்த உலகத்தைவிட்டுப் போயிருக்க மாட்டேனா..?"

அகல்யாவின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் தரைகளில் 'இனி அவ்வளவுதான்..' என்று அவநம்பிக்கை கொண்டாள் பல்லவி..

ரம்யாவும் தலையை ஆட்டி அதை ஆமோதித்தாள்..

"இந்தப் பொம்பளை நடிகையர் திலகம்டி.. பாசப் பயிருக்கு தண்ணியை ஊத்த ஆரம்பிச்சிருச்சு.. உங்கப்பா எரிமலையாய் வெடிக்கப் போகிறார்ன்னு நினைச்சேன்.. இந்தம்மா.. சுனாமியப் போல பாசத்தில பொங்கி எரிமலையையும் குளிர வைச்சிருச்சே.." பல்லவி தலையில் கை வைத்தாள்..

"அஃதே..." என்றாள் ரம்யா..

அவர்கள் இருவரின் கணிப்புப்படி எரிமலை ஒன்றும் குளிர்ந்து விடவில்லை.. மாறாக.. அது கனல் கக்கும் விழிகளுடன் பாசப்பறவையை பார்த்தது..

https://t.me/tamilpdfebooks

“நீ வளர்த்த பிள்ளையா..? யாருக்கா அது..?” என்று கேட்டும் வைத்தது..

‘ஆஹா..’ பல்லவி ஆனந்தத்துடன் ரம்யாவின் விரலுடன் விரல் கோர்த்துக் கொண்டாள்..

தாயின் குழந்தைத்தனமான சந்தோசத்தைக் கண்ட ரம்யாவின் மனம் நெகிழ்ந்தது.. எந்த அளவுக்கு அவள் பாதிக்கப் பட்டிருந்தால்.. இப்படி சந்தோசப் படுவாள்..?

தியாகராஜன் கேட்டு வைத்த கேள்வியில் அகல்யாவின் முகம் மாறிப் போனது..

“என்னடா தம்பி இப்படிக் கேட்டுட்ட..? நீயே இப்படிக் கேட்டா என் மனசு தாங்குமா..?” நியாயம் கேட்டாள்..

“எல்லாம் தாங்கும்..” இரக்கமில்லாமல் சொல்லி விட்டார் தியாகராஜன்..

“நரேந்திரன் நான் பெற்ற பிள்ளையா இல்லாம போனாலும் நான் வளர்த்த பிள்ளை இல்லையா..?”

“இல்லை.. அவனை நீயா வளர்த்த..? அவன்தான் உன்னையும், உன் பிள்ளைகளையும் வளர்த்தான்.. அவனை அவனோட அம்மாவும்.. அவங்களைப் பெத்த தாத்தா பாட்டியும் வளர்த்தாங்க..”

“தியாகு..”

“என்னவோ அவன் எவளோ ஒருத்தி பின்னாலே ஓடிட்டான்னு வாய் கூசாம சொல்கிறியே.. அது எவளோ ஒருத்தி இல்லை.. அவன் தாலிகட்டின பெண்டாட்டி..”

https://t.me/tamilpdfebooks

"நீயாடா இப்படிப் பேசற..?"

"ஏன்க்கா..? நான் பேசக்கூடாதா..? ஏன் இப்படிக் கேட்கிற...? உன் பேச்சைக் கேட்டுக்கிட்டு... என் பெண்டாட்டியை தள்ளி வைச்சேனே.. அதனால இப்படிக் கேட்கறியா...? நீ வந்து கண்ணைக் கசக்கியதும்... கல்யாணம் ஆக வேண்டிய என் மகளை உன் பின்னாலே அனுப்பி வைச்சேனே.. அந்த முட்டாள் தம்பி இப்ப இப்படி மாறிப் போயிட்டான்னு இந்தக் கேள்வியைக் கேட்கறியா..?"

தியாகராஜன் பேசப்பேச.. அகல்யாவின் முகத்தில் இருள் அதிகரித்தது.. அன்று விழித்த விழி சரியில்லை என்று நொந்து போனாள்.. விடிந்ததும் யார் முகத்தில் விழித்தோம் என்று அவள் யோசித்துப் பார்த்தபோது.. கண்ணாடியில் பார்த்துக் கொண்ட அவள் முகம் முன்னால் வந்து நின்று அச்சுறுத்தியது..

"நான் உனக்கு என்னக்கா தீங்கு பண்ணினேன்..? நரேந்திரன் பெண்டாட்டியைத் தேடி வந்திட்டான்.. குழந்தை, பெண்டாட்டின்னு தனிக்குடித்தனம் ஆரம்பிச் சுட்டான்னு தெரிஞ்சவுடனே என் மகளை என் வீட்டுக்கு அனுப்பி வைச்சிருன்னு சொன்னேனா இல்லையா..?"

"சொன்னேடா.."

"ஏன் நீ அதைச் செய்யலை..?"

"அது வந்துடா.."

"என்னத்தை வந்து போயின்னு ராகம் இழுக்கற..? நீ ஊர்மிளா வீட்டுக்குப் போயிருக்கிற.. சும்மாவும் போகாம

https://t.me/tamilpdfebooks

கூட என் மகளையும் கூப்பிட்டுக்கிட்டுப் போயிருக்க.. போனவ என் மகளைக் காட்டி.. இவளைத்தான் உன் புருசன் இரண்டாம் தாரமா கல்யாணம் பண்ணிக்கப் போகிறான்னு அந்தப் பொண்ணு ஊர்மிளாகிட்டச் சொல்லியிருக்க.. செய்யலாமா அக்கா..? தெரியாமத்தான் கேட்கிறேன்.. நீ பெத்த பொண்ணு அர்ச்சனாவைக் காண்பித்து பல்லவி இதைப் போல எதையாவது பேசி வைத்தா நீ சும்மாயிருப்பியா..?"

நெற்றியடியான கேள்வியை கேட்டு விட்டார் தியாகராஜன்.. பல்லவிக்கு தான் காண்பதும்.. கேட்பதும் நனவா.. இல்லை கனவா என்ற சந்தேகம் கிளம்பி விட்டது..

'என்ன கேள்வி கேட்டுட்டான்.. இவன் மகளும்.. என் மகளும் ஒன்னா..?' அகல்யாவின் முகம் பயங்கரமாக மாறிவிட்டது..

"நாக்கை அடக்கிப் பேசுடா.." என்று சீறிவிட்டாள்..

"உன் பொண்ண வெறும் பேச்சுக்கு சொன்னதுக்கே உனக்கு இவ்வளவு கோபம் வருதே... என் மகளை உண்மையாகவே நீ பேசி வைத்துட்டு வந்திருக்கிற.. இதுக்கு என்ன பதிலைச் சொல்லப் போகிற..?" நிதானமாக கேட்டார் தியாகராஜன்..

"என்ன பதிலைடா சொல்லனும்..? நான் கேட்டதும் உன் மகளை என்கூட அனுப்பி வைச்சியே.. அப்ப இதுக்கான பதிலை நீ கேட்டிருக்கனும்டா.. இப்ப வந்து

https://t.me/tamilpdfebooks

கேட்டா எப்படி பதிலைச் சொல்கிறது..? நல்லாக் கேட்டுக்க.. உன்னைப்போல நான் ஒன்னும் என் பெண்ணை இரண்டாம் தாரமா கட்டி வைன்னு உன் பெண்டாட்டி கூட அனுப்பி வைக்கலை.. அனுப்பி வைக்கவும் மாட்டேன்.. அவ இந்த அகல்யா பெத்த பொண்ணுடா.. உன் மகள்ன்னு நினைச்சியா..?"

83

என் இதயத்தில் இடமளித்தும்..
இதயமின்றி எனை விலக்கி வைத்த..
அழகான ராட்சசி நீ....

போதையில் மட்டுமல்ல.. கோபத்திலும் மனதில் மறைந்திருக்கும் உண்மைகள் வெளிப்பட்டு விடும்.. அகல்யாவின் மனதிலிருந்த கர்வமும்... திமிரும்... அகம்பாவமும்.. தான் என்ற ஆணவமும் வெளிப்பட்டு விட... தியாகராஜன் நொறுங்கிப் போனார்..

"ஆக.. இதுதான் நீ.. இல்லையாக்கா..?" நிதானம் குலையாமல் வினவினார்..

"ஆமாண்டா.. இதுதான் நான்.. அதுக்கு இப்ப என்ன செய்யனும்ங்கிற..?" அகல்யாவும் சீறினாள்..

ஊர்மிளாவை விரட்டி விடவேண்டும் என்று அவள் போட்ட திட்டம் வெற்றி பெறவில்லை.. மாறாக ஊர்மிளா

https://t.me/tamilpdfebooks

அகல்யாவை விரட்டி விட்டு விட்டாள்... அதையும் ரம்யாவின் கண்முன்னால் செய்து விட்டாள்..

‘அவ இதைப்பத்தி அம்மாப்பாகிட்டச் சொல்லாமலா இருப்பா..?’

நிச்சயமாகச் சொல்வாள் என்பதை அகல்யா கணித்து வைத்திருந்தாள்.. ரம்யா அகல்யாவுக்குக் குறையாத புத்திசாலி.. சில நேரங்களில் ரம்யாபேசும் பேச்சுக்கள் அகல்யாவைத் தாக்கி ஓரம் கட்டி உட்கார வைக்கும் மறைபொருளை உள்ளடக்கியதாக இருக்கும்.. ஆனாலும் அதை அகல்யா வெளிப்படையாக கேள்வி கேட்டு விடாமல் இருக்கும்படி சாமர்த்தியமாக பேசி வைப்பாள் ரம்யா..

‘அப்படியே அம்மாவைக் கொண்டு பிறந்திருக்கா..’ அகல்யா மனதுக்குள் பொருமுவாள்..

தியாகராஜனுக்கு அந்தச் சாமர்த்தியமெல்லாம் கிடையாது.. அகல்யா சொல்வதை வேத வாக்காக எடுத்துக் கொள்ளும் பாசக்கார ஏமாளி அவர்... அதனால்தான் ரம்யாவின் சாமர்த்தியங்களை பல்லவியிடமிருந்து அவள் பெற்றிருப்பதாக அகல்யா மனதுக்குள் குமைவாள்..

அதை வெளியில் சொல்லி விடவும் முடியாது.. ரம்யா பல்லவி அல்லவே.. தியாகராஜன் மனைவியைப் பற்றிப் பேசினால் கேட்டுக் கொள்வார்.. மகளைப் பற்றிப் பேசினால் பொங்கி எழுந்து பேசுகிறவரை உண்டு இல்லையென்று ஒரு வழியாக்கி விட்டுத்தான் வேறு வேலையைப் பார்ப்பார்..

https://t.me/tamilpdfebooks

அதனால் அகல்யா ரம்யா விசயத்தில் அடக்கியே வாசிப்பாள்.. தவிரவும்.. நரேந்திரனைக் கைப்பற்ற அவளுக்கு ரம்யாவின் தயவு தேவைப்பட்டதே..

'இப்பத்தான் அதுக்கு வழியில்லாம போச்சே..'

நியாய அநியாயம் பேசுகிற தியாகராஜன் நிச்சயமாக அவரின் மகளை அகல்யாவுடன் அனுப்பி வைக்க மாட்டார் என்று தெரிந்த பின்னால் அவரின் தயவு அகல்யாவுக்கு எதற்கு..?

ஊர்மிளாவோ ஓட மாட்டாள்.. நரேந்திரனோ ஊர்மிளாவை விட்டுக் கொடுக்க மாட்டான்.. தியாகராஜனோ இனியும் ரம்யாவை அகல்யாவின் வீட்டில் இருக்க விட மாட்டார்..

இப்படிப்பட்ட சூழல் வந்த பின்பு அகல்யா எதற்காக அவனது தம்பியிடம் பொறுமையாக பேச வேண்டும்..?

"உனக்கு அர்ச்சனாவும்.. ரம்யாவும் ஒன்றுன்னு இதுநாள்வரைக்கும் நினைத்திருந்தேனேக்கா.."

"எப்படி..? அர்ச்சனாவும்.. ரம்யாவும் ஒன்றா..? என் மகளுக்கு உன் மகள் இணையா..?" இகழ்ச்சியாக கேட்டாள் அகல்யா..

அந்த இகழ்ச்சியில் பல்லவியின் இதயம் பிளந்தது.. இவளுடன் ரம்யாவை அனுப்பி வைத்ததால் அல்லவா இந்தக் கேள்வியை அவள் காது கொடுத்துக் கேட்க வேண்டி வந்து விட்டது..

https://t.me/tamilpdfebooks

"இணையில்லைதான் அண்ணி..? எப்படி இணையாகும்..? நான் ஒன்னும் உங்க தம்பிக்கு இரண்டாம் தாரமா வாழ்க்கைப்பட்டு.. மூத்ததாரத்தோட மகன் தயவில மகளை வளர்க்கலையே.. அப்புறம் என் மகள் எப்படி உங்க மகளுக்கு இணையாவாள்..?"

பல்லவி பதிலடி கொடுத்து விட்டாள்.. ஆண்டாண்டு காலமாக அடக்கி வைத்திருந்த ஆக்ரோசம் அவள் வார்த்தைகளில் பீறிட்டு வெளியே வந்தது.. அகல்யாவின் முன்னால் பேசத் தயங்கும் பல்லவியைப் பார்த்தேப் பழக்கப்பட்ட அகல்யாவுக்கு அவளின் இந்த நிமிர்வான பேச்சு அதிர்ச்சியைத் தந்தது..

அகல்யாவால் பல்லவியின் பதிலடிக்குப் பதிலடியைக் கொடுக்க முடியவில்லை.. அவள் வார்த்தைகள் வராமல் தவித்தாள்.. தொண்டைக்குள் சிக்கிக் கொண்ட வார்த்தைகளை மீட்டெடுக்கும் வழி தெரியாமல் திண்டாடினாள்..

பல்லவி சரியான கேள்வியை நெற்றியடியாய் கேட்டு வைத்து விட்டாளே.. எதைச் சொல்லி பல்லவியின் வாயை அடைப்பது..?

"கேட்டியாடாதம்பி.." அகல்யா எப்போதும் போல தம்பியிடம் அடைக்கலம் புகுந்தாள்..

"கேட்டுக்கிட்டுத்தான்க்கா இருக்கேன்... நீ சொன்னதையும் கேட்டேன்.. பல்லவி சொன்னதையும் கேட்டேன்.." அமைதியாகப் பதில் சொன்னார் தியாகராஜன்..

https://t.me/tamilpdfebooks

அகல்யா திகைத்துப் போனாள்.. என்னதான் தூக்கியெறிந்து பேசினாலும்.. ஒரு சின்னச் சிரிப்பில் சமாதானமாகி விடும் தம்பியா அவளிடம் இப்படி பொருள் பொதிந்த வார்த்தைகளைப் பேசுவது..?

'இவனுக்கு இப்படிக்கூடப் பேசத் தெரியுமா..?'

அவசரப்பட்டு வாய் விட்டுத் தன் மனதிலிருப்பதை வெளிப்படுத்தி.. தம்பியை பகைத்துக் கொண்டோமே என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள் அகல்யா.. முதலில் தம்பியைச் சமாதானப் படுத்தி.. அவர் மீதான அவளுடைய ஆளுமையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானவள்..

"நீரடிச்சு நீர் விலகுமாடா தம்பி..?" என்று நாத்தழுதழுக்க.. வெள்ளைக் கொடியை பறக்க விட்டாள்..

"நெருப்படிச்சு.. நெருப்பு விலகும்க்கா.." இறுகிய குரலில் பதில் சொன்னார் தியாகராஜன்..

தம்பியிடமிருந்து வெளிப்பட்ட அதீத அறிவை ஜீரணிக்க முடியாமல் திண்டாடிப் போனாள் அகல்யா.. இப்படியும் தியாகராஜன் மாறக்கூடும் என்று அவள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை..

"ஆயிரம்தான் இருந்தாலும் நீ என் கூடப் பிறந்த தம்பிடா.."

"அதே ஆயிரம் என் பெண்டாட்டி விசயத்திலயும் மகள் விசயத்திலயும் இருக்குக்கா.."

https://t.me/tamilpdfebooks

“உன் முன்னாலேயே என்னைப் பேசற தைரியத்தை உன் பெண்டாட்டிக்குக் கொடுத்திட்டில்ல..?”

“என் முன்னாலேயே என் மகளைக் குறைவாப் பேசற தைரியத்தை முதலில் உனக்குக் கொடுத்துட்டேனேக்கா..?”

“தியாகு..”

“அர்ச்சனாவுக்கு என் மகள் இணையில்லைன்னா.. பல்லவிக்கு நீயும் இணையில்லைக்கா..”

தியாகராஜனின் சம்மட்டி அடி பேச்சில் பல்லவியின் முகம் ஜொலித்தது.. தனது ஆளுமை அடிபட்டு போய் விட்டதை உணர்ந்தாள் அகல்யா.. இனிப் பிறந்த வீடு என்பது அவளுக்குக் கிடைக்காது..

“நீ கேட்டுக்கிட்டக்கா.. காலில் விழுகாத குறையாக கதறி அழுத.. உனக்காக.. நீ இரண்டாம் தாரமாய் போய் விட்ட கொடுமைக்காக.. என் மகளையும் உன் புருசனோட மூத்த தாரத்தின் மகனுக்கு இரண்டாம் தாரமாய் கொடுக்க நான் சம்மதிச்சேன்.. அந்த தியாகத்துக்கு நீ சரியான பரிசைக் கொடுத்துட்டேக்கா..”

“இல்லேடா தம்பி..”

“எனக்கு வேணும்க்கா.. பெத்த மகளை விடப் பெரிசா கூடப் பிறந்தவளை நினைச்சேனே.. அதுக்கான தண்டனை எனக்குக் கிடைக்க வேணாமா..? கேட்டே பாரு கேள்வி.. என் ஆயுசுக்கும் அது போதும்.. என் மனசெல்லாம் நிறைஞ்சிருச்சு.. நீ கிளம்பு..”

https://t.me/tamilpdfebooks

"எங்கேடா..?"

"உன் வீட்டுக்குத்தான்.. இது பல்லவியோட வீடு... நீ பேசி வைத்திருக்கிற பேச்சுக்கு... உன் கூடப் பிறந்துட்டேங்கிற குத்தத்துக்காக எனக்கே அவ சாப்பாடு போடுவாளோ என்னவோ.. இதில உன்னை எங்கே நான் கவனிச்சுக்கிறது..?"

தியாகராஜனின் பேச்சில் பெகுண்டாள் அகல்யா.. அடக்கி வைத்திருந்த அவளின் இயல்பான குணம் தலையைத் தூக்கியது..

"போகிற வழியில ஆயிரம் ஸ்டார் ஹோட்டல்கள் இருக்கு.. என் ஸ்டேட்டஸீக்கு உன் வீட்டில நான் பச்சைத் தண்ணியைக் குடிக்கறதே அதிகம்.. இதில நீ என்னைக் கவனிச்சுக்கறியா..?"

"அதானே.. நீ யாரு.. உன் லெவல் என்ன.. அது தெரியாம பேசிட்டேன்.. தப்புத்தான்க்கா.. மன்னிச்சுரு.,"

"அப்ப.. ரம்யாவை என்கூட அனுப்பி வைக்க மாட்ட..?"

அந்தச் சூழலிலும் அயராமல் அந்தக் கேள்வியைக் கேட்ட அகல்யாவின் அசாத்திய மனோ தைரியத்தில் ரம்யாவிற்கு ஆச்சரியம்.. ஆச்சரியமாக வந்தது..

"எப்படிம்மா.. நம்ம சோதா அப்பாவுக்கு இப்பேர்பட்ட அக்கா கூடப் பிறந்தவங்களா வாய்ச்சிருக்காங்க..?"

வியப்புடன் பல்லவியின் காதில் முணுமுணுத்தாள்.. அவள் வெறுப்புடன் அகல்யாவைப் பார்த்தபடி வார்த்தைகளை மென்று துப்பினாள்..

https://t.me/tamilpdfebooks

"நான் வாங்கி வந்த வரம் அப்படி டீ மகளே.."

பல்லவியின் கோபத்தில் ரம்யாவிற்கு லேசாக சிரிப்பு வந்தது..

"ம்மா.. இவ்வளவு டென்சனாகனும்ங்கிற அவசியமே.. இல்லை.." என்றாள்..

"உன் அத்தைகாரி பேசற பேச்சுக்களையெல்லாம் கேட்ட பின்னாலே எப்படிடீ டென்சன் இல்லாம இருக்கிறது..?" பல்லவி கேட்டாள்..

"கெட்டதிலயும் மிகப் பெரிய நல்லது நடந்திருக்கு.. அதுக்காக அத்தையம்மாவுக்கு ஆக்சுவலா நீங்க சூடம் சாம்பிராணி காட்டிக் கும்பிட்டுக்கனும்.." நமட்டுச் சிரிப்புடன் சொன்னாள் ரம்யா..

"அது ஒன்னுதாண்டி பாக்கி.. அதையும் செய்யச் சொல்லு.. ஏன்.. உன் அப்பாதான் இத்தனை வருசமா அக்காவுக்கு சூடம்.. சாம்பிராணி காட்டிக்கிட்டு இருக்காரே.. அது போதாதா..?" பல்லவி எண்ணையில் விழுந்த கடுகாக வெடித்தாள்..

"அப்படியிருந்த மனுசன் எப்படியாகிருக்காரு..? அதைக் கவனிச்சீங்களா..? அந்த அருமை அக்காவை ஆயுளுக்கும் மறக்க முடியாத கேள்வியொண்ணை நீங்க கேட்டிருக்கீங்க.. அதை ஏன்னு அப்பா கேட்டாரா..? கேட்கச் சொன்ன அத்தையை எப்படியெல்லாம் கேள்வி கேட்டாருன்னு கேட்டிங்கதானே.." ரம்யா சுட்டிக்காட்டினாள்..

https://t.me/tamilpdfebooks

"அதிலதான் என் மனசு குளிர்ந்திருக்குடி ரம்யா.." பல்லவியின் குரல் கம்மியது.. அவளது கண்களில் கணவனின் மீதான காதல் கசிந்தது.. ஒரு மனைவியாக அவளின் இதயம் நிறைந்தது..

"ஸோ.. அதை நினைச்சு சந்தோசப்படுங்கம்மா.. ஸ்வீட் எடுங்க.. கொண்டாடலாம்.." ரம்யா கண்சிமிட்டினாள்..

"இது கிளம்பட்டும்டி.." என்றாள் பல்லவி..

தாய் குறிப்பிட்ட 'இது' எது என்று திருமபிப் பார்க்காமல் தெரிந்து வைத்திருந்த ரம்யா வாய்க்குள் சிரித்தாள்.. பல்லவியால் 'இது' என்று அழைக்கப்பட்ட அகல்யா.. கடைசி முயற்சியாக ரம்யாவை உடன் அழைத்துச் செல்ல முயன்று கொண்டிருந்தாள்..

"இந்தம்மா மகாராணி.. இதுக்கு அந்தரங்கத் தோழியா உன்னை அனுப்பி வைக்கச் சொல்லுது.." நொடித்தாள் பல்லவி..

"நீங்க சொன்னாலும்.. சொல்லலைன்னாலும்.. பெங்களூரில் நான் அந்த வேலையைத்தான் பார்த்துக் கிட்டு இருந்தேன்ம்மா.. இவங்க பேசற பேச்சுக்கு 'ஊம்' கொட்டறதுதான் என் வேலை.."

"அந்தப் பேச்சை மகளிடம் பேச வேண்டியது தானே..?"

"அரை நிமிசத்துக்கு மேலே அவ கேட்க மாட்டா.."

"நீ மட்டும் ஏண்டி கேட்டே..?"

https://t.me/tamilpdfebooks

"எனக்கும் டைம் பாஸ் ஆக வேணாமா..?"

இலகுவாக சொல்லி விட்டுச் சிரித்தாள் ரம்யா.. பல்லவியின் மனதில் குற்ற உணர்வு வந்தது.. இப்படிப்பட்ட மகளை அகல்யாவுடன் அனுப்பி வைத்தது எவ்வளவு பெரிய பிசகு என்று மனம் வருந்தினாள்..

"அம்மா உனக்கு அநியாயம் செய்துட்டேன் ரம்யா.. என்னோட பகைக்காக உன்னை இந்தப் பொம்பளைகூட அனுப்பி வைத்திருக்கக் கூடாது.."

"ஐய்யே.. இதுக்குப் போய் இவ்வளவு ஃபீல் பண்ணனுமா..? நான் ஒன்றும் சும்மா போயிருக்கலையே.. என்னோட பி.ஜி படிப்பை படிச்சு முடிச்சுட்டுத்தானே வந்திருக்கிறேன்.."

ரம்யா சொன்னதும்தான் பல்லவிக்கு அந்த நினைவே வந்தது.. கையை உதறியவளாக..

"உன் சொர்டிபிகேட் அங்கே மாட்டியிருக்கே ரம்யா.." என்று பதறினாள்..

"நானாவது.. என் செர்டிபிகேட்டை அங்கே விட்டு விட்டு வருகிறதாவது.. சென்னைக்குக் கிளம்பறோம்ன்னு ஆனதுமே என்னோட பெட்டிகளையும்... சொர்டிபி கேட்டையும் கொண்டு வந்திட்டேனில்ல.." ரம்யா கட்டை விரலை உயர்த்திக் காட்டினாள்..

"எங்கேடி..?" பல்லவி பரபரத்தாள்..

"சொர்டிபிகேட்ஸ் என் ஹேண்ட்பேகில் இருக்கு.. பெட்டிகள்ளாம் கார் டிக்கியில இருக்கு.. நேத்தே என்னோட

https://t.me/tamilpdfebooks

அத்தனை திங்ஸையும் பேக் பண்ணிட்டேன்.. அத்தையம்மாவுக்குத் தெரியாம பெட்டிகளை டிக்கியிலயும் வைத்துட்டேன்..” ரம்யா விவரித்தாள்..

“டிரைவர் பார்த்திருப்பானே..”

“பார்த்திருப்பான்தான்.. ஆனா அத்தையம்மாவிடம் சொல்லலை..”

“ஏண்டி..?”

“நான் பெங்களூரைக் காலி பண்ணிட்டுக் கிளம்பறதில அவனுக்கு அவ்வளவு சந்தோசம்..”

இதற்கும் கண்சிமிட்டினாள் ரம்யா.. எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளும் அவளின் இயல்பில் பல்லவியின் மனம் கனிந்தது..

“அம்மா சுயநலமாய் யோசிச்சுட்டேண்டி..” என்று அதற்கும் மனம் வருந்தினாள்..

அகல்யா எவ்வளவோ தழைந்து பேசிப் பார்த்தாள்.. தியாகராஜன் மறுத்து விட்டார்..

“நீ என் கூடப் பிறந்த பிறப்பு.. என் வீட்டுக்கு வா.. போ.. ஆனா.. என் மகளை மட்டும் உன்கூட அனுப்ப முடியாது..” என்று சொல்லி விட்டார்..

“நான் தனியா எப்படிடா போவேன்..?” கடைசி அஸ்திரத்தை பிரயோகித்தாள் அகல்யா..

“ராம்குமாரை உன்கூட வந்து விட்டுவிட்டு வரச் சொல்கிறேன்..”

https://t.me/tamilpdfebooks

தியாகராஜன் அப்போதே ராம்குமாருக்குப் போன் போட்டார் அவனும் விரைவாக வந்தான்..

"அத்தை ரம்யாவை விட்டு விட்டுப் போக வந்திருக்கு ராம்.. நாம தனியா அனுப்பி வைச்சா நல்லா இருக்காது.. நீ கூடப்போய் விட்டு விட்டு வாப்பா.." என்றார் தியாகராஜன்..

தந்தை சொல்லைத் தட்டாத தனயனாக ராம்குமார் கிளம்பினான்.. தோற்றுப் போன மனநிலையுடன் அகல்யா முகம் கருக்க தம்பியிடம் விடைபெற்றுக் கிளம்பினாள்.. பல்லவியிடமும்.. ரம்யாவிடமும் அவள் சொல்லிக் கொள்ளவில்லை..

'திருட்டுக்கள்ளி..! பெங்களூரில் இருந்த வரைக்கும்.. அத்தை.. அத்தைன்னு வால் பிடிச்சுட்டு.. இங்கே அப்பன் வீட்டுக்கு வந்ததும் அம்மா பின்னாலே போய் நின்னுக்கிட்டா..' அவள் மனம் ரம்யாவுக்கு அர்ச்சனை செய்தது..

பெங்களூரில் ரம்யா இல்லாமல் ராம்குமாருடன் வந்து இறங்கிய அகல்யாவைக் கண்டதும் அருண்குமாரும்.. அர்ச்சனாவும் ஆச்சரியப்பட்டார்கள்..

"ரம்யாவின் படிப்பு முடிஞ்சுருச்சே.. அதனாலே அப்பா அவளை பெங்களூருக்கு அனுப்ப மாட்டேன்னு சொல்லிட்டார்.." என்றான் ராம்குமார்..

அர்ச்சனாவின் கண்கள் ராம்குமாரையே விழுங்கு வதைப் போல பார்த்து வைத்தன.. அவன் மிகக் கவனமாக

https://t.me/tamilpdfebooks

அர்ச்சனாவின் விழிகளை சந்திப்பதைத் தவிர்த்தான்.. அருண்குமாரிடம் மட்டுமே பேசினான்..

"அத்தையை விடனும்ங்கிறதுக்காக எல்லா வேலைகளையும் போட்டது போட்டபடி விட்டுவிட்டு வந்தேன்.. நான் கிளம்பியாகனும்.."

ராம்குமார் கிளம்பினான்.. வாசலுக்கு ஓடிவந்த அர்ச்சனா..

"அத்தான்.." என்று அவனை அழைத்தாள்..

ராம்குமார் தேங்கி நின்றான்.. அர்ச்சனாவின் கண்ணீர் பார்வை அவன் மனதை அசைத்தாலும்.. இளகி விடாமல் இரும்பின் உறுதியோடு ஒட்டாத பார்வை பார்த்தான்..

84

மைவிழியில் மயக்கம்தந்து..
மறுவிழியில் கடுமை காட்டும்..
அழகான ராட்சசி நீ....

எப்போது இது நிகழ்ந்தது என்று அவர்கள் இருவருக்குமே தெரியாது.. என்னதான் இருவரும் அத்தை மகள்.. மாமன்மகன் உறவோடு இருந்தாலும் அடிக்கடி பார்த்துக் கொண்டதில்லை.. கோடீஸ்வரனுக்கு மனைவியாகி விட்டோம் என்ற மிதப்போடு இருந்த

https://t.me/tamilpdfebooks

அகல்யா.. அத்தனையும் வெளிவேசம்.. செழியன் கோடிஸ்வரன் அல்ல.. கோடிஸ்வரி நளினியின் கழுத்தில் தாலியைக் கட்டியவர் என்ற உண்மை புலப்பட்டதில் இடிந்து போய் விட்டாள்.. அடுத்து அவள் செய்த முதல் வேலை.. அந்த விவரத்தை பிறந்த வீட்டிற்கு தெரிய விடாமல் பார்த்துக் கொண்டதுதான்..

கோடிஸ்வரனின் மனைவி என்ற பிம்பத்தை உடைய விடாமல் கட்டிக் காப்பாற்றினாள் அகல்யா.. அதற்காக அவள் தண்ணீராய் வாரி இறைத்த பணத்தை கடன் வாங்கி அவள் கையில் கொடுத்தார் செழியன்.. பிறந்த வீட்டிற்கு வரும் போதெல்லாம் பட்டும், வைரமுமாக.. பளபளக்கும் புதிய காரில் வந்து இறங்குவாள்.. இருந்த பெண்ணுக்கு இசைந்த மாப்பிள்ளை என்று பல்லவியின் மனம் நோக பெருமையடிப்பாள்..

அவளின் திமிரையும்.. ஆணவத்தையும் கண் முன்னே பார்த்து வளர்ந்தவன் ராம்குமார்.. அவன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் ஆரம்பிக்க முனைந்தபோது அவனைக் காலடியில் விழ வைக்க வேண்டும் என்பதற்காகவே பெட்டியில் பணத்தை நிரப்பி நீட்டியவள் அகல்யா..

அந்தப் பணத்துக்காக, செழியன் யாரிடமோ கடன் பட்டு விட்டார்.. அதை அடைக்க வேண்டும்.. இல்லா விட்டால் செழியனின் ஆத்மா சாந்தியடையாது என்று நரேந்திரனிடம் அவள் கண்ணீர் விட்டுக் கதறி அழுது நாடகமாடியது தனிக்கதை..

https://t.me/tamilpdfebooks

என்னதான் அவள் அழுது புலம்பி நாடகமாடினாலும் நரேந்திரன் அவளை கொஞ்சம் கூட நம்பவில்லை என்பது கிளைக்கதை..

"யார்ன்னு சொல்லுங்க.. அப்பா கையெழுத்துப் போட்டுக் கொடுத்த டாக்குமெண்ட் இருக்கான்னு பார்த்திட்டு நானே பணத்தை செட்டில் பண்ணி விடுகிறேன்.." என்றுதான் நரேந்திரன் சொன்னான்..

"இது என்மூலமா வாங்கின கடன்ப்பா.. என்கூட உயிருக்குயிரா பழகின சிநேகிதி வீட்டில கடன் வாங்கிக் கொடுத்தேன்.. எல்லாம் உன் அப்பாவோட ஆஸ்பத்திரி செலவுக்காக வாங்கின கடன்தாம்ப்பா.. ஒரு கையெழுத் தில்லாம.. வாய் வார்த்தையை நம்பி அவ கடன் கொடுத்தா.. இப்ப வார்த்தை தவறினா என்ன சொல்லுவாளோ.."

'என்னவொரு பொய்..'

வெறுப்புடன் அந்தப் பணத்தைக் கொடுத்தான் நரேந்திரன்.. செழியனின் மருத்துவ செலவுகளை செட்டில் பண்ணியது அவன்தான்..

"கொண்டு வந்து அட்மிட் பண்ணினாங்க.. அட்வான்ஸ் கூடக் கட்டலை.. நரேந்திரன் சாரோட பாதர்ன்னு சொன்னதினால நாங்க கேள்வியே கேட்காம அட்மிட் பண்ணிட்டோம்.. அட்மிட் பண்ணினவங்க இதோ வரேன்னு போனாங்க.. நீங்க வருகிறவரைக்கும் வரவேயில்லை.. பாவம் பேசண்ட்.. தனியா இருந்தார்.. என்னதான் பிடிக்காதுன்னாலும் இப்படியா சார் பண்ணுவாங்க..?"

https://t.me/tamilpdfebooks

செழியனுக்கு சிகிச்சையளித்த மருத்துவமனையின் ரிசப்சனிஸ்டும் கேஷியரும் சொன்னபோது அவனுக்கு ரத்தம் கொதித்தது..

செழியனை அந்த நிலைமையில் விட்டு விட்டு ஓடியவள்.. அவருக்கான மருத்துவ செலவிற்காக கடன் வாங்கியதாக கதை அளக்கிறாள்..

பல்லைக் கடித்தபடி நரேந்திரன் கொடுத்த பணத்தில் பாதியை ஒரு பெட்டியில் போட்டு ராம்குமாரிடம் கெத்தாக நீட்டி விட்டு.. மீதியில் அகல்யா வைர நகைகளை வாங்கி வைத்தாள்..

“என் தம்பிக்கு நான் எதுவுமே செய்யலை.. உனக்குச் செய்தால் அவனுக்குச் செய்ததைப் போல.. இந்தப் பணத்தை வைத்து நீ முன்னேறி என் தம்பியையும்.. தம்பி பெண்டாட்டியையும் வயிறு வாட விடாமல் பார்த்துக்கிட்டால் போதும் ராம்.. என் தம்பி குடும்பத்துக்கு படியளந்திட்டேன்னு என் மனசு நிம்மதியாகிரும்.. காலம் முழுவதும் என் தம்பி குடும்பம் சாப்பிடுகிறப்ப இந்தச் சாப்பாட்டை அகல்யா போட்டாள்ன்னு நன்றியோட நினைச்சுக்கிட்டாப் போதும் ராம்.. எனக்கு வேறென்ன வேண்டும்..? என்னால முடிஞ்சது.. என் தம்பி குடும்பத்துக்கு சாப்பாட்டுக்கு வழி செஞ்சிட்டதுதான்.. அந்த நன்றி உனக்கும்.. உன் குடும்பத்துக்கும் காலம் முழுவதும் இருந்தாப் போதும் ராம்.. எனக்கு அதுதான் வேண்டும்..”

https://t.me/tamilpdfebooks

அகல்யா தனக்கு எது வேண்டும் என்பதை மிக அழகாக தெளிவு படுத்தி விட்டாள்.. பல்லவியின் உயிர் துடித்தது.. பணத்தை வாங்காதே என்று மகனிடம் சொல்லவும் முடியாமல்.. அகல்யா எதிர்பார்த்த நன்றிக்கடனை அவளிடம் படவும் முடியாமல் தாய் துடித்த துடிப்பையும்.. தவிப்பையும் உணர்ந்தவன்தான் ராம்குமார்..

அதை தெரிந்து கொண்டதாக அவன் காட்டிக் கொள்ளவேயில்லை.. அகல்யா கொடுத்த பணத்தை தயங்காமல் வாங்கிக் கொண்டான்.. இரவு பகலாய் உழைத்தான்.. அவள் கொடுத்த பணத்தை வட்டியுடன் திருப்பிக் கொடுத்தான்..

அன்றுதான் பல்லவி நிம்மதியாக ஓர் கவளம் உணவை உண்டு விட்டு படுத்து உறங்கினாள் என்பதை அவளறியாமல் கண்காணித்து மனதில் பாரம் சுமந்தவன் தான் ராம்குமார்..

அந்த ராம்குமாரால் அகல்யாவின் வயிற்றில் பிறந்த மகளின் காதலை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்..?

ரம்யாவை பார்க்க அவன் பெங்களூருக்கு வரும் போதெல்லாம் அர்ச்சனாவின் பார்வையில் ஆர்வம் வந்து சேர்ந்து விடும்.. சிலசமயங்களில் அவள் அகல்யாவுடன் ஒட்டிக்கொண்டு சென்னைக்கு வருவாள்..

குட்டி போட்ட பூனை போல ராம்குமார் இருக்கு மிடத்திலேயே உலாத்திக் கொண்டிருப்பாள்.. அப்படி ராம்குமார் எவ்விடமோ.. அவ்விடமே அவளிடம் என்று

https://t.me/tamilpdfebooks

சுற்றிக் கொண்டிருப்பவளின் மனதில் என்ன இருக்கிறது என்பதை வெற்றிலையில் மை தடவி ஜோஸியமா பார்க்க வேண்டும்..? தன்னாலே அது புரியாதா..?

ராம்குமாருக்குப் புரிந்தது.. புரிந்தும் புரியாதவனைப் போல அவன் நடித்தான்.. அவனிடம் வலிய வந்து பேச முயன்ற அர்ச்சனாவை கண்டு கொள்ளாமல் விலகிப் போனான்..

அன்றும் அதைப் போலவே இளக்கமில்லாத இருகிய முகத்தோடு நின்றவனைப் பார்த்து அர்ச்சனா மருகினாள்..

“உங்களிடம் பேசனும் அத்தான்..”

“எனக்கு நேரமாகுது..”

ராம்குமார் பிடிகொடுக்காமல் பேசியதில் அர்ச்சனாவின் முகம் விழுந்து விட்டது.. அவள் இயலாமையோடு அவனைப் பார்த்தாள்..

“ஒரு ஐந்து நிமிசம் கொடுங்க அத்தான்..”

“இல்லைம்மா.. என்னால நிற்க முடியாது..”

“அப்ப உட்கார்ந்து பேசலாம் வாங்க..”

அர்ச்சனா தோட்டத்து சிமிண்ட் பெஞ்சைக் காட்டினாள்.. ராம்குமார் அவளை அறிமுகமற்ற பார்வை யொன்றை பார்த்து வைத்தான்.. தெருவில் போகும் முகமறியாதவர்களைக் கூட அப்படிப் பார்க்க மாட்டார்கள்.. அப்படியொரு பார்வையை பார்த்து வைத்தவனைக் கண்டு நொந்து நூடுல்ஸாகிப் போனாள் அர்ச்சனா..

https://t.me/tamilpdfebooks

'இருந்திருந்து இந்த நல்லல்லல்லவன் மேலா எனக்குக் காதல் வந்து தொலைக்கனும்..'

ராம்குமார் கல்லையும், மண்ணையும் கூட காதல் பார்வை பார்த்து விடுவான் போல.. அவளை எவளோ முருத்தியைப் பார்ப்பதைப் போல பார்த்தபடி ஓடி விடுவதிலேயே குறியாக இருந்தான்..

"தோட்டத்தில் உட்காருகிறதா..?"

என்னவோ வேற்றுக்கிரகத்தில் உட்காரச் சொல்லி விட்டதைப் போல விதிர்த்தவனை.. வேற்றுக்கிரக வாசியைப் பார்ப்பதைப் போல விசித்திரமாக பார்த்து வைத்த அர்ச்சனா.. இவனிடம் தன்மையாக பேசினால் வேலைக்கு ஆகாது என்ற முடிவுக்கு வந்தாள்..

"ஹலோ.. என்ன..?" வலது உள்ளங்கையை குவித்து உயர்த்திக் கேட்டாள்..

அவள் கேட்ட தோரணையில் அவன் வசீகரிக்கப் பட்டான்.. ஓர்நொடி அவன் கண்ணில் வந்து போன மின்னலில்..

'இந்த ரோபோ மனசுக்குள்ள காதல் இல்லாம இல்லை.. சும்மா பிலிம் காட்டுது..' என்று கண்டு கொண்டாள் அர்ச்சனா..

"ஊர்விட்டு ஊர் வந்திருக்கிறவனை இப்படியா மிரட்டி வைப்ப..?" ராம்குமார் கேட்டதும் அர்ச்சனா மயக்கம் வருவதைப் போல பாவனை செய்தாள்..

https://t.me/tamilpdfebooks

“ஹப்பா..! இவ்வளவு நீளமான டயலாக்கை பேசினது நீங்கதானா..? நம்பவே முடியலைங்க..”

அவளின் நடிப்பில் ராம்குமாரின் முகத்தில் லேசான சிரிப்பின் சாயல் படர்ந்தது..

‘ஐயா.. சிரிச்சிட்டாராமாம்..’ அர்ச்சனா உதட்டைக் கடித்துக் கொண்டு அவனை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தாள்..

“உனக்கு என்னதான் வேணும்..?” சிரிப்பினூடே கேட்டு வைத்தான் ராம்குமார்..

“நீங்கதான் வேணும்...”

கிடைத்த வாய்ப்பை வெகு சமர்த்தாக பயன்படுத்திக் கொண்டாள் அர்ச்சனா..

வெளிப்படையான அவளின் பதிலில் வசீகரிக்கப் பட்டான் ராம்குமார்.. அவளையே ஒரு நிமிடம் பார்த்து வைத்தான்..

“எப்படியிருக்கேன்..? நல்லாயிருக்கேனா..? உங்களுக்குப் பிடிச்சிருக்கா..?” குறும்பாக கேட்டாள் அர்ச்சனா..

ராம்குமார் வாய் விட்டுச் சிரித்தான்.. சிரிக்கும் போது தெரிந்த அவனுடைய கவர்ச்சியான முக அமைப்பில்..

“ஹப்பா..” என்று இரு கண்களையும் விரித்து அதிசயப்பட்டாள் அர்ச்சனா..

“என்ன..?” ராம்குமார் புருவங்களை உயர்த்தினான்..

https://t.me/tamilpdfebooks

"உங்களுக்குச் சிரிக்கக் கூடத் தெரியுமா..?"

"இது கூடத் தெரியாமலா என்னை நிறுத்தி வைத்து வம்பிழுத்துக்கிட்டு இருக்கிற..?"

"யார் வம்பிழுத்தது..?"

"நீதான்.."

"யாரை வம்புக்கிழுத்தேன்..?"

"என்னைத்தான்.."

"எப்படியாம்..? உங்க கையைப் பிடிச்சு இழுத்தேனா..?"

அர்ச்சனாவின் கேள்வியில் உண்மையாகவே ராம்குமாரின் கையைப் பிடித்து இழுத்து விடும் உத்தேச மிருந்ததால் ராம்குமார் சிரித்தபடி பின்னால் நகர்ந்தான்..

"ஏன் அத்தான் அகப்படாமல் விலகி ஓடுகிறதிலேயே குறியாய் இருக்கீங்க..?" அர்ச்சனா அலுத்துக் கொண்டாள்..

ராம்குமாரின் சிரிப்பு மறைந்து அங்கே கடினம் பரவியது..

"வேண்டாம் அர்ச்சனா.." ஆழ்ந்த குரலில் சொன்னான்..

"ஏன் அத்தான்..?" அவள் திடுக்கிடலுடன் கேட்டாள்.

ஓர் இனிய கனவு கலைந்து விட்டதைப் போன்ற ஏமாற்றம் அவளுக்குள் வந்தது..

அவளுக்கு ராம்குமாரை பிடிக்கும்.. அவனுடைய நேர்மையும் கண்ணியமும்.. காணக் கிடைக்காதவை

https://t.me/tamilpdfebooks

என்று அவள் நினைத்தாள்.. ஆனால்.. அவளின் நினைவு அவனுக்கில்லையா..?

"உனக்கும்.. எனக்கும் சரிப்பட்டுவராது அர்ச்சனா.. நீ நினைப்பது நடக்காது.. இது நிறைவேறாத ஆசை.. விட்டு விடு.."

அவன் தெளிவான குரலில் பேசினான்.. எல்லா வற்றையும் அறிந்து வைத்திருக்கும் சித்தனைப் போல அவன் பேச்சு இருந்ததில் அர்ச்சனா மனம் உடைந்தாள்..

என்னவோ அவனுக்கும் அவளுக்கும் இடையில் மதம், இனம், மொழி, வர்க்கம் என்று ஆயிரம் தடைகள் இருப்பதைப் போலவும்.. அதைத்தகர்த்தெறிந்து அவர்கள் ஒன்று சேர்வது கடினம் என்பதைப் போலவும் அவன் பேசி வைத்த விதத்தில் கைக்கு கிடைப்பதை எடுத்து அவன் தலையில் போட்டு உடைத்தாலென்ன என்ற வெறி அவளுக்குள் வந்தது..

"எதனால நிறேவேறாது அத்தான்..? சொல்லுங்க.. நீங்களும், நானும் வேறவேற மதமா..? இனமா..? மொழியா..?" அர்ச்சனா கோபத்துடன் கேட்டாள்..

கலங்கிச் சிவந்திருந்த அவள் விழிகளில் ஆற்றாமையினால் ஏற்படும் துக்கத்தின் சிகப்பும் சேர்ந்திருந்ததில் ராம்குமார் உதட்டைக் கடித்தான்..

'எப்படி இவளுக்கு நான் புரிய வைப்பேன்..?'

அது துன்பமான ஒன்றாக அவனுக்கு இருந்தது.. மென்மையான பெண்.. அன்பானவள்.. அழகானவள்..

https://t.me/tamilpdfebooks

இத்தனைக்கும் மேலாக அவனை உண்மையாக காதலிப்பவள்..

அவளை மறுதளிப்பது என்பது எவ்வளவு கொடுமையானது..!

இந்த உலகில் உண்மையான அன்பும், பாசமும், நட்பும், காதலும் கிடைப்பது என்பது அரிதான ஒன்றல்லவா..?

"ஒன்றைப் புரிந்து கொள் அர்ச்சனா.. நீ சொன்ன அத்தனை வேறுபாடுகளும் உனக்கும், எனக்கும் நடுவில் இருந்திருந்தாலும் யோசிக்காமல் நான் காதல் சொல்லி யிருப்பேன்... உன்னைச் சிறையெடுத்து கல்யாணம் பண்ணியிருப்பேன்.. இது அப்படியில்லை.."

"அத்தான்.."

"நீ சொன்ன வேறுபாடுகளில் ஒன்றுகூட உனக்கும்.. எனக்கும் நடுவில் இல்லைதான்... ஆனால் இது அத்தனையையும் தூக்கிச் சாப்பிட்டு விடும் அளவிற்கு பெரிதான ஒரு வேறுபாடு இருக்கிறது.."

"எதைச் சொல்கிறிங்க..?"

அவனது மர்மமான பேச்சில் குழம்பிப் போனாள் அர்ச்சனா.. அவளுக்கும் அவனுக்கும் இடையில் இருக்கும் அந்த அகழி எது..?

அகல்யா என்றான் ராம்குமார்..

"என்னது..?" அர்ச்சனா அதிர்ந்தாள்..

https://t.me/tamilpdfebooks

“யெஸ்.. உன் அம்மாதான் உனக்கும்.. எனக்கும் நடுவில் இருக்கிறவங்க..”

“அத்தான் அவங்க உங்க அத்தை.. உங்க அப்பாவோட கூடப் பிறந்த அக்கா..”

“அதனால்தான் உன் அம்மாவின் குணத்தையும், செய்கைகளையும் நான் பிறந்ததிலிருந்து பார்த்துப் பார்த்து வளர்ந்திருக்கிறேன்.. உன் அம்மாவின் நிழல் கூட எங்கள் வீட்டில் படக் கூடாதுன்னு நினைக்கிறேன்.. இதில் அவங்களோட பெண் எங்க வீட்டில் மருமகளாக வாழ வருகிறது என்பது எப்படி சாத்தியமாகும் அர்ச்சனா..? நீயே சொல்லு.. உங்க அம்மாவிடமிருந்து விலகி நிற்க ஆசைப்படுகிற நான்.. உங்க அம்மாவின் மகளான உன் கழுத்தில் எப்படித் தாலியைக் கட்ட முடியும்..? சொல்லு..”

அர்ச்சனா அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை.. ராம்குமார் அவளை மறுப்பதற்கு இதுதான் காரணமா..?

என்னதான் இருந்தாலும் அகல்யா அர்ச்சனாவைப் பெற்ற தாய்..! அவளைப் பற்றிக் குறைவாக பேசுவது அர்ச்சனாவின் காதலனாகவே இருந்தாலும்.. எப்படி அவள் கேட்டுக் கொள்வாள்..?

“குட்..” இகழ்ச்சியுடன் சொன்னாள்..

ராம்குமாரின் முகம் மாறியது.. எதற்காக அந்த இகழ்ச்சி என்று புரியாவிட்டாலும் அர்ச்சனா எதையோ

https://t.me/tamilpdfebooks

சொல்லப் போகிறாள் என்பதில் அவள் முகத்தை உன்னிப்பாக பார்த்தான் அவன்...

"எங்க அம்மாவின் மகள் கழுத்தில் நீங்க தாலி கட்டக் கூடாது.. அகல்யாவின் மகள் உங்கள் வீட்டுக்கு மருமகளாக வந்த விடக்கூடாது.. ஆனா உங்க கூடப் பிறந்த தங்கை மட்டும் என் அண்ணனுக்கு கழுத்தை நீட்ட டிரை பண்ணலாம்.. இதே அகல்யாவின் வீட்டில மருமகளா வாழ முடியுமான்னு கனவு காணலாம்.. கெட்டிக்காரங்கதான் நீங்க.."

"என்ன சொல்கிற..?"

"ம்ம்ம்..? சுரைக்காயில் சால்ட் இருக்குன்னு சொல்கிறேன்.."

"ரம்யா அருண்குமாரை விரும்புகிறாளா..?"

"நோ.. நோ.. அவள் எங்க அம்மாவை விட கெட்டிக்காரி.. அருண் வெறும் ஜெனரல் மேனேஜர்ன்னு அவளுக்குத் தெரியும்.. அதனாலே ஜி.எம்மை விட்டு விட்டு மேனேஜிங் டைரக்டருக்கு வலை விரிச்சா.. புரியலை..? அவ நரேன் அண்ணாவுக்கு நூல் விட்டா.."

"இருக்காது.. நான் நம்ப மாட்டேன்.. நீ கோபத்தில பேசுகிற.."

ராம்குமார் தலையை ஆட்டினான்.. அர்ச்சனா கோபச் சிரிப்பை சிரித்தாள்.. அந்தச் சிரிப்பிலிருந்த உண்மையில் ராம்குமாரின் கண்கள் சிறுத்தன.. அவன்மீது ஆசைப் பட்டவளை அவன் உற்றுப் பார்த்தான்..

https://t.me/tamilpdfebooks

அது.. அவன் அதுநாள்வரை பார்த்தறியாத அர்ச்சனா..!

"நம்ப முடியலைன்னா போய் உங்க தங்கையிடமே விளக்கம் கேளுங்க.. உங்க அம்மா, அப்பாவிடமும் சேர்ந்து கேளுங்க.. அவங்க ரம்யாவை இங்கே அனுப்பி வைச்சது அவ பி.ஜி. படிக்கனும்கிறதுக்காகன்னு தானே நீங்க நினைச்சுக்கிட்டு இருக்கீங்க..? அதுதான் இல்லை.. அந்தச் சாக்கிலே இந்த வீட்டிலே தங்கி.. நரேன் அண்ணா மனசை மாத்தி அவருக்கு இரண்டாம் தாரமா கழுத்தை நீட்டனும்கிற பிளானோடதான் அவ இங்கே தங்கி படிக்க வந்தா.. இது அம்மா வோட பிளான்.. அதுக்கு உங்க பேரண்ட்ஸீம், தங்கையும் ஓகே சொன்னாங்க.."

"ஓ..."

ராம்குமார் கோபத்துடன் 'ஓ' போட்டான்.. அந்த நேரம் பார்த்து வாசலுக்கு வந்த அகல்யா தோட்டத்துக்குப் பக்கத்தில் நின்று பேசிக் கொண்டிருப்பது யார் என்று கண்களை சுருக்கிக் கொண்டு பார்த்தாள்.. அர்ச்சனாவும், ராம்குமாரும் அவளின் பார்வை வட்டத்துக்குள் வந்ததில் அவசரமாக அவர்களுக்கு அருகே வந்தாள்..

https://t.me/tamilpdfebooks

85

என்னிடத்தில் தவறு கண்டு..
தண்டனையை உனக்களிக்கும்..
அழகான ராட்சசி நீ....

அகல்யாவுக்கு அந்தக் காட்சியைக் காணப் பிடிக்கவில்லை.. அவளுடைய மகள் அர்ச்சனா ராம்குமாருடன் நின்று பேசிக் கொண்டிருப்பதா..?

"என்ன ராம்..? இன்னுமா நீ போகலை..? வேலையிருக்குன்னு சொன்னியேப்பா.. அர்ச்சனா என்ன இது..? ஊருக்குப் போய்க்கிட்டிருக்கிற பிள்ளையிடம் பேச்சை வளர்த்து நிறுத்தி வைச்சிருக்க.. ரம்யாவைப் பற்றி விசாரிக்கிறதா இருந்தா அவளிடம் போன் போட்டுப் பேசு.. ராமிடம் உனக்கென்ன பேச்சு..?"

அகல்யாவின் படபடப்பில் ராம்குமாரின் கோபம் அதிகரித்தது.. அர்ச்சனாவை அவள் அதட்ட.. அர்ச்சனாவோ உன்னால்தானே எனக்கு இந்த நிலைமை என்று அசையாமல் நட்டு வைத்த நெடுமரம்போல அங்கேயே நின்றாள்..

"உள்ளே போ அர்ச்சனா.." அகல்யா கண்டிப்புடன் சொன்னாள்..

https://t.me/tamilpdfebooks

"ஏன்..?" என்று கேட்டான் ராம்குமார்..

'ஆஹா..' என்று மகிழ்ந்து போய் விட்டாள் அர்ச்சனா..

அவளுடைய காதலனா இது போன்ற வீர வசனத்தை பேசுகிறான்..?

அந்த வீரவசனம் இரண்டே எழுத்துக்களைக் கொண்ட 'ஏன்..' என்ற கேள்வி என்பதில் அவளொன்றும் அலட்டிக் கொள்ளவில்லை..

'என் அம்மாவைப் பார்த்து ஏன் என்ற கேள்வியை கேட்டுட்டாரே..'

இதுதான் அவளுக்கு உவப்பாக இருந்தது.. என்னவோ அவளுடைய காதலன்..

'ஏன் என்ற கேள்வி - இங்கு..
கேட்காமல் வாழ்க்கை இல்லை..'

என்று பாடி விட்டதைப் போல புல்லரித்துப் போய் அவன் முகத்தை பருகு.. பருகு.. என்று பார்க்க ஆரம்பித்து விட்டாள்.

அந்தப் பார்வையில் அகல்யா கொதிகலன் ஆனாள்..

"உன்னை உள்ளே போன்னு சொன்னேன் அர்ச்சனா.. அதைக் காதிலே வாங்கிக்காம அங்கேயென்ன பார்வை வேண்டிக்கிடக்கு...?"

"அட..! அவ மாமா மகனைத்தானே பார்க்கிறா அத்தை..? அதில உங்களுக்கு எதுக்கு இத்தனை கடுப்பு..? நீ பாரு அர்ச்சனா.."

https://t.me/tamilpdfebooks

ராம்குமார் அர்ச்சனாவை தூண்டி விட்டான்.. அவனுடைய அந்த தைரியத்தில் புளகாங்கிதம் கொண்டாள் அர்ச்சனா.. அவன் குதிரையை கொண்டு வந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது..

அகல்யாவின் கண் முன்னால் குதிரையிலிருந்து அவன் குனிந்து அவள் இடுப்பைப் பற்றித் தூக்கி அவனுடன் உட்கார வைத்து.. குதிரையை விரட்டிப் பறந்திருந்தால் எப்படியிருந்திருக்கும்..?

"தூள்.." கற்பனையின் பரவசத்தோடு அவள் சொன்னாள்..

"தூளா..? என்னடி.. நானும் பார்த்துக்கிட்டே இருக்கேன்.. உன் போக்கு சரியில்லாம இருக்கே.. இவன் பேசுகிறதுக்கு துள்ன்னு சொல்கிறயே.. என்ன..?" அகல்யா அதட்டினாள்..

ராம்குமாரை 'அவன்.. இவன்..' என்று அவள் சொன்னதில்லை.. தனியாக இருக்கும் போது அப்படித்தான் சொல்லுவாள் என்றாலும் நேரடியாக அப்படிப் பேசிய தில்லை.. அன்று அவள் அப்படிப் பேசி விட்டதில் ராம்குமாரின் முகம் கடுத்தது..

"மரியாதை.." அகல்யாவை அதட்டினான்..

"மரியாதையாய் பேசனும் அத்தை... நீங்க கொடுக்கிறதுதான் உங்களுக்குத் திரும்பக் கிடைக்கும்.." என்று சீறினான்..

https://t.me/tamilpdfebooks

அகல்யா நிதானித்தாள்.. அப்போதுதான் ஊர்மிளா விடம் வாங்கிக் காட்டிக் கொண்டு வந்தவளுக்கு ராம்குமாரிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளத் தெம்பு இல்லை..

'இவன்கூட எதுக்கு வம்பு..? இவன் தான் நியாய.. அநியாயம்ன்னு கவைக்கு உதவாத கொள்கைளை கட்டிப் பிடிச்சுக்கிட்டு இருக்கிறவனாச்சே.. உன் தகுதி இவ்வளவு தராதரம் இவ்வளவு.. உன் இருப்புக்கு அர்ச்சனா இருக்கிற உயரம் உனக்கு எட்டாக்கனின்னு எடுத்துச் சொன்னா ஓடிற மாட்டானா..?' கணப்பொழுதில் முடிவுக்கு வந்தாள்..

"ஏதோ அவசரத்தில வாய் தவறி வந்துருச்சுப்பா.. இல்லேன்னா அத்தை உன்னைப் போய் அப்படிப் பேசி வைப்பேனா..? நீ மனசுக்குள்ளே எதையும் வைச்சுக்காதே ராம்.."

'அதாவது உன் மகளை வைச்சுக்க வேணாம்ன்னு சொல்கிற.. படு கில்லாடி அத்தை நீ..'

"அர்ச்சனா கல்யாணமாக வேண்டிய பொண்ணு.."

'நானென்ன அவ கன்னி தெய்வமா இருக்க வேண்டிய பொண்ணுன்னா சொன்னேன்..? அர்ச்சனாதான் கல்யாணம் ஆக வேண்டிய பொண்ணா..? என் தங்கை ரம்யாவைப் பார்த்தா உனக்கு அப்படித் தோணலையா..? என்ன திட்டத்தோட என் தங்கையை உன் வீட்டுக்கு கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கிற..'

"என்னதான் நீயும் அவளும்.. மாமா மகன், அத்தை மகள் உறவில இருந்தாலும், சில விசயங்களில ஒன்னா நிற்க முடியாதில்லையா..?"

https://t.me/tamilpdfebooks

'எந்த விசயங்களில அத்தை..? உன் வீட்டுப் பெண்ணை உள்ளே பத்திரமா பாதுகாத்துக்கிட்டு.. அடுத்த வீட்டுப் பெண்ணோட வாழ்க்கையில விளையாடிப் பார்க்க நினைக்கிறயே.. அந்த விசயங்களிலா அத்தை..?'

"அவ வானத்திலே இருக்கிற நட்சத்திரம்.. நீ பூமியிலே இருக்கிறவன்ப்பா.. எண்ணையும் தண்ணியும் எந்தக் காலத்திலேயும் பக்கத்தில பக்கத்தில நிற்கக் கூட முடியாதுப்பா.. உனக்குப் புரிஞ்சிருக்கும்ன்னு நினைக்கிறேன்.."

பாலிஷ் போட்ட குருரத்துடன் அவனுக்கு புளி போட்டு விளக்கிச் சொன்ன அகல்யா இனி பயல் ஒதுங்கி விடுவான் என்ற நிம்மதியோடு பேச்சை நிறுத்த..

"எனக்குப் புரியலையே அத்தை.." என்று சொல்லி அவள் ஆவியைக் குறைத்தான் ராம்குமார்..

அன்று முழுவதும் கத்திக் கொண்டிருந்ததினால் அகல்யாவின் தொண்டைத் தண்ணீர் வற்றிப் போயிருந்தது... அதற்கு மேலும் அவனுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது என்பதில் அகல்யா பொறுமையை கை விட்டாள்..

"என்னத்தைப் புரியலை..? உன் தகுதி என்ன..? தராதரம் என்ன..? அர்ச்சனாவின் பக்கத்தில் நிற்கக் கூட உனக்கு யோக்கியதை கிடையாது.. இது உனக்குப் புரியலையா..?"

"ஓ.. அப்படி எந்த வகையில் நான் குறைந்து விட்டேன் அத்தை..? உழைத்து முன்னேறியிருக்கிறேன்..

https://t.me/tamilpdfebooks

என்னிடமிருக்கும் ஒவ்வொரு பைசாவும் என் உழைப்பில் வந்தது.. அடுத்தவங்க முதுகில் சவாரி செய்து.. ஒட்டிப் பிழைத்ததினால் வந்ததில்லை.."

ராம்குமார் சொல்லிக் காட்டி விட்டான்.. அதில் அகல்யாவின் முகம் விகாரமாக மாறியது..

"தேவையில்லாம பேசாதே.. என் பெண்ணோட நிழல் பக்கத்தில் நிற்கக்கூட உனக்குத் தகுதி கிடையாது.. வெளியே போ.."

வாசல்பக்கமாக கையைக் காட்டினாள்.. பார்த்துக் கொள் என்பதைப் போல அர்ச்சனாவை ஒரு பார்வை பார்த்து வைத்தான் ராம்குமார்.. அவள் துடித்துப் போய்..

"அம்மா.." என்றாள்..

"நீ பேசாதே அர்ச்சனா.. உனக்கென்னடி தெரியும்.. உன் ஸ்டேடஸ் என்னனன்னு மறந்துட்டு இவன்கூட சரிக்குச் சரியா நின்னு பேசினதுக்கு இவன் என்ன மாதிரி பேசிட்டான்னு கேட்டுக்கிட்டயில்ல.. நீ பச்சைக் குழந்தைடி.. உன் மனசை இவன் கரைக்கப் பார்த்தாலும் நீ அதுக்கு இடம் கொடுக்கக்கூடாது அர்ச்சனா.. யாருடி நீ..? நரேந்திரனோட தங்கை.. அவன் லெவலுக்கு தகுந்தாப்புல தானே உனக்கு மாப்பிள்ளை பார்ப்பான்.. அதை மனசில வைச்சுக்கடி மகளே.."

மெலிதான கை தட்டல் ஒலி கேட்டது.. ராம்குமார் தான் கை தட்டினான்..

"பிய்த்து உதறிட்டிங்க அத்தை.." என்று பாராட்டவும் செய்தான்..

https://t.me/tamilpdfebooks

"இது எனக்கும்.. என் மகளுக்கும் இடையில நடக்கிற பேச்சு.. நீ வெளியே போ.." அகல்யா சத்தம் போட்டாள்...

"அடேங்கப்பா.. சவுண்டெல்லாம் பலமாத்தான் இருக்குத்தை.. ஆனா நறுக்குன்னு உங்களை நாலு கேள்வி கேட்காம நான் வெளியே போக முடியாதே அத்தை.." ராம்குமார் வருத்தப் படுகிறதைப் போல முகத்தை வைத்துக் கொண்டான்..

"நீ யார் என்னைக் கேள்வி கேக்க..?" அகல்யா கொதித்தாள்..

"ரம்யாவுக்கு அண்ணன்.." அழுத்தம் திருத்தமாக சொன்னான் ராம்குமார்..

அகல்யாவின் மனதில் பயம் வந்தது.. ரம்யாவை அவள் அழைத்து வந்த நோக்கத்தைப் பற்றி ராம்குமாருக்குத் தெரியாது.. அது தெரிந்தால் அவன் வீட்டில் உள்ள அனைவரையும் கிழி.. கிழியென்று கிழித்துத் தோரணம் கட்டி விடுவான் என்று தியாகராஜனே பயத்துடன் சொல்லியிருந்தார்.. அந்த நினைவு அப்போது வந்த தொலைத்ததில்.. அந்தத் தோரணமாக அகல்யாவை அவன் ஆக்கி விடுவானோ என்று பயந்துபோனாள் அகல்யா.. ஏற்கனெவே ஊர்மிளா அவளை தோரணம் கட்டியிருந்ததில்..

'இன்னைக்குன்னு எல்லாம் ஒன்னாச் சேர்ந்து வருதே..' என்று அரண்டாள்..

https://t.me/tamilpdfebooks

“இதென்னப்பா புதுசா பேசற..? ரம்யா என் தம்பி மக.. நீ என் தம்பி மகன்.. அவ உனக்குத் தங்கை.. நீ அவளுக்கு அண்ணன்.. என் தம்பி பிள்ளைகளான நீங்க ரெண்டு பேரும் எனக்கு ரெண்டு கண்கள்... இதையெல்லாம் நீ சொல்லித்தான் நான் புரிஞ்சுக்கனுமா ராம்.. நான் யாருப்பா.. உங்கப்பாவோட கூடப் பிறந்த பிறப்பு.. உனக்கு ரத்த சொந்தம்.. எது விட்டுப் போனாலும் பாசம் விட்டுப் போகுமா ராம்..”

எப்படித்தான் கோர்வையாக வந்து சேர்ந்ததோ தெரியவில்லை.. அகல்யா காய்ச்சல் வேகத்தில் உளருவதைப் போல உளறிக் கொட்டி கிளறி மூடினாலும் அவளுக்குத் தேவைப்பட்ட வார்த்தைகள் கோர்வையாக வந்து கொட்டத்தான் செய்தன..

ராம்குமார் கேலி கலந்த கோபத்துடன் அவளைப் பேச விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான்.. அவள் வளர்த்த பாசப்பயிரில் அவனிடமிருந்து கோபச் சிரிப்பு வெளிப் பட்டது..

“கெட்டிக்கார அத்தை நீங்க.. உங்க கெட்டிக் காரத்தனம் உங்க தம்பியிடம் இல்லாம போச்சே அத்தை.. எப்ப உறவு கொண்டாடனும்.. எப்ப துண்டு வெட்டி விடனும்ங்கிறதில கில்லாடியா இருக்கீங்க.. சபாஷ்..!”

“ஹி.. ஹி.. எல்லாம் எங்க அப்பா.. அதான் உன் தாத்தாவின் வளர்ப்பு ராம்.. நீ கிளம்பு..”

“எங்கே..?”

“உன் வீட்டுக்கு..”

https://t.me/tamilpdfebooks

"என் வீட்டுக்குப் போகாம உங்க வீட்டில உட்கார்ந்து சாப்பிடுவேன்னு நினைச்சீங்களா..? அது உங்க பழக்கம்.. என் பழக்கம் கிடையாது.."

ராம்குமாரின் குத்தல் பேச்சில் நெஞ்சை அடைத்து விழி குத்தி உட்காராமல் 'அப்பாடி..' என்று ஆசுவாசப் பட்டுப் போனாள் அகல்யா..

'பயல் ரோசக்காரன்.. அவன் வீட்டுக்குப் போயிருவான்..'

அவள் நினைத்து முடிப்பதற்குள் அந்த நிம்மதியின் மீது கல்லைத் தூக்கிப் போட்டான் ராம்குமார்.. டமாலென்று விழுந்த அந்த அடியில் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தாள் அகல்யா..

"ஆனா அத்தை.. கிளம்பறதுக்கு முன்னாலே உங்களை நாலு கேள்வி கேட்டுட்டுப் போகனும்.."

"அது எதுக்குப்பா உனக்கு..? நாலு பேர்தான் நாலு விதமா கேள்வி கேட்கனும்.. நீ ஒற்றை ஆள்.. ஒரு கேள்விதான் கேக்கனும்.. அந்தக் கேள்வியையும் அத்தையைப் பார்த்துக் கேட்கக் கூடாதுன்னு நீ போய்க் கிட்டே இருக்கனும்ப்பா.."

"என்ன தேவைக்குங்கிறேன்.. நாலு கேள்வியில்லை.. உங்க கிட்டக் கேட்க நாற்பதாயிரம் கேள்விகள் இருக்கு.."

"ஏம்ப்பா ராம்.. ஒற்றைக் கேள்வியே வேணாம்ங் கிறேன்.. இதில எதுக்காக நாற்பதாயிரம் கேள்விகளை இழுத்துக்கிட்டு வர்ற..?"

https://t.me/tamilpdfebooks

"நீங்க எதுக்காக ரம்யாவை இழுத்துக்கிட்டு வந்தீங்க..?"

ராம்குமார் கேட்டு விட்டான்.. அதை அவன் கேட்டு விட்டானே என்று பயந்தாள் அகல்யா.. சமரசமாக பேசவும் முயன்றாள்..

"நான்தானேப்பா இழுத்துக்கிட்டு வந்தேன்..? என் மகன் இழுத்துக்கிட்டு வந்தாத்தான் நீ கோபப்படனும்.. தப்புச் சொல்லனும்.."

"இழுத்துருவானோ.. கையை வெட்டிருவேன்.."

ராம்குமார் சீறினான்.. அகல்யா பயந்தாலும்.. ராம்குமார் வெட்டப் போவதாக சொல்லியது நரேந்திரனின் கையைத்தானே என்று ஆறுதலடைந்தாள்.. அந்த ஆறுதலில் ராம்குமார் ஒரு வண்டி மண்ணைக் கொண்டு வந்து கொட்டினான்..

"உங்க மகன் அருண்குமார்தான் ஆம்பளை.. இந்த ராம்குமார் என்ன வளையல் போட்டுக்கிட்டு இருக்கிறவனா..?"

"நீ ஏன்ப்பா அருண்குமாரை இழுக்கிற..?"

"உங்க மகன் அவன்தானே..?"

"நான் நரேந்திரனைச் சொன்னேன்ப்பா.. அதனால நீ அருண்குமாரை விட்டிரு.."

"நரேந்திரன் என்ன உங்க மகனா..? அருண்குமார் என்ன ஊரார் வீட்டு மகனா..? நானும் அப்போப் பிடிச்சுப்

https://t.me/tamilpdfebooks

பார்க்கறேன்.. அர்ச்சனாவை அருண்குமாரின் தங்கைன்னு சொல்ல மாட்டேங்கறிங்க.. நரேந்திரனின் தங்கைங் கறிங்க.. அருண்குமாரை உங்க மகன்னு சொல்லாம அதுக்கும் நரேந்திரனைக் கொண்டு வந்து நிறுத்தறிங்க.. பணம் காசு இருந்தாத்தாத்தான்.. பெற்ற மகனையே மகன்னு சொல்வீங்க போல..”

‘என்னாங்கடா இது..’ மனம் வெறுத்துப் போய் விட்டாள் அகல்யா..

அவளே வன்பாடுபட்டு நரேந்திரனுடன் உறவு முறையைக் கொண்டாடி அம்மா என்று அழைக்க வைத்திருக்கிறாள்.. அதைக் கனவிலும் மறந்து விடக் கூடாது என்று என்மகன்.. என்மகன்.. என்று சொன்னால் அதற்கும் இந்த ராம்குமார் நொனனாட்டியம் சொல்வானா..?

“உனக்கு என்னதாம்பா பிரச்னை..?” அகல்யா தலையைப் பிடித்தபடி கேட்டாள்..

அர்ச்சனாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.. ஆணானப் பட்ட அகல்யாவுக்கே ராம்குமார் தலைவலியை வரவழைத்து விட்டானா..?

‘வாட் எ மேன்..!’ அவளுக்கு காதல் பொங்கியது..

அவளது காதலனோ ‘யார் நீ’ என்பதைப் போல அவளை ஓர் பார்வை பார்த்துவிட்டு.. அகல்யாவிடம் சண்டை போடுவதிலேயே முனைப்பாக இருந்தான்..

“ரம்யா படிக்கத்தான் இங்கே வந்திருந்தான்னு நான் நினைத்தேன்..”

https://t.me/tamilpdfebooks

"அந்த படிப்பைத்தான் முடிச்சுட்டாளே.. கெட்டிக்காரி.. அதையெல்லாம் சரியா செய்திருவா... யாரு அவ...? உங்கம்மா பெத்த பெண்ணாச்சே.. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலே கண்ணாய் இருக்க மாட்டாளா..?"

"ஓ.. அதில உங்களுக்கு ரொம்பத்தான் வருத்தம் போல.. ரம்யா படிப்பைக் கவனிக்காம வேற எதைக் கவனிச்சிருக்கனும்னு நீங்க எதிர்பார்த்தீங்க..? நரேந்திரனையா..? இந்த திட்டத்தோட என் தங்கையை அழைத்துக்கிட்டு வர உங்களுக்கு எவ்வளவு தைரியம் இருந்திருக்கனும்..? உங்க மகளை இதைப்போல ஒருத்தரை மயக்கனும்னு எங்கம்மா அழைத்துக்கிட்டுப் போனா அனுப்பி வைத்து விட்டுத்தான் வேற வேலை பார்ப்பீங்களா..?"

"அத்தான்..." அர்ச்சனா மீண்டும் அதிர்ந்தாள்..

இதைச் சொல்லும்போது ராம்குமாரின் நாவு தடுமாற வில்லையா..? அவளின் அதிர்ந்த பார்வையில் ராம்குமாரின் விழிகளில் குற்றஉணர்வு வந்ததும்தான் அர்ச்சனா தந்நிலைக்குத் திரும்பினாள்..

'மன்னிச்சுரு..' ராம்குமாரின் விழிகள் இறைஞ்சின..

அர்ச்சனாவின் விழிகள் கலங்கின.. அவள் முகத்தை திருப்பிக் கொண்டாள்..

"நானென்ன உங்க அப்பா.. அம்மாவா..?" அகல்யா எகத்தாளமாக கேட்டாள்..

"ஒருநாளும் நான் என் மகளை உங்க அம்மா கூட அனுப்பி வைத்திருக்க மாட்டேன்.. உங்கப்பனும், அம்மாவும்தான் உன் தங்கை ரம்யாவை என்கூட அனுப்பி

https://t.me/tamilpdfebooks

வைச்சாங்க.. நாற்பதாயிரம் கேள்வியென்ன நாலு லட்சம் கேள்வியைக் கூட நீ அவங்களைப் பார்த்துக் கேளு.. என்கிட்டக் கேட்காதே... அர்ச்சனா உள்ளே வா..”

அதற்கு மேலும் அங்கே நின்றால் ராம்குமார் கோபத்தில் கை நீட்டி விடுவான் என்று பயந்தாளோ என்னவோ.. அகல்யா அர்ச்சனா வருகிறாளா என்று பார்க்காமல் உள்ளே ஓடி விட்டாள்..

“இதுக்கு மேலேயும் நான் உன் காதலை ஏத்துக் கிட்டு உன்னைக் கல்யாணம் பண்ணிக்குவேன்னு நினைக்கறியா..?”

ராம்குமார் கடினமான முகத்துடன் அர்ச்சனாவிடம் கேட்டு விட்டு வேக நடையுடன் போய் விட்டான்.. அவன் போன திசையையே வெறித்துப் பார்த்த வண்ணம் கண்களில் நீர்வழிய அங்கேயே நின்றிருந்தாள் ரம்யா..

86

முள்ளென்று தெரிந்திருந்தும்..
கை நீட்டத் தயங்காத..
அழகான ராட்சசி நீ....

பிற்பகலைத் தாண்டிய வேளையில் அகல்யா அறையை விட்டு வெளியே வந்தாள்.. மாலைவெயில் அடிக்கத் தொடங்கியிருந்தது.. ஹாலில் உட்கார்ந்தவளுக்கு

https://t.me/tamilpdfebooks

வனிதா காபி கொண்டு வந்து கொடுத்தாள்.. அதை வாங்கி உறிஞ்சியபடி நரேந்திரனை அந்த வீட்டுக்குள் இழுக்க என்ன வழி என்று ஆழமாக யோசித்துக் கொண்டிருந்தாள் அகல்யா..

அவளும் நான்கு தினங்களாக அதே யோசனையில் தான் இருந்தாள்.. சதியாலோசனையில் பங்கு பெற ரம்யாவும் அங்கு இல்லை என்பதில் தனிமையாக உணர்ந்தாள்.. ஊர்மிளாவுடன் சண்டை போட சென்னைக்குக் கிளம்பிப் போனவள் ரம்யாவை அங்கேயே விட்டு விட்டுவந்து... பெங்களூருக்கு வந்திருந்த ராம்குமாருடனும் சண்டை போட்டு அனுப்பி வைக்க நேர்ந்ததில் மனதளவில் அரண்டுதான் போயிருந்தாள்.. அடுத்த நாள் என்ன வருமோ என்று பயந்து.. பயந்து கண் விழித்ததில் நான்கு தினங்கள் ஓடியே போய் விட்டன..

எதுவும் நடக்கவில்லை.. எப்போதும் போல்தான் நிலைமை இருக்கிறது என்ற திட சித்தம் மனதில் திரும்பியதில் அகல்யா பழைய அகல்யாவாகி.. சதித்திட்டம் தீட்ட ஆரம்பித்து விட்டாள்..

அவளைக் கடந்து ஒரு நிழல் சென்றது.. நிமிர்ந்து பார்த்தாள்... அர்ச்சனாதான் கருப்பு வெள்ளை திரைப்படத்தில் சோகப் பாடலைப் பாடியபடி வரும் கதாநாயகியைப் போல வெறுமையாக பார்த்தபடி போய் கொண்டிருந்தாள்..

‘இவ ஏன் இப்படி இருக்கா..?’

https://t.me/tamilpdfebooks

அகல்யாவுக்குப் புரியவில்லை.. அவள் மகளை அழைத்தாள்..

"அர்ச்சனா.. ஏய் அர்ச்சனா.."

ஊஹீம்.. அகல்யாவின் குரல் அர்ச்சனாவின் காதுகளில் விழுகவே இல்லை.. அவள் யாருக்கு வந்த விருந்தோ என்பதைப் போல தோட்டத்தைப் பார்த்துப் போய் கொண்டிருந்தாள்.. தடுத்து நிறுத்தி அழைத்தால்.. அர்ச்சனாவா..? யார் அது..? என்று கேட்டு விடுபவளைப் போலப் போனவளைப் பார்த்து அகல்யா திகைத்தாள்..

"இவ ஏன் இப்படிப் போறா..? ஏதும் காத்து.. கருப்பு அடிச்சிருச்சா..?"

தனக்குத்தானே கேட்டுக் கொண்ட அகல்யாவின் கேள்விக்கு.. சமையலறையில் தண்ணீர் குடிக்கப் போன மாதுரி வாய் பொத்திச் சிரித்தாள்.. வனிதா அதை ஏனென்று கேட்கவில்லை...

இப்போதெல்லாம் அவள் மாதுரியுடன் எந்த பேச்சு வார்த்தையையும் வைத்துக் கொள்ளவதில்லை.. மாதுரியின் தலையைக் கண்டவுடன் மறக்காமல் அவள் கண்களில் படும்படி.. கரண்டியின் கைபிடி பகுதியை அடுப்பின் ஜ்வாலையில் வைத்து விடுவாள்.. அதைக் கண்டவுடன் மாதுரியின் வாயில் வரும் 'அக்கா' என்ற மழலை அழைப்பு மாறி 'வனிதா' என்ற இயல்பான பேச்சு வழக்கு வந்து விடும்..

சூடுபட்ட பூனை பாலைக் கண்டால் ஓடிவிடும்.. சூடுபட்ட மாதுரியும் கரண்டியைக் கண்டால் வாயை அடக்கி விடுவாள்..

https://t.me/tamilpdfebooks

அன்றும் கரண்டிக் காம்பு அடுப்பின் ஜ்வாலையில் படுத்து விட அதை ஓரக் கண்ணால் பார்த்தபடி வெகு சமர்த்தாக..

“வனிதா..” என்று அழைத்தாள்..

‘ஊம்..’ என்று கூடச் சொல்லாமல் வனிதா கத்தியை கையில் எடுத்தாள்.. மாதுரி ஓடிப் போக தோதாக வாசல் கதவின் பக்கமாக நின்று கொண்டு..

“இந்தம்மாவே பெரிய காத்து, கருப்பு, இவங்க இருக்கிற இடத்தில புதுசா காத்தும், கருப்பும் வந்திருமா..?” என்று கேட்டாள்..

அவள் சரியாகத்தான் சொல்கிறாள் என்பதில் வனிதாவுக்கு சிரிப்பு வந்தது.. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அடக்கிக் கொண்டாள்.. அசட்டையாக முகத்தை வைத்தபடி..

“இதை ஏன் என்கிட்டச் சொல்கிற..? போய் அவங்க கிட்டேயே சொல்லு..” என்றபடி அடுப்பில் குக்கரை வைத்தாள்..

“எவங்ககிட்டச் சொல்லச் சொல்ற..?” மாதுரி விழித்தாள்..

“அம்மாகிட்டத்தான்..” அலட்டிக் கொள்ளாமல் சொன்னாள் வனிதா..

“என்னது..?” மாதுரிக்கு வாயடைத்து விட்டது.

“ஆமாண்டி.. எதைச் சொன்னாலும் நேரடியாச் சொல்லிப் பழகு.. என்னைப் பத்திப் பேசனும்னா என்கிட்டப் பேசு.. அவங்களைப் பத்திப் பேசனும்னா அவங்க கிட்டப்

https://t.me/tamilpdfebooks

போய் பேசு.. அதை விட்டுட்டு புறணி பேசி என் வேலையை கெடுக்காதே..”

வனிதா விட்டி விட.. மாதுரி வாய் பேச முடியாத சோகத்துடன் டைனிங் ஹாலைத் துடைக்கப் போனாள்.. அங்கிருந்துதானே டி.வியில் வரும் சீரியல்களை தெளிவாக பார்க்க முடியும்..?

வனிதாவுக்கு எரிச்சலாக இருந்தது.. அவள் வாய்க்குள் மாதுரியைக் குறித்த வசவு வார்த்தைகளை முணுமுணுத்தபடி ஜன்னல் பக்கமாக எட்டிப் பார்த்தாள். போர்டிகோ தெரிந்தது.. புதிதா வந்து நின்ற காரைக் கண்டவள்.. வருவது யார் என்று கவனித்தாள்.. கார் கதவைத் திறந்து கொண்டு நரேந்திரன் இறங்கினான்..

‘ஐயா வர்றாரா..?’

வனிதா அவசரமாக அடுப்பை அணைத்து விட்டு சமையலறையில் மறைவாக நின்று கொண்டாள்.. அங்கிருந்து பார்த்தால் ஹால் தெரிந்தது, அவளது பின்னங்கழுத்தில் சூடான மூச்சுக்காற்றுப் பட்டது..

‘யாருடா.. இது..’

திரும்பிப் பார்த்தவள் அப்படியே நின்று விட்டாள்.. அவள் மேல் சாய்ந்த நிலையில் நெருக்கமாக ரமேஷ் நின்று கொண்டிருந்தான்.. வாயில் ஒற்றை விரலை வைத்துப் பேசாமல் இருக்கும்படி அவன் சைகை செய்ததில் அவனுக்கும் நடக்கப் போகும் நடப்பைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் இருக்காதா என்று வனிதா பேசாமல்

https://t.me/tamilpdfebooks

இருந்து விட்டாள்.. வெகு அருகாமையில் அவள் மீது உராய்ந்தபடி நின்றிருந்த ரமேஷின் அண்மையில் அவளது கன்னிமனம் பற்றிக் கொண்டு குளிர் காய ஆரம்பித்தது..

டக்.. டக் கென்ற காலடியோசையுடன் நரேந்திரன் வேகமாக உள்ளே வந்தான்.. காபி தம்பளருடன் ஆழ்ந்த சிந்தனையிலிருந்த அகல்யா எதிரே வந்து நின்ற நரேந்திரனைக் கண்டதும் தான் காண்பது கனவா.. இல்லை நனவா என்று கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள்..

"அண்ணா.."

அதற்குள் தோட்டத்திலிருந்த அர்ச்சனா ஓடி வந்து விட்டதில் அகல்யாவின் சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது.. தான் காண்பது கனவில்லை.. நனவுதான் என்று உறுதியாகி விட்டதில்..

"நரேன்.. வாப்பா.. இப்பத்தான் இந்த அம்மாவோட நினைப்பு உனக்கு வந்ததா..?" என்று நீலிக்கண்ணீர் விட ஆரம்பித்தாள்..

"போதும்.." நரேந்திரன் அர்ச்சனாவை பார்த்து உறுமினான்..

"அண்ணா.. நானென்ன செய்தேன்..?"

திகைத்து விழித்த அர்ச்சனாவின் மருண்ட பார்வையில் மனம் இளகிய போதும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கடுமையாகவே பேசினான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

"லுக் அர்ச்சனா.. உங்க அம்மாவை என்னுடன் பேச வேண்டாம்ன்னு சொல்லு.. ஐ ஹேட் ஹெர்.."

"உங்க அம்மாவா..? நரேன்.. நான் உனக்கும் அம்மாதானேப்பா..? எப்படிப்பா இப்படியொரு கொடிய வார்த்தையை உன் வாயாலே சொல்கிற..? இதைக் கேட்கத்தான் நான் உயிரோடு இருக்கிறேனா..? உங்க அப்பா போன போதே நானும் போயிருக்கக் கூடாதா..?" அகல்யா புலம்பினாள்..

"அனுப்பி வைத்ததே உங்கம்மாதானே.." நரேந்திரன் அர்ச்சனாவிடம் கேட்டான்..

"நரேன்.."

"என் பெயரைச் சொல்லக் கூடாதுன்னு சொல்லு அர்ச்சனா.. என் பெயரைச் சொல்கிற உரிமை இவங்களுக்கு இல்லை.. நரேனாம் நரேன்.. இவங்க என்ன எனக்குப் பெயர் வைத்தாங்களா..? போனால் போகுதுன்னு பார்த்தா.. ரொம்பவும்தான் ஆடிப் பார்க்கிறாங்க..? யார்கிட்ட..? நான் நரேந்திரன்.. தொலைத்துக் கட்டி விடுவேன்.. ஜாக்கிரதை.."

அகல்யா அரண்டு போய் தற்காலிகமாக வாயை மூடிக் கொண்டாள்.. அண்ணன் அந்த அளவுக்கு கோபப் படுகிறார் என்றால் எதுவோ நடந்திருக்க வேண்டும் என்ற யூதத்தில் அர்ச்சனா தாயை வெறுப்பாக பார்த்தாள்..

"எங்கே அருண்..?" நரேந்திரன் போட்ட சப்தத்தில்..

"அண்ணா.." என்று மாடிப்படிகளில் இறங்கி ஓடி வந்தான் அருண்குமார்..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் அருண்குமாரை முறைத்த முறைப்பில் அனல் பறந்தது.. அண்ணனின் கோபத்திற்கு ஆளாகும்படி என்ன தவறு செய்தோம் என்று புரியாதவனாக அருண்குமார் கைகளைப் பிசைந்தான்..

"மேரேஜ் பண்ணி வைத்தா ஒரு குழந்தைக்கு அப்பாவாகிற அளவுக்கு வயசாகிருச்சுல்ல.. இன்னும் உன்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னு தெரிஞ்சுக்காமலே இருப்பியா..?" கடினமான குரலில் கேட்டான் நரேந்திரன்...

"அண்ணா..?" அருண்குமாரின் கண்கள் கலங்கிச் சிவந்து விட்டன..

"இது உன் குடும்பம் அருண்.. என் குடும்பமில்லை. ஐ ஆம் ஸாரி டு ஸே திஸ்.. இந்த வார்த்தைகளை உன்னையும்.. அர்ச்சனாவையும் பார்த்துச் சொல்லியிருக்க எனக்கு வெகு நேரமாகியிருக்காது.. இருந்தும் நான் பொறுமையாய் போனேன்.. எதற்காக..? உங்க ரெண்டு பேரோட மனசும் காயப்பட்டு விடக்கூடாது என்பதற்காக.. அதை ஒரு அட்வான்ட்டேஜா நீங்க எடுத்துக்குவீங்களா..?"

சம்மட்டி அடியைப் போலத் தாக்கிய நரேந்திரனின் வார்த்தைகளில் அருண்குமாரும்.. அர்ச்சனாவும் துடித்துக் கொண்டிருக்க.. எதற்கும் அயராத அகல்யா இடையில் புகுந்து பேசினாள்..

"நீ நினைச்சுப் பார்ப்பேன்னு தெரியும்ப்பா.. உன் தம்பி மனசும் உன் தங்கை மனசும் பூப்போலன்னு உனக்குத் தெரியாம வேற யாருக்குப்பா தெரியும்..?

https://t.me/tamilpdfebooks

மூத்தவன் நீ.. இதுக ரெண்டையும் வளர்த்தவனும் நீதான்.. ஒரு கோட்டைக் கிழிச்சுத் தாண்டாதேன்னு சொன்னா இதுக ரெண்டும் தாண்டிருமா..? நீ கோடு கிழிப்பா.. அண்ணனுக்குக் கட்டுப்பட்ட பிள்ளைகள்ப்பா உன் தம்பியும்.. தங்கையும்.. நீ பார்த்து எதைச் செய்தாலும் அவங்க ஏற்றுக்குவாங்கப்பா.. உன் வளர்ப்பு அப்படி.. இதுகளுக்கு நீதானேப்பா தாயும், தகப்பனும்..?"

உணர்ச்சிப்பிழம்பான அகல்யாவின் பேச்சை..

"என்ன அலுவலுக்கு..?" என்ற ஒற்றைக் கேள்வியை அருண் குமாரிடம் கேட்டு தடைசெய்தான் நரேந்திரன்..

இது உன் குடும்பம் என்று அருண்குமாரைப் பார்த்து நரேந்திரன் சொல்லி விட்ட மறுகணமே அதை உடைக்கும் விதத்தில் அனைத்தும் நீ என்று நரேந்திரனின் காலடியில் அகல்யாவின் குடும்பத்தை இழுத்து நிறுத்திய அகல்யாவின் சாமர்த்தியத்தில் அவனுக்குள் கொலை வெறிதான் மூண்டது..

அகல்யாவின் பேச்சு எதிர்மறையான விளைவு களைத் தான் ஏற்படுத்தியது.. அர்ச்சனாவையும்.. அருண் குமாரையும் தள்ளி நிறுத்த நேர்ந்து விட்டதில்.. மனதுக்குள் சங்கடம் கொண்டிருந்தான் நரேந்திரன்.. அவர்களை முன்னிறுத்தி கேடயமாக அவர்களைப் பயன் படுத்திக் கொண்டு அகல்யா ஆட்டம் போடுகிறாள் என்பதால் அவர்களை தள்ளி நிறுத்த வேண்டிய கட்டாயத்திற்கு அவன் ஆளாகியிருந்தான்.. அந்த சங்கடத்தை அறவே துடைத்து விட்டது அகல்யாவின் சாகசப் பேச்சு..

https://t.me/tamilpdfebooks

'ஊஹீம்.. இவர்களுடைய உறவே இருக்கக் கூடாது..'

நரேந்திரன் தீர்மானித்து விட்டான்.. அதுவரை அருணிடமும், அர்ச்சனாவிடமும் லேசான இளக்கத்துடன் பேசியவனின் குரலில் ஒட்டாத தன்மையும்.. கடுமையும் வந்து ஒட்டிக் கொண்டன..

"அருண்..! உன்னையோ.. அர்ச்சனாவையோ நான் தத்து எடுத்துக் கொள்ளவில்லை.. அப்புறம் எப்படி உனக்கும், உன் தங்கைக்கும் நான் தாயும், தந்தையுமாக ஆவேன்..?"

நரேந்திரன் கேட்ட கேள்வியில் அருண்குமாருக்கு நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போல இருந்தது.. அவன் அகல்யாவை வெட்டி விடுவதைப் போல முறைத்து பார்த்தான்..

"நான் உங்களை வளர்த்தேனா..? இது என்னடா புதுக்கதையாய் இருக்கு..? உங்களை பிறந்ததில் இருந்து நான் பார்த்ததே இல்லையேடா.. என் அப்பா.. ரீமேரேஜ் பண்ணிக்கிட்டார்.. உங்கம்மா அவருக்கு செகண்ட் வொய்பா வந்தாங்க.. நீங்க அவருக்குப் பிறந்தீங்க.. இதனாலே உங்களை நான் சுமக்கனும்னு எனக்கென்னடா தலையெழுத்து..?"

"அண்ணா.." அருண்குமார் துடித்துப்போய் விட்டான்..

"பேசக் கூடாதுன்னுதான் நானும் பார்த்தேண்டா.. உங்கம்மா என்னைப் பேச வைக்கிறாங்க.. எதுக்காகடா உங்கம்மா சென்னைக்கு வந்தாங்க..?"

https://t.me/tamilpdfebooks

"ரம்யாவை அவளோட வீட்டில் விட்டுவிட்டு வரன்னு எங்ககிட்டச் சொன்னாங்கண்ணா.."

"அது உண்மையாங்கிறதை நீ வெரிஃபை பண்ணினயா..?"

"இல்லேண்ணா.."

"வெட்கமாயில்லை..? இவங்க குணம் தெரிஞ்சிருந்தும் நீ ஃபாலோ பண்ணாம எனக்கென்னன்னு இருந்திருக்க.."

"என்னண்ணா ஆச்சு..?"

"இவங்க சென்னையில இருக்கிற என் வீட்டுக்கு நான் இல்லாத சமயத்திலே வந்து ஊர்மிளாகிட்ட வம்பு வளர்த்திருக்காங்க.."

நரேந்திரன் சொன்ன செய்தியில் அகல்யாவைத் தவிர மற்றவர்கள் ஆனந்த வியப்பை அடைந்தார்கள்..

"அண்ணியா..? உங்ககூட சென்னையில் இருந்தாங்களா..?"

அருண்குமாரால் கேட்க முடியாத கேள்வியை குதூகலத்துடன் விழி விரிய அர்ச்சனா கேட்டாள்..

குட்டு வெளிப்பட்டு விட்ட ஆத்திரத்துடன் அகல்யா அதற்குப் பதில் சொன்னாள்..

"இப்ப நீ கேட்கற பாரு.. இதைப் போலதான் நானும் கேட்டேன்.. என்னம்மா.. நாலு வருசமா எங்கேயிருக் கிறன்னுகூடத் தெரியாம மறைஞ்சு போனவ.. திருமபி வந்து

https://t.me/tamilpdfebooks

புருசன் கூட வாழறதில எனக்குச் சந்தோசம் தான்.. அதை எதுக்காக ஒளிஞ்சு மறைஞ்சு வாழனும்..? வாழனும்னு நினைக்கிறவ தைரியமா பெங்களூர் வீட்டுக்கே வந்து வாழ ஆரம்பிச்சிருக்கலாமேன்னு கேட்டேன்ம்மா.. இது ஒரு குற்றமா..? மகராசி புருசன்கிட்டப் போட்டுக் கொடுத்து அனுப்பி வைச்சிருக்கா.."

"அர்ச்சனா.."

நரேந்திரன் போட்ட சத்தத்தில் அர்ச்சனா பயந்து போய் அகல்யாவின் வாயைப் பொத்தினாள்..

"கேட்டுக்கிட்டியாடா..?" அருண்குமாரிடம் விழி சிவக்கக் கேட்டான் நரேந்திரன்..

"அண்ணா.."

"உங்களைப் பாவம் பார்த்த கொடுமைக்கு உங்க அம்மா என் வொய்பைப் பார்த்து என்ன கேள்வியைக் கேட்டிருக்காங்க தெரியுமா..? அவ திருட்டுத்தனமா என்னுடன் குடும்பம் நடத்தறாளாம்.. எப்படி..? செகண்ட் வொய்பா வந்தவங்களோட மெண்டாலிட்டியும் அதே ரேன்ஜிலதான் இருக்கும்ங்கிறதை இவங்க புரூவ் பண்ணிட்டாங்களா இல்லையா..?"

அருண்குமார் துக்கத்துடன் கண்களை இறுக மூடிக் கொண்டான்.. அனைத்தும் முடிந்து விட்டது என்பது அவனுக்குப் புரிந்து விட்டது..

இனி நரேந்திரன் அவர்களை மன்னிக்கப் போவதில்லை.. அவனுடைய நிழலில் வாழ அவர்களை அனுமதிக்கப் போவதில்லை..

https://t.me/tamilpdfebooks

'என்ன காரியம் செய்து விட்டிங்கம்மா..' அவன் மனம் புலம்பியது..

87

பூப்பூக்கும் காதல்சொல்லி..
பித்தாக எனை மாற்றிவிட்ட
அழகான ராட்சசி நீ....

அர்ச்சனாவின் கண்களில் இருந்து தாரை தாரையாக கண்ணீர் வடிய ஆரம்பித்து விட்டது.. அதை திருப்தியுடன் பார்த்தாள் அகல்யா.. அவள் சொல்லிக் கொடுக்காமலே மகள் அழுக ஆரம்பித்து விட்டதில் அவளும் முந்தானைச் சேலையைச் சுருட்டி வாய்க்குள் அடைத்துக் கொண்டு துக்க வீட்டுக்குள் துக்கம் விசாரிக்கப் போனவளைப் போல நின்று வைத்தாள்..

அருண்குமார் ஆண்பிள்ளை.. அர்ச்சனாவைப் போல அவனால் அழுது விட முடியாது.. உதட்டைக் கடித்தபடி பேசாமல் நின்றான்..

"அருண்.. என் அப்பா சாகப் போகிற சமயத்திலே என்னைக் கூப்பிட்டாரு.. அவரோட செகண்ட் வொய்புக்கு பிறந்த பிள்ளைகளுக்கு உதவி செய்ன்னு கேட்டுக் கிட்டாரு.. நானும் அதைத்தான் செய்தேன்.. உங்கம்மாவுக்கு எடுத்துச் சொல்லு.. நான் உங்களுக்கு செய்தது உதவிதான்.. கடமையில்லை.."

https://t.me/tamilpdfebooks

அருண்குமார் மரம் போல நின்றான்.. இதுபோன்ற வார்த்தைகளைக் கேட்பதை விட உன் உதவியே எனக்கு வேண்டாம் என்று நிமிர்ந்து விலகிப் போய் விடலாம்தான்.. ஆனால் அருண் நரேந்திரனிடம் நன்றிக்கடன் பட்டு விட்டானே.. அவனையும்.. அர்ச்சனாவையும் படிக்க வைதது.. அவர்கள் வசிக்க வீட்டை வாங்கிக் கொடுத்து.. அருணுக்கு உயர்ந்த வேலையையும் போட்டுக் கொடுத்த நரேந்திரன் பேசினால் அவன் கேட்டுக் கொண்டுதானே ஆக வேண்டும்..?

நரேந்திரன் கடுமையானவன்தான்.. அருணையும் அர்ச்சனாவையும் ஒரு அளவுக்கு மேல் உரிமை கொண்டாட விடாமல் தள்ளி நிறுத்தியிருந்தவன்தான்.. ஆனாலும் இந்த அளவுக்கு மனம் நோகும்படி அவன் பேசியதில்லை..

இன்று அப்படி அவன் பேசுகிறான் என்றால்.. அதற்குக் காரணம் அகல்யா அல்லவா..?

“என்னோட இண்டஸ்டரி அப்பாவோட சொத்தில்லை.. என்னைப் பெற்ற அம்மாவோட சொத்து.. என் தாய் வழிச் சொத்தை பங்கு போட்டுக்கிற உரிமை மாற்றாந்தாயின் பிள்ளைகளான உங்களுக்கு இல்லை அருண்..”

“அண்ணா.. அது எங்களுக்கும் தெரியுமே.. நாங்க உங்களிடம் சொத்தை எதிர்பார்த்ததே இல்லையே..”

அருண்குமார் தழுதழுக்க.. அர்ச்சனாவும் கூடச் சேர்ந்து தலையை ஆட்டினாள்..

https://t.me/tamilpdfebooks

'அடப்பாவிகளா..! இதுக ரெண்டும் என் வயித்திலே தான் பொறந்ததுகளா..?' அகல்யா மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டு ஊடே புகுந்தாள்..

"நீ எதிர்பார்க்காம இருக்காம் அருண்.. அர்ச்சனாவும் உன்னைப் போலவே நினைக்கலாம்.. ஆனா ஊர் உலகம் என்ன சொல்லும் அருண்..? இவ்வளவு பெரிய கோடிஸ்வரன்.. தன்னோட தகப்பன் பெத்த பிள்ளைகளை.. உடன் பிறப்புகளை.. தள்ளி வைச்சுட்டான்னு தானே சொல்லும்..? அப்படி ஒரு பெயர் உன் அண்ணனுக்கு வந்து விடக் கூடாதுன்னு தானே நான் அடிச்சுக்கறேன்..? அம்மான்னு கூப்பிட்ட மகன் வீட்டை விட்டு வெளியே போனா இந்தப் பெரிய மனுசனுக்கு தாயை மதிக்கத் தெரியலைன்னு சொஸைட்டியில பேசிற மாட்டாங்களா அருண்..? என்னதான் நான் உன் அண்ணனை பத்து மாதம் வயிற்றிலே சுமந்து பெறலைன்னாலும் உங்கப்பாவுக்கு நானும் பெண்டாட்டிதானேடா.. உன் அண்ணனோட அம்மாதானேடா.. இதை அழிக்க முடியுமா அருண்..? யார் குடும்பத்திலே பிரச்னை இல்லை..? இது நம்ம குடும்பம்டா அருண்.. உன் அண்ணன் இந்தக் குடும்பத்துக்கு தலைவன்.. குடும்பத்தலைவன் அவனோட பொறுப்புகளை உதறிட்டு வெளியே போகக் கூடாதுப்பா.. இதனாலதான் நான் உன் அண்ணனுக்கு புத்தி சொல்லி நம்ம வீட்டுக்குக் கூப்பிட்டு வந்துரலாம்ன்னு தேடிப் போனனேன்.."

நரேந்திரனின் கை முஷ்டி இறுகியதை கவலையுடன் பார்த்தான் அருண்குமார்.. இந்த அம்மா வாயைத்

https://t.me/tamilpdfebooks

திறக்காமல் இருந்தால் தேவலாம்.. என்று அவனுக்குத் தோன்றியது..

"அம்மா.." எரிச்சலுடன் முகம் சுளித்தான்..

அகல்யாவா பேச்சை நிறுத்துவாள்..? அவள் மீண்டும், மீண்டும் நரேந்திரனைச் சுற்றித் தளைகளை வீசி அந்த வீட்டுக்குள் அவனை இழுத்துக் கொள்ளும் முயற்சியில் இருந்தாள்..

"சரிப்பா.. உன் அண்ணனுக்கு பெண்டாட்டியை மறக்க முடியலை.. இவன் தேடிப் போய் காலில் விழுந்தான்.. அவளும் போனால் போகுதுன்னு இவன்கூட குடும்பம் நடத்தக் கிளம்பி வந்துட்டா.. உன் அண்ணன் என்ன செய்திருக்கனும்..? நேரே நம்ம வீட்டுக்கு கூப்பிட்டுக்கிட்டு வரவேண்டியதுதானே..? எதுக்காகப்பா.. ஒளிவு மறைவா சென்னையில குடித்தனம் வைக்கனும்..?"

ஆக்ரோசமான அகல்யாவின் கேள்வியில் நரேந்திரன் தன் முன்னாலிருந்த கண்ணாடி டீப்பாயை ஓங்கி ஒரு உதை உதைத்தான்.. அதுவே கண்ணாடி டீப்பாய்.. வேகமாக காற்றில் பறந்து சுவரில் மோதி கண்ணாடித் துகள்களாக சிதறி ஹாலின் தரை முழுவதும் பரவியது..

"ஐயோ.." அர்ச்சனா அலறினாள்..

துகள் துகளாக கிடந்த கண்ணாடித் துண்டுகளை விரக்தியுடன் பார்த்தான் அருண்குமார்..

'உடைந்த கண்ணாடி ஒட்டாது..'

https://t.me/tamilpdfebooks

அவன் மனம் சொல்லியது.. இனி ஒரு நாளும் நரேந்திரனின் தம்பி என்று அவன் உரிமை கொண்டாடி விட முடியாது.. நரேந்திரன் அதற்கு இடம் கொடுக்கவே மாட்டான்..

'மனிதர்களோட மதிப்புத் தெரியாத பிறவி..' வெறுப்புடன் அகல்யாவை பார்த்தான்..

அகல்யா அப்போதும் அஞ்சாமல்தான் நின்றிருந்தாள்..

"உள்ளதைச் சொன்னால் ஏன் அருண் உன் அண்ணன் கோபப் படுகிறான்..?" என்று கேட்டுக் கொண்டிருந்தாள்..

"அருண்.. சில மேட்டர்களை பேசி முடிக்கனும்னு நான் இங்கே வந்திருக்கேன்.. உன் அம்மா என்னை கொலைகாரனாக்கி விடுவாங்க போல இருக்கு.. பார்த்துப் பேசச் சொல்லு.." எச்சரித்தான் நரேந்திரன்..

"எதையும் முடிக்க முடியாதுப்பா.. இது பிறப்பிலே வந்த உறவுடா அருண்.. உன் அப்பாதான் உன் அண்ணனுக்கும் அப்பா.. இது முடிகிற உறவா..?" அகல்யா விட்டுக் கொடுக்காத விடாக்கண்டியாக இருந்தாள்..

"அப்பவே என் தாத்தா சொனன்னார்.. இவங்களை வைக்க வேண்டிய இடத்திலே வை நரேந்திரான்னு.. அவர் சொன்னதை நான் கேட்கலை.. அதுதான் இந்த அளவுக்கு வளர்ந்து நிற்குது.." வெறுப்புடன சொன்னான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

அவன் சொன்ன விதத்தில் அருணுக்கும்.. அர்ச்சனாவுக்கும் உயிர் போவதைப் போல இருந்தது.. அகல்யாவுக்கு அப்படி எல்லாம் இல்லை..

"ஊரில இருக்கிறவங்க குடும்பத்தைப் பிரிக்கனும்னு ஆயிரம் சொல்வாங்க.. அதையெல்லாம் கேட்டா குடும்பம் ஒற்றுமையா இருக்க முடியாதுடா அருண்.." என்றாள் அவள்..

"ஊரில இருக்கிறவங்க..!"

நரேந்திரன் உரத்த குரலில் சிரித்தான்.. அவன் சிரிப்பில் அர்ச்சனாவின் இதயம் தடதடத்தது.. இந்த அம்மா எப்படி பயமற்றவளாக நிற்கிறாள் என்ற ஆச்சரியமெல்லாம் அவளுக்கு வரவில்லை.. வெறுப்புத்தான் வந்தது..

'இவங்களாலே எத்தனை பேச்சை கேட்க வேண்டியிருக்கு..'

"என் தாத்தா.. தி கிரேட் இண்டஸ்ட்ரியலிஸ்ட் கஜேந்திரன்.. பெங்களூரின் நம்பர் ஒன் பிஸினெஸ்மேன.. ஊரில இருக்கிறவர் அவர் பெற்ற மகளோட ஹஸ்பெண்டுக்கு செகண்ட் வொய்பா வந்துட்டு.. அவரோட சொத்து மேலேயே ஆசைப்படற உங்கம்மா அவரோட பேரனுடைய குடும்பம்..! குட் ஜோக்.. எப்படிடா உங்க அம்மாவாலே இப்படிப் பேச முடியுது..? எலும்பில்லாத நாக்குன்னா எப்படி வேண்டும்னாலும் பேசுமா..?"

அருண்குமாருக்கு அவமானமாக இருந்தது.. உரிமையில்லாத சொத்தை அவன் கேட்டானா..?

https://t.me/tamilpdfebooks

அகல்யா எதற்காக அடுத்தவரின் சொத்துக்கு ஆளாய் பறக்கிறாள்..?

"உனக்கும்.. எனக்கும் ஒரே அப்பாதான் அருண்.. ஒரே அம்மா இல்லை.. உன் அம்மா வேறு.. என் அம்மா வேறு.. நாம மூன்று பேரும் அப்பாவோட சொத்துக்கு வாரிசா உரிமை கொண்டாட முடியும்..? என் அம்மாவோட சொத்துக்கு நான் மட்டும்தான் வாரிசா உரிமை கொண்டாட முடியும்.. நம்ம அப்பாகிட்ட என்ன இருந்தது..? கடன்தான் இருந்தது.. அதுவும் லட்சக்கணக்கான ரூபாயில்ல.. கோடிக்கணக்கில் கடன் வாங்கிட்டு ஹாயாய் செத்துப் போனார்.. அவருக்கு பிள்ளையாய் பிறந்து தொலைச்சுட்டேன்னு அதையெல்லாம் அடைச்சேன்.. வேணும்னா சொல்லு.. அந்தக் கடனில உனக்கும் அர்ச்சனாவுக்கும் பங்கு தர்றேன்.. உங்களாலே கட்ட முடிஞ்சா கட்டுங்க.."

நரேந்திரன் பேசுவதை வீட்டில் வேலை செய்யும் வேலையாள்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற நினைவில் முகம் சிவந்தாள் அர்ச்சனா.. அருண்குமாருக்கோ உயிரே போவதைப் போல இருந்தது.. அகல்யாவுக்குத்தான் அப்படி எதுவும் இருக்காதே.. அவள்..

"நல்லாயிருக்கு அருண் உங்க அண்ணன் சொல்கிற நியாயம்.. இதை வெளியில சொன்னா உங்க அண்ணனுக்குத்தான் மரியாதை குறைவு.." என்று நொடித்தாள்..

https://t.me/tamilpdfebooks

"மிரட்டிப் பார்க்கறிங்களாடா..?" கண்கள் இடுங்க ஒரு தினுசான குரலில் வினவினான் நரேந்திரன்..

"இல்லேண்ணா.." அருண்குமார் தடுமாறினான்..

"வெளியில போய் சொல்லிப் பாருங்கடா.. உங்க மரியாதைதான் குறையும்.. எதையும் வெளிவிடாம நீங்க வாழ வழிசெய்தேன் பாரு.. அதுக்காகத்தான் என் குடும்பத்தை சிதறடிச்சீங்களா..?"

"அண்ணா.."

"பேசாதே அருண்.. இனி எனக்கும்.. உங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.. என் பெயரை.. நீங்களும் உங்க அம்மாவும் யூஸ் பண்ணக் கூடாது.. எனக்குச் சொந்தம்ன்னு சொல்லிக்கக் கூடாது.."

"அதெப்படி சொல்லாம இருக்க முடியும்..?" அகல்யா நிஷ்டுரமாக கேட்டாள்..

"உன் அண்ணன் நினைக்கிறதைப் போல இது லேசில் அறுத்துப் போடற உறவு இல்லை அருண்... இது பாசச் சங்கிலி.. உன் அண்ணனோட அப்பாவுக்கு நான் பெண்டாட்டி.. நீங்க அவரோட பிள்ளைகள்.. இதையெல்லாம் இல்லைன்னு உங்க அண்ணனாலே சொல்ல முடியுமா..?"

"முடியும்.."

அகல்யா விட்ட சவாலுக்குப் பதில் சொன்னான் நரேந்திரன்.. அவன் பேசட்டும் என்று விட்டு விட்டான்

https://t.me/tamilpdfebooks

அருண்குமார்.. எந்த அளவுக்கு நரேந்திரன் போவான் என்பதை அறிந்தால்தான் அகல்யா அடங்கியிருப்பாள்.. இல்லையென்றால் அவளை அடக்க அருண்குமாராலும் முடியாது.. அர்ச்சனாவாலும் முடியாது..

"கேட்டுக்க அருண்.. நான் மீடியாவில இண்டர்வியூவே கொடுப்பேன்.. கஜேந்திரனின் மகள் வழிப் பேரனான எனக்கும்.. என் அப்பாவான செழியனின் இன்னொரு குடும்பத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதை அறிவித்து விடுவேன்.. சட்டப்படி என் அம்மாவின் சொத்துக்கு நான் மட்டும் தான் வாரிசாக இருக்க முடியும்ங்கிறதை வக்கீல் மூலமா நோட்டிஸ் விட்டிருவேன்.. பட் அருண்.. அதுக்குப் பின்னாலே நீயும், உன் தங்கையும் உங்க அம்மாவுடன் இந்த வீட்டை விட்டு வெளியே போக வேண்டியிருக்கும்.. ஆல்ரெடி உன்னை வேலையிலிருந்து தூக்கிட்டேன்.. இப்படிப்பட்ட ஆக்சன்களை நான் எடுத்துட்டேன்னா நீ எங்கேயும் வேலைக்குப் போக முடியாது.."

'என்னது..?'

அகல்யாவுக்கு மூச்சை அடைத்தது.. முதன் முதலாக அவள் திகிலடைந்தாள்.. அருண்குமாரை வேலையை விட்டே நரேந்திரன் தூக்கி விட்டான் என்றால் அவன் எதையும் செய்யத் தயங்க மாட்டான் என்பதில் அகல்யா நடுங்கத் தொடங்கினாள்..

'இந்த வீட்டை விட்டு வெளியில் போகிறதா..?'

https://t.me/tamilpdfebooks

அருண்குமாருக்கும் வேலை இல்லை.. நரேந்திரனும் விலகி விட்டான்.. வீட்டை விட்டும் வெளியேற வேண்டும் என்றால் அகல்யா வயதுப் பெண்ணை வைத்துக் கொண்டு எங்கு நிற்பாள்..?

'பிளாட் பாராத்திலா..?'

நினைக்கும் போதே அவளின் நெஞ்சம் பதறியது..

அப்படிப்பட்ட பதட்டங்கள் எதுவும் இல்லாமல்.. நரேந்திரன் கொடுக்கும் தண்டனைகளை வாங்கிக் கொள்ளச் சித்தமானவர்களாய் அருண்குமாரும்.. அர்ச்சனாவும் நின்றிருந்தார்கள்..

"நீங்க என்ன செய்தாலும் சரி அண்ணா.."

அருணின் பணிவில் நரேந்திரன் கொஞ்சம் மலையிறங்கினான்.. அவனது முகபாவனையில் அதை யூகித்து விட்ட அகல்யா..

"நீ ராமருக்கேத்த லட்சுமணன் அருண்.." என்று திரும்பவும் முதலில் இருந்து ஆரம்பிக்கப் போனாள்..

"ஏண்டா.. உன் அம்மா அடங்கவே மாட்டாங்களா..?"

நரேந்திரன் திரும்பவும் மலையேற.. அகல்யா சப்த நாடியும் ஒடுங்கிப் போய் வாய் மேல் விரலை வைக்காத குறையாக நின்றாள்..

"அருண்.. சட்டம் வேறு.. மனசு வேறு.. என் சொத்தில சட்டப்படி உனக்கும்.. அர்ச்சனாவுக்கும் உரிமையில்லை.. பட் என் மனசு..? அது உன்னையும்.. அர்ச்சனாவையும் அனாதையா விடக் கூடாதுன்னு சொல்லுது.."

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அர்ச்சனா அழுக ஆரம்பத்து விட்டாள்.. அருண்குமாரின் கண்களும் பனித்தன.. நரேந்திரன் கை நீட்ட..

“அண்ணா..” என்று அவன் தோள் சாய்ந்தாள் அர்ச்சனா..

“என்ன புள்ள இது..? வெடிகுண்டு புஸ்வாணமா போச்சு..” ரமேஷ் வனிதாவிடம் கிசுகிசுத்தான்..

“அப்படியில்லைன்னு எனக்குத் தோணுதுய்யா..” என்றாள் வனிதா..

அவளது கணிப்புத்தான் சரியாக இருந்தது.. அதுதான் சாக்கென்று வாயிலிருந்த ஒற்றை விரலை எடுத்து விட்ட அகல்யா..

“என் கண்ணே பட்டிரும் போல இருக்கு.. யார் கண்ணு பட்டுச்சோ என் பிள்ளைகள் மூணுபேரும் ஆளுக்கொரு திசையில பிரியத் தெரிஞ்சாங்களே.. எப்படியோ.. எல்லாம் சரியாகி இப்பக் குடும்பம் ஒன்னாகிருச்சு.. அர்ச்சனா.. அண்ணனை மாடிக்குக் கூப்பிட்டுக்கிட்டு போம்மா.. அவன் ரூமில ரெஸ்ட் எடுக்கட்டும்.. பாவம் புள்ளை.. கேட்பார் பேச்சைக் கேட்டு குழம்பிப் போய் வந்திருக்கு..” என்று வசனம் பேசி சேலை முந்தானையில் கண்களைத் துடைத்துக் கொண்டாள்..

நரேந்திரன் அவளை உதாசீனமாய் பார்த்தபடி அருண்குமாரிடம் மூன்று பத்திரங்களை நீட்டினான்.. அருண் தயக்கத்துடன் வாங்கிக்கொண்டான்..

https://t.me/tamilpdfebooks

"அருண் இந்த வீட்டையும்.. நான் புதிதா ஆரம்பித்திருக்கிற சின்னக் கம்பெனியையும் உன் பெயருக்கு எழுதி வைத்திருக்கிறேன்.. இது அர்ச்சனாவுக்கு கல்யாணப் பரிசா சென்னையில அவள் பெயருக்கு வாங்கியிருக்கிற வீட்டோட பத்திரம்.. உங்க இரண்டு பேருக்கும் நான் செய்ய வேண்டியதை செய்துட்டேன்.. பிழைத்துக் கொள்வது உங்களின் சாமர்த்தியம்.. இனி எதற்காகவும் என்னைத் தேடி நீங்க யாரும் வரக்கூடாது.. உங்களுக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.. நீங்க யாரோ.. நான் யாரோ.."

நரேந்திரன் திரும்பி நடந்து விட்டான்.. அருண்குமார் அகல்யாவை வெறுப்புடன் பார்த்துவிட்டு மாடிக்குப் போய் விட்டான்.. அர்ச்சனா தனிமையில் கண்ணீர்விட தோட்டத்துக்குப் போய்விட்டாள்..

அகல்யா இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள்..

88

மோகத்தீயை பற்ற வைத்து..
மோகினியாய் எனை ஆட்டிவைக்கும்..
அழகான ராட்சசி நீ....

மௌனமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தான் நரேந்திரன்.. அவனைவிட மௌனமாக பரிமாறிக்

https://t.me/tamilpdfebooks

கொண்டிருந்தாள் ஊர்மிளா.. விழியுயர்த்தி அவளைப் பார்த்தவனின் விழிகளில் சினம் வந்தது.. என்று அகல்யா அந்த வீட்டிற்கு வந்து விட்டுப் போனாளோ.. அன்றிலிருந்து ஊர்மிளாவிடமிருந்து வெளிப்பட்ட ஒன்றிரண்டு வார்த்தைகளும் நின்று விட்டன.. முற்றிலுமாக அவள் விலகி நின்று விட்டதில் நரேந்திரன் பொருமிப் போனான்..

‘இவளுக்கு அநியாயம் நடந்தா அதைப் பார்த்துக் கிட்டு நான் கைகட்டி நிற்பேன்னு எப்படி இவ நினைக்கிறா..?’

அதைத்தான் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

“ஏய்.. நில்லுடி..”

நகர்ந்து கொண்டிருந்தவளின் கை பிடித்து தடுத்து நிறுத்தியவன் கோபத்துடன் அந்தக் கேள்வியை அவளிடமே கேட்டான்..

“அன்றைக்கு அப்படித்தானே நின்றீங்க..?” அவள் நிதானமாக வினவினாள்..

நிமிர்ந்து அவன் முகத்தை நேருக்கு நேராகப் பார்த்து.. விழியோடு விழி கலக்க கேள்வி கேட்டவளின் பார்வை அவன் இதயத்தை வாளில்லாமலே அறுத்தது..

“ஊர்மி..!”

“அன்றைக்கு மட்டும் நீங்க ஹாலில் கேட்ட கேள்வியை.. நம்ம ரூமிலே என்னை நிற்க வைத்துத்

https://t.me/tamilpdfebooks

தனியாக் கேட்டிருந்தா.. நான் அத்தனையையும் சொல்லியிருப்பேனே.. கல்யாணமான முதல் நாளே அவங்க என்னைக் கேட்க ஆரம்பித்த கேள்வியில இருந்து.. மொட்டை மாடியில நிலாச்சோறு சாப்பிட்டப்ப நாம பேசிக்கிட்டு இருந்ததை அவங்க ஒளிஞ்சு மறைந்து வேடிக்கை பார்த்தது வரைக்கும் பிட்டுப்பிட்டு வைச்சிருப்பேனே.. நீங்க அதைச் சொய்யலையே.. அதையெல்லாம் ஹாலில் வைத்து அத்தனை பேரின் முன்னாலேயும் சொல்ல முடியுமா..?"

"என்னடி சொல்கிற..? மூன் லைட் டின்னரை அவங்க ஒளிஞ்சிருந்து பார்த்தாங்களா..? சீச்சீ..."

நரேந்திரனின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.. அதனாலெல்லாம் ஊர்மிளா ஆஹா என்று மகிழ்ந்து விடவுமில்லை.. அவள் மனதிலிருந்த அத்தனை சுமையையும் அவன் முன்னால் கொட்டி விடவுமில்லை..

அவள் கர்ம சிரத்தையாக.. அவன் கையிலிருந்து தன் கையை உறுவிக் கொள்வதிலேயே முனைப்பாக இருந்தாள்..

"இப்ப எதுக்காக ஓடறதிலேயே குறியாய் இருக்க..?" கோபத்துடன் அவன் அதட்டினான்..

"பாடின வாயும்.. ஓடின காலும் சும்மா இருக்காதாம்.. அன்றைக்கு நீங்க என்னை நிற்க வைத்துக் கேட்ட கேள்வியிலே ஓட ஆரம்பிச்சேனில்ல.. அப்ப ஆரம்பிச்ச ஓட்டம் நிற்கவே மாட்டேங்குது.. அதான்.. நான்

https://t.me/tamilpdfebooks

ஓடறதிலேயே குறியாய் இருக்கேன்..” அவள் விளக்கம் சொன்னாள்..

எடுத்தெறிந்து அவள் பேசிய பேச்சு நரேந்திரனுக்கு கடுப்பை வரவழைப்பதற்குப் பதில் சிரிப்பை வரவழைத்தது..

‘சோமசுந்தரத்தின் மகளில்ல.. பேச்சுன்னு வந்தா ஒருகை பார்க்காம விட மாட்டா..’ அவன் அவள் பேச்சை ரசித்தான்..

“இந்த வாய்க்கொன்னும் குறைச்சலில்ல.. இந்தப் பேச்சையெல்லாம் என்னிடம் போனில் பேசியிருக்கனும்.. நான் பெங்களூரில் காலடி வைக்கிறதுக்குள்ள அந்த வீட்டில நடந்த அத்தனை நிகழ்வுகளையும் நீ எனக்குத் தெரியப்படுத்தியிருந்திருக்கனும்.. அது உன்னுடைய கடமையும் கூட.. பக்கத்தில இருந்தாத்தான் உனக்கு புருசன் நினைப்பு வருமா..? தொலை தூரத்துக்கு பறந்து போயிட்டா அவனை நீ நினைச்சுக் கூடப் பார்க்க மாட்டியா..?”

நரேந்திரனின் வார்த்தைகளில் அவன் முகத்தை ஊன்றிப் பார்த்த ஊர்மிளாவின் முகத்தில் வந்து கவிந்த கோடிக்கணக்கான உணர்வின் அலைகளில் நரேந்திரன் பிரமித்துப் போய் விட்டான்.. அந்த உணர்வலைகள் உணர்த்திய காதலின் வர்ணஜாலத்தில் அவனின் கடந்து போன காதல் பார்வைகளும் அவள் விழிகளில் வந்து போயின..

எந்தப் பார்வைக்காக நரேந்திரன் ஏங்கிக் கொண்டிருந்தானோ.. அந்தப் பார்வையை அவள்

https://t.me/tamilpdfebooks

விழிகளில் கொண்டு வந்து நிறுத்தி.. மாற்றினாள்.. நொடிப் பொழுதுக்கு மேல் நீடிக்காத அந்த வசந்த கால நினைவுகளின் சுவடுகளில் மனம் வெறுத்து விட்டான் நரேந்திரன்..

"நீ நிலையாவே இருக்க மாட்டியா ஊர்மிளா..?"

அவள் விரக்தியுடன் சிரித்தாள்..

"அந்த வரம் வாங்கி நான் பிறக்கலை.."

அப்போதும் அவள் கை அவன் கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் போராட்டத்தில்தான் இருந்தது..

"ஊஹூம்.." என்றான் நரேந்திரன்..

அவன் பிடி இரும்புப் பிடியாக இருந்தது.. என்னதான் அவள் போராடினாலும் அவன் பிடியிலிருந்து அவள் கையை உறுவிக் கொள்ளவே முடியவில்லை..

"நானா நினைச்சாத்தான் உன்னால கையை உறுவிக்க முடியும்.. நீ நினைச்சா அது முடியாது.. உன் கை என் கைக்குச் சொந்தம்டி.. இந்தக் கையை என் கை பிடிச்சுத்தான் அக்கினியை வலம் வந்தது.."

நரேந்திரனின் நினைவுறுத்தலில் அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அந்த அற்புதமான பந்தத்திற்கு அவன் உரிய மரியாதையை அளித்தானா..?

"நான் கொடுத்தேன்.. கொடுத்துக்கிட்டு இருக்கேன்.. இனியும் கொடுப்பேன்.." அவள் மனதை படித்ததைப் போல அவன் சொன்னான்..

https://t.me/tamilpdfebooks

அவள் உதட்டைச் சுழித்தாள்.. அதில் தெரிந்த அசட்டையில் அவன்பிடி இறுகியது.. அவள் கை வலித்தது.. வலியை முகத்தில் அவள் காட்டாவிட்டாலும் அவள் கண்கள் காட்டிக் கொடுத்து விட்டன.. அவன் பிடி லேசாக தளர்ந்தது.. அவள் வலி குறைந்தது..

"இந்த அலட்சியம் ஆகாது.." கடினமான குரலில் சொன்னான் நரேந்திரன்..

"என்னை விட்டு விலகிப் போனவ நீ.. சும்மாவும் போகலை.. உன் வயிற்றில் என் குழந்தை வளருதுங்கிற விவரத்தை என்னிடம் சொல்லாம போன.. மூனரை வருசமா நான் அநாதையா நின்னேண்டி.."

"இல்லையே.." ஊர்மிளா மறுத்தாள்..

"உங்களுக்குன்னு வீடு இருந்தது.. உங்க 'அம்மா..' இருந்தாங்க.. தம்பி, தங்கை இருந்தாங்க.. அவங்க தானே உங்க குடும்பம்..? குடும்பத்தோட இருந்தவர் சந்தோசமாக இருந்திருக்க வேண்டியது தானே..?"

"ஊர்மிளா.."

நரேந்திரனின் 'ஊர்மி..' என்ற அழைப்பு 'ஊர்மிளா' வாக மாறி விட்டதை அவள் கவனித்தாள்.. லேசாக மனம் வலித்த போதும்.. அந்த நான்கு வருட காலமாக அவள் அனுபவித்து வந்த மனவேதனைகளின் ஆறாத ரணங்களின் வலி.. அந்த வலியை அமுக்கி அடி ஆழத்தில் புதைத்து விட்டது.. அந்த வேகத்தில் அவள் திரும்பவும் உதட்டைச் சுழித்தாள்.. அது அவனை மிகவும் பாதித்தது..

https://t.me/tamilpdfebooks

"ஏன் அப்ஜெக்ட் பண்றீங்க..? நானென்ன இல்லாததையா சொல்லிட்டேன்..? அவங்களுக்காகத் தானே.. உங்களைப் பெற்ற அம்மாவை பெற்று வளர்த்து.. அவங்களுக்குப் பின்னால் உங்களையும் வளர்த்த தாத்தா.. பாட்டியை நீங்க தூக்கி எறிஞ்சீங்க..?"

அவள் கேள்வி அம்பின் கூரிய முனையோடு நரேந்திரனின் நெஞ்சில் பாய்ந்தது.. அவன் கண்களை இறுக மூடிக் கொண்டான்..

'நான் அநியாயம் செய்து விட்டேன்..' மனதுக்குள் சொல்லிக் கொண்டான்..

'இவளை என்தாத்தா.. பாட்டியிடம் சேர்த்திருக்க வேண்டும்.. அவங்களுக்குத்தான் இவள் மருமகள்... அகல்யாவுக்கும் இவளுக்கும் என்ன இருக்கிறது என்று நான் அந்தம்மா இருக்கும் வீட்டிற்கு இவளைக் கூப்பிட்டுப் போனேன்..?'

"ஐ ஆம் ஸாரி.." அவன் வருத்தத்துடன் சொன்னான்.

இதையா அவள் எதிர்பார்த்தாள்..? ஊர்மிளாவின் கண்கள் கலங்கி விட்டன... அவளால் நரேந்திரன் வருத்தப்பட்டு மன்னிப்புக் கேட்பதை சகித்துக் கொள்ள முடியவில்லை..

அவளுடைய யுத்தம் அவனோடா...? அவனைத் தோற்கடித்து அவள் முன் மண்டி போட வைப்பதற்காகவா அவள் இந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக் கிறாள்..?

https://t.me/tamilpdfebooks

'கடவுளே..!' அவள் இதயம் விம்மியது..

அவளது கலங்கிய விழிகளில் நரேந்திரன் அசைவற்று நின்று விட்டான்.. அவன் மீதான அவளின் காதலை அவை சொல்லியதில் அவன் மனதில் தூறல் விழுந்தது.. இதமான அந்தத் தூறலின் இனிமையோடு அவன் ஆழ்ந்த குரலில் வினவினான்..

"தப்புச் செய்தவன் 'நான்..' அப்படின்னு நீ நினைக்கிற.. இருந்தும் நான் மன்னிப்புக் கேட்டா அதை உன்னால தாங்கிக்க முடியலைல்ல.. ஏண்டி..?"

ஊர்மிளா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவளின் உதட்டுச் சுழிப்பு இப்போது எங்கோ ஓடி மறைந்து விட்டிருந்தது.. நரேந்திரன் இதமானான்.. மனைவியை காதலுடன் பார்த்தான்..

"உன் மனசில என்னவெல்லாம் இருக்குன்னு எனக்குத் தெரியலை.. இது கொடுமைடி.. நான் என் மனசை மறைக்கலை.. அதிலிருந்த அத்தனையையும் உன்னிடம் கொட்டிட்டுத்தான் அப்ராட் போக பிளேன் ஏறினேன்.. ஆனா நீ..? உன் மனசுக்குள்ளே எத்தனையோ வேதனைகளைப் புதைச்சு வைச்சுக்கிட்டு என்னிடம் அதைச் சொல்லாம விலகிப் போகிற.. இது எனக்கு நீ செய்கிற அநியாயம்ன்னு ஏண்டி உன் மனசுக்குப் புரியலை.. உன் புருசன் பாவம்ன்னு ஏண்டி நீ நினைக்க மாட்டேங்கிற..?"

ஊர்மிளா தவித்தாள்.. நியாயம் கேட்பவன் அவளுடைய காதலன்.. அவள் கழுத்தில் தாலிகட்டி,

https://t.me/tamilpdfebooks

அவளைத் தொட்டுக் கலந்து குடும்பம் நடத்திய கணவன்.. அவளுடைய உயிரான மகனுக்குத் தகப்பன்..

இருந்தும் அவள் அவனிடமிருந்து விலகி நிற்கிறாள்.. அவனே சொல்வதைப் போல.. அவள் மனதில் தைத்திருக்கும் அத்தனை முற்களையும் அவனிடம் காட்டாமல் மறைத்து வைத்திருக்கிறாள்.. அதைப்பற்றி அவள் பெற்றவர்களிடம் கூடச் சொல்லவில்லையே..

"ராதாவை.. ராதாகிருஷ்ணன்னு அவங்கம்மா மாற்றிச் சொல்லிட்டாங்க.. இவரும் பாரின்ல இருந்து வந்ததும் அத்தனை பேரின் முன்னாலேயும் யார் அந்த ராதாகிருஷ்ணன்னு கேட்டுட்டார்ப்பா.."

இந்த விவரத்திற்கே சோமசுந்தரம் வீச்சறுவாளைத் தேடி விட்டார்.. பூங்குழலிதான் வன்பாடு பட்டு அவரைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தாள்.. இதில் மொத்த விவரங்களும் தெரிந்திருந்தால் சோமசுந்தரம் அகல்யாவை உண்டு இல்லையென்று ஆக்கியிருப்பார்.. அப்படிப்பட்ட சிற்றன்னையின் பொறுப்பில் ஊர்மிளாவை விட்டுச் சென்ற குற்றத்திற்காக நரேந்திரனின் மீது விரோதம் பாராட்டி.. முகம் கொடுத்துப் பேசாமல் வாழ்க்கை முழுவதும் தள்ளி வைத்திருப்பார்..

ஊர்மிளா சொல்லவில்லை.. எல்லாவற்றையும் இதயத்துக்குள் புதைத்துக் கொண்டவளாக மௌனமாகி விட்டாள்.. அவளின் நிலைமையைப் பார்த்து மறுகிப் போன சோமசுந்தரமும்.. பூங்குழலியும் அவளுக்கு

https://t.me/tamilpdfebooks

ஆதரவாக இருப்பதிலேயே கவனமாக இருந்தார்களே தவிர.. அவளைத் தூண்டித் துருவி எந்தக் கேள்வியையும் கேட்கவில்லை..

"எதனாலே எனக்குச் சொல்லலைன்னு எனக்குத் தெரியாது... ஆனா.. ராதாகிருஷ்ணன்னு ஒருத்தன் வந்திருக்கான்னு ஆரம்பிச்சு அவங்க அதிகப்படியா பேசியதிலே எனக்கு கவலை வந்திருச்சு.."

நரேந்திரன் சொல்லிக் கொண்டிருந்த போது.. அதுவரை ஊர்மிளாவை விட்டு விலகி நின்ற இகழ்ச்சிப் புன்முறுவல் மீண்டும் வந்து அவள் இதழ்களில் ஒட்டிக் கொண்டது.. அதில் நரேந்திரனின் புருவங்கள் சுருங்கின.. அவளைக் கேள்வியாக பார்த்தான்..

"அப்படி அதிகப்படியா என்னைப் பத்தி அவதூறா பேசுகிற தைரியத்தை அவங்களுக்கு நீங்க கொடுத்திருக்கீங்க.."

இல்லையென்ற பாவனையில் தலையை அசைத்தான் நரேந்திரன்..

"உனக்கே தெரியும்.. அவங்களை நான் தள்ளித்தான் நிறுத்தி வைத்திருந்தேன்னு... தெரியாம இதை நீ சொல்லியிருந்தா நான் விளக்கம் சொல்றதில அர்த்தமிருக்கு.. தெரிந்துக்கிட்டே பழி போட்டேன்னா நான் என்ன விளக்கத்தைச் சொல்ல..?"

ஊர்மிளா அமைதியாக டைனிங் டேபிளிலில் இருந்த பாத்திரங்களை மூடி வைத்துக் கொண்டிருந்தாள்..

https://t.me/tamilpdfebooks

தேன்மொழியும், கண்ணம்மாவும் வீட்டில் இல்லை.. காய்கறி, மளிகை பொருள்கள் வாங்கவென்று கூட்டணி போட்டுக்கொண்டு ஊர் சுற்றப் போயிருந்தார்கள்.. அவர்களுக்கு காரை ஓட்டிக் கொண்டு மணிவாசகமும் போயிருந்தான்.. யாருமற்ற அந்தச் சூழல் தம்பதியினரின் பேச்சுக்கு இடையூறு செய்யாத வகையில் இருந்தது..

"அவங்களை அதைப்பத்திப் பேசக் கூடாதுன்னு ஆர்டர் போட்டேன்.. இங்கே எதையாவது அதைப் போல பேசிவைத்திருந்தால் என்ன செய்கிறதுன்னுதான் வந்ததும் அத்தனை பேரின் முன்னாலும் அந்தக் கேள்வியைக் கேட்டேன்.. நீ சொல்லியிருக்க வேண்டியதுதானே.. அவன் என் பிரண்ட்.. நம்ம மேரேஜீக்கு வரலை.. அதனால உங்களுக்கு அவனை தெரிந்திருக்காது.. பெங்களூர் வந்தவன் என்னைப் பார்க்க வந்தான்.. அப்படின்னு சொல்லியிருந்தா அவங்களை அத்தனை பேரின் முன்னாலும் கண்டித்து வைத்திருக்க மாட்டேனா..?"

ஊர்மிளா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.. அவள் விழிகளில் தெரிந்த ஏதோ ஒன்றில் அவன் பேச்சை நிறுத்தினான்..

"என்னடி..?" அவன் புருவங்கள் உயர்ந்தன..

"வந்திருந்தது என்னுடைய பிரண்ட்.. அதில் உங்களுக்கு கோபம் வந்திருக்கலாம்.. அவங்களின் கம்ப்ளெயின்ட் அதை தூண்டி விட்டிருக்கலாம்.."

ஊர்மிளா பார்வையைத் தழைத்தபடி பேசினாள்.. நரேந்திரன் அவளையே இமைக்காமல் பார்ப்பதை உணர்ந்தும் அவள் நிமிரவில்லை..

https://t.me/tamilpdfebooks

"அதாவது.. நான் உன்னை சந்தேகப் பட்டிருப்பேன்னு நினைக்கிற..?"

"தெரியலை... அந்தக் கேள்வி அதைத்தான் சொன்னது.. இல்லேன்னா வேற ஏதாவது இருக்கலாம்.."

"வேறன்னா..? பொறாமையா..?"

"ஐ டோன்ட் நோ.."

நரேந்திரன் எழுந்தான்.. அழுத்தமான காலடிகளுடன் அவளருகே வந்தான்.. அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்.. ஊர்மிளாவின் மனம் படபடத்தது.. இதயம் வேகமாக அடித்துக் கொண்டது.. என்னவோ அன்று தான் அவனை முதன்முதலாக பார்ப்பதைப் போல அவள் தவித்துப் போனாள்..

"உன்மேல் எனக்குச் சந்தேகம் வராது..." அழுத்தமாகச் சொன்னான் நரேந்திரன்..

"அதே போல்.. உன்னுடன் வேறொரு ஆண் பழகினால் எனக்குப் பொறாமையும் வராது.."

'ஏன்..?' ஊர்மிளா தடுமாறிப் போனாள்..

நரேந்திரனின் கண்களில் தெரிந்த அதீத தன்னம்பிக்கையில் அவள் திகைத்தாள்... அவன் விழிகளில் அழகான சிரிப்பு படர்ந்திருந்தது.. அந்த நிலையில் அவன் வெகு அழகானவனாக அவள் கண்களுக்குத் தோன்றினான்.. அவள் முகத்துக்கு வெகு அருகாமையில் தெரிந்த அவன் முகத்தின் அழகில் அவள் திணறிப் போனாள்..

https://t.me/tamilpdfebooks

"உன்னால் என்னைத் தவிர வேறு யாரையும் காதலிக்க முடியாது.. என்னைத்தவிர வேற ஒருவரால் உன் மனக் கதவைத் தட்ட முடியாது... எனக்கு நீ கொடுத்திருக்கும் இடத்தை வேறு ஒருவருக்குக் கொடுக்க உன்னால் முடியவே முடியாது.. அப்படியிருக்கிறப்ப உன்னை ஏண்டி நான் சந்தேகப்படனும்...? உன் நண்பன்மேல் எதுக்காக நான் பொறாமைப்படனும்..?"

நரேந்திரன் கை கழுவ நகர்ந்து விட்டான்.. ஊர்மிளா அசையாமல் சிலைபோல நின்றாள்.. அவள்மீதான அவனது அசாத்திய நம்பிக்கையில் அவள் மனம் வலித்தது.. எல்லாமும் அவளுக்குக் கிடைத்திருக்கிறது.. ஆனால் எதுவுமே இல்லாத வறியவள் போல வாழும் நிலைமைக்கு அவள் தள்ளப் பட்டிருக்கிறாள் என்றால் வாழ்க்கையின் குரூரத்தை அவள் என்னவென்று உரைப்பாள்..?

ஊமையாக அவள் மனதுக்குள் துடித்தபடி டைனிங் டேபிளில் இருந்த பாத்திரங்களை சமையலறைக்கு கொண்டு போய் அடுக்கி வைத்தாள்.. சின்க்கில் கை கழுவி விட்டு.. ஈரக்கையை சேலை முந்தானையில் துடைத்தபடி சமையலறையை விட்டு வெளியே வந்தாள்.. இயல்பான அவளின் அந்தச் செய்கையில் ஈர்க்கப்பட்டான் நரேந்திரன். அவனைக் கடந்து ஹாலில் இருந்த சோபாக்களில்.. ஒற்றை சோபாவாய் தேர்ந்தெடுத்து உட்கார்ந்தாள் ஊர்மிளா..

'நீண்ட சோபாவாய் இருந்தால் நான் பக்கத்திலே உட்கார்ந்திருவேனாம்..'

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் அவளையே பார்த்தபடி எதிர் சோபாவில் அமர்ந்தான்..

"பெங்களூர் போயிருந்தேன்.." என்றான்..

ஊர்மிளாவின் உடலில் ஓர் விறைப்பு வந்தது.. கண்களில் கனல் வந்தது.. அகல்யா இருக்கும் ஊரைக் கேட்டவுடன் அவளிடம் ஏற்பட்ட மாற்றத்தில் எந்த அளவுக்கு அகல்யாவால் அவள் பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்பதை நரேந்திரனால் புரிந்து கொள்ள முடிந்தது..

'எல்லாம் என்னாலே வந்தது..'

அவன் மனம் வருந்தினான்.. செழியன் அவனிடம் என்ன கேட்டார்..? அருணையும், அர்ச்சனாவையும் காப்பாற்று என்று கேட்டுக் கொண்டார்.. அதை அவன் தள்ளியிருந்துதானே செய்தான்..? எதனால் செழியனை தாகடித்த அகல்யா வசித்த வீட்டில் அவனும் வசிக்கப் போனான்..?

அதனால் அல்லவோ அவனுடைய காதல் மனைவி இந்த நிலைமைக்கு ஆளாகியிருக்கிறாள்..

https://t.me/tamilpdfebooks

89

என் வாழ்வின் சுழல்களினால்..
உன் வாழ்வில் சுழலேற்ற..
அழகான ராட்சசி நீ....

நரேந்திரன் பெருமூச்சு விட்டான்.. எல்லாமே அவன் கைக்குள் இருக்கிறது.. கட்டுப்பாட்டில் இருக்கிறது என்ற அவனின் திட்டவட்டமான நம்பிக்கைதான் இந்த அளவுக்கு அவனை ஆட்டிப் படைத்து விட்டது என்று மனம் நொந்தான்..

அகல்யா எந்தவிதமான கட்டுதிட்டங்களுக்கும் அடங்காதவள் என்பதைப் பற்றி அறிந்திருந்தும் அவளைக் கட்டுப்பாட்டில் பிணைத்து விட்டதாக அவன் நினைத்து விட்டானே.. அந்த நிச்சயத்தினால்தானே ஊர்மிளாவிடம் அவள் விளையாடத் துணிய மாட்டாள் என்று அவன் ‘அப்ராட்’ போனான்..

“அந்தம்மாவைப் பார்த்தேன்...” நரேந்திரன் ஊர்மிளாவைப் பார்த்தான்.. அவள் கைவிரல் நகங்களைப் பார்த்தபடி இறுக்கமாக உட்கார்ந்திருந்தாள்..

“என்னைப் பார்த்ததும் ஏதேதோ கதை சொல்ல ஆரம்பிச்சாங்க.. நான் போட்ட சப்தத்தில் வாயை மூடிக்கிட்டாங்க..”

https://t.me/tamilpdfebooks

'அகல்யாவா வாயை மூடுகிறவள்..?'

ஊர்மிளாவின் முகத்தில் ஏளனம் வந்தது.. அதைப் புருவங்கள் முடிச்சிடப் பார்த்தபடி நரேந்திரன் தொடர்ந்தான்..

"உன் மனசில என்ன எண்ணம் ஓடுதுன்னு எனக்குத் தெரியும்.. அந்த லேடி அவ்வளவு சீக்கிரமா வாயை மூடாதுதான்.. ஆனா நான் மூட வைப்பேன்.."

'இதையேன் அன்றைக்கே நீ செய்யலை..?'

"செய்திருந்தேன்.. உனக்குத்தான் அது தெரியலை.. என் முன்னாலே வாய் திறந்து பேச அதுக்குத் தைரியம் வராத அளவுக்குத்தான் நான் நடத்திக் கொண்டிருந்தேன்.. அந்த தைரியத்தை நீதான் அதுக்குக் கொடுத்த.."

அகல்யாவை 'அவங்க' என்பதிலிருந்து மாறி.. 'அது' என்று நரேந்திரன் குறிப்பிடுவதை ஊர்மிளாவின் மனது குறித்துக் கொள்ளத்தான் செய்தது.. அகல்யாவைப் போன்ற பிறவிகளை 'அது' என்று குறிப்பிடுவதில் கூட ஊர்மிளாவுக்குச் சம்மதமில்லை.. தனது சுயநலத்திற்காக அடுத்தவர்களின் வாழ்வை வேட்டையாட நினைக்கும் பிறவியும் ஒரு பிறவியா என்று மனதுக்குள் அருவெறுத்தாள் ஊர்மிளா..

"உன் அப்பாவைப் போல நீயும் தைரியமா அதை எதிர்த்துக்குரல் கொடுத்திருந்தா இந்த அளவுக்கு வந்திருக்காது.."

'எதிர்த்து நான் குரல் கொடுக்கலைன்னு நீ கண்டயா..? குரல் கொடுத்ததினால்தான் இந்தக் கதி..'

https://t.me/tamilpdfebooks

“தனிச்சு ஏன் குரல் கொடுக்கிற..? உன் அப்பா என் முன்னாலே அது சொன்ன பொய்யை அம்பலப் படுத்தலையா..? அதைப் போல நீயும் செய்வதற்கென்ன..? அதற்குத்தானே அன்றைக்கு உனக்கு சான்ஸ் கொடுத்தேன்..? மத்தவங்க முன்னாலே கேள்வி கேட்டேன்..?”

அவள் மனதில் சொல்வதை அப்படியே படித்து பதிலைச் சொல்லிக் கொண்டு வந்தவனின் கேள்வி பழைய கேள்வியிலேயே மையம் கொண்டு நின்றது.. காலச் சக்கரத்தின் சுழற்சியைப் போல எங்கே சுழன்றாலும் ஒரே இடத்தில் வந்து நிற்கும் அந்தக் கேள்வியில் மனம் நைந்தாள் ஊர்மிளா..

இன்னும் எத்தனை காலம்தான் அந்தக் கேள்வி இவளைத் துரத்தப் போகிறது..? இவளும் அதை எதிர் கொள்ள முடியாமல் ஓடிக் கொண்டே இருக்கப் போகிறாள்..?

“இனி அந்த வீட்டில் என் காலடி படாதுங்கிறதை சொல்லிட்டேன்.. அர்ச்சனாவை வைத்து அந்தம்மா ஓட்டப் பார்த்துச்சு.. நரேந்திரனோட தங்கச்சிங்கிறதுதானே இவளுக்கான அடையாளம்.. அது இல்லாம போனா இவளோட எதிர்காலம் என்னவாகிறதுன்னு கேட்டுச்சு.. நான் அசைஞ்சு கொடுக்கலை..”

அர்ச்சனாவை முன்னிருத்தி அகல்யா பிளாக் மெயில் செய்திருப்பதை புரிந்து கொண்டாள் ஊர்மிளா..

https://t.me/tamilpdfebooks

'அதுதான் அந்தம்மாவுக்கு கை வந்த கலையாச்சே.. எதை வேணும்னாலும் பேசிரும்.. என்ன வேணும்னாலும் தயங்காம செய்து முடித்திரும்.. கேள்வின்னு வந்தா எதைச் சொல்லியும் சமாளிச்சுரும்..' அவள் முகம் கடுத்தது..

"இப்ப அந்த பிளாக்மெயில் எடுபடலை.." என்றான் நரேந்திரன்..

இவனுக்கு மனதிலிருப்பதை படிக்கும் வித்தை தெரிந்திருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள் ஊர்மிளா..

"அருண்குமாரோட தங்கைங்கிற அடையாளம் மட்டும்தான் அர்ச்சனாவுக்கு இனி இருக்கும்ங்கிறதை புரிய வைச்சுட்டு வந்துட்டேன்.. அவங்கம்மாவோட முகம் போன போக்கைப் பார்க்கனுமே.."

"பாவம்.." உண்மையான வருத்தத்துடன் சொன்னாள் ஊர்மிளா..

"அருணும்.. அர்ச்சனாவும் நல்ல பசங்க.."

"அது எனக்கும் தெரியும்.." என்றான் நரேந்திரன்..

"ஆனா ஊர்மிளா.. அவங்களை அவங்கம்மா கேடயம் போல யூஸ் பண்ண ஆரம்பிச்சுட்டாங்க.. அது நல்லதுக் கில்லை.. எனக்கு அது பிடிக்காது.. அப்பாவுக்கு நான் கொடுத்த வாக்கு அவங்களைக் காப்பாத்தறதுக்கு மட்டும் தான்.. அவங்களை என் குடும்பத்து ஆள்களா அடையாளம் காட்டறதுக்காக இல்லை.. அப்பா அதைக் கேட்கலை.. என் தகப்பன்தான் அவங்களுக்கும் தகப்பன்ங்கிறதில

https://t.me/tamilpdfebooks

மனசுக்குள்ளா ஒரு பாசம் இருக்கு.. இல்லேன்னு சொல்லலை.. அந்த பாசத்துக்காக அவங்களோட அம்மா ஆடுகிற ஆட்டத்தை நான் சகிச்சுக்கனும்னா.. நெவர்..! இந்த நரேந்திரனை எமோசனலா பிளாக் மெயில் பண்ணி கண்ட்ரோலில் வைத்துக்க யாராலும் முடியாது.. அதை அந்தம்மாவுக்கு தெரிய வைத்துட்டு வந்திருக்கிறேன்.. இனி அவங்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை.."

வாசலில் ஈரக்காற்று அடித்தது.. ஹாலின் ஜன்னல் வழி அது வந்து உடலைத் தீண்டியதில் ஊர்மிளா சுவர் கடிகாரத்தைப் பார்த்தாள்.. சுரேந்திரனுக்கு எப்போது பள்ளி முடியும் என்று அவள் மனம் கணக்கிட்டது..

"சுரேனுக்கு ஸ்கூல் விட இன்னும் நேரமிருக்கு.."

நரேந்திரனின் வார்த்தைகள் அவன் அவளையே கவனித்துக் கொண்டிருப்பதை உணர்த்தின.. அதில் மனம் கசிந்தாள் ஊர்மிளா.. இந்தக் காதலை அனுபவித்து வாழ அவளுக்கு கொடுத்து வைக்கவில்லையே..

அகல்யாவுக்கான தண்டனை நியாயமானதுதான் என்று அந்த நொடியில் அவளுக்குத் தோன்றியது..

"மழை வரும் போல இருக்கு.." மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்..

"வந்தா என்ன..? காரிலதான் அழைச்சுக்கிட்டு வரப்போகிறேன்.." சமாதானமாக சொன்னான் நரேந்திரன்..

"உடம்புக்கு சரியில்லாதவன்.."

https://t.me/tamilpdfebooks

“நீ அதை மறக்கவே மாட்டியா..? உடம்புக்கு சரியில்லாம இருந்தான்... தட்ஸ் ஆல்... இப்ப ட்ரீட்மெண்டிலே பாதிக்கு மேலே குணமாகிருச்சு.. அண்டர்ஸ்டாண்ட்..?”

கண்டிப்புடன் பேசிய நரேந்திரனின் தொனியில் எல்லையற்ற பாதுகாப்பான உணர்வை அடைந்தாள் ஊர்மிளா..

“ம்ம்ம்..” என்று முணுமுணுத்தாள்..

“அருணை ஷேப் கார்டு பண்ணிட்டேன்.. பெங்களூரில் நான் ஆரம்பித்திருந்த சின்னக் கம்பெனி ஒன்றை அவன் பெயருக்கு எழுதிக் கொடுத்துட்டேன்.. வீடும் அவன் பெயருக்கு மாற்றியாச்சு..”

“அப்ப உங்க கம்பெனியில அவர் ஜி.எம்மா வேலை பார்த்தது..?”

அவளையுமறியாமல் ஊர்மிளா கேட்டு விட்டாள். அகல்யாதான் ஊர்மிளாவுக்கு கெடுதல் செய்தாள்... அவள் பெற்ற பிள்ளைகள் செய்யவில்லையே.. அவர்கள் தங்கமான பிள்ளைகள் ஆயிற்றே.. அவர்களை நரேந்திரன் தண்டித்து விட்டால் ஊர்மிளாவின் மனச்சாட்சி அவளை உறுத்துமே..

‘பெத்தவ செய்கிற பாவம் பிள்ளைகள் தலைமேல விழுந்துரக் கூடாது.. இவதான் உப்பைத் தின்னா.. தண்ணியை இவதான் குடிக்கனும்..’ ஊர்மிளாவின் மனம் அடித்துக் கொண்டது..

https://t.me/tamilpdfebooks

குனிந்த தலை நிமிராமல்.. 'அண்ணி..' என்ற ஒற்றை வார்த்தையையும் முகம் பார்க்காமல் சொல்லியபடி கண்ணியத்துடன் மரியாதையாக விலகிப் போகும் அருண்குமாரின் முகமும்.. 'அண்ணி' என்ற அழைப்பிலே அத்தனை பாசத்தையும் அன்பையும் தேக்கி வைத்து சிறு குழந்தை போல உரிமை கொண்டாடும் அர்ச்சனாவின் முகமும் அவள் மனக்கண்ணில் வந்து நின்றன..

அதை உணர்ந்தவனாய் நரேந்திரனும் இதமாகவே விளக்கம் சொன்னான்..

"வேண்டாம் ஊர்மிளா.. ஏற்கனெவே அம்மாவோட கம்பெனியில அருணுக்கு வேலை கொடுத்திருக்கேனேன்னு மனதுக்குள்ளே சங்கடமாக இருந்தது.. அவங்க ஆத்மா அதை ஏத்துக்கிட்டு இருக்காது ஊர்மிளா.. அதனால தான் இத்தனை பாடுபடுகிறேனோ என்னவோ.. அருண் வெளியே போகட்டும்.. என் வருமானத்தில ஆரம்பிச்ச கம்பெனியில முதலாளியா இருக்கட்டும்.. உழைச்சு முன்னுக்கு வரட்டும்.. அவன் வருவான் ஊர்மிளா.. வீட்டை அவன் பெயருக்கு எழுதினால்தான் அருணோட பெண்டாட்டியால அந்த வீட்டில் வாழ முடியும்.. இனியாவது அந்தம்மா அடங்கி.. ஒடுங்கி இருந்து பழகட்டும்.."

'அகல்யாவினால அது முடியாது..' ஊர்மிளா முகத்தைச் சுளித்தாள்..

"அடங்காதுதான்.. ஆனாலும்.. வேற வழி அதுக்கு இல்லையே.. என்னிடம் இனிமேல் வரமுடியாது.."

https://t.me/tamilpdfebooks

'அது வரும்..'

"வந்தா என்ன நடக்கும்ங்கிறதை சொல்லிட்டுத்தான் வந்திருக்கேன்... அருணை வெளியே அனுப்பியதில மாத்தாவுக்கு ரொம்ப சந்தோசம்.. எனக்கும் மன நிம்மதி.. அர்ச்சனாவோட படிப்பும் முடிஞ்சிருச்சு.. நல்ல இடத்திலே மாப்பிள்ளை பார்த்து மேரேஜ் பண்ணி அனுப்பிரனும்.. இந்தம்மாவோட குணம் தெரிஞ்சா அர்ச்சனாவை பெண் கேட்டு வரக்கூட யாரும் பயப்படுவாங்க.. அதனாலே தான் அவள் பெயரிலே சென்னையிலே ஒரு வீட்டை வாங்கிக் கொடுத்திருக்கிறேன்.."

யட்சன் போல நரேந்திரன் சொன்னான்... சென்னையில் இருந்தவனுக்கு பெங்களூரில் நடந்தது எப்படித் தெரியும்..? மனதோடு பூட்டி வைத்து அழுது கொண்டிருந்த அர்ச்சனா அதை தமையனிடம் வெளிப்படுத்தவே இல்லையே.. வெளியில் இருந்து என்ன.. அகல்யாவின் கூடப்பிறந்த தம்பியின் மகனே அர்ச்சனாவின் காதலைப் புறக்கணித்து விட்டான்.. அதற்கான ஒரே காரணம் அர்ச்சனா அகல்யாவின் மகள் என்பதுதான் என்பதை அறியாமல் தீர்க்கதரிசியைப் போல நரேந்திரன் ஆருடம் சொல்லி வைத்தான்..

"வேண்டாம்.. உங்க வாயாலே அப்படிச் சொல்லாதீங்க.." அவசரமாக சொன்னாள் ஊர்மிளா..

"ஏன்..?"

"அர்ச்சனா பாவம்.. பச்சைக் குழந்தை..! சூது வாது அறியாதவள்.. அவள் வாழ்க்கை நல்லாயிருக்கனும்.."

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளாவையே இமைக்காமல் பார்த்தான் நரேந்திரன்.. என்ன மாதிரியான மனசு இவளுக்கு என்று அவன் மனம் பொங்கியது..

'இவள் கருணையே வடிவானவள்.. நியாயத்தின் அவதாரம்.. நேர்மையின் மறு பிம்பம்.. இவளை மனம் புண்படப் பேசி விலகி ஓட வைத்த ஒரு நயவஞ்சகியின் மகள்மீது இரக்கம் கொள்பவள்..'

அவளை நினைக்க... நினைக்க அவனுக்கு பெருமையாக இருந்தது..

சடசடவென்ற மழைத்தூறல் வந்தது.. கண்ணம்மாவும், தேன்மொழியும் கடைத் தெருவிலிருந்து திரும்பி விட்டார்கள்... நரேந்திரன் மகனை பள்ளியிலிருந்து அழைத்து வருவதற்காக கிளம்பிப் போனான்.. ஊர்மிளா உலர்ந்திருந்த துணிகளை அயர்ன் பண்ணி அடுக்கிக் கொண்டிருந்தாள்.. கண்ணம்மா மாலை டிபனுக்கான வேலைகளில் ஈடுபட்டிருந்தாள்.. தேன்மொழி அவளுக்கு ஒத்தாசை செய்கிறேன் பேர்வழியென்று ஊர் கதைகளை பேசிக் கொண்டிருந்தாள்..

போர்டிகோவில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது..

"இப்பத்தானே அவர் கிளம்பிப் போனார்..? அதுக்குள்ளே அப்பாவும் பிள்ளையும் வந்துட்டாங்களா..?" ஊர்மிளா ஆச்சரியத்துடன் சுவர் கடிகாரத்தை பார்த்தாள்..

"அப்பாவும் பிள்ளையும் வரலை.. உன் பிரண்ட் தான் வந்திருக்கேன்.."

https://t.me/tamilpdfebooks

ராதா உள்ளே வந்தாள்.. ஊர்மிளா அயர்ன்பாக்ஸை தேன்மொழியிடம் ஒப்படைத்து விட்டு தோழியைக் கட்டிக் கொண்டாள்.. தேன்மொழி விட்டுப் போன அயர்ன் வேலையைத் தொடர்ந்தாள்..

"இன்னும் எத்தனை நாளைக்கு சென்னையில் இருப்ப..?"

"இந்த மன்த் என்ட் வரைக்கும்தான் ஊர்மி.. அதுக்குப் பின்னாலே டெபுடேசன் சேன்ஜ் ஆகுது.."

"எங்க போகப் போகிற..? நியூயார்க்குக்கு ரிட்டர்ன் ஆகப்போறியா..?"

"ஊஹீம்.. டெபுடேசன் பாக்கியிருக்கு.. அதை கம்ப்ளீட் பண்ணிட்டுத்தான் நியூயார்க்குக்கு ரிட்டர்ன் ஆகனும்.."

"ஓ..."

"இப்ப பெங்களூர்க்கு போகப் போகிறேன்.. நெக்ஸ்ட் சிக்ஸ்த் மன்த் அங்கேதான்.."

பெங்களூரைப் பற்றிய பேச்சு வந்ததும் ஊர்மிளா மௌனமாகி விட்டாள்.. அதை உணர்ந்த ராதா பேச்சை மாற்றினாள்.. மெதுவாக பேச்சில் ஐக்கியமான ஊர்மிளா பழைய இயல்பு நிலைக்கு திரும்பி விட்டாள்.. கண்ணம்மா கொண்டு வந்த காபி டிபனை வாங்கிக் கொண்ட ராதா..

"தேங்க்ஸ் கண்ணம்மா.." என்றாள்..

அதற்கு அவள் எக்கச்சக்கமாக வெட்கப்பட்டுக் கொண்டே உள்ளே ஓடிவிட.. அவளை வினோதமாக பார்த்த ராதா..

https://t.me/tamilpdfebooks

"என்னடி இது.." என்றாள் ஊர்மிளாவிடம்..

அவள் சிரித்தாள்.. ராதா காபியை உறிஞ்சியபடி..

"தேங்க்ஸ்ன்னுதானேடி சொன்னேன்..? ஐ லவ் யுன்னா சொன்னேன்..?" என்று அங்கலாய்த்தாள்..

இப்போது தேன்மொழியும் சிரிப்பில் சேர்ந்து கொண்டாள்.. போர்டிகோவில் கார் வந்து நின்று... காரின் கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டதில் ராதா புன்னகைத்தாள்..

"இப்ப வந்திருக்கிறது உன் ஹஸ்பெண்டும் பிள்ளையும்தான்.. கன்பர்ம்.."

நீ சொல்லாமலே எனக்குத் தெரியும் என்ற பாவனையுடன் வாசலை ஆவலுடன் பார்த்தாள் ஊர்மிளா..

"அம்மா.."

கைகளை விரித்து எதிரே வந்த மகனை மண்டியிட்டு அணைத்துக் கொண்டாள் ஊர்மிளா.. காலையிலிருந்து மகனைப் பிரிந்திருந்த தாபம் அவளிடம் தெரிந்தது..

தாயும் மகனும் பிணைந்திருந்த காட்சியில் மனம் லயித்தான் நரேந்திரன்.. அவள் அவனுடைய மனைவி.. அவன் பிள்ளைக்குத் தாய் என்பதில் அவன் மனதில் கூட்டுக்குத் திரும்பிவிட்ட பறவையின் நிம்மதி ஏற்பட்டது..

"ஹாய்.." என்றாள் ராதா..

பதிலுக்கு ஹாய் சொல்லி விட்டு செல்போனை காதுக்கு கொடுத்தபடி வாசலுக்குப் போய் விட்டான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

"ஹலோ மிஸ்டர் ஜீனியர்..! ஹௌ ஆர் யு..?"

ராதா சுரேந்திரனிடம் பேச ஆரம்பித்தாள்.. அவள் கேட்கும் கேள்விகளுக்கு மழலையில் பதில் சொல்லிக் கொண்டிருந்த மகனை புன்னகையுடன் பார்த்தபடி அவனுடைய ஷீவையும்.. டையையும் கழட்டி விட்டு.. சட்டையின் மேல் பட்டன்களை தளர்த்திவிட்டாள் ஊர்மிளா.. ஆசுவாசமாக உணர்ந்த சிறுவன் அன்னையின் மடிமீது ஏறிக் கொண்டான்.. அவன் கன்னத்தோடு கன்னம் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்த தோழியிடம் தலையசைத்து விட்டு வெளியில் வந்தாள் ராதா.. போன் பேசி முடித்து விட்டு வீட்டுக்குள் போக திரும்பிய நரேந்திரன் ராதாவைக் கண்டதும் தேங்கி நின்றான்..

"கிளம்பிட்டிங்களா..?" என்றான்..

புன்முறுவலுடன் தலையை ஆட்டினாள் ராதா.. அவள் அதிகமாக அவனிடம் நின்று பேசியதில்லை.. நரேந்திரனுக்கு அவள்மீது ஓர்விதமான மரியாதை உணர்வு இருந்தது.. அமிர்தா ஒருவகையில் அவனது மதிப்பையும், மரியாதையையும் பெற்றாள் என்றால் ராதா வேறு வகையில் அவனது மரியாதையைப் பெற்றாள்..

ராதாவின் இயல்பான பேச்சும்.. சிநேகிக்கும் புன்முறுவலும்.. அறிவுக்களை சொட்டும் விழிகளும்.. நகையில்லாத தோற்றமும் நரேந்திரனின் கவனத்தை ஈர்த்தன..

"உங்களைப் போன்ற ஒருத்தங்களுக்கு அனாமிகான்னு பெயரிருக்கிறது ஆச்சரியம்தான்.." என்று சொன்னான்..

https://t.me/tamilpdfebooks

"வாட்..?" ராதாவின் புருவங்கள் ஆச்சரியத்துடன் உயர்ந்தன..

அவளும் அவனும் தனித்துப் பேச நேர்ந்ததில்லை.. பெரும்பாலும் நரேந்திரன் இல்லாத சமயங்களில் ராதா வந்து போய் விடுவாள்.. இல்லா விட்டால் அவன் வெளியே கிளம்பும்போது இவள் வருவாள்.. இவள் வெளியே கிளம்பும்போது அவன் வருவான்..

90

சொல்லாலே உனையடித்தேன்..
சொல்லாமல் விலகி விட்ட
அழகான ராட்சசி நீ....

அவனும்.. அவளும் எதிரும் புதிருமாக நின்று எப்போதும் பேசியதில்லை.. அவர்கள் ஒருவருக்கு ஒருவர் வணக்கம் சொல்லி மரியாதையை தெரியப் படுத்திக் கொள்வார்கள்..

அவர்கள் பேசிக் கொள்வது அரிதாகத்தான் இருக்கும்.. அதையும் ஊர்மிளாவின் முன்னிலையில் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.. அப்படியில்லாமல் அவர்கள் தனித்து நின்று பேசியதில்லை..

முதல்முறையாக அப்படி பேச நேர்ந்த போது நரேந்திரன்.. அவளை 'அனாமிகா..' என்று குறிப்பிட்டது ராதாவிற்கு ஆச்சரியத்தைத் தந்தது..

https://t.me/tamilpdfebooks

"அனாமிகாவா..?"

"யெஸ்.. உங்க பெயர் அனாமிகாதானே..?"

ராதாவுக்கு வியப்பாக இருந்தது.. நரேந்திரனைப் போன்ற ஒரு பிஸினெஸ் மேக்னெட்.. இப்படிச் சொல்வதாக இருந்தால் எதனால் அவன் அப்படிச் சொல்கிறான் என்பதை அறியாமல் அவள் வாய் விட்டு விடக்கூடாதே..

ராதா அவனுடன் இசைந்து.. ஆனால் பொய் கலக்காத எச்சரிக்கை உணர்வுடன் பேசினாள்..

"இதை உங்களுக்கு யார் சொன்னது..?"

"உங்க பிரண்டுதான் சொன்னா.."

'ஊர்மிளாவா..?'

ராதாவுக்கு ஏதோ புரிவதைப் போல இருந்தது..

"உங்க பெயர் என்னன்னு கேட்டேன்.. மர்மமா பார்த்துட்டு.. அனாமிகான்னு சொன்னா.."

"அவ சொன்னாளா..?"

யோசனையுடன் கேட்டாள் ராதா.. எதனால் ஊர்மிளா அப்படிச் சொல்லியிருப்பாள் என்பது முழுவதுமாக அவளுக்குப் புரிந்தது..

"அனாமிகான்னா பெயரில்லாதவள்ன்னு அர்த்தம்.. உங்களைப் போல ஒருத்தங்க.. அனாமிகாங்கிற பெயரோடு இருக்கிறது ஆச்சரியம்தான்.. அதைத்தான் நான் சொன்னேன்.."

https://t.me/tamilpdfebooks

“அனாமிகான்னா பெயரில்லாதவள்ன்னு மட்டும் அர்த்தமில்ல..” சிந்தனையுடன் சொன்னாள் ராதா..

“தென்..?”

“அடையாளமில்லாதவளையும் அப்படித்தான் சொல்வாங்க..”

“ஐ ஸீ...”

“ஊர்மிளா அனாமிகாவாக ஆக்கப்பட்டிருக்கிறா.. நீங்க அதைப் பத்தி யோசிக்காம என்னைப் பத்தி யோசிக்கறிங்க.. ஐ மீன் என் பெயர் காரணத்தைப் பத்தி யோசிச்சுக்கிட்டு இருக்கீங்க..”

நரேந்திரனின் முகம் மாறியது.. இதைச் சொல்லிய ராதாவின் குரலில் பகைமை இல்லை.. இருந்தும் அவள் ஊர்மிளாவை நரேந்திரன் சரியான முறையில் பாதுகாக்காமல் அவளுடைய அடையாளத்தை அழித்து விட்டதாகச் சொல்கிறாள்..

அவள் வார்த்தைகளுக்கு அதுதானே பொருள்..!

“ஐ ஸீ..” என்றான் நரேந்திரன்..

ராதா ஜீன்ஸ் பேண்டில் கையை விட்டபடி நிமிர்ந்து அவனை பார்த்தாள்.. பெண்மையின் நளினமில்லாத அவளின் கம்பீரத்தில் தனி சோபை இருப்பதை போல உணர்ந்தவன் புன்னகைத்தான்..

“என்மேல் குற்றம் சொல்கிறீங்க..? உங்க பிரண்ட் ஏதாவது சொல்லியிருப்பா.. இல்லைன்னா இப்படி நீங்க பேச மாட்டிங்க..” என்று சொன்னான்..

https://t.me/tamilpdfebooks

"மே.. பி.." ராதா தோளைக் குலுக்கினாள்..

"ஒரு சொல்..! ஒரு கேள்வி..! அதற்கா மூன்றரை வருசப் பிரிவு..?" லேசான கோபத்துடன் கேட்டான் நரேந்திரன்..

"அந்த ஒரு சொல்ங்கிறது சாதாரணச் சொல் லில்லை.. துப்பாக்கிக்குண்டு.. அது உங்கள் மனைவியின் இதயத்தை துளைப்பது.. அந்த ஒரு கேள்வியும் சாதாரணக் கேள்வியில்லை மிஸ்டர் நரேந்திரன்.. அது கூர்மையான வெட்டுக்கத்தி... உங்கள் மனைவியின் கழுத்தை வெட்டுவது.." ராதாவின் முகம் கடுமையாக மாறியிருந்தது..

"உங்கள் பிரண்டு தேவைக்கு அதிகமாகவே உங்களிடம் பேசியிருக்கிறாள் போல.." நரேந்திரனும் முகம் கடுத்தான்..

"நீங்கள் பேசவில்லையா..?" ராதா மடக்கினாள்..

"நானா..?"

"நீங்களேதான்.. ஒரு சொல்லையும்.. ஒரு கேள்வியையும் பற்றி என்னிடம் சொன்னது யார்..? நீங்களா இல்லை அவளா..?"

"குட்.. அவளுக்கு அருமையான பிரண்ட்ஸ் கிடைத் திருக்காங்க.. நீங்க.. அப்புறம்.. அமிர்தா.."

"பட்.. அருமையான வாழ்க்கை கிடைக்கலை.. அவள் அருமையானவ மிஸ்டர் நரேந்திரன்.. அவளோட அருமை எனக்கும் அமிர்தாவுக்கும் தெரிஞ்சிருக்கிறதைப் போல உங்களுக்கு ஏன் தெரியலை மிஸ்டர் நரேந்திரன்.."

https://t.me/tamilpdfebooks

ராதா பதிலை எதிர்பார்க்காமல் காரில் ஏறிப் போய் விட்டாள்.. நரேந்திரன் வீட்டுக்குள் வந்தான்.. ஊர்மிளா அங்கு இல்லை.. சுரேனுக்கு உடை மாற்றிவிட அழைத்துப் போய் விட்டதாக தேன்மொழி சொன்னாள்.. அவன் மாடிக்குப் போகாமல் அப்படியே ஹாலில் இருந்த சோபாவில் சரிந்தான்..

'மாடிக்குப் போனா.. பிள்ளைக்கு டிபன் ஊட்டி விடனும்னு கீழே இறங்கி வருவா..'

அவனுக்கா ஊர்மிளாவைத் தெரியாது..? அவன் அனுமானித்ததைப் போலவே சற்று நேரத்தில் சுரேந்திரனுடன் கீழே வந்து விட்டாள் ஊர்மிளா.. சுரேந்திரனை குளிக்க வைத்து உடை மாற்றி விட்டிருந்தாள்.. அவன் காதோரமாக இவள் எதையோ கேட்டாள்.. சிறுவன் சன்னக்குரலில் பதில் சொன்னான்.. ஊர்மிளா விழிகளை உருட்டி விழித்து அவனை மிரட்டுவதைப் போல செல்லமாக முறைத்தாள்.. சுரேந்திரன் உடனடியாக அவளுக்கு விளக்கம் சொன்னான்.. அவள் மகிழ்ந்து போய் மகனின் கன்னத்தில் முத்தமிட்டாள்..

நரேந்திரனுக்கு பொறாமையாக இருந்தது.. மகனும் அவளுமாக உருவகித்துக் கொண்டிருக்கும் சின்ன உலகில் அவனுக்கு இடமில்லையா..? அவன் தனிமைப்பட்டு விட்டதைப் போல உணர்ந்தான்..

ஊடே யதேச்சையாக நரேந்திரனின் பக்கம் பார்த்தவளின் முகம் சிவந்தது.. தேன்மொழியை அழைத்து

https://t.me/tamilpdfebooks

யதோ சொன்னாள்.. அவள் நரேந்திரனைப் பார்த்து விட்டு சமையலறைக்குள் ஓடினாள்..

'எனக்கு காபி, டிபன் கொடுக்கச் சொல்லியிருப்பா..' நரேந்திரனுக்குள் மெலிதான கோபம் படர்ந்தது..

வேலைக்காரி காபி, டிபன் கொடுக்க அவன் சாப்பிடுவதாக இருந்தால் வீட்டுக்காரியென்று ஊர்மிளா எதற்காக இருக்கிறாள்..?

அவனுக்கான எதற்காகவும் அவள் இருப்பதில்லை என்ற நினைவில் அவன் பல்லைக் கடித்தான்.. தேன்மொழி காபி டிபனுடன் வந்தாள்..

"எனக்குப் பசிக்கலை.."

நரேந்திரன் இறுக்கமான முகத்துடன் சொல்லி விட்டு டிவியை உயிர்ப்பித்தான்.. அதில் வந்த செய்திகளில் அவன் ஆழ்ந்திருந்தபோது அவன் கழுத்தை பிஞ்சுக் கைகள் கட்டிக் கொண்டன.. அவன் கன்னத்தில் படிந்த ஈர முத்தத்தில் நரேந்திரன் மகிழ்ந்து போனான்..

"அப்பா.." அவன் காதோரமாக கொஞ்சியது நரேந்திரனின் மழலைக்குரல்..

அவ்வளவு நேரமாக அவன் அப்பாவை மறந்து விட்டு அம்மாவிடம் கொஞ்சிக் கொண்டிருந்தான் என்பதை நரேந்திரன் மறந்து விட்டான்..

"அப்பாதாண்டா.. அப்பாவுக்கு என்ன வைத்திருக்கிற..?" அவனும் மகனைக் கொஞ்சினான்..

https://t.me/tamilpdfebooks

காபி, டிபனுடன் அருகில் வந்த ஊர்மிளா அதைக் காட்டி மகனிடம் சைகை செய்தாள்.. கப்பென்று தாய் சொன்னதைப் பிடித்துக் கொண்டான் அந்தக் குட்டிப் பையன்..

“காபி, டிபன் வைச்சிருக்கேனே..” என்று ஊர்மிளாவின் கையிலிருந்த டிரேயை வாங்க முயன்றான்..

“கீழே போட்டிருவடா..” நரேந்திரனின் கவனத்தை ஈர்த்தாள் ஊர்மிளா..

அவன் வாங்கிக் கொள்ளாவிட்டால் மகன் வாங்கி கீழே போட்டு விடுவான் என்பதால் அவன் வேறு வழியின்றி ஊர்மிளா நீட்டிய டிரேயை வாங்கி அருகிலிருந்த டீப்பாயில் வைத்தான்.. டிபன் தட்டை எடுத்தபடி அவளை முறைத்துப் பார்த்தான்.. மகனிடம் பேசுவதைப் போல பாவனை செய்தபடி ஓரக்கண்ணால் அவனது கோபத்தை அவள் பார்த்துக் கொண்டிருந்ததில் அவன் கோபம் அதிகரித்தது..

‘கெட்டிக்காரி..! வேலைக்காரியிடம் டிபன் கொடுத்து விட்டாள்ன்னு நான் கோபமாய் இருக்கிறதாலே.. இவள் டிபன் கொண்டு வந்து கொடுத்தா நான் வாங்க மாட்டேன்னு மகனை விட்டு கொடுக்க வைக்கிறா..’

முகம் கடுக்க டிபனை காலி பண்ணிய போதும் நீண்ட சோபாவில் ஒரு பக்கமாக அவனும், மறுபக்கமாக அவளும்.. மகனை ஊடே வைத்து அமர்ந்திருந்ததில் அவனுக்குள் திரும்பவும் அமைதி வந்தது..

https://t.me/tamilpdfebooks

அவளுக்கும் மகனுக்குமான உலகத்தில் அவனுக்கும் இடமிருக்கிறது என்பதில்தான் எத்துணை நிம்மதி இருக்கிறது..!

அந்த மாத இறுதியில் ஊர்மிளா எதிர்பார்க்காத பல திருப்பங்கள் நடந்தன.. பள்ளிக்குப் போன சுரேந்திரன் டிரான்ஸ்பர் செர்டிபிகேட்டோடு வீடு திரும்பினான்..

"ஏன்..?" பதறின ஊர்மிளாவுக்கு விடைகிடைக்கவில்லை..

கண்ணம்மாவுக்கும், தேன்மொழிக்கும்.. ஆறுமாத கால ஊதியத்தை கையில் கொடுத்து அந்த வார இறுதியிலிருந்து வேலைக்கு வர வேண்டாமென்றும்.. வேறு வேலை தேடிக் கொள்ளுமாறும் நரேந்திரன் சொல்லி விட்டான்..

நிம்மதியாக வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்களின் முகத்தில் இருள் படிந்தது.. மணிவாசகத்தைத் தேடிப் போனார்கள்.. அவனுக்கும் அதே நிலைதான் என்று அவன் புலம்பினான்.. வேறு இடத்தில் வேலை கிடைத்து விடும்தான்.. ஆனால் இது போன்ற வீட்டில் வேலை கிடைக்க வேண்டுமே..

உயர்மட்ட அலுவலர்கள் முதல்.. அடிமட்டத் தொழிலாளிகள் வரை பணிச்சூழல் என்பது நிம்மதியான ஒன்றாக இருக்க வேண்டும்.. இல்லாவிட்டால் அவர்களால் முழுமனதுடன் வேலைசெய்ய முடியாது..

செக்யூரிட்டிக்கு மட்டும் வேலை நிலைத்திருந்தது.. அவனும் அந்த வார இறுதியிலிருந்து பூட்டிக்கிடக்கும்

https://t.me/tamilpdfebooks

வீட்டைக் காவல் காக்க வேண்டும் என்பதில் மற்ற மூவரும் குழம்பிப் போனார்கள்.. ஊர்மிளாவை அவர்கள் அணுகி விவரம் கேட்டபோது.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனம் சாதித்தாள்..

அவர்களுக்காகவது அந்த வார இறுதியோடு அவர்களுக்கு வேலை முடிகின்றது என்பது தெரிந்திருக்கிறது..

அவளுக்கு..? எதுவும் தெரியாதே..

சுரேந்திரனின் பள்ளி மாற்றப்படப் போகிறதா..? அப்படியானால் அது எந்தப் பள்ளி..? இத்தனை நாள்களாக அவன் பழகிய பள்ளியையும்.. தோழர்களையும் பிரிந்தால் சிறுவனின் மனம் பாதிக்கப்படாதா..?

அவர்கள் வேறு வீட்டிற்கு மாறப் போகிறார்களா..? அது எந்த வீடு..? இந்த வீட்டைப் பூட்டி செக்யூரிட்டியை காவலுக்கு வைத்துவிட்டு.. அந்த வீட்டுக்கு மாற வேண்டியதன் அவசியம்தான் என்ன..?

இவை எவற்றுக்கும் ஊர்மிளாவுக்கு விடை கிடைக்கவில்லை.. நரேந்திரன் அதிகாலையில் வீட்டை விட்டுக் கிளம்பினான்.. நள்ளிரவில் வீடு திரும்பினான்..

காலையில் ஊர்மிளா விவரம் கேட்கப் போனால்.. நேரமாகிவிட்டது.. வந்து பேசலாம் என்று சொல்லிவிட்டுப் போய் விடுவான்..

நள்ளிரவில் திரும்புகிறவனிடம் அவள் பேச முயன்றால் அலுப்பாக இருக்கிறது.. அவன் தூங்க

https://t.me/tamilpdfebooks

வேண்டும் என்று சொல்லி விடுவான்.. அவனுடைய சோர்ந்த முகத்தில் ஊர்மிளாவால் எதையும் பேச முடியாமல் போய் விடும்..

வீட்டிலுள்ள பொருள்களை அடுக்கிக் கட்ட வேண்டும் என்று சிலர் லாரியில் வந்து இறங்கினார்கள்.. நரேந்திரன் அவர்களை அழைத்துக் கொண்டு போய் வீட்டைச் சுற்றிக் காட்டினான்.. ஊர்மிளா பார்த்துக் கொண்டிருக்கும் போதே பொருள்கள் கனமான அட்டைப் பெட்டிகளில் அடுக்கப்பட்டு கட்டி சீல் வைக்கப்பட்டன..

"நம்ம டிரஸ்ஸை பெட்டிகளில் அடுக்கிரு.. சுரேனின் ஸ்கூல்பேக் சொ்டிபிகேட்ஸ் எல்லாம் தனிப் பெட்டியில் வை.. அதைப் போல அவனின் மெடிகல் ஹிஸ்டரியோட ஃபைல்.. டேப்லெட்ஸ்.. எக்ஸ்ரேஸ் மத்த டெஸ்டுகளோட ரிசல்ட்ஸ் இதையெல்லாம் வேறொரு பெட்டியில் வைத்து பத்திரமா எடுத்துக்க.." என்றான் நரேந்திரன்..

"எங்கே போகிறோம்..?"

ஊர்மிளாவின் கேள்வி காதில் விழுகாததைப் போல அவன் வெளியே சென்று விட்டான்.. ஊர்மிளாவுக்கு துக்கமாக இருந்தது.. அவனும்.. அவளும் மகனுடன் வாழ்ந்த இனிய நினைவுகள் நிரம்பிய அந்த வீட்டை விட்டுக் கிளம்ப அவளுக்கு மனம் வரவில்லை..

பெங்களூர் வீட்டை விட அளவில் சிறியதுதான்.. ஆனால் அது அவளுக்கான வீடு.. அவளை மட்டும் தாங்கிய வீடு.. அந்த வீட்டில்தான் அவள் கணவன், மகனென்று

https://t.me/tamilpdfebooks

அழகான குடும்ப வாழ்வை வாழ்ந்தாள்.. அந்த வீட்டில்தான் அவளைத் தேடிவந்து நோகடித்த அகல்யாவை எதிர்த்து நின்று விரட்டியடித்தாள்..

அந்த வீட்டை விட்டுக் கிளம்ப வேண்டுமா..?

ஏனென்று கேட்டும் உரிமையில்லாமல் போனதில் ஊர்மிளா இறுகிப் போனாள்.. ஒரு வீட்டில் நிலைத்திருக்கக் கூட அவளுக்கு கொடுப்பினை இல்லையா என்று அவள் மனம் வெம்பிப் போனது..

"பேசாமல் திருச்சிக்கே போயிருக்கலாம்.."

சுரேந்திரனிடம் சொல்வதைப் போல நரேந்திரனின் காதுபடச் சொன்னாள்.. அவன் உக்கிரமாக அவளை முறைத்து விட்டு..

"அங்கே யாரிருக்கா சுரேன்..?" என்று கேட்டான்..

'உனக்குத் தெரியாதா..?' அவளுக்கு வேகம் வந்தது.

"என் அப்பா இருக்கிறார்டா.." என்று மகனிடம் சொன்னாள்..

"பட்.. உன்னோட அப்பா இங்கேதான் இருக்கேண்டா.. ஸோ.. உங்க அம்மாவை வேணும்னா அவ அப்பாவிடம் போய் விடச் சொல்லு.. நீ உன் அப்பாவுடன் வந்து விடு.." கடுமையாகச் சொன்னான் நரேந்திரன்..

ஊர்மிளாவின் மனம் எரிந்தது.. திரும்பவும் வாய் விடுகிறான் என்று குமுறினாள்..

https://t.me/tamilpdfebooks

"ஆமாண்டா.. உன் அப்பாவுக்கு மகன் மட்டும்தான் முக்கியம்.. அவனோட அம்மா முக்கியமில்லை.. நானென்ன வாடகைத் தாயாடா..?" என்று கேட்டு விட்டாள்..

"அதே கேள்வியை நானும் கேட்கலாம்டி.." அவள் அருகில் வந்து அவள் விழிகளுக்குள் உறுத்துப் பார்த்தான் நரேந்திரன்..

அவள் முகம் திருப்பிக் கொண்டாள்.. அவன் முகம் சினந்தான்..

"என்மேல தப்பிருக்குன்னு நீ குற்றம் சொல்கிறதாலே பொறுமையாய் போகிறேண்டி.. இல்லைன்னா நடக்கிறதே வேற.." என்றான்..

'என்ன நடந்திருக்கும்..?'

ஊர்மிளாவால் அனுமானிக்க முடியவில்லை.. அவன் டிக்கியில் பெட்டிகளை அடுக்கச் சொன்னான்.. லாரியில் பொருள்கள் ஏறியதும் அது கிளம்பியது.. கண்ணம்மாவையும்.. தேன்மொழியையும் அனுப்பி விட்டு ஊர்மிளாவைக் காரில் ஏறச் சொன்னான்.. அவள் சுணங்கிய முகத்துடன் சுரேந்திரனைத் தூக்கியபடி பின் சீட்டில் ஏறினாள்.. கார் கிளம்பியது..

https://t.me/tamilpdfebooks

91

காலமென்னும் பாதையிலே..
கால் போன போக்கில் போன..
அழகான ராட்சசி நீ....

நரேந்திரன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.. முன் சீட்டிலிருந்த கண்ணாடியை அடிக்கடி பார்த்துக் கொண்டான்.. அந்த இரவு நேரப் பயணத்தில் கடந்து போன வாகனங்களின் விளக்கு வெளிச்சத்தில் அழகோவியமாக தெரிந்தாள் ஊர்மிளா.. மகனை மடியில் படுக்க வைத்திருந்தாள்.. தூங்கிக் கொண்டிருக்கும் மகன் கீழே புரண்டு விழுந்து விடக் கூடாது என்று வலது கரத்தால் அவனை இறுக்கி அணைத்திருந்தாள்..

அதைப் போல நரேந்திரனை அவள் மடியில் படுக்க வைத்திருந்த தருணங்களை நினைவு கூர்ந்தான் நரேந்திரன்.. அவன் வெளிநாட்டிற்கு கிளம்புவதற்கு முதல் நாள் இரவில்.. மொட்டை மாடியின் நிலா விருந்தில்.. தரையில் விரிக்கப் பட்டிருந்த மெத்தையில் அமர்ந்து அவனை மடியில் கிடத்திக் கொண்டவள்தான் அவள்..

'அந்த மூன்லைட் டின்னரை அகல்யா வேவு பார்த்தாங்களா..?'

நரேந்திரன் பல்லைக் கடித்தான்.. இது போல அவனுடைய கவனத்திற்கு வராத எத்தனை செய்திகள்

https://t.me/tamilpdfebooks

அவள் மனதில் புதைந்திருக்கின்றனவோ என்ற வருத்தம் அவனுக்கு ஏற்பட்டது..

நரேந்திரன் மனைவி இது போன்ற அநாகரிகப் பேச்சுக்களையும், செயல்களையும் எதிர்கொண்டாளா..?

துயரம் தோய்ந்த ஊர்மிளாவின் தோற்றம் நிழலோவியமாக கண்ணாடியில் தெரிந்தது.. இவள் மனக்கும் பாரத்தை இறக்கி வைக்கவே முடியாதா என்று அவன் மனம் மருகினான்..

ஒரு நொடி அவனைப் பிரிந்தால் கூட விழிகளால் அவனைத் தேடுபவள்.. அவன் வெளிநாட்டில் இருக்கும் போது செல்போனில் கூட ஏன் பேசவில்லை..?

இதற்குப் பின்னால் பலமான காரணம் ஒளிந்திருக்க வேண்டும்.. என்று நரேந்திரன் அன்றும் நினைத்தான்.. இன்றும் நினைத்தான்.. எங்கே.. அதைத்தான் ஊர்மிளா வாய் விட்டுச் சொல்ல மறுக்கிறாளே.. தனக்குள்ளே இறுகி புதைந்து போகிறாளே..

"என்னதாண்டி நடந்தது..?" அவன் கேட்டு விட்டான்..

ஜன்னல் வழியாக வானத்தில் தெரிந்த நிலவையும்.. நட்சத்திரங்களையும் வெறித்துக் கொண்டிருந்த ஊர்மிளா தூக்கிவாரிப் போட்டவளாக அவன் பக்கம் திரும்பினாள்..

"என்ன கேட்டிங்க..?"

"என்னதான் நடந்ததுன்னு கேட்டேன்.."

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா பதில் சொல்லவில்லை.. உதட்டைச் சுழித்த அவளின் வெறுப்புச் சிரிப்பை கடந்து போன வாகனத்தின் வெளிச்சம் காட்டிக் கொடுத்தது..

'அவ்வளவுதான்.. இறுகிப் போவா..' அவனுக்கு வெறி வெறியாய் வந்தது..

"ஏண்டி என்னை இந்தப் பாடு படுத்தற..?" எரிச்சல் பட்டான்..

"நான் என்ன செய்தேன்..?" நிதானமாக அவள் நியாயம் கேட்டாள்..

"ஆட்டுக்குட்டியைப் போல.. நீங்கள் சொடக்குப் போட்டுக் கூப்பிடுகிற இடத்துக்கெல்லாம் பின்னாலேயே ஃபாலோ பண்ணி வந்துக்கிட்டு இருக்கேன்.. தஞ்சாவூரில் வேலை பார்த்தேன்.. சென்னைக்கு வர வைத்தீங்க... வேலையும் போச்சு.. மூச்சு விடாமல் வந்தேனா இல்லையா..? இப்ப எங்கே போகிறோம்ன்னே தெரியாம டிராவல் பண்ணிக்கிட்டு இருக்கேன்.. இப்பவும் வாய் பேசாம உங்க பின்னால் வருகிறேனா இல்லையா..?"

"ஓ..."

அவளின் நீண்ட விளக்கத்தை ரசித்துக் கேட்டவன்.. அவளிடம் திருத்தமாக ஒரு விளக்கத்தைக் கேட்டான்..

"நான் சொடக்குப் போட்டுக் கூப்பிட்ட அத்தனை இடத்துக்கும் நீ அப்ஜெக்சன் பண்ணாம வந்துட்டியா..?"

ஆழ்ந்த குரலில் கேட்டவன் எதைக் குறிப்பிட்டுக் கேட்கிறான் என்று அவளுக்கு விளங்கி விட்டது.. அந்த இருள் படர்ந்த மெலிதான வெளிச்சத்திலும் அவளது முகச்

https://t.me/tamilpdfebooks

சிவப்பை அவனால் கண்ணாடியில் பார்க்க முடிந்தது.. அவன் மனம் உல்லாசமானது..

"இதுக்குப் பதில் சொல்ல மாட்டியே.." அவன் குரலில் சிரிப்பிருந்தது..

"ஹெவி டிராபிக்.." சம்பந்தமில்லாமல் சொன்னாள் ஊர்மிளா..

"அதுக்கு..?"

"ரோட்டைப் பார்த்துக் காரை ஓட்டுங்க.."

"அப்படிங்களா மேம்.. நீங்க சொன்னா சரிதான் மேம்.."

அவனின் கேலியில் அதிகமாக முகம் சிவந்தாள் ஊர்மிளா.. இதமான ஏஸியின் குளிரில்.. வெளிச்சமில்லாத அந்த இரவுப் பயணம் அவளை ஏதோ செய்தது... அதற்கேற்றார் போல சிடி பிளேயரில் ஓடிக் கொண்டிருந்த பாடலும் அவளுக்குள் இன்பமான இம்சையை விதைத்தது..

"எனக்காக வா..
நான் உனக்காக வா..."

ஒலித்த பாடல் கிளப்பி விட்ட ஓராயிரம் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வர யத்தனித்தபடி ஜன்னலில் வேடிக்கை பார்ப்பதைப் போல காரை ஓட்டிக் கொண்டிருந்தவனை வேடிக்கை பார்த்தாள் ஊர்மிளா.. கலைந்திருந்த அவன் முடியில் விரல் விட்டுக் கோத அவள் மனம் ஆசை கொண்டது.. ஆசையை அதட்டி வைத்தாள்..

கண்ணுக்கு முன்னால் இருந்தும் எட்டாத தொலைவில் இருக்கிறவனைப் போல அவளை ஏங்க

https://t.me/tamilpdfebooks

வைத்தவனின் புஜங்களைத் தழுவிச் சேர்ந்துவிடத் துடித்தது அவள் மனம்..

ஊர்மிளா பெருமூச்சு விட்டாள்.. இது துயரம் என்று நினைத்துக் கொண்டாள்.. கட்டிய கணவனை கட்டியணைக்க முடியாமல் போவது.. அவளது விழியோரம் கண்ணீர் அரும்பு கட்டியது.. துயரத்துடன் சீட்டில் தலை சாய்ந்தாள்..

"நான் உன் பக்கத்தில்தான் இருக்கிறேன் ஊர்மிளா.."

நரேந்திரனின் குரல் அவளை ஊடுறிவியது.. அவன் எதைச் சொல்கிறான் என்று அவளுக்குப் புரியாவிட்டாலும்.. அவளுக்கும்.. அவனுக்குமான அந்தரங்கத்தைத்தான் சொல்லப் போகிறான் என்று அவள் மனதுக்குள் ஒரு பட்சி சொன்னது..

"நீ நினைச்சா என்னை மடியில சாய்த்துக்கலாம்.. என் தலை முடியில் விரல் விட்டுக் கோதலாம்.. யார் உன்னைத் தடுக்கிறது..? நான் உன்னுடையவன் டி.."

ஊர்மிளாவுக்கு அழுகையே வந்து விட்டது.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு கேவலை அடக்கிக் கொண்டாள்..

"ப்ளீஸ்.. காரை ஒட்டற வேலையை மட்டும் பாருங்க.." என்று சொன்னாள்..

"நானென்ன உனக்கு கார் டிரைவரா..?" அவன் சட்டமாக கேட்டு வைத்தான்..

"இப்படி வம்பிழுக்கத்தான் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு வந்தீங்களா..?"

https://t.me/tamilpdfebooks

"காரில் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கேன்.. தூக்கிப் போட்டுக்கிட்டு வரலை.. நீ சொன்ன பின்னால் தான் வன் அதைச் செய்யாமல் விட்டேன்னு ஆசை ஆசையாய் சொன்னது.."

இவன் பேசாமல் வரக் கூடாதா என்றிருந்தது சார்மிளாவுக்கு.. அவள் தபஸ்வினி அல்ல.. முற்றும் துறந்த சன்யாசினி அல்ல.. நரேந்திரன் என்ற மனிதனின் மீது அளவுகடந்த ஆசையையும், காதலையும் வைத்திருந்தவள்.. வைத்திருக்கிறவள்.. அவளுடைய எதிர்பார்ப்புகளை அவன் தவிடு பொடியாக்கி அகல்யாவின் முன்னால் தோற்றுப் போக வைத்த பின்னாலும்.. பிரிந்து சென்று அவனின் நினைவுச் சுமையைத் தாங்க முடியாமல் முடிந்து விழுந்தவள்..

அவனைப் பிரிந்து.. அவனின் நினைவோடு வாழ்கிற போது அவள் தபஸ்வினியாக இருந்தாள்.. ஆசாபாசங் களைத் துறந்த சன்யாசினியாக இருந்தாள்.. அவனுடைய நினைவுடன் தபோ வாழ்வை வாழ அவளால் முடிந்தது..

இப்போது அப்படியில்லையே.. அவள் மனதில் இருந்தவன்.. நிஜத்தில் எதிரில் நின்று தொலைக்கிறானே.. அவளை பார்வையாலும் பேச்சாலும் அழைக்கிறானே.. அவனுடைய அழைப்பை ஏற்று அவன் அணைப்பில் அடங்கத் துடிக்கும் மனதையும், உடலையும் கட்டுப் படுத்திக் கொள்ள அவள் பாடாய்பட வேண்டியிருக்கிறதே..

வழியில் காபி ஷாப்பில் காரை நிறுத்தினான் நரேந்திரன்.. விழித்துக் கொண்ட சுரேந்திரனை அங்கிருந்த

https://t.me/tamilpdfebooks

பாத்ரூமுக்கு அழைத்துச் சென்று திரும்பி வந்தாள் ஊர்மிளா.. மகனின் முகத்தைத் துடைத்து விட்டுக் கொண்டிருந்தவளிடம் என்ன வேண்டும் என்று கேட்டான் நரேந்திரன்..

“அதிக சூடில்லாமல் ஒரு கப் பால்.. சூடா இருந்தா இவன் குடிக்க மாட்டான்..” என்றாள் ஊர்மிளா..

“நான் சுரேனைக் கேட்கவில்லை.. உன்னைத்தான் கேட்டேன்.. ஆல்ரெடி அவனுக்குப் பால்சொல்லி ஆற்றி வாங்கிக் கொண்டு வந்தாகி விட்டது.. உனக்கு என்ன வேணும்ன்னு சொல்லு.. காபியா..? டீயா..?” எரிச்சலுடன் சுரேந்திரனுக்கான பாலை நீட்டினான் அவன்..

“எப்படித் தெரியும்...” வியப்புடன் பால்கப்பை வாங்கிக் கொண்ட ஊர்மிளா மகனுக்கு அதை புகட்டத் துவங்கினாள்..

“நான் அவனுக்கு அப்பாடி..” நரேந்திரன் சீறினான்..

அவனுடைய சீற்றம் எதற்காக என்று அவனுக்கும் தெரியவில்லை.. அவளுக்கும் தெரியவில்லை.. அவளை ஆள முடியாத கோபம் அவ்வபோது சீற்றமாக வந்து வெடிக்கிறது என்பதை அவர்கள் இருவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை..

“உனக்கு என்ன வேணும்ன்னு சொல்லப் போறியா இல்லையா..?” அவன் கோபப் பட்டான்..

“டீ..” ஊர்மிளா முணுமுணுத்தாள்..

https://t.me/tamilpdfebooks

"அதைச் சத்தமாத்தான் சொல்கிறது..?" நரேந்திரன் அதற்கும் அவளை முறைத்தபடி காபி ஷாப்பிற்க்குள் போனான்..

காரின் பின் சீட்டின் கதவை திறந்து வைத்த ஊர்மிளா மகனை காருக்குள் உட்கார வைத்தாள்.. நரேந்திரன் டீயுடன் வந்துவிட.. அதை வாங்கிப் பருகியபடி அவனைப் பார்த்தாள்.. அவனும் அவளையேதான் அப்போது பார்த்துக் கொண்டிருந்தான்.. பார்வைகள் பின்னிக் கொண்டன.. அவன் கண்களில் மின்னல் வந்தது.. அவள் முகத்தில் வெட்கம் வந்தது.. தடுமாற்றத்துடன் பார்வையை விலக்கிக் கொண்டவளை ரசனையுடன் அவன் பார்த்தான்.. சன்னமாக விசிலடிக்கவும் செய்தான்.. விசில் ஒலியில் சுரேந்திரன் விசித்திரமாக தகப்பனைப் பார்த்து வைக்க.. இவன் அவனைப் பார்த்து கண்சிமிட்டினான்..

"என்னடா பார்க்கிற..? தி கிரேட் இன்டஸ்ட்ரியலிஸ்ட் நரேந்திரன் விசிலடிக்கிறானேன்னு பார்க்கறியா..?" என்று கேட்டான்..

தகப்பனின் கேள்வி புரியாவிட்டாலும்.. ஆமாம் என்று தலை ஆட்டி வைத்தான் சுரேந்திரன்..

"இதுக்கே இப்படிப் பார்க்கறியே.. இதே கிரேட் நரேந்திரன்.. திருச்சியில உங்க அம்மா பின்னாலே ரோமியோ மாதிரி சுத்தினதைப் பார்த்திருந்தா எப்படிப் பார்ப்பியோ.." என்று நரேந்திரன் சொல்ல.. வாய் மூடி

"களுக்.." என்று சிரித்து வைத்தாள் ஊர்மிளா..

https://t.me/tamilpdfebooks

எப்போதும் இறுக்கமான முகபாவனையுடனே வளைய வருகிறவளிடம் வந்த அந்தச் சிரிப்பு அழகு மயமானதாக நரேந்திரனுக்குத் தோன்றியது.. அவன் அவளையே பார்த்தான்.. வாய் பொத்திச் சிரிப்பை அடக்க முயன்று கொண்டிருந்தாள் ஊர்மிளா..

கண்களும்.. முகமும்.. பூவாக மலர்ந்து சிரித்த அந்தச் சிரிப்பில் தன் மனதை பறிகொடுத்தான் நரேந்திரன்..

'எப்படிச் சிரிக்கிறா..' அவன் இதயம் நெகிழ்ந்தது..

'இத்தனை நாளா இந்தச் சிரிப்பை எங்கே ஒளித்து வைத்திருந்தா..?'

எதற்காக அகல்யா இருந்த வீட்டிற்கு ஊர்மிளாவுடன் வாழப் போனான் என்று மீண்டும் அவனை நொந்து கொண்டான் நரேந்திரன்..

அவன் மட்டும் அதைச் செய்யாமல் அவனுடைய சொந்த வீட்டிற்கு.. அவனுக்கு மட்டும் உரிமையான வீட்டிற்கு ஊர்மிளாவை அழைத்துப் போயிருந்தால் அவனடைய காதல் மனைவியின் மனதில் என்ன ரணம் இருக்கிறது என்று அறிய முடியாமல் அவன் துடித்துக் கொண்டிருப்பானா..?

"எதுக்குடி சிரிக்கிற..?" அவளை விழுங்குவதைப் போலப் பார்த்தபடி கேட்டான் நரேந்திரன்..

"சும்மா.." ஊர்மிளா அப்போதும் சிரித்தாள்..

"நீ சும்மா சிரிக்கிறவ.. எனக்கு உன்னைத் தெரியாதா..? சிரிக்கிறதுக்கு சேலரி கேட்கிற ஆளாச்சே நீ.."

https://t.me/tamilpdfebooks

அவன் வெட்கமில்லாமல் அவளைப் பார்வையிலேயே தின்று வைத்தான்..

அவள் மேனி முழுவதும் மேய்ந்த அவன் பார்வையில் அவள் லஜ்ஜையானாள்..

"லஜ்ஜாவதியே..! என்னை
மயக்கிற ரதியே..."

நரேந்திரன் மெதுவாக பாடி வைத்தான்.. இதற்கும் சுரேந்திரன் தகப்பனை உற்றுப் பார்த்து வைத்தான்..

"இவன் வேற உளவுப்படை போல கண்காணிச்சுக் கிட்டே இருப்பான்.. எதுக்குடா இப்படிப் பார்க்கிற..? உன் அம்மாகூட திருச்சியைச் சுத்தி வந்த காலத்திலே இதைவிட அதிகமா பாட்டுப் பாடுவேன் தெரியுமா.. அப்ப நீ பார்த்திருக்கனும்.."

நரேந்திரனின் பெருமையில் மீண்டும் பொங்கிச் சிரித்தாள் ஊர்மிளா..

"என்னடி..?" என்றான் நரேந்திரன்..

"இவன் எப்படி 'அப்ப' வந்து பார்ப்பான்..?"

ஊர்மிளா 'அப்ப...' என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்தாள்..

"ஓ.." இப்போது நரேந்திரனும் சேர்ந்து சிரித்தான்..

தாய், தகப்பனின் இணைந்த சிரிப்பில் எதற்கும் இருக்கட்டுமென்று தானும் சிரித்து வைத்து இணைந்து கொண்டான் சுரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

ஒன்றுபட்ட அந்த மூவரின் சிரிப்பில் நரேந்திரனின் மனம் நிறைந்தது.. தொலைந்திருந்த அமைதி வந்து அவன் மனதில் விரவுவதை வியப்புடன் அவன் உணர்ந்தான்..

"அப்ப இவன் எங்கே இருந்தாண்டி..?"

கிசுகிசுத்த குரலில் ஊர்மிளாவிடம் நரேந்திரன் கேட்டபோது அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது..

"போதும்.." அவள் முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள்..

இதுபோதும் என்று நரேந்திரனின் மனம் சொன்னது.. அவளை ஆள முடியாத வேட்கை தந்த வெக்கை தணிந்து குளிர் பரவியது.. அவன் மகனைத் தூக்கி காரின் முன் சீட்டில் அமர வைத்துக் கொண்டான்.. ஊர்மிளா பின் சீட்டில் ஏறிக் கொண்டாள்..

மகனுடன் பேசியபடி நரேந்திரன் காரை ஓட்ட... தகப்பனும் மகனும் பேசிக் கொள்ளும் உரையாடலை நிறைவுடன் கேட்டுக் கொண்டிருந்தாள் ஊர்மிளா.. நிம்மதியுடன் அவள் விழிகள் மூடின..

இதுபோன்ற இன்பம் கட்டில்தரும் இன்பத்தை விட நிறைவானது..

https://t.me/tamilpdfebooks

92

கொடிபோன்ற அழகுடனே..
எனைத் தனிமையிலே தள்ளிவிட்ட
அழகான ராட்சசி நீ....

ஊர்மிளா கண் விழித்த போது லேசாக விடிந்திருந்தது.. சுரேந்திரன் எங்கே என்று தேடினான்.. அவன் முன்சீட்டில் நரேந்திரனின் தோள் மீது சாய்ந்தபடி தூங்கிக் கொண்டிருந்தான்.. அவன் விழுந்து விடாம லிருக்க சீட் பெல்ட் அவனை இறுக்கியிருந்தது..

“இவன் தூங்க ஆரம்பிச்சவுடனே பின்சீட்டுக்கு அனுப்பியிருக்கலாமில்ல..?”

தூங்கிவிட்ட குற்ற உணர்வுடன் ஊர்மிளா கேட்டாள்.. நரேந்திரன் லேசாக அவளைத் திரும்பிப் பார்த்தான்..

“எதுக்கு..? இவனை உன் மடியில போட்டுக்கிட்டு நீ விடிய விடிய தூங்காம டிராவல் பண்ணறதுக்கா..?”

அவளுடைய தூக்கத்திற்காக பார்த்திருக்கிறான்.. ஊர்மிளா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவள் மீதான அவனின் அக்கறையில் அவளது மனக்காயம் லேசாக ஆறத் தொடங்க ஆரம்பித்திருப்பதை அவளால் உணர முடிந்தது..

https://t.me/tamilpdfebooks

இப்போதெல்லாம் அவனுடன் இயல்பாக பேசிப் பழகு முடிகிறது.. இதுவே தஞ்சையில் அவனைப் பார்த்த போது எதிரியைப் பார்ப்பதைப் போல முகம் பார்க்காமல் தானே அவள் நின்றிருந்தாள்..?

தூக்கம் வந்து திரும்பவும் கண்களைச் சுழற்றியது.. அதை துரத்தியடித்த படி..

"குட்டியை இங்கே கொடுங்க.." என்றாள்..

"இவனே நிம்மதியா தூங்கிகிட்டு இருக்கான்.. எதுக்காக இவன் தூக்கத்தை டிஸ்டர்ப் பண்ணனும்னு நினைக்கிற..? பேசாம தூங்கு.." நரேந்திரன் அதட்டினான்..

ஊர்மிளாவின் இமைகள் அதுதான் சாக்கென்று மூடிக் கொள்ள முயன்றன.. சாலையைக் கவனித்தபடி காரை ஓட்டிக் கொண்டிருந்த நரேந்திரனின் சோர்ந்த தோற்றத்தில் அவளது தூக்கம் தள்ளி நின்றது..

"நீங்க தூங்காம காரை ஓட்டறிங்களே..?"

"அதுக்கு..? நீ டிரைவிங்கை மாத்திக்கறேன்ங் கிறியா..?"

"செய்யவா..?"

"அதையெல்லாம் கிரௌவுண்டில் ஓட்டிப் பார்க்கும் போது செய்துக்க.. இத்தனை வருசத்திலே டச் விட்டிருக்கும்.. எனக்கு கண் விழித்து பழக்கம்தான்.. நீ தூங்கு.."

இதற்கு மேலும் வழக்கடிப்பானேன் என்று அவள் உறங்கிப் போனாள்.. திரும்பவும் அவள் கண் விழித்த

https://t.me/tamilpdfebooks

போது கார் அடர்ந்த மரங்கள் கொண்ட அழகான குடியிருப்புகள் நிறைந்த பகுதியிலிருந்த சாலையில் ஓடிக் கொண்டிருந்தது..

'இது என்ன இடம்..?'

ஊர்மிளாக கண்களை கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தாள்..

சாலையில் இருபக்கமும் அடர்ந்திருந்த மரங்கள் கொட்டியிருந்த ஆரஞ்சு வண்ண மலர்கள் பூக்குவியல்களாக கிடந்தன.. குடியிருப்பிலிருந்த ஒவ்வொரு வீடும் மாளிகைக்கு நிகராக இருந்தது.. கோடிஸ்வரர்கள் மட்டுமே குழுமியிருக்கும் பகுதி அது என்று ஓர் பார்வையிலேயே ஊர்மிளாவுக்குப் புரிந்து விட்டது.. அது எந்த ஊரிலிருக்கும் குடியிருப்புப் பகுதி என்று மட்டும் அவளுக்குத் தெரியவில்லை..

உயர்ந்த காம்பவுண்டு சுவர்களும்.. பிரம்மாண்டமான கேட்களும் இருந்த வீடுகள் அமைதியாக இருந்தன.. வாசலில் இருந்த செக்யூரிட்டிகள் காலைப் பேப்பரைப் படித்த வண்ணம் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள்..

'சுதந்தரமில்லாத வாழ்க்கை...' ஊர்மிளாவின் இதழ்களில் புன்னகை தவழ்ந்தது..

குடியிருப்புப் பகுதியில் இருந்த பெயர் பலகைகள் அந்தந்த வீட்டின் பெயரையும்.. வீட்டில் குடியிருந்தவர் களைப் பற்றிய விவரத்தையும் மட்டுமே அறிவித்தது.. ஊர் பெயரைக் குறிப்பிடவில்லை..

https://t.me/tamilpdfebooks

“இது எந்த ஊர்..?” ஊர்மிளா கேட்டு விட்டாள்..

காரை ஓட்டிக் கொண்டிருந்த நரேந்திரனின் முகத்தில் இருந்த ஏதோ ஒன்றில் ஊர்மிளா குழம்பினாள்..

‘என்ன சஸ்பென்ஸா இருக்கும்..? இப்படிப் பார்த்து வைக்கிறானே.. ஒருவேளை என்னையும் சுரேந்திரனையும் திருச்சிக்கு அழைத்து வந்திருக்கிறானோ..?’

நினைவு வந்தவுடனே இருக்காது என்று அதை மறுத்தாள் ஊர்மிளா.. அவள் திருச்சிக்குப் போகப் போவதாக சொன்னபோது.. சுரேந்திரன் வர மாட்டான் என்று நரேந்திரன் சொன்னதை நினைவு படுத்திக் கொண்டாள்..

அத்துடன் அந்த ஏரியா திருச்சியைச் சேர்ந்ததைப் போல இல்லையே.. அவள் பிறந்து வளர்ந்த திருச்சியைப் பற்றி அவளுக்குத் தெரியாதா..?

‘ஒருவேளை.. இது தஞ்சையாக இருக்குமோ..’

இருக்காது என்று அந்த நினைவையும் துரத்தி விட்டாள்.. தஞ்சையில் அது போன்ற ஏரியாவை அவள் பார்த்ததில்லை என்பது ஒரு புறமிருக்க.. தஞ்சைக்குப் போனால் ஊர்மிளா அவளுடைய வேலையில் சேர்ந்து விடுவாள் என்பதால் நரேந்திரன் ஊர்மிளாவை தஞ்சையின் பக்கமே போக விடமாட்டான் என்பது ஊர்மிளாவின் அனுமானம்..

ஓங்கி உயர்ந்த பிரம்மாண்டமான மாளிகைகளின் மத்தியில் எல்லாவற்றையும் விட பிரம்மாண்டமாக இருந்த

https://t.me/tamilpdfebooks

பெரிய மாளிகையின் சுற்றுப்புற வளாகத்துக்குள் கார் நுழைந்தது.. அந்த வீட்டின் பிரம்மாண்டத்தில் மலைத்தாள் ஊர்மிளா..

'இது யார் வீடா இருக்கும்..?'

அது வீடல்ல.. மாளிகை..! அகன்ற அகலமான தூண்களோடு அரண்மனையின் முகப்பைப் போல அமைந்திருந்த போர்டிகோவின் கீழ் நூறு கார்களை வரிசை கட்டி நிறுத்தலாம் போல இருந்தது..

போர்டிகோவின் அந்தப் பக்கமாக நீச்சல் குளம்.. அதைச் சுற்றியிருந்த பளிங்கு விளிம்பு.. அதன் ஓரமாக போடப் பட்டிருந்த அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய நாற்காலிகள்.. இந்தப் பக்கமாக தோட்டம்.. அதிலிருந்த மலர் வளைவுகள்.. சாய்வான மரபெஞ்சுகள்.. பூங்காவைப் போல ஆங்காங்கே செயற்கை நீரூற்றுகள்..

சுரேந்திரன் கண்களை அகல விரித்து அந்தச் சூழலை ஆர்வத்துடன் வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டான்.. புன்னகையுடன் இறங்கிய நரேந்திரன் காரைச் சுற்றி வந்து.. முன் பக்கம் கதவைத் திறந்து சுரேந்திரனைத் தூக்கிக் கொண்டான்... பின்பக்கம் இறங்க மறந்து திகைத்துப் போய் உட்கார்ந்திருந்த ஊர்மிளாவிடம்..

"ஊம்.. வீடு வந்தாச்சு.. இறங்கு.." என்றபடி கார் கதவைத் திறந்து விட்டான்..

கேள்வியுடன் கணவனைப் பார்த்தபடி ஊர்மிளா இறங்கினாள்.. அதற்குள் வீட்டுக்குள்ளிருந்து தடதட

https://t.me/tamilpdfebooks

வென்று வேலையாள்கள் ஓடி வந்தார்கள்.. நரேந்திரனைக் கண்டதும் ஆனந்தத்துடன் வணக்கம் சொன்னார்கள்.. கார் டிக்கியைத் திறந்து பெட்டிகளை எடுத்துக் கொண்டு போனார்கள்..

"இங்கேயா நாம தங்கப் போறோம்..?" ஊர்மிளா கேட்டாள்..

"ம்ம்ம்.." மர்மமான புன்முறுவலுடன் தலையசைத்தான் நரேந்திரன்..

"ஆனா.. ஏன் இங்கே வந்து தங்கனும்..?"

ஊர்மிளா தொடர்ந்து கேள்வி கேட்க ஆரம்பித்தாள்.. எதற்கும் பதில் சொல்லாமல் வீட்டு வாசலையே பார்த்துக் கொண்டிருந்தான் நரேந்திரன்.. திடிரென்று அவன் கண்கள் மின்னின.. முகம் கனிந்தது..

'யாரைப் பார்த்து இப்படி ஜெர்க் ஆகிறான்..?'

ஊர்மிளாவும் திரும்பிப் பார்த்தாள்.. அங்கே சினிமாவில் வரும் கோடிஸ்வரத் தம்பதிகளைப் போல களையான முகமும், தோரணையுமாக ஒரு பெரியவரும்.. பெண்மணியும் வந்து கொண்டிருந்தார்கள்.. அவர்களுக்குப் பின்னால் ஆரத்தி தட்டுடன் வேலைக்காரப் பெண் வந்தாள்..

"பெண்டாட்டி பிள்ளையோடு சேர்ந்து நில்லுடா.." அந்த முதிய பெண்மணி அதட்டினாள்... அழகாக கொண்டையிட்டு அதைச் சுற்றி மல்லிகைச் சரத்தை வளையமாக வைத்திருந்தாள்.. காதிலும் கழுத்திலும்,

https://t.me/tamilpdfebooks

...களிலும் வைரங்கள் டாலடித்தன.. அகலக் கரையுடன் கூடிய பட்டுப் புடவையை அணிந்திருந்தாள்..

“சரி பாட்டி..”

சிரித்தபடி சுரேந்திரனை ஒரு கையில் இறுக்கிக் கொண்டு.. மறுகையை ஊர்மிளாவின் தோள்மீது போட்டு அவளை அருகே இழுத்து இறுக்கியபடி நின்றான் நரேந்திரன்..

‘பாட்டியா..?..!...’

ஊர்மிளா ஆச்சரியம், ஆர்வம், பிரமிப்பு என்று பல்வேறு உணர்ச்சிக் கலவைகளுடன் சித்ரலேகாவைப் பார்த்தாள்.. அந்த முதிய பெண்மணியின் கருணையே வடிவான சாத்வீக முகத்தைக் கண்டவளின் கண்கள் கலங்கி விட்டன..

‘இவள் எனது நரேனைப் பெற்ற தாயைப் பெற்ற தாயா..?’

ஊர்மிளா நரேந்திரனிடமிருந்து விலகி.. வில்லில் இருந்து புறப்பட்ட அம்பைப்போல சித்ரலேகாவின் காலடியில் போய் விழுந்தாள்..

“பாட்டி..”

குனிந்து பேரனின் மனைவியைத் தூக்கிய சித்ரலேகாவின் கண்களில் இருந்து தாரைதாரையாக கண்ணீர் பெருக்கெடுத்தது..

“ஊர்மிளா.. என் கண்ணே..! இந்தப் பாட்டியைப் பார்க்க வர இத்தனை நாள் ஆனதாம்மா..? வயதான உன்

https://t.me/tamilpdfebooks

தாத்தாவுக்கும் பாட்டிக்கும் உங்களை விட்டா சொந்தம்ன்னு சொல்லிக்க இந்த உலகத்தில யாரிருக் காங்கம்மா..? கல்யாணம் ஆனவுடனே நீ வலது காலை எடுத்து வைத்து நம்ம வீட்டுக்கில்ல வந்திருக்கனும்..? அப்படி வந்திருந்தா இந்த குட்டி நரேந்திரனைப் பார்க்க நான் இத்தனை வருசமா காத்திருக்க வேண்டி வந்திருக்குமா..?"

சித்ரலேகாவின் கேள்வியில் அவள் தோளில் சாய்ந்து கழுத்தைக் கட்டிக் கொண்டு உடைந்து போய் அழுதாள் ஊர்மிளா..

"பாட்டி.."

அவளால் பேசமுடியவில்லை.. எது அவளை அந்த வீட்டிற்கு வர விடாமல் செய்தது..? இப்படிப்பட்ட பண்பான முதியவர்களை விட்டு எந்த சக்தி அவளைப் பிரித்து நிறுத்தியது..? இந்த வயதானவர்களுக்கு சேவை செய்து.. அவளுடைய கணவனை வளர்த்தவர்களுக்கு நன்றிக் கடனை செழுத்த முடியாமல் அகல்யா இருக்குமிடத்தில் ஏன் அவளது வாழ்க்கை அவளைக் கொண்டு போய் சேர்த்தது..?

என்னவோ காலம் காலமாய் சித்ரலேகாவை அறிந்தவளைப் போல ஊர்மிளா துடிதுடித்து அவள் தோள் சாய்ந்து அழுததில் கஜேந்திரன் நெகிழ்ந்து விட்டார்..

சித்ரலேகாவும் பேரனின் மனைவியோடு சேர்ந்து அழுதாள்.. பெண் மனதின் துக்கம் பெண் மனதிற்குப் புரிந்தது.. இருவரும் ஒருவருக்காக மற்றொருவர் பரிதாபம்

https://t.me/tamilpdfebooks

கொண்டு அழுதார்கள்.. ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருக்க வேண்டி வந்து விட்டதற்காக அழுதார்கள்.. ஒருவரின் கண்ணீரை மற்றொருவர் துடைக்க முடியாமல் போய் விட்டதாற்காக அழுதார்கள்..

ஊர்மிளா அங்கே அதுவரை வந்ததில்லை என்ற உணர்வே கஜேந்திரனுக்கு வரவில்லை... எதையும் சொல்லாமல் அவள் சித்ரலேகாவைக் கட்டிக் கொண்டு தேம்பி அழுத துக்கத்தில்... அடிபட்ட குழந்தை தன் காயத்தைக் காட்டித் தாயிடம் அழுவதைப் போலவே இருந்தது..

அப்படி அழுதவளைக் கட்டிக் கொண்டு அழுத சித்ரலேகாவின் அழுகையில் குழந்தையின் வலியைத் தாங்கிக் கொள்ள முடியாத தாய்மையின் தவிப்பும், வலியும் இருந்தன..

கஜேந்திரன் பனித்த கண்களைத் துடைத்துக் கொண்டார்..

'நளினி..! உன் மருமகளைப் பார்த்தாயா அம்மா..! இந்த வீட்டு மனிதர்களைத் தன் மனிதர்களாக நினைக்கிறாள்.. எங்களைப் பார்க்காமலே எங்கள் மீது பாசம் வைத்திருக்கிறாள்.. பார் அம்மா.. இவள்தான் உன் மருமகள்.. நம் வீட்டு குலவிளக்கு..!'

அவரது மனம் காற்றில் கரைந்து நின்ற மகளின் ஆத்மாவிடம் கூறியது.. அதை நளினி ஆமோதித்ததைப் போல.. தோட்டத்திலிருந்த பூமரம் அசைந்தது..

https://t.me/tamilpdfebooks

தாயின் கதறலைக் கண்ட சுரேந்திரன் மிரட்சியுடன் தானும் அழப் போனான்.. நரேந்திரன் தொண்டையை அடைத்த துக்கத்துடன்..

“ஊஹீம்..” என்று மகனை சமாதானப் படுத்தி வைத்தான்..

ஒருவழியாக அழுது முடிந்த சித்ரலேகாவும், ஊர்மிளாவும் விலகி நின்றார்கள்.. கலைந்திருந்த ஊர்மிளாவின் முடியைக் கோதி சீர் செய்தாள் சித்ரலேகா..

“இனி அழுகக்கூடாது.. நம்ம வீட்டுக்கு வந்திட்டல்ல.. அழுகையை சுத்தமா மறந்திரனும்..” என்று கண்ணீருடன் சிரித்தாள்..

ஊர்மிளாவும் கண்ணீருடன் தலையை ஆட்டினாள்..

“தாத்தா பக்கத்தில சேர்ந்து நில்லுங்க பாட்டி..” என்றான் நரேந்திரன்..

“எதுக்குடா..? எனக்கும் உன் தாத்தாவுக்கும் ஆரத்தி எடுக்க சொல்லப் போகிறியா..?” கண்களைத் துடைத்தபடி கேட்டாள் சித்ரலேகா...

வாசலுக்குப் போய் தெருவில் ஆரத்தியின் கரைசலை ஊற்றிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த வேலைக்காரப் பெண் சித்ரலேகாவின் பேச்சில் சிரித்தாள்..

“ஆமாமாம்.. நேற்றுத்தானே உங்க ரெண்டு பேருக்கும் மேரேஜ் ஆகியிருக்கு.. ஆரத்தி எடுக்கச் சொல்ல வேண்டியதுதான்.. ஆரத்தி போதுமா..? இல்லை

https://t.me/tamilpdfebooks

ஹனிமூனுக்கும் டிக்கெட் போடச் சொல்லவா..?" கிண்டலாகக் கேட்டான் நரேந்திரன்..

"படவா.." அவன் காதைப் பிடித்துத் திருகினார் கஜேந்திரன்..

அவருடைய நரைத்த மீசையை முறுக்கியபடி சித்ரலேகாவை சிருங்காரத்துடன் பார்த்து வைத்தவர்..

"ஏண்டா.. எங்களுக்கு ஆரத்தி எடுக்கக் கூடாதா..? ஹனிமூனுக்கு டிக்கெட் போடக் கூடாதா..? எங்களைப் பார்த்தா வயசான ஜோடி போலவா இருக்கு..? நாங்க 'யங் கப்புள்'டா.." என்று பேரனிடம் கண்ணைச் சிமிட்டினார்..

"த்ச்சு.. ஊர்மிளா முன்னாலே என்ன பேச்சுன்னு இதைப் பேசறிங்க.. இளமை திரும்புதாக்கும்..?" கணவரை செல்லமாக கடிந்து கொண்ட சித்ரலேகாவின் முகம் வெட்கத்தில் சிவந்து விட்டது..

இவர்களுடன் இருக்கும்போது எவ்வளவு நன்றாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள் ஊர்மிளா.. பொசுக்கும் வெயிலில் காலெல்லாம் புண்ணாக பாலை வனத்தின் சுடுமணலில் நடந்து வந்தவளுக்கு இளைப்பாற நிழல் கிடைத்தைப் போல இருந்தது..

இது அவளைக் காக்கும் மரத்தின் நிழல்.. அவளுடைய கணவனின் பாரம்பர்ய நிழல்.. இங்கே சுடுவெயில் அவளை அண்டாது..

ஊர்மிளாவின் மனதில் நிம்மதி சூழ்ந்தது.. அது அவளின் முகத்தில் தெரிந்தது.. நரேந்திரனுக்கு அதைப்

https://t.me/tamilpdfebooks

பார்க்கத் திருப்தியாக இருந்தது.. ஊர்மிளாவைச் சேர்க்க வேண்டிய இடத்தில் அவன் சேர்த்து விட்டான்..

“தாத்தா பக்கத்தில நிக்கச் சொன்னதற்கு காரணமே வேற பாட்டி..”

நரேந்திரனின் வற்புறுத்தலில் கஜேந்திரனின் பக்கத்தில் போய் நின்று கொண்டாள் சித்ரலேகா.. கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டவராய் அவள் தோளைச் சுற்றிக் கையைப் போட்டு அணைத்துக் கொண்டார் கஜேந்திரன்..

“ம்ம்ம்.. இப்படித்தான்... சான்ஸ் கிடைச்சா மிஸ் பண்ணிரக் கூடாது... சந்துக்குள்ளே சிந்து பாடி முடிச்சிரனும்..”

சிரித்தபடி ஊர்மிளாவுடன்.. சுரேந்திரனைக் கைகளில் அணைத்தபடியே குனிந்து தாத்தா பாட்டியை வணங்கி எழுந்தான் நரேந்திரன்..

“என் தங்கங்களா..”

கஜேந்திரன் நரேந்திரனையும்.. சுரேந்திரனையும் அணைத்துக் கொண்டார்.. என்னதான் நடக்கிறது என்று தெரியாமல் என்னவோ நடக்கிறது என்று விழித்துக் கொண்டிருந்த சுநேந்திரனை வாங்கி உச்சி முகர்ந்தார்..

“அப்படியே நளினியில் ஜாடையில் இருக்கிறானில்ல..”

சித்ரலேகாவிடம் கேட்டு மகிழ்ந்து போனார்.. சித்ரகேலாவும் அதை ஆமோதித்துக் கண் கலங்கியதில் ஊர்மிளாவுக்கு திகைப்பு ஏற்பட்டது..

https://t.me/tamilpdfebooks

சுரேந்திரன் நரேந்திரனை உரித்து வைத்ததைப் போல அச்சு அசலாய் நரேந்திரனின் சாயலில் இருந்தான்..

'அப்புறம் எப்படி இவங்க இப்படிச் சொல்கிறாங்க..?'

93

அட்சய சுரபியாக..
அன்பை வாரி வழங்குகிற...
அழகான ராட்சசி நீ....

நரேந்திரன் அதை மறுக்கவில்லை.. தாத்தா, பாட்டியின் பேச்சுக்கு எதிர் பேச்சு பேசாமல் கனிந்த முகத்துடன் அவன் நின்றான்..

அது ஏன் என்பது.. வீட்டுக்குள் போனதும் நளினியின் உருவப் படத்திற்கு முன்னால் ஊர்மிளாவை நிறுத்தி வைத்தபோது புரிந்தது..

மிகப்பெரிய ஓவியம் போன்ற புகைப்படத்துக்குள் முழுமதியே வடிவமாக, அழகான சித்திரமாக சிரித்துக் கொண்டிருந்தாள் நளினி.. அவளைப் பார்த்தவுடன் எங்கேயோ பார்த்த ஞாபகம் வந்தது ஊர்மிளாவிற்கு.. எங்கே பார்த்திருக்கிறோம் என்ற சிந்தனையுடன் நரேந்திரனைப் பார்த்தவளுக்கு அந்த உருவ ஒற்றுமை புலப்பட்டு விட்டது..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் தாயின் சாயலோடு இருந்தான்.. எதனால் அவனுக்கும்.. அருண்குமார், அர்ச்சனாவிற்கும் உருவ ஒற்றுமை இல்லாமல் போனது என்று அன்றுதான் ஊர்மிளாவுக்குப் புரிந்தது..

அதனால்தான் அகல்யா அடிக்கடி நரேந்திரனிடம் புலம்பினாளா..?

"பாரு நரேன்.. உன்னோட தம்பி, தங்கைன்னு இவங்களைச் சொல்லிக்கிட்டா யாரும் நம்ப மாட்டேங் கிறாளாம்.. அதுக்குத்தான் உன்னோட பிஸினெஸ் சம்பந்தமான பார்ட்டிகளுக்கு இவங்களையும் கூடக் கூப்பிட்டுக்கிட்டுப் போன்னு நான் கெஞ்சறேன்."

நரேந்திரன் அசைந்து கொடுக்க மாட்டான்.. அப்படி அகல்யா புலம்பியதற்கான காரணம் இதுதானா..? அருண்குமாரும், அர்ச்சனாவும்.. அகல்யாவின் சாயலில் இருந்தார்கள்.. நளினியின் சாயலில் இருப்பவனின் தம்பி, தங்கையாக அவர்களை மற்றவர்கள் எப்படி நினைப்பார்கள்..?

"என்னோட பிஸினெஸ் வட்டாரத்தில இருக்கிற அத்தனை பேரும் ஆச்சரியப்பட்டுப் போவாங்க.. நரேன்.. அப்படியே நளினியின் ஜாடையில் இருந்தான்.. அதனாலேயே என் பேரன்ங்கிறதை இவன் சொல்லாமலே மத்தவங்க ஈஸியா கண்டு பிடிச்சுருவாங்க.."

இப்படிப்பட்ட பின்புலத்தையா அகல்யா தன்னுடையதாக்கிக் கொள்ளப் பார்த்தாள்..?

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா மன பாரத்துடன் நளினியின் முன்னாலிருந்த விளக்கின் திரியை தூண்டி விட்டு.. அதன் மையைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்... கை குவித்து நரேந்திரனைப் பத்து மாதம் சுமந்து பெற்ற அந்தப் புண்ணியவதியின் படத்தின் முன்னால் கை குவித்து நின்றாள்.. கண்மூடி.. மனமுருக.. மனம் விட்டு.. சாமியாருடன் மனதுக்குள் பேசத்துவங்கினாள்.. அவளது செய்கையைக் கண்ட கஜேந்திரனும், சித்ரலேகாவும் பேச்சற்று நின்று விட்டார்கள்.. ஆத்மார்த்தமான ஊர்மிளாவின் செய்கையில் நளினியைப் பெற்றவர்களுக்குப் புல்லரித்து விட்டது..

யார் சொல்லி ஊர்மிளா அதைச் செய்தாள்..? இயல்பான அவளின் அந்த வேண்டுதலில்..

"நீ எங்களுக்கும், இவளுக்கும் ஒரே சமயத்திலே அநியாயம் செய்து விட்டாயடா.." என்று மனம் குமுறினாள் சித்ரலேகா..

"உண்மைதான் பாட்டி.." குற்ற உணர்வுடன் சொன்னான் நரேந்திரன்..

நளினியிடம் என்ன சொன்னாளோ.. கண்மூடி மனதுக்குள் பேசிக் கொண்டிருந்த ஊர்மிளாவின் முகம் லேசாகத் தெளிந்தது.. கண்திறந்தவள் சித்ரலேகாவைப் பார்த்து புன்னகை செய்தாள்..

"வாம்மா.. உனக்கு வீட்டைச் சுற்றிக் காட்டறேன்.." சித்ரலேகா அவளை அழைத்துக் கொண்டாள்..

https://t.me/tamilpdfebooks

"சுரேன்.. அவனுக்குப் பாலாற்றிக் கொடுக்கனுமே.." ஊர்மிளா தயங்கினாள்..

"நாங்க எதுக்கு இருக்கிறோம்.. நாங்க பார்த்துக் கிறோம்.. நீ உன் பாட்டிகூட வீட்டைச் சுற்றிட்டு வா.." கஜேந்திரன் சுரேந்திரனை மடியில் வைத்துக் கொண்டு சொன்னார்..

"விட்டால் ஊரைச் சுற்றிட்டு வாங்கன்னு பாட்டியையும்.. பேத்தியையும் அனுப்பி வைச்சிருவீங்க போல.." நரேந்திரன் கிண்டலடித்தான்..

"செய்வேண்டா.. உன்னைப் போல பெண்டாட்டியோட மனசைப் புரிஞ்சுக்காதவனில்ல நான்.. அவங்க மனசைத் தெரிஞ்சு நடந்துக்கிறவண்டா.."

கஜேந்திரனின் பெருமையில் நரேந்திரன் முகம் மாறினான்.. அதைப் பாராததைப் போல பார்த்த சித்ரலேகாவின் முகத்தில் துயரம் வந்தது.. லேசான பெருமூச்சுடன் ஊர்மிளாவுக்கு வீட்டைச் சுற்றிக் காண்பித்தாள்..

'மாளிகை போல..' என்று ஊர்மிளா நினைத்துப் பார்த்த அந்த வீடு மாளிகையைப் போலதான் இருந்தது.. அதைச் சுற்றிப் பார்த்து விட்டு ஹாலுக்கு வந்தபோது ஊர்மிளாவுக்கு கால்வலியே வந்திருந்தது.. அங்கே கண்ட காட்சியில் அப்படியே நின்றுவிட்டாள்..

கோடிஸ்வர கஜேந்திரன்.. ஹாலில் தரையில் சம்மணம் போட்டு அமர்ந்து.. இரு தம்ளர்களில் இருந்த

https://t.me/tamilpdfebooks

பாலை ஆற்றிக் கொண்டிருந்தார்.. அருகிலிருந்த சோபாவில் கால் மேல் கால் போட்டு படு தோரணையாக அமர்ந்திருந்தான் சுரேந்திரன்.. இவர் பாலை ஒரு தம்ளரில் ஊற்றி அவனுக்குப் புகட்டினார்.. அவனோ ஒரு வாய் குடித்து விட்டு சூடாக இருக்கிறது என்ற பாவனையுடன் தம்ளரைத் தள்ளி விட்டான்.. இவர் காதைப் பிடித்துத் தோப்புக்கரணம் போடுவதைப் போல பாவனை செய்து விட்டு திரும்பவும் பாலை ஆற்றினார்.. அவன் மிடுக்காக முகத்தை வைத்துக் கொண்டு வெகு கறாராக அவர் வேலை செய்வதைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான்..

'இந்தக் குட்டிக்கு இருக்கிற அழும்பைப் பாரேன்..'

ஊர்மிளா அவசரமாக கஜேந்திரனின் பக்கத்தில் போனாள்.. பணிவுடன் குனிந்து பால் தம்ளரை வாங்க முயன்றாள்..

"நான் ஆற்றிக் கொடுத்துக்கறேன் தாத்தா.. நீங்க போய் இந்த வேலையெல்லாம் பார்க்கலாமா..? அதுவும் தரையில் உட்கார்ந்திருக்கீங்க.. எழுந்திருங்க தாத்தா.."

"மூச்.." வாயில் ஒற்றை விரலை வைத்து அவளை அதட்டினார் கஜேந்திரன்..

"தாத்தா.." அவள் திகைத்தாள்..

"எனக்கும் குட்டிப்பயலுக்கும் இடையே அவன் அம்மாகூட வரக்கூடாது.. நானாச்சு.. அவனாச்சு.. நீ போய் உன் பாட்டியோட சேலை முந்தானையைப் பிடிச்சுக்கங்கறேன்.."

https://t.me/tamilpdfebooks

“ஆனா தாத்தா.. இவன் உங்க கண்ட்ரோலுக்கு வர மாட்டான்..”

“ஏன் வரனும்..? என் நளினியின் பேரனோட கண்ட்ரோலுக்குள்ள நான் போயிட்டுப் போறேன்.. எனக்கு அதிலதான் சந்தோசம்..”

கஜேந்திரன் அவளை மறந்தவராக சுரேந்திரனின் முகவாயைப் பிடித்துக் கொஞ்சி பாலைக் குடிக்கச் சொன்னார்.. அவனும் போனால் போகிறதென்று குடிக்க ஆரம்பித்தான்..

‘எப்பேர்பட்ட பாசம் இது..!’ பிரமிப்புடன் சித்ரலேகாவைத் தேடிப் போனாள் ஊர்மிளா..

“உனக்கு இங்கேயென்ன வேலை.. உன் ரூம் மாடியில இருக்கு.. போ.. போய் குளிச்சு டிரெஸ் சேன்ஜ் பண்ணிட்டு வா..” சித்ரலேகா அவளை விரட்டினாள்..

“சுரேன் இங்கேயிருக்கானே பாட்டி..?”

“அவன் இங்கேதான் இருப்பான்..”

“அவனைக் குளிக்க வைத்து டிரெஸ் சேன்ஜ் பண்ணனுமே..”

“அதை நாங்க பார்த்துக்குவோம்..”

“நாங்கன்னா..?”

“உன் தாத்தாவும், பாட்டியும்தான்..”

“உங்களுக்கு எதுக்கு பாட்டி வீண் சிரமம்..?”

https://t.me/tamilpdfebooks

"சிரமமா..? நல்லாச் சொன்னே போ.. இதுக்குத்தானே எத்தனை காலமா இந்தக் கிழவனும், கிழவியும் காத்திருந்தோம்.. இதுக்கு நாங்ககொடுத்து வைச்சிருக்கனுமே.. ஆண்டவனோட அருளால அந்தக் கொடுப்பினை எங்களுக்குக் கிடைச்சிருக்கு.. அதை நாங்க அனுபவிக்க வேணாமா..? நீ போம்மா.."

சித்ரலேகா கஜேந்திரனிடம் போய் விட்டாள்.. கணவருக்குப் பக்கத்தில் அவளும் தரையில் உட்கார்ந்து.. சுரேந்திரன் பிஞ்சுப் பாதங்களைப் பிடித்து முத்தம் கொடுத்ததில் ஊர்மிளாவின் மனம் நெகிழ்ந்தது.. அந்த வயோதிக கோடிஸ்வரத் தம்பதிகள் எந்த அளவுக்கு பேரனின் அருகாமைக்கு ஏங்கியிருக்கிறார்கள் என்பதை அது உணர்த்தியது..

'நீ பாவி அகல்யா..' மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்..

'உன் சுயநலத்திற்காக.. இந்த வயதானவர்களிடமிருந்து இவர்களின் பேரனை பிரித்து வைத்திருக்கிறாய்.. உனக்கு மன்னிப்பே கிடையாது..'

அவள் அங்கேயே நிற்பதைப் பார்த்த சித்ரலேகா புருவங்களை உயர்த்தினாள்.. ஊர்மிளா தயங்கினாள்..

"அவனுக்கு மாத்து டிரஸ் பாட்டி..? அது பெட்டியில இல்ல இருக்கு.. நான் எடுத்துக் கொண்டு வரவா..?"

"வேணாம்மா.. என் கொள்ளுப் பேரனுக்குன்னு ஷெல்ப் முழுக்க புதுடிரஸ்ஸா வாங்கிக் குமிச்சுருக்கேன்.. அதைப் போட்டு விட்டு அழகு பார்க்க வேணாமா..?"

https://t.me/tamilpdfebooks

'என்ன இது..?'

ஊர்மிளாவுக்கு அவள் சிறுவயதில் பார்த்த 'பூவே பூச்சூடவா..' படம் நினைவுக்கு வந்து விட்டது..

அந்தப் படத்தில் வரும் பாட்டியைப் போல அல்லவா சித்ரலோக பேசுகிறாள்..?

மாடிப்படிகளில் ஏறியபடி ஊர்மிளா திரும்பிப் பார்த்தாள்.. கஜேந்திரனும்.. சித்ரலேகாவும்.. சுரேந்திரனின் கால்களைப் பிடித்து ஆட்டியபடி அவனைக் கொஞ்சிக் கொண்டிருந்தார்கள்..

'அழைப்பு மணியோசை..
எந்த வீட்டில் கேட்டாலும்
ஓடி நான் வந்து பார்ப்பேன்..
தென்றல் என் வாசல்..
தீண்டவே இல்லை..
கண்ணில் வெந்நீரை வார்த்தேன்..
தென்றலும் வந்தது..
ஜீவ அமுதங்கள் ஓயும் முன்னாலே..
நீயும் நெய்யாக வந்தாய்..
இந்தக் கண்ணீரில் சோகமே இல்லை..
கண்ணில் ஆனந்தம் தந்தாய்..'

ஊர்மிளாவின் நெஞ்சில் பாடல் ஒலித்தது.. அவள் மாடிஹாலை அடைந்து.. அதன் இருபக்கமும் இருந்த அறைகளில்... அவளுக்கும், நரேந்திரனுக்குமான அறையென்று சித்ரலேகா சுட்டிக் காட்டியிருந்த அறையின்

https://t.me/tamilpdfebooks

கதவில் கை வைத்துத் தள்ளினாள்.. கதவு தாழிடப்படாமல் இருந்ததால் திறந்து கொண்டது.. உள்ளே அப்போதுதான் குளித்து முடித்து ஈரமான நீர்த் துளிகள் உடல் முழுவதும் படிந்திருக்க ஈரத்துவாலையை இடுப்பில் கட்டியபடி கட்டிலில் இருந்த பெட்டிகளில் ஒன்றைத் திறந்து கொண்டிருந்தான் நரேந்திரன்.. அந்தக் கோலத்தில் அவனைப் பார்த்த ஊர்மிளாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.. சென்னை வீட்டில் இது போன்ற சூழ்நிலைகள் ஏற்பட்டது உண்டுதான் என்றாலும்.. அப்போதெல்லாம் சுரேந்திரன் கூட இருந்ததினால் ஊர்மிளா சமாளித்து விடுவாள்.. அவன் எதைத் தேடுகிறான் என்பதை யூகித்து அதை சுரேந்திரனின் கைகளில் கொடுத்து “அப்பாவிடம் கொடு..” என்று அனுப்பி வைத்து விடுவாள்.. அவனும் சமர்த்தாக தகப்பனிடம் போய் தாய் கொடுத்து அனுப்பியதை நீட்டி விடுவான்..

“குட்..” மகனின் கன்னத்தில் தட்டியபடி அதை வாங்கிக் கொள்ளும் நரேந்திரனின் பார்வை அவளை வருடும்..

இப்போது அதற்கு வழியில்லாமல் சுரேந்திரன் தாத்தா, பாட்டியிடம் இருந்ததில்.. ஊர்மிளா தடுமாறிப் போனாள்..

அறையை விட்டு வெளியில் போகலாமென்றால்.. சித்ரலேகா அவளை என்னவென்று கேட்பாள்.. ஊர்மிளாவால் என்ன விளக்கத்தைச் சொல்ல முடியும்..? இப்படி என் கணவன் ஈரத்துவாலையை இடுப்பில் கட்டிக்

https://t.me/tamilpdfebooks

கொண்டு நிற்கிறான்.. நான் சங்கடப்பட்டுக் கொண்டு வெளியில் வந்து நிற்கிறேன் என்று சொல்ல முடியுமா..? சொன்னால் சித்ரலேகா அதை மெச்சிக் கொள்வாளா..?

அதற்குள் அவளைப் பார்த்து விட்ட நரேந்திரன் நிமிர்ந்ததில் அவனது வெற்றுமார்பின் நீர்த்துளிகள் அவளைப் பார்த்து துடைத்து விட அருகில் வரச் சொல்லி அழைப்பு விடுத்தன.. கலைந்திருந்த அவனது ஈரத் தலைமுடியில்..

'ஒழுங்காய தலையைத் துவட்டிக் கொள்ளத் தெரியாதா..? சுரேந்திரனை விட இவர் சின்னப் பையனா..?' என்று மனம் சினந்தாள்..

"என் டவலை எங்கே வைச்சே..?"

அவளின் தடுமாற்றத்தைக் கவனிக்காததைப் போல வெகு இயல்பாக கேட்டான் நரேந்திரன்..

"அது பெட்டியிலே அடியிலே இல்ல இருக்கும்.. இந்த டவல் எப்படிக் கிடைச்சது..?" ஊர்மிளா முகச் சிகப்புடன் அவன் இடுப்பில் சுற்றியிருந்த டவலைக் காட்டினாள்..

"இதுவா..? டிரஸ்ஸிங் ரூமிலே.. டீப்பாய் மேலே மடிப்புக் கலையாம இருந்தது.." என்றான் நரேந்திரன்.

"அப்படின்னா.. டிரஸ்ஸிங் ரூம் ஷெல்பில் வேற டவல்ஸ் இருக்கலாமில்லையா..? அங்கே பார்த்தீங்களா..?"

"ஆமாமில்ல.. அதை ஏன் மறந்து போனேன்..?"

ஊர்மிளாவிடமே கேள்வி கேட்டு விட்டு டிரஸ்ஸிங் ரூமுக்குள் போனான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

'அப்பாடி..' ஆசுவாசப் பெருமூச்சுடன் உட்கார்ந்தாள் ஊர்மிளா..

"ஊர்மிளா.. ஒரு நிமிசம்.."

நரேந்திரனின் குரல் அழைத்தது.. என்னவோ ஏதோ.. என்று ஊர்மிளா அங்கே போனாள்.. நரேந்திரன் கையில் உலர்ந்த துவாலையுடன் நின்றிருந்தான்..

"நீ சொன்னது சரிதான்.. இங்கே ஷெல்பில் டவல் இருக்கு.. எடுத்துட்டேன்.." நீட்டினான்..

"அதான் இருக்கில்ல.. அப்புறம் என்னை எதுக்காக கூப்பிட்டிங்க..?" புரியாமல் கேட்டாள் ஊர்மிளா..

"என் தலை ஈரமாயிருக்குன்னு நீதானே கவலைப் பட்ட..? துவட்டி விடு.." அவளிடம் தலையைக் காட்டினான் நரேந்திரன்..

"நோ.. நோ.." கை சுட்டு விட்டதைப் போல துவாலையைத் தொடாமல் துள்ளிப் பின்னால் நகர்ந்தாள் ஊர்மிளா..

"என்னடி..?" நரேந்திரன் அவளை விடவில்லை.. வழிமறித்தான்..

"நானொன்னும் கவலைப்படலை.." அவள் மறுத்தாள்..

"இல்லேன்னு எங்கம்மா மேலே பிராமிஸ் பண்ணு பார்க்கலாம்.." அவன் சவால் விட்டான்..

"உங்க அம்மா மேலேயா..?" அவள் திகைத்தாள்..

https://t.me/tamilpdfebooks

“யெஸ்.. எங்க அம்மா மேலேதான் நீ பிராமிஸ் பண்ணனும்.. வந்தவுடனே மாமியார் படம் முன்னாலே உருகி உருகி வேண்டினேயில்ல.. அவங்க பெத்த மகன் எக்கேடு கெட்டா என்னன்னு விடுவியா..? தாயில்லாப் பிள்ளைடி.. ஈரத்தலையை நீ துவட்டி விடலைன்னு வைய்யி.. நானும் துவட்டிக்க மாட்டேன்.. இப்படியே டிரெஸ்ஸை மாட்டிக்கிட்டு வந்துருவேன்.. அதுக்கப்புறம் எனக்கு ஃபீவர் வந்திருச்சுன்னா அதுக்கு நீதான் பொறுப்பு..”

அவன் பயமுறுத்தியதில் அவள் கைகளைப் பிசைந்தபடி தவித்தாள்..

“ஏண்டி.. நான் என்ன கட்டிலுக்கா கூப்பிடறேன்..? ஈரத் தலையைத் துவட்டி விடுன்னுதானே கேட்கறேன்..? அதைச் செய்யக் கூட நீ இந்த அளவுக்கு யோசிப்பியா..? உனக்கே இது ஓவராத் தெரியலையா ஊர்மிளா..? உன் முன்னால் நிற்கிறவன்.. தெருவில் போகிற மூணாம் மனிதன் இல்லைடி.. உன்னைத் தொட்டுத் தாலி கட்டின உன் ஹஸ்பெண்ட்.. எனக்குத் தலை துவட்டி விடறதுனாலே உன் கற்பு குறைஞ்சிராது.. அதுக்கு நான் கேரண்டி..”

அதற்கு மேலும் அவனைப் பேச விட்டால் அவளை ஒருவழி பண்ணி விடுவான் என்பதில் அவசரமாக அவன் கையில் இருந்த துவாலையைப் பிடுங்கி அவன் தலையை அழுத்திப் பிடித்துத் துவட்டி விட ஆரம்பித்தாள் ஊர்மிளா.. அவன் உதடுகளில் வெற்றிப் புன்னகை வந்தது..

https://t.me/tamilpdfebooks

அந்தப் பிடிவாதக்காரனின் முகத்தை வெகு அருகாமையில் பார்த்தவளுக்கு வயிற்றுக்குள் பட்டாம் பூச்சிகள் பறப்பதைப் போன்ற ஏதோவொரு இம்சையான இன்ப உணர்வு எழுந்து.. ஊர்மிளா தன் மயக்கத்தை மறைக்கப் போராடினாள்..

94

தொலைதூர தொடுவானாய்..
எனைவிட்டு விலகி நின்ற
அழகான ராட்சசி நீ....

கணகணவென்ற மணியோசையுடன் தீபாதரனை நடந்து கொண்டிருந்தது.. கற்பூர ஒளியில் தெரிந்த.. ஈஸ்வரன்.. அம்பிகையின் திருவுருவச் சிலைகளைப் பார்த்து மனமுருக வேண்டிக் கொண்டாள் ஊர்மிளா.. கற்பூர ஒளியுடன் வந்த அர்ச்சகரின் கையிலிருந்த தீபாதரனைத் தட்டைத் தொற்றுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.. அவள் பக்கத்தில் நின்ற சித்ரலேகாவுக்கும், அவளுக்கும் குங்கும பிரசாதத்தைக் கொடுத்தார் அர்ச்சகர்.. இருவரும் மூலஸ்தானத்தை விட்டு வெளியே வந்து கோவிலின் சுற்றுப் பிரகாரத்தைச் சுற்றி வலம் வரத் தொடங்கினார்கள்..

ஊர்மிளாவின் மனதில் அமைதி வந்திருந்தது.. நரேந்திரனின் தாத்தா, பாட்டியின் வீட்டுக்கு வந்த

https://t.me/tamilpdfebooks

பின்னால் அவளுக்குள் ஓர் உயிர்ப்பு பொங்குவதை வியப்புடன் அவள் உணர்ந்திருந்தாள்..

"இங்கே உட்காரலாமா..?"

சித்ரலேகா கை காட்டிய மண்டபத்தில் அவர்கள் இருவரும் உட்கார்ந்தார்கள்.. அருகில் விளையாடிய குழந்தைகளைப் பார்த்த ஊர்மிளா..

"சுரேனையும் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கலாம்.. அவனுக்கு வெளியில் வர ரொம்பப் பிடிக்கும்.." என்றாள்..

"பிடிக்கும்தான்.. ஆனா அவனுக்கு ஸ்கூல் இருக்கே.. மற்ற நேரத்திலே அவன் ரெஸ்ட் எடுக்கட்டும்ன்னு நரேந்திரன் சொல்லிட்டான்.. இப்ப என்ன.. அவனுக்கு லீவு நாள் வர்றப்ப கோவிலுக்கு அழைச்சிட்டு வரலாம்.." இதமாக சொன்னாள் சித்ரலேகா..

"அதுவும் சரிதான் பாட்டி.." தலையை அசைத்தாள் ஊர்மிளா..

அவர்கள் பெங்களூருக்கு வந்த மறுநாளே சுரேந்திரனை அங்கிருந்த பிரசித்தி பெற்ற பள்ளியில் சேர்த்து விட்டான் நரேந்திரன்.. பள்ளியில் இடம் கிடைக்குமோ.. கிடைக்காதோ என்று மனதுக்குள் பயந்து கொண்டிருந்த ஊர்மிளாவுக்கு அது ஆச்சரியமாக இருந்தது.. நரேந்திரனிடம் சொன்னபோது அவன்..

"ஹி இஸ் மை சன்.." என்றான்..

ஊர்மிளா பேசாமல் வாயை மூடிக் கொண்டாள்.. புதிய பள்ளியில் சுரேந்திரன் எப்படிப் பழகுவானோ என்று

https://t.me/tamilpdfebooks

அவள் தவித்துக் கொண்டிருந்தபோது அதி விரைவில் புதிய பள்ளியின் புதிய சூழலோடு ஒன்றி விட்டான் நரேந்திரன்.. அவனுக்கு புதிய நண்பர்களும் கிடைத்து விட்டார்கள்.. அதை அவன் உற்சாகத்துடன் ஊர்மிளாவிடம் பகிர்ந்து கொண்டபோது அவள் மனதிலிருந்த மலை போன்ற பாரம் விலகியது.. மகனை வெவ்வேறு ஊர்கள், வெவ்வேறு சூழ்நிலைகள் என்று அலைக்கழிக்கிறோமோ என்ற அவளின் குற்ற உணர்வு அவளை விட்டு விலகி முடியது..

அதைக் கவனித்துக் கொண்டிருந்தானோ என்னவோ..

"உன் ஹஸ்பெண்ட் மேல கொஞ்சமாவது நம்பிக்கை வையடி.." என்று அன்றைய இரவின் தனிமையில் நரேந்திரன் சொன்னான்..

'இதை நான் சொல்லனும்..' ஊர்மிளா முகம் கன்றினாள்.. அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன்..

"எனக்கு உன்மேல் மலையளவு நம்பிக்கை இருந்தது.. இருக்கிறது.. இனியும் இருக்கும்ன்னு சொன்னா நீ நம்பவா போகிற..?" என்று கேட்டு விட்டு கண்களை மூடிப் படுத்து விட்டான்..

ஊர்மிளாவுக்குத்தான் தூக்கம் வர வெகு நேரமானது.. இரவு முழுவதும் தூங்காமல் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தவளின் வீங்கிய இமைகளை மறுநாள் காலையில் பார்த்த நரேந்திரனின் மனம் வலித்தது..

"ஏண்டி..?" ஆற்றாமையுடன் கேட்டான்..

https://t.me/tamilpdfebooks

கலங்கிய விழிகளுடன் காபியை நீட்டினாள் ஊர்மிளா..

“உன்னையும் வருத்திக்கிட்டு.. என்னையும் வருத்தற ஊர்மிளா.. இதுக்கொரு முடிவே இல்லையா..?” பொறுக்க முடியாமல் கேட்டு விட்டான் நரேந்திரன்..

நிராசையுடன் முகம் திருப்பிக் கொண்டவளைப் பார்த்தவனுக்கு ஆத்திரம் மூண்டது.. காலிக் காபிக் கோப்பையை விட்டெறிந்தான்.. அது சுவரில் மோதிச் சிதறி துகள்களாக தரையில் விழுந்தது..

கண்களை மூடி நின்று விட்ட ஊர்மிளாவைப் பார்த்து உறுமினான்..

“ராட்சசிடி நீ.. அழகான ராட்சசி..! இரக்கமே இல்லைடி உனக்கு.. அப்படி என்னடி உனக்கு கொடுமை பண்ணிட்டேன்..? எதுவா இருந்தாலும் என் சட்டையைப் பிடித்து நீ நியாயம் கேட்டிருக்கனும்.. எதுவும் செய்யாம என்னை விட்டு விட்டுப் போன கல்நெஞ்சக்காரிடி நீ... உன் மனசில் ஈரமேயில்லைடி.. காவேரிக் கரையில பிறந்துட்டு.. எப்படிடீ இப்படியொரு ஈரமில்லாத மனசுக்காரியா இருக்கிற..? உன் மனசு திரும்பவே.. திரும்பாதா..?”

இரைந்து விட்டு அவன் உடை மாற்றும் அறைக்குள் போய் விட்டான்..

“டபால்..” அவன் மூடிய வேகத்தில் கதவு அதிர்ந்தது..

ஊர்மிளாவுக்கு அழுகை வந்தது... லேசான விம்மலுடன் தரையில் கிடந்த காபிக் கோப்பையின் துகள்களைச் சுத்தம் செய்யப் போனாள்..

https://t.me/tamilpdfebooks

"இருக்கட்டும்மா.. செல்வியை அனுப்பறேன்.. அவ வந்து சுத்தம் செய்வா.."

சித்ரலேகாவின் குரல் கேட்டது.. அதிர்ந்து நிமிர்ந்தாள் ஊர்மிளா..

'பாட்டியா..? இவங்க எப்ப வந்தாங்க..?'

"நான் இங்கே வரலைம்மா.. மாடிக்கு வந்திருந்தேன்.. இந்தப் பக்கம் போகிறப்ப உள்ளே சத்தம் கேட்டது.. நீ ரூம் கதவைத் திறந்து வைச்சிருந்த.. மூடச் சொல்லலாம்ன்னு நின்னேன்.. அதுக்குள்ளே நரேன் காபிக் கப்பை உடைச்சிட்டான்.."

அதற்கு மேல் சித்ரலேகா எந்த விளக்கமும் சொல்லவில்லை.. ஊர்மிளாவிடம் விளக்கமும் கேட்கவில்லை.. செல்வியை அழைத்து அறையைச் சுத்தம் செய்யச் சொன்னாள்.. போய் விட்டாள்..

அப்போது மட்டுமல்ல.. அதற்குப் பின் வந்த நாள்களிலும் சித்ரலேகா ஊர்மிளாவிடம் எதையும் கேட்கவில்லை..

கோவிலில் அமர்ந்திருந்த அந்தப் பொழுதில் அதை நினைத்துப் பார்த்த ஊர்மிளாவுக்கு சித்ரலேகாவின் அந்தத் தன்மையைக் குறித்து மரியாதை வந்தது..

'இவங்க எங்கே.. அந்த அகல்யா எங்கே.. இவங்க கால் தூசியளவு கூட அகல்யாவினால் வர முடியாது..'

"என்னம்மா யோசிச்சுக்கிட்டு இருக்க..?"

https://t.me/tamilpdfebooks

சித்ரலேகா இதமாக வினவினாள்.. ஊர்மிளா சிந்தனைவயப் பட்டிருப்பதை அவள் கவனித்திருக்க வேண்டும் என்று ஊர்மிளா நினைத்துக் கொண்டாள்.. இந்தச் சிந்தனையே இப்படித்தான்.. எந்த நேரம் என்றில்லை.. ஓடி வந்து ஒட்டிக் கொள்ளும்.. மற்றவர்கள் கவனிக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதை மறந்து விடும்..

“ஒன்றுமில்லை பாட்டி..” ஊர்மிளா முறுவலித்தாள்..

“உனக்கும், நரேனுக்கும் இடையே ஒன்றுமே இல்லையாம்மா..?” சித்ரலேகா நிதானமாக கேட்டாள்..

“பாட்டி..” ஊர்மிளா தடுமாறினாள்..

“அன்னைக்கு என்ன நடந்ததுன்னு நான் கேட்க மாட்டேன்.. அது புருசன், பெண்டாட்டிக்குள்ள நடந்த சண்டை.. அதைப்பத்தி நான் கேட்கிறது நாகரிகம் கிடையாது.. ஆனா.. என் பேரனைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கிட்ட நீ.. ஒரு வருசம் முடிகிறதுக் குள்ளேயே அவனை விட்டுப் பிரிஞ்சு போனது ஏன்னு நான் கேட்கலாமில்லையா..? என் பேரனுக்கு மகன் பிறந்திருக் கிறதைக் கூட அவனுக்குச் சொல்லாம அவனைத் தனிமைப் படுத்தற அளவுக்கு அவன் என்ன குற்றம் செய்தான்னு நான் தெரிந்துக்கலாமில்லையா..? சொல்லும்மா.. நரேன் என்ன குற்றம் செய்தான்..?” சித்ரலேகா பொறுமையாகக் கேட்டாள்..

“இல்லை பாட்டி..” ஊர்மிளா விம்மினாள்..

“குற்றம் செய்தது அவரில்லை.. என் தலைவிதி என்னைத் துரத்துச்சு பாட்டி.. இல்லேன்னா.. அன்பான

https://t.me/tamilpdfebooks

நீங்களும், தாத்தாவும் இருக்கிறப்ப அந்த அகல்யாவின் பார்வையிலே இவர் என்னைக் கொண்டு போய் விட்டிருப்பாரா..?"

"அந்தச் சண்டாளி என்னம்மா பண்ணினாள்..?"

சித்ரலேகாவின் முகம் கடுமையானது.. அவளது கனிவான முகத்தில் கோபம் தாண்டவமாடியது.. அது ஊர்மிளாவுக்கு இதமாக இருந்தது.. அவள் சொல்ல ஆரம்பித்தாள்.. அவளைப் பெற்றவர்களிடம் சொல்ல முடியாத நிகழ்வுகளை சித்ரலேகாவிடம் விவரிக்க ஆரம்பித்தாள்.. கட்டிய கணவனிடம் சொல்ல முடியாதபடி பிணைக்கப் பட்டிருந்த உண்மைகளை சித்ரலேகாவின் முன்னால் கொட்டிக் கவிழ்த்தாள்..

"பர்ஸ்ட் நைட் முடிஞ்சு மறுநாள் காலையிலே நான் மாடியிலிருந்து இறங்கி வந்தப்ப என்னை எதிரியைப் பார்க்கிறதைப் போல பார்த்தாங்க பாட்டி.. இந்த ஒரு ராத்திரியிலேயே கோட்டையைப் பிடிச்சு கொடியை நாட்டி விட்டதாய் நினைக்காதே.. எல்லா நாளும் உன்னுடைய நாளாய் இருக்காதுன்னு சொன்னாங்க பாட்டி.."

"ச்சீ..! சின்னப் பெண்ணிடம் பேசுகிற பேச்சா இது..? அவளெல்லாம் என்ன பிறவி..?" அருவெறுத்தாள் சித்ரலேகா..

"இதைத்தான் நானும் நினைச்சுக்குவேன் பாட்டி.. நரேன் பாரின் கிளம்பறதுக்கு முதல்நாள் நைட்டில 'நிலாச்சோறு' விருந்துக்கு ஏற்பாடு பண்ணினேன்.."

https://t.me/tamilpdfebooks

"நிலாச்சோறா..?" ஆர்வத்துடன் கேட்டாள் சித்ரலேகா..

"சின்னவயசிலே எங்கம்மா வீட்டிலே அதை ஏற்பாடு பண்ணுவாங்க.. உனக்கு அது கூட தெரியுமா.."

"தெரியும் பாட்டி.. மொட்டைமாடியிலே நானும், அவரும் மட்டும் நிலாச்சோறு விருந்து சாப்பிட்டோம்.. அப்பத்தான் அவர் மனதில இருந்தையெல்லாம் என்னிடம் கொட்டினார் பாட்டி.. பிரியப் போகிறோம்ன்னு அன்னைக்கே அவர் மனசில பட்டதோ என்னவோ.. நிறையப் பேசினார் பாட்டி.. அவர் பிறந்ததில இருந்து நடந்த கதை அத்தனையையும் என்னிடம் சொன்னார்.."

ஊர்மிளா பொங்கி அழுதாள்.. அவள் மனதிலிருந்த துயரை சித்ரலேகாவால் புரிந்து கொள்ள முடிந்தது.. அவள் பரிவுடன் ஊர்மிளாவின் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்தாள்..

'இப்படி மருகுகிறவளா நரேனைப் பிரித்து வைத்து தண்டனை கொடுத்துக்கிட்டு இருக்கிறா..?'

"அன்னைக்குத்தான் உங்களைப் பத்தியும், தாத்தாவைப் பத்தியும், அத்தையைப் பத்தியும் அவர் சொன்னார் பாட்டி.. நீங்க எங்கேயிருக்கீங்கன்னு நான் கேட்டேன.. எங்க கல்யாணத்துக்கு வரலையான்னு விசாரிச்சேன்.."

"என் கண்ணே.."

சித்ரலேகா ஊர்மிளாவின் கன்னங்களைப் பற்றி நெகிழ்ந்தாள்.. அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா தவித்திருந்த தவிப்பை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. அந்தப் புரிந்து கொள்ளலில்..

'இவள் எங்களை ரட்சிக்க வந்த தேவதை..' என்று தனிமையில் தவித்த அந்த முதியவளின் மனம் கசிந்தது..

"அவர் சொன்னார் பாட்டி.. அவர்தான் உங்களை விட்டுப் பிரிஞ்சு நிற்கிறார்ன்னு சொன்னார்.. அப்போத்தான் நான் அவர்கிட்ட அந்த வாக்கைக் கேட்டேன் பாட்டி.."

"என்ன கேட்டேம்மா..?"

"அவர் பாரின்ல இருந்து திரும்பி வந்ததும் உங்க ரெண்டு பேரையும் பார்த்து ஆசிர்வாதம் வாங்க என்னை அழைச்சுக்கிட்டுப் போகனும்னு கேட்டேன்.. அவரும் வாக்குக் கொடுத்தார்.."

"ஊர்மிளா.."

சித்ரலேகாவின் கைகள் ஊர்மிளாவின் முகத்தை ஏந்தின.. இரு பெண்களின் கண்களும் ஒருவரையொருவர் தேடிய தேடலை இனம் கண்டு கொண்டன..

"எனக்கு உங்களைப் பார்க்கனும்னு இருந்தது பாட்டி.. நம்ம வீட்டைப் பார்க்கனும்.. அந்த வீட்டில்தானே என் நரேனைப் பெற்ற அம்மா பிறந்து வளர்ந்தாங்க.. அவங்க வாழ்ந்த இடத்தைப் பார்க்கனும்னு இருந்தது பாட்டி.. வேற எதுவும் நான் நினைக்கலை.. ஆனா.. அந்த அகல்யா.. நரேனை அவளை விட்டுப் பிரிக்க நான் திட்டம் போடறேன்னு சொல்லிட்டா பாட்டி.."

https://t.me/tamilpdfebooks

"நீங்க மொட்டை மாடியிலே பேசிக்கிட்ட விவரம் அவளுக்கு எப்படிம்மா தெரிய வந்தது..?"

"பாவி..! ஒளிஞ்சு மறைஞ்சு எங்களைப் பார்த்துக் கிட்டு இருந்திருக்கா பாட்டி.."

ஊர்மிளாவின் முகம் அன்றைய நினைவில் கன்றிச் சிவந்துவிட்டது.. அவள் பேச முடியாமல் தடுமாறினாள்..

"பாட்டி.. யாருமில்லாம நாங்க மட்டும் இருக்கோம்ங்கிற நினைவில.. நாங்க.."

ஊர்மிளா உதட்டைக் கடித்துக் கொண்டதில் சித்ரலேகாவிற்குப் புரிந்து விட்டது..

"த்தூ..! அவளெல்லாம் என்ன ஜென்மம்.."

"அவர் என்னை விளையாட்டாய் துரத்தறார்... சிரிச்சுக்கிட்டே ஓடி வந்தேன் பாட்டி.. என்னைக் கண்டதும் அந்த அகல்யா தடதடன்னு மாடிபடியில இறங்கிப் போறா பாட்டி.."

"ஈனப்பிறவி..! புருசன் பெண்டாட்டியோட அந்தரங்கப் பேச்சை ஒட்டுக் கேட்டு வேவு பார்க்கிற பிறப்பெல்லாம் மனுசப் பிறப்பில்லம்மா.. சாக்கடையிலே கிடக்கிற புழும்மா அது.."

"எனக்கு உடம்பெல்லாம் கூசிருச்சு பாட்டி.."

அடுத்து நடந்த அத்தனை நிகழ்வுகளையும் ஒன்று விடாமல் ஒப்பித்து முடித்தாள் ஊர்மிளா.. சொல்லி முடித்ததும் அவள் மனதில் அதுநாள்வரை சட்டமாக

https://t.me/tamilpdfebooks

உட்கார்ந்திருந்த பாறாங்கல் இறங்கி ஓடி விட்டதைப் போல இருந்தது.. மனது லேசாக மாறுவதைப் போல உணர்ந்தாள்..

"சொல்லுங்க பாட்டி.. உங்க பேரன் கேட்ட கேள்விக்கு நான் எப்படி பதில் சொல்ல முடியும்..? அந்த அகல்யா போட்ட சவாலில ஜெயிச்சுட்டா பாட்டி.. அதுக்கு மேலேயும் அந்த வீட்டிலே அவர்கூட வாழ என்னால முடியுமா பாட்டி..? நான் அப்பாம்மாவிடம் ஓடினேன்.. உங்க பேரன் என்னைத் தேடி வரலையே.. அப்படி அவர் தேடி வந்திருந்தா அந்த விதத்திலே நான் அகல்யாவை ஜெயிச்சிருப்பேன்.. இல்லை பாட்டி.. அவர் வரலை.. அவ சொன்னா.. ராதாகிருஷ்ணன் யார்ங்கிற கேள்விக்கு பதில் சொல்லி உன்னை நீ புரூவ் பண்ணாத வரைக்கும் உன் புருசன் உன்னைத் திரும்பிப் பார்க்க மாட்டான்னு.. இவர் அதை புரூவ் பண்ணிட்டாரே பாட்டி.."

"ஊர்மிளா.."

"அவ ஈன ஜென்மமா இருக்கலாம் பாட்டி.. அந்த ஈன ஜென்மம் சொன்ன வார்த்தை உண்மையாகலாமா பாட்டி..? அது நியாயமா..?"

"ஊர்மிளாம்மா.."

"அவ சொன்னா பாட்டி.. உன்னை நரேன் கேள்வி கேட்பான்னு சொன்னா.. அவளைப் போல ஒரு ஈன ஜென்மம் சொல்கிற பேச்சைக் கேட்டுவிட்டு என்னைப் பார்த்து என் நரேன் அப்படியொரு கேள்வியைக்

https://t.me/tamilpdfebooks

கேட்டு விட்டால் அந்தக் கணமே அவரை விட்டு நான் பிரிந்து விடுவேன்னு நானும் சொன்னேன் பாட்டி.. நீங்களே சொல்லுங்க பாட்டி.. அப்படி அவர் கேட்ட பின்னாலே அவருக்கு விளக்கம் சொல்லி புரிய வைச்சுட்டு அவர்கூட நான் வாழ்கிற வாழ்க்கை வாழ்க்கையாக இருக்குமா பாட்டி.."

'எப்படி இருக்கும்..?'

சித்ரலேகா துயருடன் ஊர்மிளாவை தோள் சாய்த்துக் கொண்டாள்.. அகல்யா மிகச் சரியான ஆடுகளத்தைத் தேர்ந்தெடுத்து விளையாட்டை நடத்தியிருக்கிறாள் என்பது அவளுக்குப் புரிந்தது.. அகல்யாவைப் போன்றவர்களுக்கு இது ஒரு பிரச்னையே அல்ல.. ஆனால் சித்ரலேகா, நளினி, ஊர்மிளாவைப் போல இருக்கிற பெண்களுக்கு இது ஒரு மாபெரும் இடி..!

95

சின்னச் சின்ன ஆசைகளை
சிறகொடித்து போட்டு விட்ட
அழகான ராட்சசி நீ....

"அவ எங்கே பாட்டி..?"

பால்கனியின் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த நரேந்திரன் கேட்டான்.. அங்கிருந்து பார்த்தால் நீச்சல்

குளமும்.. தோட்டமும்.. சாலையும்.. சாலையோர மரங்களும் ஒரு கை தேர்ந்த ஓவியன் வரைந்த அழகான ஓவியம் போல பரந்து விரிந்து தெரிந்தது..

"அங்கேயிருக்கா பாரு.."

சித்ரலேகா கை நீட்டிய இடத்தில் சுரேந்திரனுடன் பந்து பிடித்து விளையாடிக் கொண்டிருந்தாள் ஊர்மிளா.. நீச்சல் குளத்தின் ஓரமாக இருந்த செடிகளின் மறைவில் ஒளிந்து மறைந்து விளையாடுவதும்.. இருவரில் ஒருவர் அகப்பட்டு விட்டால்.. நீச்சல் குளத்தின் கரையோரமாக இருந்த நாற்காலிகளில் அமர்ந்து மூச்சு வாங்குவதுமாக அவர்களின் விளையாட்டு தொடர்ந்து கொண்டிருந்தது.

அந்த விளையாட்டில் மனம் லயித்தான் நரேந்திரன்.. தாய், மகன் இருவரின் முகத்திலும் பொங்கி வழிந்த மகிழ்வைக் கண்டவனுக்கு..

'இந்த விளையாட்டில் எனக்கு இடமில்லையா..?' என்று மனம் வெதும்பியது..

அதுபோன்ற மலர்ச்சியை அவனுடன் இருக்கும் போது ஏன் அவர்கள் இருவருமே காட்ட மறுக்கிறார்கள் என்ற சினம் அவனுக்கு வந்தது..

சுரேந்திரன் தந்தையுடன் ஒட்டிக் கொள்வான்தான்.. ஆனால் அது சிறிது நேரம்தான் நீடிக்கும்.. சற்றுப் பொழுதிலேயே அம்மா எங்கே என்று அவன் தேட ஆரம்பித்து விடவான்.. அதுவே ஊர்மிளாவுடன் இருந்தால் அப்பா எங்கே என்று தேட மாட்டான்..

https://t.me/tamilpdfebooks

அது நரேந்திரனின் மனதை உறுத்தியது.. அவன் தோள் சாய்ந்திருக்கும் நேரத்திலும் சுரேந்திரனின் கண்கள் ஊர்மிளா எங்கேயிருக்கிறாள் என்று தேடிக் கொண்டே இருப்பதை அவன் கவனித்திருக்கிறான்.. அவள் பக்கத்தில் இருந்தால் பேசாமல் இருப்பான்.. அவள் இல்லையென்றால் அவன் விழிகளில் தாயைத் துழாவ ஆரம்பித்து விடும் பார்வை வந்து விடும்..

அதைப் பற்றி அவன் ஒருமுறை ஊர்மிளாவிடம் மனத்தாங்கல் பட்டபோது.. அவள் வெறுமையான பார்வையோடு சொன்னாள்..

“பிறந்தது முதல் தாயைப் பிரிஞ்சு அறியாதவனை முதன் முதலா நீங்க வந்து பிரிச்சுத் தூக்கிட்டு வந்தீங்கள்ல.. அந்த பயம் இன்னும் அவன் பிஞ்சு மனசில் பதிஞ்சிருக்கும்.. சென்னை ஹாஸ்பிடலிலேயும் இப்படித்தான் இவன் என்னைத் தேடுவான்.. பிள்ளை பயந்து போயிருவான்னு நான் இவனை விட்டு நகர மாட்டேன்..”

அந்த அழகான ராட்சசி.. அவனுக்கு மகன் பிறந்து வளர்வதையே அவனிடம் சொல்லாமல் மறைத்து விட்டு கடைசியில் அவனை ராட்சசன் ஆக்கி விட்ட கொடுமையில் அவன் வெடித்து விட்டான்..

“நானாடி தாயையும், பிள்ளையையும் பிரிச்சேன்..? நீதாண்டி அப்பாவையும், மகனையும் பிரிச்ச..”

“அப்படியா..? உங்ககிட்ட வளர்ந்த பிள்ளையை தேடிவந்து நான் பிடுங்கிக்கிட்டுப் போனேனா..?”

https://t.me/tamilpdfebooks

ஆக்ரோசத்துடன் கேட்டு விட்டு வேகமாக போய் விட்டாள் ஊர்மிளா.. அதற்குப் பின்னால் ஒருவாரம் வரை அவள் அவனிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை..

'இவதான் முகத்தைத் திருப்பிக்கிட்டுப் போக எதுடா சாக்குன்னு அலைவாளே.. ராட்சசி.. அழகான ராட்சசி..'

பொருமினான் நரேந்திரன்.. அவனால் அதை மட்டும் தான் செய்ய முடிந்தது.. ஊர்மிளாவின் மனதை அவன் பக்கம் திருப்ப முடியவில்லை.. போராடிக் களைத்துக் கொண்டிருந்தான்..

"காபி, டிபன் வேணாமா..? ஆபிஸிலிருந்து வந்தவன் கீழே வருவேன்னு பார்த்துக்கிட்டு இருக்கேன்.. நீ வருகிற வழியாய் தெரியலை.. சரி.. உன் ரூமுக்குக் கொண்டு வரலாம்ன்னு கொண்டு வந்தா அங்கேயும் நீயில்லை.. எங்கே போயிட்டன்னு தேடி வந்தா.. நீ பால்கனி ஊஞ்சலிலே ஆடாம உட்கார்ந்துக்கிட்டு வானத்தை வெறிச்சுப் பார்த்துக்கிட்டு இருக்கே.. என் பேரன் நரேந்திரனாடா நீ.. உன் ஆக்டிவ்னெஸ் எங்கே போனது..?"

"ஊம்.. பிளைட் பிடிச்சு பாரின் வரைக்கும் போயிருக்கு.. நீங்க எதுக்காக காபி, டிபன் கொண்டு வந்தீங்க..?"

"ஏண்டா..? நான் காபி டிபன் கொண்டு வந்தா நீ அதனாலே தொட்டுக்கூடப் பார்க்க மாட்டியா..?"

"ஸ்ஸ்ஸ்.. என்ன பாட்டி நீ.. நேரம் காலம் புரியாம பண்றிங்க.. வயசான காலத்திலே உங்களை படியேற

https://t.me/tamilpdfebooks

விடனுமா..? இந்த வேலையையெல்லாம் அவ செய்ய மாட்டாளா..?"

"யார்..? செல்வியையா சொல்கிற..?"

தெரியாததைப் போல வினவியபடி ஊஞ்சலில் பேரனின் பக்கத்தில் உட்கார்ந்தாள் சித்ரலேகா.. அவர்கள் இருவருக்கும் இடையில் காபி, டிபன் இருந்த டிரேயையை வைத்து விட்டு..

"இத்தனை நேரமும் சும்மா இருந்துட்டு.. இப்ப வந்து ஊஞ்சலை ஆட்டி வைச்சுராதேடா.. டிபனும், காபியும் கொட்டிரும்.." என்று பேரனை எச்சரிக்க வேறு செய்தாள்..

நரேந்திரனுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

'தி கிரேட் இண்டஸ்ட்ரியலிஸ்ட் நரேந்திரனைப் பார்த்துப் பேசுகிற பேச்சா இது..'

சித்ரலேகாவை ஒரு தினுசாக பார்த்தபடி இதை அவன் சொன்ன போது.. 'ஹ' என்ற தினுசில் காற்றில் கையை விசிறினாள் அவனுடைய பாட்டி..

"இந்தப் பெருமையெல்லாம் இங்கே வேணாம்.. தி கிரேட் இண்டஸ்ட்ரியலிஸ்ட் நரேந்திரனுக்குப் பாட்டியா கிறதுக்கு முன்னாலேயே.. தி கிரேட் இண்டஸ்ட்ரியலிஸ்ட் கஜேந்திரனுக்குப் பெண்டாட்டியா ஆகிட்டேன்.. ஆனானப் பட்ட கஜேந்திரனே இந்த சித்ரலேகாவைக் கண்டா தும்பிக்கையை சுருட்டிக்கிட்டு ஓரமா உட்கார்ந்திடுவாரு.. இந்த நரேந்திரன் எம்மாத்திரம்..?"

https://t.me/tamilpdfebooks

சித்ரலேகா போட்ட போட்டில் நரேந்திரனின் புருவங்கள் அடேங்கப்பா என்னும் விதமாக ஏறி இறங்கின..

"பிக் ஷாட்தான் நீங்க.. இப்பேர்பட்ட பிக்ஷாட் வொய்பைப் பத்திக் கேட்கிறவன்கிட்ட சர்வண்டோட பெயரைச் சொல்கிறது எப்படின்னுதான் தெரியலை.. அவ செய்ய மாட்டாளான்னு கேட்டா.. யாரு.. செல்வியையா சொல்கிறன்னு கேட்டு வைக்கறிங்க.. என் வொய்போட பெயர் செல்வியா..?"

"அது ஊர்மிளா..!"

என்னவோ நேர்முகத் தேர்வில் விடையளித்து விட்டு நான் சரியாகச் சொல்லி விட்டேனா என்பதைப் போல அவன் முகத்தைப் பார்த்து வைத்தாள் சித்ரலேகா.. நரேந்திரனுக்கு ஊஞ்சல் கம்பியில் தலையை மோதிக் கொள்ள வேண்டும் போல இருந்தது..

"ஏன் பாட்டி இந்தப் பாடுபடுத்தறிங்க..?" என்று கேட்டு விட்டான்..

அவன் கேள்வியை ரசித்துச் சிரித்தாள் சித்ரலேகா.. பெண்டாட்டி ராட்சசியாக அமைந்து விட்டதில் இப்பேர்பட்ட கொடுமைகளை எல்லாம் சகித்துக் கொண்ண வேண்டியதிருக்கிறது என்று மனம் வெறுத்துப் போய் விட்டான் நரேந்திரன்..

"இப்ப எதுக்காக பாட்டி இப்படி சிரிச்சு வைக்கறிங்க..?"

"மடையா..! அவ வரேன்னுதான் சொன்னா.. நான் தான் வேண்டாம்மா.. உன் மகனோடு கொஞ்ச நேரம் விளையாடுன்னு சொல்லி அனுப்பி வைச்சேன்.."

https://t.me/tamilpdfebooks

“இது நீங்க செய்த சதியா..?”

பற்களை நறநறத்தான் நரேந்திரன்.. காபி, டிபன், சாப்பாடு என்று.. அவனுடைய வயிற்றுக்கு ஈயும் வேலைகளையாவது அவள் தவறாமல் செய்கிறாள் என்று அவன் சந்தோசப்பட்டுக் கொண்டிருக்க.. சித்ரலேகா அதற்கும் வெடி வைத்து விட்டதில் அவனுக்கு கடுப்பு கிளம்பியது..

‘அவ இதுதான் சான்ஸின்னு இந்த வேலைக்கும் டாட்டா சொல்லிருவாளே..’ கவலை மேலிட..

“இது உங்களுக்கே நியாயமா இருக்கா பாட்டி.. இந்த ஒரு வேலையைத்தான் அவ உருப்படியா செய்துக்கிட்டு இருந்தா.. இப்ப அதில இருந்தும் அவளுக்கு ரிலாக்சேசன் கொடுத்து வைக்கறிங்க..” என்று எரிச்சல் பட்டான்..

தோட்டத்தில் சிரிப்புச் சப்தம் கேட்டது.. ஒளிந்து கொண்டிருந்த ஊர்மிளாவைக் கண்டு பிடித்து விட்டதில் சுரேந்திரன் கை கொட்டி சிரித்தான்.. அவனுடன் சேர்ந்து சந்தோசமாக சிரித்துக் கொண்டிருந்தாள் ஊர்மிளா..

‘எவ்வளவு சந்தோசம்..! புருசனிடமிருந்து விலகிப் போகிறதுன்னா இவளுக்கு அல்வா சாப்பிட்டதைப் போல இருக்குமே.. நாள் முழுவதும் ஆபிஸ் பக்கம் போயிருந்தவன் அலுத்துக் களைத்து வீட்டுப் பக்கம் வந்திருக்கேன்.. இவ ஒரு வாய் காபி, டிபன் கூடக் கொடுக்காம பிள்ளைகூட ஓடிப் பிடித்து விளையாடிக்கிட்டு இருக்கா.. அதில எத்தனை சந்தோசம் கொண்டாடறா..’

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் கடுகடுப்பாக நினைத்ததை வேறு விதமாக சொன்னாள் சித்ரலேகா..

"உன் மகன் முகத்தில எத்தனை சந்தோசம்ன்னு பார்த்தியா நரேன்.. அவனோட அம்மாவை கண்டு பிடிச்சுட்டானாம்.. அதிலே அவன் ஜெயிச்சுட்டானாம்.. அவனுக்குத் தெரியுமா நரேன்.. அவனுடைய அம்மா தெரிந்தேதான் அவனிடம் தோற்றாள் என்பதை..?"

சித்ரலேகாவின் வார்த்தைகளில் ஏதோ ஒரு உட்பொருள் ஒளிந்திருப்பதைப் போல நரேந்திரனுக்குத் தோன்றியது.. கேள்வியுடன் நோக்கினான்..

"பெத்தவளுக்கு பிள்ளையிடம் தோற்கிறதில சந்தோசம்தான் நரேன்.. ஒருவகையில் அதுதான் அவளுடைய வெற்றி.. இதுவே புருசன்னு வருகிறப்ப மாறி விடும் நரேந்திரா.. உனக்கேன் அது புரியலை..?"

"பாட்டி.."

நரேந்திரன் ஆச்சரியத்துடன் சித்ரலேகாவை பார்த்தான்.. இது போல ஏன் அவன் யோசிக்கவில்லை..?

"காபி, டிபனைச் சாப்பிடு நரேன்.. ஆறிவிடப் போகுது.."

"இங்கே வாழ்க்கையே ஆறிப் போய் கிடக்கு பாட்டி.. இந்த அழகான ராட்சசியை காதலித்து மேரேஜ் பண்ணிக்கிட்டதில என்ன சுகத்தைக் கண்டேன் பாட்டி..? ஒரு வருசம் கூட சேர்ந்து வாழலை.. ஒரு சின்னக் கேள்விக்கு பதிலைச் சொல்ல மாட்டேன்னு என்னை

https://t.me/tamilpdfebooks

அத்தனை பேர் முன்னாலும் இன்சல்ட் பண்ணிட்டு பெட்டியைத் தூக்கிட்டுப் போயிட்டா.. ஒரு போன்கால் இல்லை.. லெட்டர் இல்லை.. மூன்றரை வருசம் கழிச்சுத் தகவல் வருது.. அதுவும் இவள் தகவல் தரலை.. இவளோட டாக்டர் பிரண்ட் தகவல் தருகிறா.. எப்படித் தெரியுமா..? உன் மகனுக்கு உடம்பு சரியில்லை.. ட்ரீட் மெண்ட் நடந்துக்கிட்டு இருக்குது.. ஓடிவான்னு.. எனக்கு எப்படியிருந்திருக்கும்..?”

அவனுக்கு எப்படியிருந்திருக்கும் என்பதை சித்ரலேகாவினால் உணர முடிந்தது.. அதே சமயம் அவளிடம் ஊர்மிளா சொல்லி அழுத..

‘எனக்கு எப்படியிருந்திருக்கும் பாட்டி..?’ என்ற அதே கேள்வியில் இருந்த துயரத்தையும், துக்கத்தையும் அவளால் புரிந்து கொள்ள முடிந்திருந்தது..

“காத்திருந்தேன் பாட்டி... அவர் என்னைத் தேடி வந்திருவாரான்னு காத்திருந்தேன்.. தெருவில் கார் போகிற சப்தம் கேட்டா ஓடிப்போய் பார்ப்பேன்.. அது நடுஜாமமா இருந்தாலும் சரி.. யோசிக்க மாட்டேன்.. அவர் வரவேயில்லை பாட்டி... என் வயிற்றில் சுரேன் வளர்ந்தான்.. அதை அவரிடம் சொல்லச் சொல்லி அப்பாவிடம் அம்மா சொன்னாங்க.. நான் வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்..”

“ஏம்மா..? சுரேன் நரேந்திரனோட குழந்தைம்மா.. அவன் பிறக்கப் போகிறதை அவனோட தகப்பனுக்குச் சொல்ல வேண்டியது உன்னோட கடமையில்லையா..?”

https://t.me/tamilpdfebooks

"நிச்சயமா அது என்னோட கடமைதான் பாட்டி.. அதுக்கு முன்னாலே வீட்டை விட்டு வெளியேறிப் போன பெண்டாட்டி பிறந்த வீட்டுக்குப் போனாளா.. இல்லை.. வழியிலேயே ஏதாவது ரயில் தண்டவாளத்திலே தலையைக் கொடுத்துட்டாளான்னு தெரிஞ்சுக்க வேண்டியது புருசனா அவரோட கடமையில்லையா பாட்டி.. அவர் செஞ்சாரா பாட்டி..?"

"ஊர்மிளா.."

"அவர் செய்யலை.. நான் என்ன ஆனேன்னு அவர் கவலைப் படவே இல்லை.. அப்படிப்பட்ட மனிதர்கிட்ட குழந்தையைக் காட்டி நான் ஒட்டிக்கனுமா பாட்டி..?"

"என்ன கண்ணம்மா இப்படிப் பேசற..?"

"வேற எப்படிப் பேச பாட்டி..? உங்க பேரன் தஞ்சாவூருக்கு வந்தார்.. எதுக்காக வந்தார்..? அவரோட பெண்டாட்டியைத் தேடி வரலை பாட்டி.. அவரோட மகனைத் தேடி வந்தார்.. வந்தவர் மகனைத் தூக்கிக்கிட்டுப் போயிட்டார்.. நான் அவனைப் பெத்த தாய்ன்னு கூட அவர் நினைச்சுப் பார்க்கலை.. என்னைவிட்டு என் மகனைப் பிரிக்கிறார்ங்கிறதை யோசிக்கக் கூட இல்லை.. கொஞ்சம் கூடத் தயக்கமில்லாம என் சுரேனை என்னிடமிருந்து பிரிச்சுத் துக்கிட்டுப் போனார் பாட்டி.. எனக்கு எப்படியிருந்திருக்கும்..?"

எப்படியிருந்திருக்கும் என்ற கேள்வியை கணவனும், மனைவியும் வெவ்வேறு இடங்களில் வைத்து.. வெவ்வேறு

https://t.me/tamilpdfebooks

நேரத்தில் சித்ரலேகாவிடம் கேட்கிறார்கள்.. அவள் எப்படியிருந்திருக்கும் என்பதை எப்படிச் சொல்வாள்..?

கோவிலில் வைத்து ஊர்மிளா அவளிடம் கொட்டிய கதைகளிலும், சொல்லிய நிகழ்வுகளிலும், கேட்ட கேள்விகளிலும்.. ஆறாத மன ரணமிருந்தது..

பால்கனியில் உட்கார்ந்து நரேந்திரன் அவளிடம் பேசிய பேச்சுக்களிலும் ஆறாத மன வேதனை இருந்தது..

இவரும் நல்லவர்கள்.. ஒருவர்மீது ஒருவர் ஆழ்ந்த காதலைக் கொண்டிருப்பவர்கள்.. இருந்தும் இருவரும் எதிரெதிர் கரைகளில் என்றால் அவர்களின் விதியை என்னவென்று சித்ரலேகா சொல்லுவாள்..?

'நளினி..! என் மகளே..! இது ஒரு சாபமாடி..! நீ மருகினதைப் போல உன் மருமகளும் மருகுகிறாளே அம்மா..'

சித்ரலேகாவின் மனம் துயர் கொண்டது..

"நீ காபி டிபனை சாப்பிடு நரேன்.."

"த்ச்சு.. வேணாம் பாட்டி.."

"சொன்னாக் கேட்கனும்.. உன்கூடப் பேசனும்னு நான்தான் ஊர்மிளாவை தோட்டத்துக்கு அனுப்பி வைச்சுட்டு காபி, டிபனை எடுத்துக்கிட்டு வந்தேன்.. உன் தலையைக் கண்டதும் அவள் காபி கலக்க ஆரம்பிச்சுட்டா.. இது அவள் போட்ட காபிதான்.. டிபனும் அவள் செய்தது தான்.. உனக்கு உளுந்து வடையும், ரவாகேசரி'யும் பிடிக்குமில்ல.. அதைத்தான் அவ செய்திருக்கா.."

https://t.me/tamilpdfebooks

சித்ரலேகா சொல்லியதும் தன்னிச்சையாக நரேந்திரனின் கை டிபன் தட்டை எடுத்துக் கொண்டது.. சுருங்கிய அவன் மனது சமனப்பட்டு விட்டதைப் புரிந்து கொண்ட அந்த பாட்டியின் மனதில் இவனுக்குத்தான் இவன் மனைவியின் மீது எத்துணை காதல் என்ற பிரமிப்பு ஏற்பட்டது..

இப்படிப்பட்ட காதலை ஊர்மிளாவும் கணவன் மீது வைத்திருக்கிறாள்.. அவன் நினைவில் வாழ்ந்திருக்கிறாள்.. ஒரு நாளின் அத்தனை மணித்துளிகளிலும் அவன் நினைவாகவே இருந்திருக்கிறாள்..

அதனால்தானே.. கஜேந்திரனின் பேரனான நரேந்திரனின் மகனுக்கு 'சுரேந்திரன்' என்று அவள் பெயர் வைத்திருக்கிறாள்..!

96

ஏழேழு பிறவிகளிலும்..
இணைந்து வரும் காதல்கொண்ட...
அழகான ராட்சசி நீ....

"உங்களுக்குத் தெரியுமா பாட்டி.. இவ பெட்டியைத் தூக்கிட்டு வீட்டை விட்டுப் போனாளே... அந்தப் பெட்டிக்குள்ளே என்ன கொண்டு போனான்னு நினைக் கிறீங்க... இவளோட அப்பாவீட்டில இருந்தப்ப இவ

https://t.me/tamilpdfebooks

வாங்கியிருந்த டிரெஸ்ஸை மட்டும் எடுத்துக்கிட்டுப் போயிருக்கா... ஜ்வல்ஸீம் அப்படித்தான்.. இவளோட அப்பா போட்ட ஜ்வல்ஸ் மட்டும்தான்.. நான் வாங்கிக் கொடுத்திருந்த வைர நகைகளில ஒன்றைகூட இவ எடுத்துக்கிட்டுப் போகலை பாட்டி.."

"அதெல்லாம் எங்கேடா..?"

"பத்திரமா பேங்க் லாக்கர்ல இருக்கு.."

"நல்ல வேலை செய்தே.. இல்லேன்னா அந்த அகல்யா அதை எடுத்து வைச்சுக்கட்டு காணாமல் போயிருச்சுன்னு கதை அளந்திருப்பா.." வெறுப்புடன் சொன்னாள் சித்ரலேகா..

"இல்லை பாட்டி.. என் ரூமுக்குள்ளே அவங்களை அலோவ் பண்ண மாட்டேன்.. மாடிப் பக்கமே அவங்க வரக்கூடாதுன்னு ஆர்டர் போட்டிருந்தேன்.."

"ஆமாண்டா.. உன் ஆர்டரை ஒபே பண்ணிட்டுத் தான் அவ வேற வேலை பார்ப்பா.. மொட்டை மாடியில புருசனும் பெண்டாட்டியும் தனியாப் பேசிக்கிட்டு இருக்கிறதை ஒளிஞ்சு மறைஞ்சு பார்க்கிற ஜென்மம் எப்படியாப்பட்ட ஜென்மமா இருக்கும்..? த்தூ.."

சித்ரலேகாவின் அறுவெருப்பில் நரேந்திரனும் முகம் சுளித்தான்..

"ஊர்மிளா சொன்னாளா..? எனக்குத் தெரியாது பாட்டி.. இன்னும் என்னவெல்லாம் நடந்ததோ...

https://t.me/tamilpdfebooks

அவ எதையும் என்னிடம் சொல்லவே இல்லை பாட்டி.. சொல்லியிருந்தா துளிர் விடும் போதே கிள்ளி எறிஞ்சிருப்பேன்.."

"அவளா துளிர்..? அவ ஆலமரம்டா நரேந்திரா.. வேர் விட்டு படர்ந்திருக்கிறது.. அவளை வெட்ட உன்னாலே முடியுமில்லை.. யாராலேயும் முடியாது.. ஒரே ஒருத்தராலே மட்டும்தான் அது முடியும்.."

"அது யாரு பாட்டி.. என்னைவிட வீராதி வீரர்.. சூராதி சூரர்..?"

"வேற யாரு..? எல்லாம் உன் தாத்தா கஜேந்திரன் தான்.. அவளை கிட்டக் கூட அண்ட விட மாட்டார்.. யாரை எங்கே நிறுத்தனும்னு அவருக்குத் தெரியும்.. நீ தயவு தாட்சண்யம் பார்ப்ப நரேந்திரா.. சாகப் போகிற சமயத்திலே உன் அப்பா கேட்டுக்கிட்டார்ன்னு அந்த வஞ்சகிக்குப் பாவம் பார்ப்ப.. உன் தாத்தா அப்படிச் சிக்கலில் எல்லாம் மாட்டிக்க மாட்டார்.. அவர் மனசில சாகப் போகிற சமயத்திலே.. என் பிள்ளையைப் பார்த்துக்கங்க அப்பான்னு கண்ணீர் விட்டபடி உயிரைவிட்ட உன் அம்மாவின் முகம் மட்டும்தான் இருக்கு.. மத்த எதுக்கும் அங்கே இடமில்லை.."

நரேந்திரன் மௌனமாக இருந்தான்.. சித்ரலேகாவுக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது.. தகப்பனுக்குரிய கடமைகளைச் செழியன் செய்யாவிட்டாலும்.. அவனுக்குத் தந்தையாகி விட்டாரே என்ற ஒரேயொரு காரணத்துக்காக

https://t.me/tamilpdfebooks

எப்பேற்பட்ட பாரத்தை நரேந்திரன் இழுத்துக் கொண்டு விட்டான் என்று அவள் மனம் வலித்தது..

“ஊர்மிளாவோட டிரஸ்ஸெல்லாம் எங்கேடா..? எல்லாமே விலையுயர்ந்த பட்டுப் புடவைகள்.. டிசைனரி சேலைகள் ஆச்சே.. அதுவும் முக்கியம்தானே நரேந்திரா..”

“பத்திரமா வைத்திருந்து.. என் ரூமை காலி பண்ணும் போது பேக் பண்ணிக் கொண்டு வந்துட்டேன்..”

“கெட்டிக்காரன்தான் போ.. இந்தக் கெட்டிக்காரத் தனத்தை மற்ற எல்லாத்திலேயும் காட்டியிருந்தால் பெட்டரா இருந்திருக்கும்..”

“சொல்லிக்காட்டறிங்களா பாட்டி..”

“உன்னைச் சொல்லிக்காட்டி எனக்கென்னடா கிடைக்கப் போகுது..? நீ காபியைக் குடி..”

காபியை அருந்தியபடியே தோட்டத்தைப் பார்த்தான் நரேந்திரன்.. இப்போது தாயும் மகனும் நீச்சல் குளத்தின் விளிம்பில் தண்ணீரில் கால்களை விட்டு அளைந்தவாறு அமர்ந்திருந்தார்கள்.. ஊர்மிளா கைகளை ஆட்டி எதையோ சொல்லிக் கொண்டிருக்க சுரேந்திரன் விழி விரித்து அதைக் கேட்டுக் கொண்டிருந்தான்..

‘கதை சொல்வாளா இருக்கும்..’

நரேந்திரன் நினைத்துக் கொண்டான்.. இப்படிப்பட்ட மனைவி அவனை விட்டு மட்டும் எட்ட நிற்கிறாளே என்ற விசனம் அவனுக்குள் ஏற்பட்டது..

https://t.me/tamilpdfebooks

"உங்களிடம் என்ன சொன்னா பாட்டி..? ஏதாவது சொன்னாளா..?"

திடிரென்று வந்த நரேந்திரனின் கேள்வியில் என்ன பதிலைச் சொல்வது என்று திகைத்து விட்டாள் சித்ரலேகா..

ஊர்மிளாதான் அவள் கைகளையும் கட்டிப் போட்டிருந்தாளே..

"ராதாவிடம் என்ன சொன்னேனோ.. அதைத்தான் உங்களிடமும் சொல்கிறேன் பாட்டி.. நீங்க சொல்லி என் வாழ்க்கை சரியானதா இருக்கக் கூடாது.. சொல்லனும்னு நான் நினைச்சிருந்தா எப்பவோ அவரிடம் இதையெல்லாம் சொல்லியிருப்பேனே.. இல்லை பாட்டி.. இன்னும் எனக்கான நியாயத்தை அவர் செய்யலை.. எனக்கு நியாயம் கிடைக்காம அவர்கூட இசைஞ்சு குடும்பம் நடத்த என்னால முடியாது பாட்டி.. தயவு செய்து உங்ககிட்ட நான் சொன்ன எந்த விவரத்தையும் அவளிடம் சொல்லாதீங்க பாட்டி.."

"அவனுக்கு ஒன்னுமே தெரியாதா ஊர்மிளா..?"

"மொட்டை மாடி நிலாச்சோறு விருந்திலே.. நாங்க பேசிக்கிட்டு இருந்ததை அந்தம்மா ஒளிஞ்சிருந்த பார்த்தது மட்டும் தெரியும்.. மற்ற எதுவும் தெரியாது.."

அதனால்தான் சித்ரலேகா அந்த நிகழ்வை மட்டும் பேரனிடம் சொன்னாள்... மற்றதை எப்படி அவள் சொல்வாள்..?

https://t.me/tamilpdfebooks

சித்ரலேகாவின் மௌனத்தில் ஊர்மிளா வேறு எதையும் சொல்லவில்லை என்ற முடிவுக்கு வந்தான் நரேந்திரன்..

“இவ சொல்லியிருக்க மாட்டா.. நான்தான் சொல்கிறேனே.. இவ ராட்சசி பாட்டி.. சொல்லாம நம்ம உயிரைக் குறைப்பா..”

“அவ மனசில என்ன இருக்கோ..?”

“அதை சொன்னாத்தானே தெரியும் பாட்டி.. சொல்லாம அவ மனசுக்குள்ளேயே புதைச்சு வைத்திருந்தா எப்படி எனக்குத் தெரியும்..? வீம்பு பாட்டி.. பிடிவாதம்.. இப்படித்தான் அன்றைக்கு தஞ்சை ஹாஸ்பிடலில் சுரேந்திரனோட ட்ரீட்மெண்டுக்காக அவ அப்பா போட்ட அத்தனை நகைகளையும் விற்றுப் பணத்தைக் கட்ட வருகிறா.. நான் வாங்கிக் கொடுத்திருந்த வைர நகைகளைக் கொண்டு போயிருந்தான்னா அந்த நிலைமை அவளுக்கு வந்திருக்குமா பாட்டி..? அந்த வைரநகைகளில் ஒரே நகையை விற்றிருந்தால் கூடப் போதும்.. சுரேனுக்கு அரச வைத்தியம் நடந்திருக்கும்.. திமிர் பாட்டி.. இவ உடம்பெல்லாம் திமிர்.. என் நகை வேண்டாமாம்.. என் மகன் மட்டும் இவள் மகனாம்.. எப்படி உரிமை கொண்டாடறா பார்த்தீங்களா..? நானில்லாம இவள் மகன் வந்தானா..?”

“டேய்ய்ய்...”

சித்ரலேகா சிரித்து விட்டாள்.. பேரனின் முதுகில் ஒரு போடும் போட்டாள்.. அவன் கேட்ட கேள்வியில் இருந்த கோபத்தில் அவளின் சிரிப்பு அதிகரித்தது..

https://t.me/tamilpdfebooks

அதே கேள்வியை ஊர்மிளா வேறு விதமாக கேட்டதை நினைத்துப் பார்த்தவளின் சிரிப்பு வந்த வேகத்தில் மறைந்தது..

"சும்மா என் மகன்.. என் மகன்னு சொல்கிறாரே பாட்டி.. நான் பத்து மாதம் சுமந்து பெற்றுக் கொடுக்காம இவர் மகன் வந்து விட்டானா..?"

'இரண்டுமே நன்றாகத்தான் நியாயம் பேசுதுகள்..'

சித்ரலேகா பெருமூச்சு விட்டாள்..

"அவர் தஞ்சாவூருக்கு வந்தார் பாட்டி.. எனக்காக வரலை.. அவரோட மகனுக்காக வந்தார்.. நான் அவருக்குத் தகவல் கொடுக்கலை பாட்டி.. அமிர்தாதான் தகவல் சொல்லியிருக்கா.. இருந்தும் அவர் என்னைப் பார்த்து கேட்டாரே ஒரு கேள்வி.. திரும்பவும் மறக்க முடியாதபடி கேள்வி கேட்டு வைச்சுட்டார் பாட்டி.. கேள்வியின் சாயகன்னா அது உங்க பேரன்தான் பாட்டி.. அவர் மகனோட ட்ரீட்மெண்டுக்கு செலவளிக்கப் பணம் இல்லைங்கிற தாலதான் அவருக்கு நான் தகவல் சொல்லச் சொன்னேனாம்.. எப்பேர்பட்ட பழி..! என் உயிரைக் கொடுத்தாவது என் மகனைக் காப்பாற்றியிருப்பேன் பாட்டி.. எந்நாளும் உங்க பேரனிடம் கையேந்தி நின்றிருக்க மாட்டேன்.."

"சேச்சே.. என்ன பேச்சுன்னு இப்படிப் பேசற..? அவன் சம்பாதிக்கிறது யாருக்காக..? கொட்டிக்கிடக்கிற இத்தனை செல்வமும் யாருக்காக..? உனக்கும்.. உன்

https://t.me/tamilpdfebooks

மகனுக்காகவும் தான் ஊர்மிளா.. உரிமைக்காரியான நீயே இப்படிப் பேசலாமா..?"

"உரிமை.." கசப்புடன் சிரித்தாள் ஊர்மிளா..

"யாருக்கு வேணும் பாட்டி அந்த உரிமை..? எனக்கு வேண்டியது பாசம் பாட்டி.. உண்மையான பாசம்.. எனக்கும் அவருக்கும் இடையில் அத்தனை நாளாய் இருந்தது காதல்ன்னா.. அதனாலே வந்த பாசத்திலே அவர் என்பக்கமாய் யோசிச்சிருப்பார்.. அவர் மகன் என் வயிற்றில் வளர்வதைச் சொல்லியிருந்தா என்னைப் போக விட்டிருக்க மாட்டேன்னு அவர் சொன்னார் பாட்டி.. எனக்காக என்னைத் தடுத்து நிறுத்தனும்னு ஏன் அவருக்குத் தோணலை பாட்டி..? அவர் மகன் பிறந்திருப்பதைச் சொல்லியிருந்தா திருச்சிக்கு என்னைத் தேடி வந்திருப் பேன்னு அவர் சொன்னார் பாட்டி.. எனக்காக என்னைத் தேடி வரனும்னு ஏன் அவருக்குத் தோணாம போச்சு பாட்டி..? அவ்வளவு தானா..? எனக்கும் அவருக்கும் இடையில் இருந்த காதல் அவ்வளவுதானா பாட்டி.. இப்பவும் அவரோட மகனுக்கு ஆயாவாய் வேலை பார்க்கத்தான் என்னைக் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கார் பாட்டி.. அவரோட காதலியாய்.. பெண்டாட்டியாய் நினைத்துக் கூப்பிட்டுக்கிட்டு வரலை.."

ஊர்மிளாவின் தவிப்பில் மனம் கரைந்து போனாள் சித்ரலேகா.. அவள் சொல்லிய விவரங்களைச் சொல்லாமலே.. பேரனுக்கும், அவன் மனைவிக்கும் இடையினில் இருக்கும் சிக்கலை தீர்த்து வைக்க முடியுமா

https://t.me/tamilpdfebooks

...றுதான் அவள் நரேந்திரனுடன் பேச வந்திருந்தாள்.. அவன் என்னடா வென்றால் ஊர்மிளாவை விட அதிகமாக ...னைப்பட்டான்..

"எப்படி இருப்பா தெரியுமா பாட்டி.. பார்வையிலேயே என்னைச் சாப்பிட்டிருவா.."

"ஏண்டா.. பாட்டிகிட்டப் பேசற பேச்சாடா இது..?"

"வேற யார்கிட்டப் பேசச் சொல்கிறிங்க..? தாத்தா கிட்டேயா..?"

"எதுக்குடா..? உன் தாத்தா துப்பாக்கியைத் தூக்கிக் கிட்டுப் போய் அந்த அகல்யாவை சுட்டுட்டு வாரதுக்கா..? அவரைக் கொலைகாரன் ஆக்க வேணாம்.. என்கிட்டயே சொல்லு.. கேட்டுக்கறேன்.."

"இப்ப எப்படிப் பார்க்கிறா பாருங்க.."

"எப்படிடா பார்க்கிறா..?"

நரேந்திரனைப் பின் தொடரும் ஊர்மிளாவின் ரகசியப்பார்வைகள் அவனைச் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கின்றன என்பதை அறிந்து வைத்திருந்த சித்ரலேகா கள்ளச் சிரிப்புடன் கேட்டாள்..

ஊர்மிளா அவளுக்கும், அகல்யாவுக்கும் இடையினில் வந்த போராட்டத்தைத்தான் நரேந்திரனிடம் சொல்ல வேண்டாம் என்று சொல்லியிருந்தாள்..

மற்றபடி சித்ரலேகாவாக கண்டு கொண்டிருந்த எதையும் சொல்லக்கூடாது என்று சொல்லவில்லையே..

https://t.me/tamilpdfebooks

"யாரோ மூணாம் மனுசனைப் பார்க்கிறதைப் போல பார்த்து வைக்கிறா பாட்டி.."

"நீ பார்த்த..."

"பார்க்காமலா சொல்கிறேன்.."

"போடா முட்டாள்.."

"இந்தப் பட்டம் மட்டும்தான் பாக்கியிருந்தது.. இந்த அழகான ராட்சசி எனக்கு வொய்பா வந்து வாய்த்தா.. இதையும் வாங்கிக் கொடுத்துட்டா.."

"நரேன்.. நீ பார்த்தது வேறு.. நான் பார்த்தது வேறுடா.."

"பார்வைங்கிறது ஒன்னுதானே பாட்டி.. இதிலென்ன டிபரன்ஸ் வந்து கிழிச்சிரப் போகுது..?"

நரேந்திரன் அலுத்துக் கொண்டதில் சித்ரலேகா சிரித்தாள்.. பேசியபடியே அவன் காலி பண்ணி வைத்திருந்த டிரேயையும் காபி கப்பையும் எடுத்து அங்கிருந்த டீப்பாயில் வைத்து விட்டு ஊஞ்சலில் உட்கார்ந்தவள்..

"இப்ப ஊஞ்சலை ஆட்டுடா.." என்றாள்..

"ஊஞ்சலாடற மூடில நானில்லை பாட்டி.."

"நானிருக்கேனே.."

சித்ரலேகா அவனை சோதித்தாள்.. காதல் மனைவி கண்ணுக்கெட்டிய தூரத்தில் தளதளவென்று தக்காளி பழத்தைப் போல இருக்க.. அவளைக் கொஞ்சி..

https://t.me/tamilpdfebooks

அவளுடன் ஊஞ்சலாட முடியாமல் பாட்டியுடன் ஊஞ்சலாட வேண்டி வந்து விட்ட கொடுமையில் மனம் வெறுத்துப் போய் விட்டான் நரேந்திரன்..

'நரேந்திரா..! உன் தலைவிதி இப்படியாடா இருக்கனும்..'

விரக்தியுடன் அவன் தரையை ஓங்கி மிதித்த தியில் ஊஞ்சல்.. இந்த விளிம்புக்கும்.. அந்த விளிம்புக்குமாக காற்றில் பறந்து ஆடியாது.. சித்ரலேகா கண்களை மூடிக் கொண்டாள்.. பயந்து போய் கண்களை மூடுகிறாள் என்று நரேந்திரன் நினைத்தான்..

'இவ்வளவு பயத்தை வைச்சுக்கிட்டு ஏன் இந்தப் பாட்டி ஊஞ்சலாட வரனும்..?'

அவன் நினைத்து முடிப்பதற்குள் அதை பொய்யாக்கி சித்ரலேகா பாட ஆரம்பித்து விட்டாள்..

"நான் பார்த்த பார்வை..
நீ பார்க்கவில்லை..
உன் பார்வை போல..
என் பார்வையில்லை.."

"அரதப் பழசு பாட்டு.. இதையெல்லாம் அவதான் ரசிச்சுக் கேட்பா.. அவ அப்பாம்மாவோட டிரெயினிங்... என்னிடம் எதுக்காக பாடி வைக்கறிங்க.."

"பார்வையைப் பத்தி உனக்குக் கிளாஸ் எடுக்கத்தான்.."

"ம்ப்ச்.. பேசாம இருங்க பாட்டி.. காமெடி பண்ணாதீங்க.. இவ எப்பேற்பட்டவ தெரியுமா..?

https://t.me/tamilpdfebooks

சுரேனோட ட்ரீட்மெண்ட் சமயத்தில் கூட இவ என்னை நினைக்கலை பாட்டி.. இவளோட பிரண்ட்.. அமிர்தாதான் மெசேஜ் பண்ணினாங்க.."

"அப்படியிருந்தும் நீ அவளைப் பார்த்து பணத் தேவை வந்ததும் பிள்ளைக்குத் தகப்பன்னு என்னைக் கூப்பிடனும்னு நினைவு வந்ததான்னு கேட்டிருக்க..?"

அழுத்தம் திருத்தமாக அவனைக் குற்றம் சாட்டினாள் சித்ரலேகா.. நரேந்திரனின் முகம் மாறியது..

"பாட்டி..?"

"ம்ம்ம்.. அவதான் இதைச் சொன்னா.. இப்பவ புரிஞ்சுக்க நரேந்திரா.. அவளைக் குற்றம் சொல்கிற ஒவ்வொரு நிகழ்விலேயும் உன்மேல ஒரு குற்றத்தை நீ உண்டு பண்ணியிருக்க.. அவ மனசில அது காயமா.. ஆழமாபதிஞ்சிருக்கு.. உன்னை அவ ஆசையா பார்க்கலையா..? ஒளிஞ்சு மறைஞ்சு உன்னை மட்டும் தாண்டா அவ பார்த்துக்கிட்டு இருப்பா.. பக்கத்தில் மகன் இருக்கிறதைக் கூட மறந்திருவா.."

'உண்மையாகவா..?' நரேந்திரனின் முகத்தில் வெளிச்சம் பரவியது..

https://t.me/tamilpdfebooks

97

சொல்லி விட்ட வார்த்தைகளால்
சோதனையை எனக்குத் தந்த
அழகான ராட்சசி நீ....

நரேந்திரனால் ஓரளவுக்குத்தான் அவன் மன உணர்வுகளை சித்ரலேகாவிடம் பகிர்ந்து கொள்ள முடியும்.. அனைத்து மன உணர்வுகளையும் அவளிடத்தில் பகிர்ந்து கொள்வதென்பது சாத்தியமில்லாத ஒன்றாகும்..

அவனுக்கான காதல் பார்வையினை ஊர்மிளா பாவில்லை என்பதைக் கூட அவன் சொல்லி விடலாம்.. ஒவ்வொரு முறை அவன் வேட்கையுடன் அவளை அணுகியும் அவனுடைய ஆசைக்கு ஊர்மிளா இணங்க மறுத்து விட்டாள் என்பதை எப்படி சித்ரலேகாவிடம் சொல்லுவான்..?

"அவ காதல் எங்கே போனதுன்னு தெரியலை பாட்டி.."

"ஒருவேளை குருவி தூக்கிட்டுப் போயிருச்சோ என்னவோ.."

"ஜோக்..?"

நரேந்திரன் சித்ரலேகாவை முறைத்த பார்வையில் அனல் இருந்தது.. அவள் 'ஹா.. ஹா..' என்று சிரித்து வைக்க.. இவன்..

https://t.me/tamilpdfebooks

"எனக்குச் சிரிப்பு வரலை.." என்றான் கடுப்பாக..

"வரலைன்னா தேடிப் போ.." என்றாள் சித்ரலேகா இலகுவாக..

"பாட்டி.." அவன் பல்லைக் கடித்தான்..

"உண்மையாத்தான் சொல்றேண்டா நரேந்திரா.. எப்பவும் நாம உண்மையைத் தேடிப் போகனும்... அப்படியில்லாம பொய்க்குப் பின்னாலே பதுங்கிக்கிட்டு இருந்தா வேலைக்கு ஆகாதுடா.."

பூடகமாக பேசிய சித்ரலேகாவின் பேச்சில் இந்தப் பாட்டிக்கு என்ன ஆனது.. என்று குழம்பிப் போனான் நரேந்திரன்.. எப்போதும் சித்ரலேகா பொடி வைத்துப் பேசுபவளல்ல.. நேரடியாகப் பேசுகிறவள்..

'ஒருவேளை.. அகல்யா வீட்டில இருந்ததைத்தான் பாட்டி இப்படிச் சொல்கிறாங்களோ..'

அவனுக்கு ஒரு மண்ணும் விளங்கவில்லை.. தலை முடியைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது..

"ஊர்மிளாவைத் தேடிப் போகலைன்னு சொல்கிறிங்களா..?" யோசனையுடன் கேட்டான்..

"புரிஞ்சாச் சரி.." என்று அவன் குழப்பத்தை தீர்த்து வைத்தாள் சித்ரலேகா..

'இதைத்தான் சொன்னாங்களா..?'

நரேந்திரனுக்கு அது முடிவாகவில்லை.. சித்ரலேகாவின் வார்த்தைகளில் பொதிந்திருந்த உள்பொருள் இது

https://t.me/tamilpdfebooks

மட்டுமல்ல அன்று ஆய்ந்தறியும் அவனது ஆறாவது அறிவு சொன்னது..

இதற்கு மேலே எதையோ அவனுடைய பாட்டி அவனுக்கு அறிவுறுத்துகிறாள்.. அது என்னவாக இருக்கக் கூடும்..?

"அவளைத் தேடி நான் போகிறது இருக்கட்டும்.. என்னைத் தேடி அவள் வந்தாளா பாட்டி..? என் மகனுக்கான ட்ரீட்மெண்ட் செலவுக்கு பணமில்லாம தவிக்கிறா.. அந்த இக்கட்டான நிலையிலும் என்னை அவள் தேடலை பாட்டி.. அவள் கண்முன்னால் என் மகனைத் தூக்கிக்கிட்டுப் போறேன்.. கதறிக்கிட்டு என் பின்னால் அவள் வரலை.. சும்மா என்னையே குற்றம் சொல்லாதீங்க பாட்டி.. அவள் பக்கமும் தப்பிருக்கு.. அதை யோசிங்க.." நரேந்திரன் கோபப் பட்டான்..

"ஆக.. நீ யோசிக்க மாட்ட.. மத்தவங்களைத்தான் யோசிக்கச் சொல்லுவ..?" சித்ரலேகா கேட்டாள்..

"என்னத்தை யோசிக்கச் சொல்கிறிங்க..?" நரேந்திரன் அலுத்துக் கொண்டான்..

"எந்த இடத்திலிருந்து பிரச்னை ஆரம்பிச்சதோ.. அந்த இடத்திலிருந்து யோசி நரேந்திரா.. உனக்கு வழி கிடைக்கும்.."

சித்ரலேகா எழுந்து நின்றாள்.. தோட்டத்தைப் பார்த்தாள்.. மகனுடன் பேசியபடி ஊர்மிளா வீட்டைப் பார்த்து வந்து கொண்டிருந்தாள்.. மாலை வெளிச்சம் மறைந்து இருள் பரவத் தொடங்கியிருந்தது..

https://t.me/tamilpdfebooks

"இருட்ட ஆரம்பிச்சிருச்சில்ல.. மகனுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க கூப்பிட்டுக்கிட்டு வருகிறா.." பெருமையுடன் சொன்னாள் சித்ரலேகா..

"டீச்சரம்மா இல்ல.. எல்லாம் சிஸ்டமேடிக்காத்தான் செய்வா.." எரிச்சலுடன் சொன்னான் நரேந்திரன்..

"இண்டஸ்ட்ரியலிஸ்ட் மட்டும் ஏட்டிக்குப் போட்டியா செய்கிறிங்களாக்கும்..? இங்கேயும் அந்தக் கதைதான்.." நொடித்தாள் சித்ரலேகா..

காம்பவுண்டுக்குள் கஜேந்திரனின் கார் நுழைந்தது.. வெளிச்சப் பாதையை வீசியபடி வந்து போர்டிகோவில் நின்றது..

"இதோ இன்னொரு இண்டஸ்ட்ரியலிஸ்டும் வந்தாச்சு.." என்றாள் சித்ரலேகா..

காலி டிரேயை எடுத்துக் கொண்டு அவள் நகர்ந்ததில் நரேந்திரனுக்கு மலையளவு பொறாமை உண்டானது..

"எங்கே ஓடறிங்க..?" சித்ரலேகாவிடம் பேச்சுக் கொடுத்து நிறுத்த முயன்றான்..

"உன் தாத்தா வந்திட்டாருடா.." அவள் ஓடுவதிலேயே குறியாய் இருந்தாள்.

"நீங்க மட்டும் உங்க ஹஸ்பெண்ட் வந்ததும் ஓடி ஓடிக் கவனிக்கறிங்களே.. இதைப் போல உங்க பேரனையும் கவனிக்கச் சொல்லி உங்க செல்ல மருமகளுக்கு டியூசன் எடுத்தால் என்ன..?" முறைத்தான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

"ஓ.. உனக்கு இந்தக் கடுப்பா..? ஊர்மிளா அருமையான பெண் நரேந்திரா.. அவளுக்கு யூசனெல்லாம் தேவையில்லை.. அவளே ஆயிரம் பேருக்கு டியூசன் எடுப்பா.. அதோடு நரேந்திரா.. உன் தாத்தா ஒன்னும் உன்னைப் போல கேட்பார் பேச்சைக் கேட்டுக்கிட்டு என்னை நடுஹாலில நிற்க வைத்து வேலைக்காரங்க முன்னாலே கேட்கக் கூடாத கேள்வியை கேட்டு விடலையே.."

"பாட்டி.."

நரேந்திரன் ஸ்தம்பித்து விட்டான்.. கடைசியில் அவனுடைய பாட்டியும் அவனைக் குற்றம் சொல்கிறாளா..?

"என்னடா செய்கிறது..? பெண்ணாய் பிறந்து தொலைத்திட்டேனே.. நீ கேட்ட கேள்வியை எந்தக் கணவன் கேட்டாலும்.. மனைவியாய் வாய்த்தவளுக்கு கோபமும், ரோசமும் வரத்தான் செய்யும் நரேந்திரா.."

"அதுக்காக அவளைக் கேள்வியே கேட்கக் கூடாதா..?"

"கேளு.. உனக்கில்லாத உரிமையா..? உன் ரூமில் தனியா இருக்கிறப்ப கேளு.. அப்ப அவ பதில் சொல்லலைன்னா கோபப்படு.. அதை விட்டுட்டு.. ஊருக்குமத்த நாய் சொல்லுதுன்னு நடுவீட்டில் அவளை நிற்க வைச்சு கேள்வி கேட்டுட்ட... அவ கோபமாய் கிளம்பிப் போறப்ப தடுத்து நிறுத்தியிருக்கனுமா இல்லையா..? அதையும் நீ செய்யலை.."

https://t.me/tamilpdfebooks

"அவளுக்கிருக்கிற அதே ரோசமும் கோபமும் எனக்கு இருக்காதா பாட்டி..? என் கேள்விக்கு பதில் சொல்லாம எப்படி நீ என்னைக் கேள்வி கேட்கலாம்ன்னு அவ கிளம்பிப் போவா.. வேண்டாம்ன்னு நான் தடுத்து நிறுத்தனுமா..?"

"ஒரு சின்னத்திருத்தம்டா நரேன்.. அவ எப்படி நீ கேள்வி கேட்கலாம்ன்னு கிளம்பிப் போகலை.. என்னைப் பார்த்து எப்படி நீ அப்படியொரு கேள்வியைக் கேட்கலாம்ன்னு கிளம்பிப் போனா.. அதுக்குப் பின்னாலே யாவது நீ அவளைத் தேடிப் போனியா..?"

"அவ வீட்டில இருந்து எனக்குப் போன் பண்ணியிருக் கலாமே பாட்டி.. எல்லாத்துக்கும் கொடி பிடிக்கிறவரு அவளுடைய அப்பா... இதுக்கும் கொடி பிடிச்சிருந்தா சண்டை போடற சாக்கிலே நான் திருச்சிக்குப் போயிருக்க மாட்டேனா..?"

"கொடி பிடிக்கிற விசயமாடா இது..? நான் ஒன்னு கேட்கவாடா நரேன்..?"

"அதான் ஓராயிரம் கேள்விகளைக் கேட்டுக்கிட்டு இருக்கீங்களே.. இதில ஒன்னு கேட்கவான்னு பெர்மிசன் வேற கேட்கறிங்களா..? இவ்வளவு நேரமும் பெர்மிசன் வாங்கிட்டுத்தான் கேள்வி கேட்ட மாதிரி என்ன பில்ட் அப் வேண்டிக்கிடக்கு..?" நரேந்திரன் எரிந்து விழுந்தான்..

சித்ரலேகா அதை கண்டு கொள்ளவில்லை.. ஆறாத மனப்புண்ணிற்கு மருந்திடும்போது காயத்தில் எரிச்சல் ஏற்படத்தான் செய்யும்.. அதை பொருட் படுத்திக் கொண்டிருந்தால் காயத்தை ஆற்றி விட முடியாது..

https://t.me/tamilpdfebooks

"உன் வீட்டிலிருந்து கிளம்பிய ஊர்மிளா திருச்சிக்குப் போகாம வேறு முடிவுக்குப் போயிருந்தா என்னடா செய்திருப்ப..?"

"நியூயார்க்குக்கு அவ பிரண்ட் கூடப் போயிருந்தா என்ன செய்கிறதுன்னு கேட்கறிங்களா..? ஆல்ரெடி சித்தியும் அந்தக் கேள்வியைத்தான் கேட்டு வைச்சாங்க.."

"உன் சித்தி பேச்சை இந்த வீட்டில் எடுத்தா நான் குஷியாவே இருக்க மாட்டேண்டா நரேன்.. ச்சே..! என்ன மாதிரி பேசியிருக்கிறா.. நீ அவளை பேச விட்டு வேடிக்கை பார்த்திருக்க.."

சித்ரலேகாவுக்கு கோபம் வந்து விட்டது.. நரேந்திரனின் முகம் பார்க்காமல் நகரப் போனாள்.. நரேந்திரன் பாட்டியின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தி அவள் முகவாயைப் பிடித்துக் கெஞ்சி சமாதானம் செய்தாள்..

"என் செல்லப் பாட்டியில்ல.."

"இல்ல.."

"அந்தம்மா பேச்சை என்றைக்கு நான் கேட்டேன் பாட்டி..?"

"போடா.. ஊர்மிளா மனம் வெறுத்துப் போய் தற்கொலை அது இதுன்னு போயிருந்தா என்னடா செய்திருப்ப..? அதைச் சொல்ல வந்தா.. அந்தச் சாக்கடை எதையோ பேசுச்சாம்.. இவனும் அதையே சொல்கிறான்.. என்கிட்டப் பேசாதேடா.."

https://t.me/tamilpdfebooks

"பாட்டி.."

நரேந்திரன் முகம் மாறிவிட்டது.. ஊர்மிளா அப்படியொரு முடிவை எடுத்திருந்தால்..?

நினைத்துப் பார்க்கக் கூட அவனால் முடியவில்லை..

"அவ அப்படியெல்லாம் முட்டாள்தனமா யோசிக்க மாட்டா பாட்டி.."

"நினைத்துக்கிட்டு இரு.. அடிபட்ட பெண்மனம் எந்த முடிவுக்கும் போகும்.. உயிருக்குயிராய் காதலிச்சவன் அவனோட சித்திகாரி பேச்சைக் கேட்டுக்கிட்டு எக்குத்தப்பா ஒரு கேள்வியை கேட்டு வைக்கிறான்.. அந்த நேரத்திலே துடிச்சுப் 'போனவ விபரீதமா ஏதாவது யோசித்திருந்தா.. உன் வாழ்க்கையிலே நீ திரும்பவும் ஊர்மிளாவை பார்த்தே இருக்க முடியாதுடா நரேன்.. நல்ல வேலை.. அவ வயிற்றிலே உன் குழந்தை இருந்தது.. அவ எதையும் யோசிக்காம அவ அப்பா வீட்டுக்குப் போய் சேர்ந்துட்டா.. இல்லைன்னா என்ன ஆகியிருக்கும்..? அவ அவளோட அப்பா வீட்டிக்குப் போயிருப்பான்னு நீ நினைச்சுக்கிட்டு இருந்திருப்ப.. அவங்க உன்கூட அவ இருக்கிறான்னு நிம்மதியா இருந்திருப்பாங்க.. இடையில அவ எங்கே போனா.. என்ன ஆனான்னு யாருக்கும் தெரிந்திருக்காது.."

அப்படியும் நடந்திருக்குமா..? நரேந்திரன் அசைவற்று நின்று விட்டான்.. கோபமாக பேசிக் கொண்டே போன சித்ரலேகா.. பேரனிடம் அசைவில்லாமல் போனதும் பேச்சை நிறுத்தி விட்டாள்..

https://t.me/tamilpdfebooks

"நரேன்.." நடுக்கத்துடன் அவனைத் தொட்டாள்..

"பாட்டி.." அவள் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டான் அந்த ஆறடி உயர ஆண்மகன்..

"போனதை விடு நரேந்திரா.. இதெல்லாம் நடந்திருக்கலாம்ங்கிறதை நீ புரிஞ்சுக்கனும்ங்கிறதுக்காகத் தான் நான் எடுத்துச் சொன்னேன்டா.. அதான் ஊர்மிளா பத்திரமா இருக்காளே.."

"அவ என் கேள்விக்கு பதில் சொல்லலைன்னு கோபப் பட்டுட்டேன்பாட்டி.."

"நீ ஏண்டா அப்படிக் கேட்ட..?"

"சித்தி பொய் சொல்லியிருக்கலாம்ன்னு எனக்குத் தோணிச்சு.. அவங்க முன்னாலே ஊர்மிளாவை விசாரிச்சா அவ உண்மையை சொல்லுவா.. அந்தம்மாவை கிழிகிழின்னு கிழிக்கலாம்ன்னு நினைத்தேன்.."

'இவனையும் குற்றம் சொல்ல முடியாது..' சித்ரலேகா பெருமூச்சு விட்டாள்..

யார் மனதிலும் குற்றமில்லை.. வஞ்சமில்லை.. இருந்தும் பிரிந்து நிற்கிறார்கள் என்றால் இறைவனின் தீர்ப்பை என்னவென்றுதான் சொல்லுவது..?

"அந்தப் பாதகி மேலே குற்றமிருக்குன்னு புரூவ் பண்ணிட்டா மட்டும் அவ ஆமாம்ன்னு மன்னிப்புக் கேட்டுறப்போறாளா..? அதுக்கும் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி சாகசநாடகம் ஆடியிருப்பா.. அவ எதுக்குத்தான் அஞ்சினவ..?"

https://t.me/tamilpdfebooks

"ம்ப்ச் சும்மா ஊர்மிளா மேலே குற்றம் சொன்னாங்க.. அதைக் கண்டிச்சு வைக்கலாம்ன்னு நினைச்சேன்.. இந்த அளவுக்கு வந்திருச்சு.."

"கடல் போல நம்ம வீட்டை வைச்சுக்கிட்டு.. வயசான தாத்தாவையும், பாட்டியையும் தனியா விட்டுட்டு.. அவகூடப் போய் நம்ம வீட்டுக்கு வாழவந்த பெண்ணை குடித்தனம் வைச்சா அவ அப்படித்தான் பேசுவா.. உனக்குப் புத்தி இருந்திருக்கனும்.. ஊர்மிளாவோட பிரண்டைப் பத்திக் கேட்டதுக்கு ஏன் அவளுக்கு அந்த அளவுக்கு கோபம் வந்ததுன்னு நினைத்துப் பார்த்திருந்தா நீ அவளை போக விட்டிருக்க மாட்டே..."

ஏதோ ஒரு வேகத்தில் சொல்லி விட்ட சித்ரலேகா..

"ஏன் பாட்டி அந்த அளவுக்கு கோபப்பட்டா..? உண்மை எதுவோ அதைச் சொல்லியிருக்க வேண்டியது தானே..? நானென்ன அவள்மேலே நம்பிக்கை இல்லாமலா அந்தக் கேள்வியைக் கேட்டேன்..?" என்று நரேந்திரன் கேட்டதும் சுதாரித்துக் கொண்டாள்..

ஊர்மிளாவுக்கு வாக்குக் கொடுத்திருப்பதால் உண்மையை அவளால் சொல்லி விட முடியாது.. அதே சமயத்தில் பிரச்னையின் மூல வேரைத் தெரிந்து கொண்ட பின்னால் அதை வேரோடு பிடுங்கிப் போடாமல் அவளால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது..

"யோசி நரேந்திரா.." என்றாள் சித்ரலேகா..

"பாட்டி..?"

https://t.me/tamilpdfebooks

"யோசி.. ஏன் உன் பெண்டாட்டி அந்தக் கேள்வியிலே கோபப் பட்டான்னு யோசி.. ஒருவேளை நீ நினைத்ததைப் போல அவளைப் பார்க்க பிரண்டுன்னு யாரும் வராமலிருந்து நீ அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்திருந்தா..?"

"இல்லை பாட்டி.." நரேந்திரன் மறுப்பாக தலையை அசைத்தான்..

"அர்ச்சனா சொன்னாளே.. அண்ணி அவங்களோட பிரண்ட் கூடப் பேசிக்கிட்டிருக்காங்கன்னு.. அவ பொய் சொல்ல மாட்டாளே.."

"அந்த பிரண்ட் ஆணா.. பெண்ணான்னு சொன்னாளா..?"

"பாட்டி..?" நரேந்திரனின் புருவங்கள் முடிச்சிட்டன..

"என்னவோ.. என் மனசில பட்டதைச் சொல்லிட்டேன்.. யோசிச்சு முடிவு பண்ணு.."

"ஊர்மிளா கூடச் சொன்னா பாட்டி.."

"என்னன்னு..?"

"அவ பிரண்ட் ராதா கூடப் பேசிக்கிட்டு இருந்தான்னு.."

"ராதான்னுதானே சொன்னா..? ராதாகிருஷ்ணன்னு சொல்லலையே.."

சித்ரலேகா உண்மையைச் சொல்லாமல் பேரனை யோசிக்க வைத்து விட்டு மாடியிறங்கிப் போய் விட்டாள்..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் ஊஞ்சலிலேயே உட்கார்ந்து விட்டான்.. அவனுக்குத் தனிமை தேவைப் பட்டது.. நடந்து முடிந்த நிகழ்வுகளை மனக் கண்ணில் கொண்டு வந்து நிறுத்திப் பார்த்தான்.. கண்களை மூடிக் கொண்டான்..

"யாரோ அவ பிரண்டாம்.. ராதாகிருஷ்ணன்னு பெயராம்.." அகல்யாவின் குரல் ஒலித்தது..

"அண்ணி அவங்களோட பிரண்ட் கூடப் பேசிக்கிட்டு இருக்காங்க அண்ணா.. கூப்பிடவா.." அர்ச்சனாவின் குரல் சொன்னது..

"ராதாகூடப் பேசிக்கிட்டு இருந்தேங்க.." ஊர்மிளாவின் பதட்டமான குரல் கேட்டது..

"அந்த ராதாகிருஷ்ணனை செல்லமாக ராதா.. ராதான்னு உன் பெண்டாட்டி கூப்பிடறாப்பா.. அருண் முகம் சுளிக்கிறான்.." மீண்டும் அகல்யாவின் குரல் கேட்டது..

"வீட்டிலே பிரச்னையா..? இல்லையே.. எப்பவும் போல்தான் வீடு இருக்குண்ணா.." அருணின் குரல் தழைந்து வந்தது..

நரேந்திரனுக்கு தலையை வலிப்பதைப் போல இருந்தது.. தனிமை அவனை சுமையாய் அழுத்தியது.. யோசித்தபடி படியிறங்கினான்.. ஹாலில் கஜேந்திரன் உடை மாற்றி ஒய்வாக அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்தார்.. ஊர்மிளா டைனிங் டேபிளிலில் சுரேந்திரனுடன் உட்கார்ந்து அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.. சித்ரலேகா சமையலறையில் ஏதோ

...சிக்கொண்டிருந்தாள்.. பூஜையறையில் விளக்கேற்றப் ...டிருந்தது.. இதமான ஊதுபத்தியின் நறுமணம் வீட்டை ...ரப்பியது.. நரேந்திரன் உயிர்ப்பாக உணர்ந்தான்..

இதுபோன்ற உயிர்ப்பு அகல்யாவின் வீட்டில் ஏன் இல்லை..?

ஊர்மிளாவைப் பார்த்தான்.. அவள் முகம் சாந்தமாக.. ஒரு அழகான தேவதையின் முகம் போல கனிந்திருந்தது..

98

உன் கோபத்திலே..
எனை புரட்டியெடுக்கும்..
அழகான ராட்சசி நீ....

ஒரு மனித ஜீவனின் இயல்பான குணத்தை அவர்கள் வாழும் சூழலே நிர்ணயம் செய்கிறது..

ஊர்மிளா அழகான தேவதை..! அவளை அழகான ராட்சசியென்று நரேந்திரனை கோபம் கொள்ள வைத்தது அவளைக் கொண்டு போய் அவன் விட்டு வைத்த அகல்யாவின் வீட்டுச் சூழல்..

நரேந்திரன் மட்டும் கஜேந்திரனின் பேச்சுக்கு செவி சாய்த்து ஊர்மிளாவை அவனுடைய வீட்டிற்கு அழைத்துப் போயிருந்தால்.. அவளுடைய கோபத்தின் பரிணாமத்தை

https://t.me/tamilpdfebooks

அவன் உணர வேண்டிய அவசியமே நேர்ந்திருக்காது.. அவனும் அவளை அடிக்கடி..

'அழகான ராட்சசி..!' என்று மனதுக்குள் அழைத்திருக்கவும் மாட்டான்..

"இந்த வருச பட்ஜெட் எப்படி போகுதுன்னு தெரியலை.."

பேரனைக் கண்டதும் டிவியின் வால்யூமை குறைத்து விட்டுச் சொன்னார் கஜேந்திரன்.. அவன் தோளைக் குலுக்கினான்.. அதைப் பார்த்து விட்டு டைனிங் டேபிளில் அமர்ந்திருந்த சுரேந்திரனும் தோளைக் குலுக்க.. ஊர்மிளாவின் முகத்தில் பெருமிதச் சிரிப்பு வந்தது..

"ஜீனியர் நரேந்திரன் பண்ணுகிற லூட்டியைக் கவனிச்சியாடா..?"

கஜேந்திரன் பலத்த குரலில் சிரித்தார்.. சுரேந்திரனும் அதைப்போல சிரித்துக் காண்பித்தான்.. அவரின் சிரிப்பு அதிகரித்தது.. நரைந்த மீசையை முறுக்கி விட்டபடி பெருமைப் பட்டுப் போனார்..

நரேந்திரனின் மன பாரம் விலகியது.. அந்த இதமான குடும்பச் சூழலில் அவனை பீடித்திருந்த தனிமை உணர்வு விலகி ஓடுவதை வியப்புடன் அவன் உணர்ந்தான்..

"இது வீடு..!" சிரித்து ஓய்ந்த கஜேந்திரன் நெகிழ்ச்சியுடன் சொன்னார்..

ஊர்மிளா அவரை நிமிர்ந்து பார்த்தாள்..

https://t.me/tamilpdfebooks

"ஆமாம்மா.. வீடுன்னா இப்படித்தான் இருக்கனும்.. அப்படியில்லாம உன் பாட்டி முகத்தை நானும்.. என் முகத்தை உன் பாட்டியும் பார்த்துக்கிட்டு இருந்தோமே.. அது வீடா..? இல்லைம்மா.. அப்பவே நான் உன் ஹஸ்பெண்டிடம் சொன்னேன்.. உன் அப்பாவுக்கு வாக்குக் கொடுத்திருந்தா தள்ளி நின்று அந்தக் குடும்பத்துக்கு உதவி செய்.. உள்ளே போய் விழுகாதே.. அது சேறுன்னு.. உன் ஹஸ்பெண்ட் கேட்கலை.. அவனோடும் போகாமல் உன்னையும் அந்த வீட்டுக்குள்ளே அழைச்சுக் கிட்டுப் போயிட்டானே.. அதை என்னன்னு சொல்ல..? வேண்டாம்ன்னு சொன்னேன்ம்மா.. அந்த அகல்யா சரியான லேடி இல்லே.. தான் வாழனும்னா யாருக்கு வேண்டும்னாலும் அது குழி பறிக்கும்ன்னு சொன்னேன்.. அவ இருக்கிற வீட்டுக்கு உன்னை அழைத்துக்கிட்டுப் போக வேண்டாம்ன்னு சொன்னேன்.. என் பேச்சை இவன் காதிலேயே போட்டுக்கலை.. என்னாச்சு..? என்னென்னவோ நடந்து போச்சு.. வீட்டை நிறைக்க நீயும் உன் மகனும் இருந்தும் உங்களை எங்கள் கண்ணில் காட்டாம தள்ளி நின்னிருந்தான் என் பேரன்.. வயசான எங்க மேலே இரக்கம் காட்ட மாட்டேன்னு அந்த அகல்யா குடும்பத்து மேலே இரக்கம் காட்டினான்.. இவனோட அப்பா புத்திசாலி.. வாக்கு வாங்கி இவனை அவனோட குடும்பத்துப் பக்கம் இழுத்து விட்டுட்டுப் போயிட்டான்.. என் பொண்ணு ஏமாளிம்மா.. பெத்த மகன்கிட்ட வாக்கு வாங்கி அவனைக் கட்டிப் போடனும்கிற குறுக்குப் புத்தியெல்லாம் அவளுக்குக் கிடையாது.. அவ போன

https://t.me/tamilpdfebooks

பின்னாலே.. அவ மகன் அவளோட வயசான அம்மாவையும், அப்பாவையும் கவனிச்சுக்கவாங்கிற நம்பிக்கையோட போய் சேர்ந்திட்டா.. நாங்க தனி மரங்களா ஆகிட்டோம்.."

"தாத்தா.."

ஊர்மிளா தாள முடியாமல் அழுது விட்டாள்.. நரேந்திரனின் மனம் கனத்தது.. கஜேந்திரனின் ஒவ்வொரு வார்த்தையும் கூரிய சம்மடிகளாக அவன் இதயத்தில் விழுந்தன.. ஹாலின் சுவரில் மாட்டப்பட்டிருந்த நளினியின் புகைப்படத்தைப் பார்த்தான்..

'அம்மா..!...'

ஆதரவு தேடி அவன் அழைத்த குரல் நளினியின் காதில் விழுந்ததோ என்னவோ..

"போதும்.." என்ற அதட்டலுடன் சித்ரலேகா அங்கே வந்தாள்..

"இப்பத்தான் எல்லோரும் ஒன்றாய் சேர்ந்தாச்சில்ல..? இன்னும் எதுக்காக பழைய குப்பையை கிளறிக்கிட்டு இருக்கீங்க.."

"தப்புத்தான் சித்ரா.. மனசு தாங்காம பேசிட்டேன்.."

"அதுக்காக நரேன் மனசு தாங்காம பேசனுமா..? நளினி இருந்திருந்தா உங்களை சும்மா விட்டிருக்க மாட்டா.."

"அதைச் சொல்லு.."

கஜேந்திரனின் பார்வை மன்னித்து விடம்மா என்ற இறைஞ்சலுடன் நளினியின் புகைப்படத்தைப் பார்த்தது..

https://t.me/tamilpdfebooks

'அம்மா..!' நரேந்திரன் சிலிர்த்து விட்டான்..

இதுதான் தாய்மையா..? இதுதான் தாய் மனமா..? அவன் மனம் வருந்திய அடுத்த நிமிடம் அவனுக்காக பரிந்து பேசி வாதாட அவளின் அன்னை உருவில் அவனின் அன்னை வந்தாளே..

புகைப்படத்திலிருந்த நளினியின் அன்புப் பார்வை பாசத்துடன் மகனை வருடியது..

சுரேந்திரன் வீட்டுப் பாடத்தை முடித்து விட்டான்.. கண்களைத் துடைத்தபடி எழுந்த ஊர்மிளா சுரேந்திரனின் புத்தகப்பையை ஒழுங்காக அடுக்கி வைத்து விட்டு.. இரவு உணவுக்கான ஆயத்தங்களைக் கவனிக்க ஆரம்பித்தாள்.. சுரேந்திரன் ஓடிவந்து கஜேந்திரனின் மடி மீது ஏறிக் கொண்டான்.. சித்ரலேகா பக்கத்தில் உட்கார்ந்து விட்டாள்.. கஜேந்திரனின் நரைத்த மீசையைப் பிடித்து சுரேந்திரன் இழுக்க.. சித்ரலேகா கைதட்டி அவனைப் பாராட்டி ஊக்கப் படுத்தினாள்.. சிறுவன் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுத்த அந்தக் கோடிஸ்வர பிஸினெஸ் மேனை வியப்புடன் பார்த்தான் நரேந்திரன்..

அவர் முன்னால் நேருக்கு நேர் நின்று பேசும் தைரியம் எவ்வளவு பெரிய மனிதருக்கும் வந்ததில்லை..

அப்படிப்பட்டவர் நரேந்திரனின் மகன் இழுப்பதற்காக தன் மீசையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்..

'எப்படிப்பட்ட குடும்பச் சூழலை மிஸ் பண்ணியிருக்கேன்..'

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் வேதனைப் பட்டான்.. செழியன் அவனை அகல்யாவின் குடும்பத்துடன் பிணைக்கவில்லையே.. உதவியைத்தான் கேட்டார்.. அவனும் தள்ளி நின்றுதான் அதைச் செய்தான்.. உதவிக்கு நீட்டிய அவன் கரத்தை பிடித்து இழுத்து புதைகுழி போல அகல்யாவின் குடும்பத்துக்குள் அமுக்கி விட்டது அகல்யாதானே..

'இந்த உலகத்திலே உதவி செய்ய நினைச்சா இந்தக் கதிதான் வருமா..?'

வேதனையுடன் கண்களை மூடிக் கொண்ட நரேந்திரனைப் பார்த்தபடி டைனிங் டேபிளில் தட்டுக்களை வைத்தாள் ஊர்மிளா.. அவன் வேதனையில் அவளுக்கு வேதனை வந்தது.. அவனின் புருவச் சுளிப்பை நீவி விட வேண்டும் போல மனதில் தோன்றிய தாபத்தை அடக்கிக் கொண்டாள்..

'தென்றல் பாடும் தாலாட்டில் - நீ
இன்பம் பெறவில்லையா..?
இரவு தீர்ந்திடும் வரையில் விழித்திருந்தாலே
துன்பம் தரவில்லையா..?
உன் துயர் கண்டால் என்உயிர் இங்கு
தவிப்பது தெரியலையா..?
உண்மை அறிந்தும்.. உள்ளம் வருந்த
நடப்பது தவறில்லையா..?'

அவன் மனதுக்கு அவள் மனது பாடும் பாடல் கேட்டதோ என்னவோ.. அவன் சட்டென கண் விழித்து அவளைப் பார்த்து விட்டான்.. அதை எதிர்பாராத அவளின்

https://t.me/tamilpdfebooks

காருண்ய பார்வை தவிப்புடன் தடுமாறி நின்றது.. ஆழ்ந்து பார்த்த அவன் பார்வை அவள் பார்வையை சிறை பிடிக்க.. இருவர் பார்வைகளும் பின்னிப் பிணைந்தன..

பலத்த மழையில் மாட்டிக் கொண்டிருந்தாள் ராதா.. குடையைப் பிடித்தபடி காரின் பக்கத்தில் நின்றிருந்தாள்.. வைப்பர் துடைத்து விட்ட மழைத்துளிகளின் உலர்வில்.. காரின் முன்பக்க கண்ணாடி வழியாக அவள் நின்றிருப்பதைப் பார்த்த நரேந்திரன் வேகத்தைக் குறைத்து அவளருகில் காரைக் கொண்டுபோய் நிறுத்தினான்..

"ஹலோ.. அனாமிகா.." என்றான்..

அவள் திரும்பவில்லை.. செல்போனில் பேசியபடியே சாலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. நரேந்திரன் கைகளை ஆட்டி அவள் கவனத்தை ஈர்த்தான்.. அவனைக் கண்டதும் செல்போனை அணைத்தவள்..

"ஹலோ.." என்றாள்..

"ஏங்க.. உங்க பெயர் அனாமிகா இல்லையா..?" நரேந்திரன் சிரித்தான்..

ராதாவின் முகம் மாறியது.. அதில் தெரிந்த நிம்மதியில் நரேந்திரனுக்குக் குழப்பமாக இருந்தது.. இவள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால் இவள் திரும்பிப் பார்க்க மாட்டேன என்கிறாள்.. அதற்காக உன் பெயர் உனதில்லையா என்று கேட்டால் 'ஹப்பா..' என்பதைப் போல நிம்மதியாக பார்த்து வைக்கிறாள்..

'என்னடா இது..!'

https://t.me/tamilpdfebooks

"என்னங்க ஆச்சு..? நீங்க இப்படியெல்லாம் திருதிருக்கிற ஆள் இல்லையே.." அவளிடமே விசாரித்தான்..

"உங்களுக்கு எப்படித் தெரியும்...? ஊர்மி சொன்னாளா..?" முகத்தில் வெளிச்சம் பரவக் கேட்டாள் ராதா..

"எதைங்க..?"

"என் பெயர் என்னங்கிறதை.."

"ஜோக்கா..? இந்த மழையிலேயும் உங்களுக்கு ஜோக் வருதே.. குட்..! உங்களுக்கு செமத்தியான ஹியுமர் சென்ஸ்தான்.. உங்க பக்கத்திலே காரை நிறுத்திட்டு.. அனாமிகா.. அனாமிகான்னு ஏலம் போட்டுக்கிட்டே இருக்கேன்.. நீங்க திரும்பிப் பார்க்க மாட்டேங்கறிங்க.. அதான்.. உங்க பெயர் அனாமிகா இல்லையான்னு கேட்டேன்.. நீங்க என்னடான்னா அதுக்கு இந்த அளவுக்குச் சந்தோசப் பட்டுப் போறிங்க.. ஏங்க.. உங்களுக்கு உங்க பெயரைப் பிடிக்காதா..?"

ராதாவின் முகம் பழைய நிலைமைக்குத் திரும்பியது..

"ரொம்பத் தெளிவான ஆள்தான்.." வாய்க்குள் முணுமுணுத்தாள்..

"என்ன சொல்கிறீங்க..?" நரேந்திரன் காதைத் தீட்டியபடி கேட்டான்..

"எனக்கு இந்தப் பெயரை பிடிக்காதுன்னு சொன்னேன்.." ராதா கடுப்புடன் மழையைப் பார்த்தாள்..

https://t.me/tamilpdfebooks

"யாருக்குத்தான் பெயரில்லாதவங்கங்கிற பெயரைப் பிடிக்கும்..? உங்க பேரண்ட்ஸ் வித்தியாசமானவங்களோ..? இந்தப் பெயரை வைத்திருக்கிறாங்களே.."

அடிக்கிற மழையில் குடையைப் பிடித்துக் கொண்டு மக்கர் பண்ணிவிட்ட காரில் அருகே நின்று கொண்டிருந்தவளுக்கு இந்த விவாதம் தேவைதான் என்றிருந்தது.. நரேந்திரனை வெற்றுப் பார்வையொன்றைப் பார்த்து வைத்தாள்..

'இந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம்..?' நரேந்திரனால் அனுமானிக்க முடியவில்லை..

"காருக்கு என்ன ஆச்சு..?"

ஒருவழியாக அவளிடம் கேட்டு விட்டான்.. இப்போதாவது கேட்டானே என்று ராதாவும் அதற்கான பதிலைச் சொன்னாள்..

"என்னன்னு தெரியலை.. திடிர்ன்னு நின்று என்னைப் பழிவாங்கிக்கிட்டு இருக்கு.."

"ஹா.. ஹா.. உங்க மேலே இதுக்கு என்ன கோபம்..?"

நரேந்திரன் போனை எடுத்துப் பேசினான்.. சற்றுப் பொழுதிற்குள் மழையைப் பொருட்படுத்தாமல் ரெயின் கோட்டைப் போட்டபடி இரண்டு இளைஞர்கள் புல்லட்டில் வந்து இறங்கினார்கள்.. ஒருவன் நரேந்திரனிடம் வந்து வணக்கம் சொன்னான்.. இன்னொருவன் காரின் பானட்டைத்திறந்து ஆராய்ந்து விட்டு மூடினான்..

https://t.me/tamilpdfebooks

"மெக்கானிக் ஷாப்பில வைத்துத்தான் பார்க்கனும் சார்.." அவன் சொன்னதும்..

"உங்க கார் சாவியை அவங்ககிட்டக் கொடுங்க.." என்றான் நரேந்திரன்..

ராதாவியப்புடன் அவர்களிடம் கார் சாவியைக் கொடுத்தாள்..

"வாங்க உங்களை டிராப் பண்ணிடறேன்.." என்ற நரேந்திரனுக்கு நன்றி சொல்லி விட்டுக் காரில் ஏறிக் கொண்டாள்..

மழை கொட்டிக் கொண்டிருந்த சாலையில் கார் விரைந்தது..

"எப்படி அவங்க உடனடியா வந்தாங்க..?"

"எவங்க..?"

"அந்த மெக்கானிக்ஸ்தான்.."

"பக்கத்திலேதான் அவங்களோட மெக்கானிக் ஷாப் இருக்கு.. ஸோ.. உடனடியா வந்திட்டாங்க.. பொதுவா எல்லா ஏரியாவிலேயும் இருக்கிற மெக்கானிக் ஷாப்பைப் பத்தி நாம தெரிந்து வைத்துக்கனும்.. எங்கே கார் மக்கர் பண்ணினாலும் அந்த ஏரியா மெக்கானிக்ஸீக்கு போன் பண்ணி இம்மீடியட்டா காரை சரி பண்ணி விடலாமே.."

"பெண்டாஸிடிக்.."

"இதை உங்க பிரண்ட் காதிலே போட்டு வையுங்க.."

"நீங்க பெண்டாஸ்டிக்குன்னு சொன்னவளே அவள்தான்.."

https://t.me/tamilpdfebooks

"அன்றைக்குப் பார்த்தா சென்னையிலே இருந்தீங்க.. இன்றைக்கு என்னடான்னா பெங்களூரில் இருக்கீங்க.. எதுதான் உங்க ஊர்..?"

"எதுவும் என் ஊரில்லை.. அட் தி ஸேம் டைம்.. எல்லா ஊரும் என் ஊர்தான்.."

இப்படிச் சொன்னவளை விசித்திரமாக திரும்பிப் பார்த்தான் நரேந்திரன்.. ராதா புருவங்களை உயர்த்தினாள்..

"பெயரில்லாதவங்கங்கிற பெயர் இருக்கிறவங்களுக்கு.. ஊரில்லாத ஊரா..?"

ராதா வாய்விட்டுச் சிரித்தாள்.. சிந்தனையை உள்ளடக்கிய அவளின் சிரிப்பில் ஒட்டாத தன்மை இருந்தது.. அது ஊர்மிளாவுக்கும் அவனுக்கும் இடையில் நடந்து கொண்டிருக்கும் போராட்டதினால் இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டான் நரேந்திரன்..

'இவளுக்கு ஊர்மிளாவின்மீது அதிகப்படியான வாஞ்சை இருக்கிறது..'

"சென்னையிலேயும்.. பெங்களூரிலேயும்.. ஏன் இந்தியாவின் முக்கியமான சிட்டிகளில் எல்லாம் எங்க கம்பெனிஸின் பிரான்ச் இருக்கிறது.. ஸோ.. நான் டெவுடேசன் பேசிக்கில் எங்கே வேண்டும்னாலும் வொர்க் பண்ணலாம்.."

"ஈஸிட்..? உங்க கம்பெனியின் ஹெட் ஆபிஸ் எங்கே இருக்கு..?"

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் காரை நிறுத்தியபடி கேட்டான்.. ராதா சொன்ன முகவரியில் இருந்த வீட்டின் முன்னால் அவனுடைய கார் நின்றிருந்தது.. கார் கதவைத் திறந்து இறங்கப் போன ராதா ஓர் நொடி தாமதித்து அவன் முகம் பார்த்தாள்.. அவள் முகத்தில் தெரிந்த ஏதோ ஒன்றில் நரேந்திரனின் புருவங்கள் முடிச்சிட்டன.. இது போன்ற மர்மப் பார்வையை சித்ரலேகாவிடம் அவன் பார்த்திருக்கிறான்.. ஊர்மிளாவைப் பற்றிப் பேசும் போதெல்லாம் அந்தப் பார்வை சித்ரலேகாவிடம் வந்து விடும்..

"நியூயார்க்கில்..."

ராதா இறங்கிக் கை அசைத்து விட்டு வீட்டுக்குள் போய் விட்டாள்.. இதைச் சொல்லவா இவ்வளவு பீடிகை என்று தோளைக் குலுக்கியபடி காரைக் கிளப்பப் போனான் நரேந்திரன்..

"யார் சார் நீங்க..? என்ன வேணும்..?"

அந்த வீட்டின் கேட்டைத் திறக்கப் போன மனிதர் கேட்டார்.. அவர் கையில் குடையும் பால் கவரும் இருந்தன..

"இந்த வீட்டில் இருக்கிற அனாமிகாவை டிராப் பண்ண வந்தேன்.. நான் அவங்களோட பிரண்டின் ஹஸ்பெண்ட்.." என்றான் நரேந்திரன்..

"அனாமிகாவா..? அப்படி இங்கே யாருமில்லையே.." சந்தேகத்துடன் அவனை மேலும் கீழும் பார்த்து வைத்தார் அவர்..

https://t.me/tamilpdfebooks

'இதென்னடா வம்பாப் போச்சு..'

நரேந்திரன் நினைத்துக் கொண்டிருக்கும் போதே வீட்டுக்குள் இருந்து ராதா வெளிப்பட்டாள்.. வேகமாக காருக்கு அருகில் வந்தாள்..

"நீங்க இன்னும் கிளம்பலையா..?" என்று கேட்டாள்..

"இவளையா அனாமிகான்னு சொன்னீங்க..?"

அந்த மனிதர் வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்த போதே ராதா கை அசைத்து விட... வேறு வழியில்லாமல் காரைக் கிளப்பினான் நரேந்திரன்.. வழியெல்லாம் அவனுக்கு ஒரே நினைவுதான்..

'ஏன் அந்த மனிதர் அப்படிச் சொன்னார்..?'

99

மர்மத்திலே மர்மம் வைத்து..
மர்மமாக எனைப் பிரிந்த..
அழகான ராட்சசி நீ....

பெங்களூரின் பூங்காக்களுக்கே உரிய அத்தனை அழகையும் தன்னகத்தே கொண்டிருந்த அந்த அழகான பூங்காவின் மலர்செடியோரமிருந்த சாய்வு பெஞ்சில் அமர்ந்து காத்துக் கொண்டிருந்தாள் அர்ச்சனா.. முகத்தை

https://t.me/tamilpdfebooks

கைகளால் பொத்திய வண்ணம் தன் துக்கத்தை அடக்க முயன்று கொண்டிருந்தவளின் முன்னால் வந்து நின்றான் நரேந்திரன்..

உள்ளுணர்வின் உந்துதலில் கை விலக்கி நிமிர்ந்து பார்த்தவள்..

"அண்ணா.." என்று எழுந்து நின்றாள்..

"உட்கார்.." பக்கத்தில் உட்கார்ந்தான் நரேந்திரன்..

"ஐ ஆம் ஸாரி.. நீங்க அத்தனை சொல்லியும் உங்களைக் கால் பண்ணி வரவைச்சிட்டேன்.."

"இட்ஸ் ஆல்ரைட்.. என்ன விசயம்ங்கிறதைச் சொல்லு.."

"எனக்கு வேறு வழியில்லைண்ணா.. நீங்க மட்டும் தான் என்னைக் காப்பாத்த முடியும்.." அர்ச்சனா கேவினாள்..

நரேந்திரனுக்கு இரக்கமாக இருந்தது.. அகல்யாவைப் போன்ற ஒருத்தியின் மகளாக அவள் பிறந்து விட்டதால் அவளுக்கு உதவி செய்யக் கூட அவன் யோசனை செய்கிறான்..

நரேந்திரனின் மனதில் தம்பி, தங்கையின் மீதான பாசம் இருக்கிறது என்பதை மட்டும் அகல்யா அறிந்து விட்டால்.. அதையே பகடைக்காயாக பயன்படுத்தி மீண்டும் புதை சேற்றில் அவனை இழுத்து விட்டு விடுவாள்..

"லுக் அர்ச்சனா.. உனக்கும் சரி.. அருணுக்கும் சரி.. செய்ய வேண்டிய எல்லாத்தையும் அளவுக்கு அதிகமாகவே

https://t.me/tamilpdfebooks

செய்து உங்களை ஷேஃப் பண்ணிட்டுத்தான் நான் விலகிப் போனேன்.. எனக்கும் குடும்பம் இருக்கிறது.. இத்தனை நாட்களாக நான் அதை தொலைத்து நின்றது போதும்.. இனியும் அது நடக்கக் கூடாது.. அதற்கு உன் அம்மாவிடமிருந்து நான் தள்ளி நிற்பதுதான் சரியான வழியாக இருக்கும்.. நீ உன்னுடைய பிரச்னைகளை அருண்குமாரிடம் சொல்லி சால்வ் பண்ணிக்கப் பழகிக்கனும்..” நரேந்திரனின் கண்டிப்பில்..

“அண்ணா..” என்று விக்கித்துப் போனாள் அர்ச்சனா..

“யாரோ போல பேசுகிறீங்களேண்ணா..”

“யாரோ போல என் வொய்ப் என்னை விட்டுப் பிரிந்து போனாம்மா.. அதுக்கு யார் காரணம்..? நீ அதையும் நினைத்துப் பார்க்கனும்.. உன் அண்ணன் ஒன்றும் கொடுமைக்காரனில்லை..”

“எனக்குத் தெரியாதா அண்ணா..? நீங்க சொல்லனுமா..? இப்ப வந்திருக்கிற பிராப்ளத்தை சால்வ் பண்ண அருண் அண்ணாவால் முடியாது அண்ணா..”

“ஏன்..?”

“அம்மா பாய்சன் சாப்பிட்டுருவேன்னு பயமுறுத்தறாங்க..”

“ஓ..”

சாப்பிட்டால் சாப்பிடட்டுமே என்ற அலட்சியத்துடன் விட்டேற்றியாகச் சொன்னான் நரேந்திரன்.. அர்ச்சனாவின்

https://t.me/tamilpdfebooks

மனம் புண்ணானது.. அவனைப்போல அவளால்.. நினைக்க முடியாது.. எப்படிப்பட்ட குணம் படைத்தவளாக இருந்தாலும் அகல்யா அர்ச்சனாவைப் பெற்ற தாய்..!

"என்ன பிராப்ளம்ன்னு கேட்க மாட்டிங்களா..?" ஏக்கத்துடன் கேட்டாள் அர்ச்சனா..

அவனது சிறகுக்கடியில் புகுந்து கொள்ள முயற்சிக்கும் சேய் பறவையின் ஏக்கமாக அது இருந்ததில் நரேந்திரன் மனம் நெகிழ்ந்தான்.. அவளது தலையை கோதிக் கொடுத்தான்..

"நான் வந்தவுடனே கேட்டுட்டேன்.. நீதான் இன்னும் சொல்லலை.." இதமாக சொன்னான்..

"அம்மா எனக்கு மாப்பிள்ளை பார்க்கறாங்க.."

"நல்ல விசயம்தானே.. உனக்கும் கல்யாணவயது வந்திருச்சில்ல.."

"எது நல்ல விசயம் அண்ணா..? அந்த ராஸ்கலைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்கிறாங்களே.. அதுவா நல்ல விசயம்..? அவனைப் பத்தி உங்களுக்கே தெரியுமே அண்ணா.. நல்லவன்போல் வேசம் போடுவான்.. சரியான பொறுக்கி.."

"யாரைச் சொல்கிற..?"

"அவன்தான் கோபால்.."

நரேந்திரன் பல்லைக் கடித்தான்.. அர்ச்சனா சொன்ன அந்த அயோக்கியன் பழி பாவத்திற்கு அஞ்சாதவன் ஆனால் பணக்காரன்.. அகல்யாவுக்கு அது போதுமே..

https://t.me/tamilpdfebooks

“அம்மாவிடம் போராடினா பணக்காரன்னா நாலு நல்ல பழக்கமும் இருக்கும்.. நாலு கெட்ட பழக்கமும் இருக்கும்ன்னு சொல்கிறாங்க.. என் பேச்சை கேர் பண்ணிக்க மாட்டேங்கிறாங்க..”

“அருணிடம் சொன்னயா..?”

“அவன் சண்டை போட்டான்.. உடனே பாய்சன் பாட்டிலைத் தூக்கிக் கையில் வைத்துக்கிட்டாங்க.. என்னை ஏன்னு கேள்வி கேட்க நரேந்திரன் ஒருத்தனுக்குத் தான் உரிமையும், தகுதியும் இருக்கு.. உனக்கு என்னடா இருக்கு..? அப்படின்னு கேட்கிறாங்கண்ணே...”

நரேந்திரனுக்கு அகல்யாவின் திட்டம் என்னவென்று விளங்கிவிட்டது.. கடைந்தெடுத்த அயோக்கியனுக்கு அர்ச்சனாவைத் திருமணம் செய்து கொடுக்க முயன்றால்.. அவள் மறுப்பாள்.. ஏனென்று கேட்க நரேந்திரன் ஒருவனால்தான் முடியும் என்று வந்தால் நரேந்திரனிடம் உதவி கேட்டு ஓடுவாள்.. நரேந்திரனும் தங்கையின் மேல் உள்ள பாசத்தில் தலையிடுவான்.. அந்தச் சாக்கில்..

“உன் தங்கையாச்சு.. நீயாச்சு.. இவ நீ வளர்த்த பொண்ணு.. எங்கே கல்யாணம் பண்ணிக் கொடுக்கனும்ன்னு முடிவெடுக்கிற உரிமை உனக்குத்தான் இருக்குப்பா.. இந்த வீட்டுக்கு தலைமகன் நீ.. இந்தக் குடும்பத்துக்கு குடும்பத் தலைவன் நீ.. உன்னை எதிர்த்து இங்கே யாரும் வாயைத் திறக்க மாட்டோம்..” என்று உள்ளே இழுத்துப் போட்டுக் கொள்ளும் யுக்தி இது..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் அலுப்பாக உணர்ந்தான்.. பிறந்தது முதல் அருண்குமாரோடும், அர்ச்சனாவோடும் வளர்ந்திருந்தால் அவன் மனதில் உறுத்தலும், தவிர்க்க முடியாத பாசமும் ஏற்பட்டிருக்குமோ என்னவோ..

அப்படியில்லாமல்.. அர்ச்சனாவை பதினாறு வயதுப் பெண்ணாகவும், அருண்குமாரை இருபது வயது இளைஞனாகவும் சந்திக்க நேர்ந்ததில் நரேந்திரனின் மனதில் பெரிதான ஒட்டுதல் எதுவுமில்லை..

அவர்கள் இருவரும்.. அவனுடைய தந்தைக்குப் பிறந்தவர்கள் என்பதினால்.. சில பொறுப்புக்களை எடுத்துக் கொண்டான்.. அந்தக் கொடுமைக்குத்தான் அகல்யா செய்யக்கூடாத வேலைகள் அனைத்தையும் செய்து வைத்து விட்டாளே..

"நான் என்ன செய்யனும்னு எதிர்பார்க்கறே அர்ச்சனா..?" எரிச்சலுடன் கேட்டான்..

"அண்ணா.." அர்ச்சனா திகைத்துப் போனாள்..

செய்தியைக் கேள்விப்பட்டதும் அகல்யாவை என்னவென்று கேட்கக் கிளம்பாமல் அவன் என்ன செய்ய வேண்டும் என்று அவள் எதிர்பார்க்கிறாள் என்று கேட்டு வைக்கும் இந்த நரேந்திரன் புதியவனாக அவள் கண்களுக்குத் தெரிந்தான்..

"உன் வாழ்க்கையில நீ போராடக் கற்றுக்கனும் அர்ச்சனா.. உனக்குப் பிடிக்காத கல்யாணம்ன்னா துணிஞ்சு எதிர்த்து நில்லு.."

https://t.me/tamilpdfebooks

"அம்மா பாய்சன் பாட்டிலைத் தூக்கறாங்களே.."

"நீயும் ஒன்னைத் தூக்கு.. வா.. நாம ரெண்டு பேரும் சேர்ந்து செத்துப் போகலாம்ன்னு சொல்லு.. அருண் வந்தா அவனையும் துணைக்குக் கூப்பிட்டுக்கிட்டு.. ரெண்டு பேர்.. மூன்று பேரா மாறிருங்க.."

"அண்ணா..."

"உங்க அம்மாவாவது... சாகிறதாவது.. அதை மத்தவங்கதான் செய்வாங்க.. உங்க அம்மா அந்த நிலைக்கு அவங்களைத் துரத்தறவங்க.. அவங்களுக்கு வாழ்க்கை மேலே பற்றுதல் ஜாஸ்தி.. அவ்வளவு சீக்கிரமா சாக மாட்டாங்க.."

அர்ச்சனாவிற்கும் அது தெரியும்தான் என்றாலும், நிதரிசனமான அந்த உண்மையை முகத்தில் அறைந்ததைப் போல நரேந்திரன் சொன்னதில் அவள் மனதுக்கு துயரமாக இருந்தது.. அதை உணர்ந்தவனைப் போல அவள் விழிகளுக்குள் பார்த்தபடி வெகு நிதானமாக பேசினான் நரேந்திரன்..

"உன் அம்மாவோட குணத்தைப் பற்றித் தெரிந்திருந்தும் நீ இந்த அளவுக்கு அவங்களை நேசிக்கறயே.. என் அம்மா அப்படியில்லை.. அவங்க கருணையே வடிவானவங்க.. மத்தவங்களுக்கு கனவிலேயும் தீங்கு நினைக்காதவங்க.. அந்த அம்மாவோட மகனான எனக்கு என் அம்மாவின் மேலே எந்த அளவுக்கு பாசமிருக்கும்..?"

"அண்ணா.."

https://t.me/tamilpdfebooks

அதுவரை நளினியைப் பற்றி நினைத்தறியாத அர்ச்சனா தடுமாறிப் போனாள்.. நரேந்திரன் தொடர்ந்தான்..

"உன் அம்மா வேறு.. என் அம்மா வேறு.. இதை முதலில் உன் மனதில் பதிய வைத்துக் கொள் அர்ச்சனா.. என் அப்பா.. என் அம்மா இறந்த மறுமாதமே உன் அம்மாவை மேரேஜ் பண்ணிக்கிட்டார்.. அந்த இன்விடேசனை மகளைச் சாகக் கொடுத்திருந்த வயதான மாமனாருக்கு குரூரமா அனுப்பி வைச்சார்.. இதையும் நீ தெரிந்துக்க.."

"அண்ணா.."

"நம்ம அப்பா அனாதை ஆசிரமத்திலே வளர்ந்தவர்.. அவருக்கு கிடைத்திருந்த ஜி.எம். வேலை... என் அம்மாவின் கணவர் என்ற ஒன்றிற்காக மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தது.. அந்தச் சம்பளத்திலதான் அவர்.. உன் அம்மாவுக்கும்.. அவங்க வயிற்றில் பிறந்த உங்களுக்கும் செலவு செய்தார்.. இதையும் உன் மனதில் பதிய வை.."

"அண்ணா..."

"உன் அம்மாவோட கோடிஸ்வர வாழ்க்கைக்காக அப்பா எத்தனை கோடி கடன் பட்டிருந்தார்ன்னு உனக்குத் தெரியுமா..? அப்படிக் கடன் வாங்கி குடும்பம் நடத்திய ஹஸ்பெண்டை ஹாஸ்பிடலில் சேர்த்து விட்டு.. அவர் எனக்குத் தகப்பன்னு என் அட்ரஸை ஹாஸ்பிடலில் கொடுத்து என்பக்கம் கைகாட்டி விட்டு உன் அம்மா

https://t.me/tamilpdfebooks

கையைக் கழுவிட்டுப் போயிட்டாங்க.. இதை மறந்திருந்தா நினைவு படுத்திக்க..”

“அண்ணா..”

“எப்ப என் அம்மாவோட இடத்திலே இன்னொரு லேடியை அவர் கொண்டு வந்தாரோ அப்போதே அவருக்கும்.. எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லைங் கிறதையும் நீ மனதில் வைத்துக்க...”

“அண்ணா..”

“என்னிடமிருந்த அத்தனை சொத்தும் பணமும்.. என் அம்மாவின் மூலமா அவங்க மகனான எனக்கு வந்தவை.. அந்தப் பணத்திலே என் அம்மாவின் ‘சககிழத்தி’ வாங்கின கடன்களை நான் அடைத்தேன்.. அந்த ‘சககிழத்தி’யின் பிள்ளைகளை படிக்க வைத்தேன்.. அவங்க வாழ வழிசெய்தேன்னா.. நான் எந்த அளவுக்கு துர்பாக்கிய சாலிங்கிறதையும் நீ நினைத்துப் பாரு..”

“போதும் அண்ணா..”

அர்ச்சனா அழுது விட்டாள்.. நரேந்திரன் போதாது என்ற பாவனையில் தலையை அசைத்தான்..

“இல்லை.. இன்னும் நான் பேச வேண்டியிருக்கு.. நீயும் கொஞ்சம் நினைத்துப் பார்க்கனும் அர்ச்சனா.. நீ சின்னக்குழந்தையில்லை.. எப்படி உங்களைப் பத்தி நான் நினைத்துப் பார்க்கிறேனோ.. அப்படி என்னைப் பத்தியும் நீங்க நினைத்துப் பார்க்கனும்..”

https://t.me/tamilpdfebooks

"எதை அண்ணா..?"

"உன் பெரிய அண்ணனோட அம்மாவைப் பத்தி நினைச்சுப் பார்க்கனும்.. அவங்களோட வயதான பேரண்ட்ஸைப் பத்தி நினைத்துப் பார்க்கனும்.. என் தாத்தாவுக்கும் பாட்டிக்கும் என்னை விட்டால் யாருமில்லை.. உங்களுக்கு அப்படியில்லை.. உனக்கு அருண்.. அருணுக்கு நீ.. உங்க ரெண்டு பேருக்கும் உங்க அம்மான்னு ஒருத்தருக்கொருத்தர் ஆதரவா இருக்கீங்க.. என் தாத்தாவும் பாட்டியும்.. என் அம்மா இடத்திலே வாழ வந்த உன்னோட அம்மாவையும்.. உங்களையும் ஏற்றுக்க மாட்டாங்க.. என் அம்மாவின் ஆத்மாவும் அதை ஏத்துக்காது.. புரிகிறதா..?"

ஆழ்ந்த குரலில் கேட்டான் நரேந்திரன்.. புரிகிறது என்ற பாவனையில் தலையை அசைத்தாள் அர்ச்சனா.. அவளுக்கு புரியத்தான் செய்தது.. அதுநாள்வரை நரேந்திரனின் பக்கத்திலிருக்கும் உறவுகளைப் பற்றி நினைத்து அறியாதவள் முதல் முறையாக அதை நினைத்துப் பார்த்தாள்..

'எவ்வளவு சுயநலமாக இருந்திருக்கிறேன்..' அவளுக்கே என்னவோ போல ஆகிவிட்டது..

மனிதரின் மறுபக்கம் என்பது இதுதானோ..!

"உங்களுக்கு தேவைக்கு அதிகமாகவே வாழ வசதி செய்து கொடுத்திருக்கிறேன் அர்ச்சனா.. அப்பா கேட்டுக்கிட்டதை விட அதிகமாவே செய்திருக்கிறேன்..

https://t.me/tamilpdfebooks

அருண் பெயரிலே கம்பெனியை எழுதிக் கொடுப்பேன்னு அவனே நினைத்துப் பார்த்திருக்க மாட்டான்.. நான் அதைச் செய்தேன்.. அந்த வீட்டையும் அவன் பெயருக்கே மாற்றிக் கொடுத்திருக்கேன்.. உன் பெயரில் சென்னையில் வீடு.. வைரநகைகள்.. பேங்கில் பேலன்ஸின்னு குறைவில்லாம செய்து வைத்திருக்கிறேன்.. இத்தனையும் செய்து கொடுத்தவனை விலக விடாம திரும்பவும் உங்க குடும்பத்துக்குள்ளே இழுக்க நினைப்பது நியாயமில்லை.."

தெளிவாக சொல்லி விட்டான் நரேந்திரன்.. அர்ச்சனாவின் கண்கள் கலங்கின.. அவள் கண்முன்னால் இருந்த மாயை விலகியதைப் போல அவள் உணர்ந்தாள்..

"அப்படின்னா.. நீங்க வேற குடும்பம்.. நாங்க வேற குடும்பமாண்ணா..?" தாள மாட்டாமல் கேட்டுவிட்டாள்..

"நிச்சயமா அப்படித்தான்ம்மா.." மென்மையாக எடுத்துச் சொன்னான் நரேந்திரன்..

"உன் அம்மா வேறு.. என் அம்மா வேறுங்கிறப்ப.. நம்ம இரண்டு குடும்பமும் வேறுவேறுதான்.. நம்மை இணைக்கும் பாலமா அப்பா என்றைக்குமே இருந்ததில்லை.. அவரால் இருக்கவும் முடியாது.. அவர் குற்றவாளி.. என் அம்மாவின் மனதை நோகடித்து சாகடித்தவர்.. அவருக்கு மன்னிப்பே கிடையாது.. என் முகத்தில் விழிக்கும் தைரியமும் அப்பாவுக்கு கிடையாது.. சாகப் போகிற சமயத்திலே அவர் என்னைப் பார்க்க விரும்பினப்ப.. மனிதாபிமான அடிப்படையில நான் போய் பார்த்தேன்.. அவர் பக்க நியாயங்களை அவர் சொன்னார்..

https://t.me/tamilpdfebooks

அதை நியாயப் படுத்தலை.. உனக்கும் அருணுக்கும் உதவி செய்யச் சொன்னார்.. நன்றாகக் கவனி.. உங்களை என்னுடன் சேர்த்துக்கச் சொல்லலை.. அதற்கான உரிமை அவருக்கும், உங்களுக்கும் இல்லைங்கிறதை அவர் புரிஞ்சு வைச்சிருந்தார்.. உதவிதான் செய்யச் சொன்னார்.. அந்த உதவியையும் உங்களுக்குத்தான் செய்யச் சொன்னார்.. உங்க அம்மாவுக்கு செய்யச் சொல்லலை.. நான் உதவி மட்டுமா செய்தேன்..?"

நரேந்திரனின் கேள்விக்கு இல்லையென்ற விதமாக தலையை அசைத்து மறுத்தாள் அர்ச்சனா..

அவர்களுடைய குடும்பத்திற்கு ராஜயோக வாழ்வையல்லவா நரேந்திரன் தந்திருந்தான்..?

"அந்த வாழ்க்கையும், வசதியும் நிலைக்க என்ன செய்யனுமோ அதை நான் செய்துட்டேன்.. இனி உங்கள் வழி வேறு.. என்வழி வேறு.. இரண்டு வழியும் எப்போதும் ஒன்றாக முடியாது..."

இப்படிச் சொன்னவன் எழுந்து போகாமல் செல்போனை எடுத்து அருண்குமாரை வரச் சொன்னான்.. அவன் வருகிறவரைக்கும் பொதுவாக அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.. அர்ச்சனாவின் மனதில் யார் மீதாவது எண்ணம் இருக்கிறதா என்று நரேந்திரன் கேட்டான்.. அவள் முகத்தில் துயரம் கவிந்தது...

"அதைப் பத்திப் பேசி ஒன்னும் ஆகப் போறதில்லை அண்ணா.." என்றாள் துக்கத்துடன்..

https://t.me/tamilpdfebooks

"ஏன்ம்மா..?"

"முன்னே பின்னே தெரியாதவங்க என் காதலை மறுத்தாக் கூடத் தாங்கிக்கலாம்.. சொந்த மாமன் மகனே மறுத்தா எப்படித் தாங்கிக்கிறது அண்ணா..?"

"யார்..? ராம்குமாரையா சொல்கிற..?"

ஆச்சரியத்துடன் கேட்டான் நரேந்திரன்.. ஆமென்று தலையை அசைத்தாள் அர்ச்சனா.. அவள் கண்கள் குளமாகின..

"அவன் எதுக்காக உன்னை மறுக்கிறான்..?"

"நான் என் அம்மா வயிற்றில் பிறந்துட்டேனாம்..?"

அர்ச்சனாவின் கண்களிலிருந்து பொலபொல வென்று கண்ணீர் வந்தது..

100

உன் பார்வையிலே
எனை கைது செய்த
அழகான ராட்சசி நீ....

பெற்றவர்கள் பட்ட கடன் மட்டுமல்ல.. பாவமும் பிள்ளைகளைத்தான் சேரும் என்பதற்கு ஒரு உதாரணமாக அர்ச்சனா வீற்றிருந்தாள்.. சோகச்சித்திரம் போல தெரிந்த

https://t.me/tamilpdfebooks

தங்கையின் மனம் எந்த அளவுக்கு வேதனைப் படுகிறது என்பதை நரேந்திரனால் புரிந்து கொள்ள முடிந்தது..

அகல்யாவின் வயிற்றில் மகளாய் பிறந்ததைத் தவிர அவள் வேறு என்ன தவறைச் செய்தாள்..?

'பாவம்..' அவன் மனதில் இரக்கம் சுரந்தது..

அருண்குமார் பரபரப்பாக வந்து விட்டான்.. வந்தவனை பேசு.. பேசு என்று பேசி லெப்ட் அண்ட் ரைட் வாங்கி விட்டான் நரேந்திரன்..

"வீட்டுக்குள்ளே அராஜகம் பண்ற லேடியை அடக்கத் தெரியலை.. நீயெல்லாம் கம்பெனியில வருகிற லேபர் பிரச்னை முதற்கொண்டு கஸ்டமர் பிரச்னை வரைக்கும் எப்படிடா தீர்த்து வைப்ப..?"

"என்னை என்ன அண்ணா செய்யச் சொல்கிறீங்க.. எதுக்கெடுத்தாலும் பாய்சன் சாப்பிடறேன்னு பய முறுத்தறவங்களை என்னதான் செய்கிறது..?"

"சாப்பிடுன்னு சொல்ல வேண்டியதுதானேடா..?"

நரேந்திரனின் கோபத்தில் அருண்குமார் ஆடி விட்டான்..

"அண்ணா.."

"அவங்க இருந்து என்ன செய்யப் போறாங்க..? உனக்கோ அர்ச்சனாவுக்கோ நல்லது பண்ணிரப் போறாங்களா..? சுயநலம் பிடிச்சவங்க.. எந்தத் தாயாவது கடைஞ்செடுத்த ஸ்கௌண்ட்ரலை தன் மகளுக்கு

https://t.me/tamilpdfebooks

மாப்பிள்ளையா தோர்ந்தெடுப்பாங்களாடா..? இப்படிப் பட்ட தாய் இருக்கிறதுக்கு சாகிறதே மேல்.."

நரேந்திரன் சொன்னதில் இருந்த உண்மையில் அருண்குமார் பேசாமல் இருந்தான்..

"அர்ச்சனாவுக்கு கூடப் பிறந்த அண்ணன் நீதான்.. மறந்துராதே.. அவளுக்காக நீ சொத்து, நகை, ரொக்கப் பணம்ன்னு எதையும் செய்ய வேணாம்.. எல்லாத்தையும் நான் செய்து வைத்துட்டுத்தான் போயிருக்கிறேன்.. உன் கடமையாய் அவ மனதுக்குப் பிடித்த மாப்பிள்ளைக்கு கல்யாணம் பண்ணி வைக்கக்கூட உணக்கு முடியாதா..?"

நரேந்திரனின் சாட்டையடி போன்ற கேள்வியில் அருண்குமாரின் தன்மானம் பாதிக்கப்பட்டது.. அவன் முகம் கன்றிச் சிவந்தது..

"எல்லாத்துக்கும் நான் வரனும்னா உன் குடும்பத்திலே மூத்த மகன்ங்கிற பெயர் உனக்கு எதுக்கு..? இதுதான் லாஸ்ட் வார்ணிங் அருண்.. இனி உன் அம்மா ஆடினாங்கங்கிற கம்ப்ளெயிண்ட் எனக்கு வரக்கூடாது.. அவங்களை அடக்கி வைக்கத் தெரிஞ்சா கம்பெனியை நீ நடத்து.. முடியலைன்னா.. ஒரு கம்பெனியை நிர்வகிக்கிற திறமை உனக்கில்லைன்னுதான் அர்த்தம்.. அதை ஒப்புக்கிட்டு கம்பெனியை ரிடர்ன் பண்ணிரு.."

அருணின் செக்கச் சிவந்த முகத்தைப் பார்க்க அர்ச்சனாவுக்கு பயமாக இருந்தது.. நரேந்திரன் இந்த அளவுக்கு கோபப்படுவான் என்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை..

https://t.me/tamilpdfebooks

"உன் கூடப் பிறந்த தங்கையோட வாழ்க்கையிலே உங்கம்மா விளையாடிக்கிட்டு இருக்காங்க... நீ எனக்கென்னன்னு பார்த்துக்கிட்டு இருக்க.."

"இல்லேண்ணா.. அம்மாவிடம் சண்டை போட்டேன்.. நீங்க வேண்டும்ன்னா அர்ச்சனாவிடம் கேட்டுப் பாருங்க.."

"ஆமாண்டா.. எனக்கு அதுதான் வேலை.. வேற வேலையே இல்லை பாரு.."

நரேந்திரனின் கேள்வியில் மீண்டும் அருண்குமாரின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.. அவன் கண்கள் சிவந்தன.. ரௌத்ரத்துடன்..

"நான் பார்த்துக்கறேன் அண்ணா.. அந்த நாய்க்கு அர்ச்சனாவை மேரேஜ் பண்ணித்தர நான் விடமாட்டேன்.." என்று வாக்குக் கொடுத்தான்..

"இஃது.." தம்பியை மெச்சினான் நரேந்திரன்..

"இதைத்தாண்டா நான் எதிர்பார்த்தேன்.. கடுஞ்சொல்லை பேச வேண்டி வந்திருச்சுன்னாலும்.. என் மனதிலிருந்ததுதான் அதைப் பேசினேன்.. கொஞ்சமாவது நிமிர்ந்து நில்லு அருண்.."

"கொஞ்சமென்ன அண்ணா.. முழுதாவே நிமிர்ந்து நிற்கிறேன்.."

"தட்ஸ் குட்.. இந்தக் கல்யாணத்தை நிறுத்தினால் மட்டும் போதாது.. அர்ச்சனாவைப் பெண் கேட்டு

https://t.me/tamilpdfebooks

வருகிற ராம்குமாருக்கு அர்ச்சனாவை மேரேஜ் பண்ணி வைக்கனும்..” நரேந்திரன் சொன்னதில்..

“அண்ணா..?” என்று நிமர்ந்தாள் அர்ச்சனா..

“ராம்குமார் உன்னைப் பெண் கேட்டு வருவான்.. அர்ச்சனா.. அதை நான் பார்த்துக்கறேன்.. உங்க வீட்டுக் குள்ளே உங்க அம்மா பண்ணுகிற களேபரத்தை அருண்தான் பார்த்துக்கனும்..” என்றான் நரேந்திரன..

நினைத்தது நடக்கப் போகிறது என்பதில் உற்சாகமாகி விட்டாள் அர்ச்சனா.. அருண்குமாரும் சமாதானமாகி விட்டான்.. நரேந்திரன் இதைப் போல திட்டாவிட்டால் அவனும் அகல்யாவை அடக்கும் வழி தெரியாமல் திணறிக் கொண்டுதானே இருப்பான்..?

‘அண்ணன் கொடுத்தது ஷாக் ட்ரீட்மெண்ட்..’

நரேந்திரனைப் பார்த்த அந்த அண்ணன், தங்கை இருவரின் மனதிலும் நன்றியுணர்வு எழுந்தது.. இவன் இல்லாவிட்டால் என்னவாகியிருப்போம் என்ற பதட்டம் உண்டானது..

“ஏதாவது டிரிங்ஸ் சாப்பிடலாமா..?” நரேந்திரன் கேட்டான்..

அவர்கள் பக்கத்திலிருந்த பழக்கடைக்குப் போனார்கள்.. மூன்று ஆப்பிள் ஜீஸ்களைச் சொல்லி விட்டு உட்கார்ந்த நரேந்திரன்.. தொலைவில் போன பெண்ணைப் பார்த்து விட்டு கையசைத்த அர்ச்சனாவைப் பார்த்து விட்டு..

https://t.me/tamilpdfebooks

"அது யார்..? உன்னோட பிரண்டா..?" என்று கேட்டான்..

"ஊஹீம்.. அண்ணியோட பிரண்ட் போலே தெரிஞ்சது.. அதான் கூப்பிட்டேன்.." என்றாள் அர்ச்சனா..

"அண்ணியோட பிரண்டா..?"

நரேந்திரன் திரும்பிப் பார்த்தான்.. அதற்கள் தொலைவில் போன பெண் காரில் ஏறிப் போய் விட்டாள்..

"அன்றைக்கு வந்திருந்தாங்களே.. அவங்களையா பார்த்த..?"

அருண் ஆர்வமாக கேட்டான்.. அவன் பார்வை எங்கே அவள் என்று தேடித் துழாவியது..

"அலையறான் பாருங்கண்ணா.." அர்ச்சனா வாய் மூடிச் சிரித்தாள்..

"ஏய்ய்.." நரேந்திரன் உடனிருக்கும் சங்கடத்துடன் தங்கையை அதட்டினான் அருண்குமார்..

"என்ன ஏய்ய்..? அவங்களை இவன் அடிச்சான் பாருங்க சைட்டு.. அவங்களே தாங்க முடியாம அவங்களுக்கு மேரேஜ் ஆகியிருச்சுன்னு சொன்னாங்கன்னா பார்த்துக்கங்களேன்.." அர்ச்சனா மீண்டும் சிரித்தாள்..

"உன்னை.." அருண்குமார் அர்ச்சனாவின் காதைப் பிடித்து திருகினான்..

அந்தக் கலாட்டாவில் கலந்து கொள்ளாமல் சிந்தனையுடனிருந்த நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

"எந்த பிரண்டைப் பத்திச் சொல்கிறேம்மா..?" என்று கேட்டான்..

"அண்ணியோட பிரண்டுன்னு இவங்க ஒருத்தங்க தான் வந்து போனாங்க.. அதுக்குள்ளேதான் அண்ணி வீட்டை விட்டுப் போயிட்டாங்களே.. அப்புறம் எத்தனை பிரண்டைப் பத்தி நாங்க பேசுவோமாம்..?" என்றாள் அர்ச்சனா..

"அந்த பிரண்ட் எப்ப வந்தாங்க..?"

"நீங்க பாரின் போயிருந்தப்ப வந்தாங்க.. செம ஜோவியல் தெரியுமா.. என்கூட பிரண்ட்லியா பேசிப் பழகினாங்க.. நான்கூட போனில் சொன்னேனே அண்ணா.. அண்ணி அவங்களோட பிரண்டுடன் பேசிக்கிட்டு இருந்தாங்கன்னு.. அந்த பிரண்டுதான் இவங்க.."

இலகுவாக சொல்லிவிட்டு.. ஆப்பிள் ஜீஸ் தம்ளர்களில் ஒன்றை எடுத்து உறிஞ்ச ஆரம்பித்தாள் அர்ச்சனா..

நரேந்திரனின் காதுகளில் உண்மையைத் தேடு என்ற சித்ரலேகாவின் குரல் ஒலித்தது.. அவன் புருவங்கள் முடிச்சிட்டன..

வந்திருந்தது நண்பனென்றால் அருண்குமார் எப்படி அவனை சைட் அடித்திருப்பான்..?

'எங்கேயோ இடிக்குதே..'

நரேந்திரன் இயல்பாக கேட்பதைப் போல அர்ச்சனாவிடம் அந்தக் கேள்வியைக் கேட்டான்..

https://t.me/tamilpdfebooks

“அந்த பிரண்டோட பெயர் என்னன்னு சொன்ன..?”

நான் சொல்லவே இல்லையே அண்ணா என்று அப்பாவி அர்ச்சனா சொல்லவில்லை.. மாறாக..

“ராதாண்ணா.. வெரிஸ்வீட் நேமில்ல..” என்று அவனிடம் அபிப்ராயம் வேறு கேட்டாள்..

‘ராதா.. ராதாகிருஷ்ணன்..’

மறுபடியும் நிதானித்தான் நரேந்திரன்.. இதை வெகு ஜாக்கிரதையாகத்தான் கையாள வேண்டும்.. வந்திருந்தது ராதா என்ற பெண்ணா..? இல்லை ராதா என்று அழைக்கப் பட்ட ராதாகிருஷ்ணன் என்ற ஆணா..?

இதை நேரடியாக அர்ச்சனாவிடம் அவன் கேட்டு விட முடியாது..

“யெஸ்.. ஐ லைக் தட் நேம்.. ஆமாம் அர்ச்சனா.. அந்த பிரண்டோட நேச்சர் எப்படி..?” அக்கறையில்லாதவனைப் போல வரவழைத்துக் கொண்ட அலட்சியத்துடன் அவன் கேட்டான்..

“வெரி கைண்ட் நேச்சர் அண்ணா.. பார்வையிலேயே புத்திசாலிங்கிறதை கண்டு பிடிச்சிடலாம்.. சிம்பிளா டிரெஸ் பண்ணியிருப்பாங்க.. அலட்டிக்கவே மாட்டாங்க.. வெரி இண்டலெக்சுவல் பெர்சனாலிட்டி யுநோ..”

அவனுக்குத் தேவைப்பட்ட தகவலைத் தவிர மற்ற அனைத்து தகவல்களையும் சொன்னாள் அர்ச்சனா..

‘மக்கு..’ மனதுக்குள் திட்டித் தீர்த்தான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

'அந்த புத்திசாலித்தனம் ஏன் உன்னிடம் இல்லை..?'

"பார்க்க எப்படி இருப்பாங்க..? உன் அண்ணியை விட அழகா..?" லேசாக கண்சிமிட்டினான்..

அர்ச்சனாவுக்கு உற்சாகம் வந்து விட்டது.. ஒற்றை விரலை ஆட்டி..

"நீங்களும் அருண் கேஸ்தானா...? இருங்க அண்ணியிடம் சொல்கிறேன்.. அவங்களுக்கு பளபளன்னு அழகான முகம் அண்ணா.. துளிக்கூட மேக்கப் இருக்காது.. எனக்குக் கூட அவங்க மேலே அவ்வளவு பொறாமை.. ஆனாலும் அண்ணா.. அவங்க அண்ணியை விட அழகில்லை.. அண்ணி செம அழகுண்ணா அவங்க பிரண்ட் இண்டெலெக்சுவான அழகு..."

ஓரளவுக்கு வந்திருந்தது பெண் என்று நரேந்திரனுக்குப் புரிந்து போனது.. அவனுக்குள் கோபாக்னி எழுந்தது..

"உனக்கு அவங்களை ரொம்பவும் பிடிக்கும் போல..?" என்று கேட்டான்..

"எனக்கு மட்டுமா..? இந்த அருணுக்கும்தான் ரொம்பப் பிடிக்கும்... ஜொள்ளுன்னா ஜொள்ளு... அப்படியொரு ஜொள்ளை விடுவான்.. வாட் எ கிளாசிக்கல் பியூட்டிம்பான்.. எனக்கு என்னன்னா.. கை.. கழுத்து.. காதுன்னு எங்கேயுமே பொட்டு நகை போட்டுக்க மாட்டாங்க.. ஜீன்ஸ் பேண்டும்.. காட்டன் சர்ட்டும்தான்.. ஆனா அட்ராக்டிவ்வான அழகோடு இருப்பாங்க..

https://t.me/tamilpdfebooks

பெண்கள் தங்களை அழகு படுத்திக்கிட்டுத்தான் அழகாகத் தெரியறாங்கன்னு சொல்கிறதை உடைத்துக் காண்பித்தவங்க அவங்க.. அதனாலே பிடிக்கும்.."

ஆக வந்திருந்தது 'ராதா' என்ற ஊர்மிளாவின் தோழி.. ராதாகிருஷ்ணன் என்ற தோழனல்ல.. அதனால் தான் அந்தக் கேள்வியில் கோபப்பட்டு நரேந்திரனை விட்டுப் பிரிந்து சென்றிருக்கிறாள் ஊர்மிளா..

'எப்பேற்பட்ட விளையாட்டை துளிக்கூட பயமில்லாம விளையாடிப் பார்த்திருக்குதே அந்தம்மா..' நரேந்திரனுக்குள் கொலைவெறி மூண்டது..

"அந்த ராதாவைத்தான் அம்மா நிக் நேம் வைச்சு ராதாகிருஷ்ணன்னு சொல்லுவாங்க.. அண்ணிக்கு கோபம் வந்திரும்.. அருணும் நானும் அம்மாவை கண்டிப்போம்.." தொடர்ந்து சொன்னாள் அர்ச்சனா..

"ம்ம்ம்..."

"நீங்க ஏன் அண்ணா அண்ணியிடம் அப்படிக் கேட்டிங்க..? அம்மாவிடம் கேட்டதற்கு ஹஸ்பெண்ட் அண்ட் வொய்புக்குள்ளே ஆயிரம் இருக்கும்.. அது.. இதுன்னு எதையோ சொல்லி வாயை அடைச்சிட்டாங்க.."

"சும்மாதான்.. உன் அம்மாவைப் போல நானும் நிக்நேம் வைத்துட்டேன்.. அதில உங்க அண்ணிக்கு கோபம் வந்திருச்சு.. அவ கிளம்பிப் போனதிலே எனக்கு ஈகோவந்திருச்சு.."

https://t.me/tamilpdfebooks

"அப்படி நீங்க கேட்கலாமா அண்ணா..? அண்ணி ரொம்பவும் சென்சிடிவ்.. இப்படிக் கேட்டா யாருக்குத்தான் கோபம் வராது..?"

"பாஸ்ட் இஸ் பாஸ்ட்.."

நரேந்திரன் வெறுமையாக சிரித்து விட்டுக் கிளம்பினான்.. அவன் மனம் முழுவதும் மனைவியிடமே இருந்தது..

'அப்படிக் கேட்டிருக்கக் கூடாது..' நரேந்திரன் நொந்து போனான்..

'எத்தனை முறை இதைப் பற்றிப் பேசியிருப்போம்.. ஒருதடவை கூட அவ வந்திருந்தது தோழிதான்.. தோழனில்லை என்ற விவரத்தை என்னிடம் சொல்லவே இல்லையே.. ராட்சசி..! அழகான ராட்சசி..!'

பல்லைக் கடித்தான்.. அவனுடைய செல்போன் ஒலித்தது.. எடுத்துப் பார்த்தான்.. அறிமுகமில்லாத நம்பர் வந்தது..

"ஹலோ.." என்றான்..

"நான்தான் அனாமிகா.." என்றது மறுமுனை..

"ஓ.. சொல்லுங்க.. சொல்லுங்க.. உங்க காரை டெலிவரி பண்ணிட்டாங்களா..?"

"ஓயெஸ்.. அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்.. தேங்க்யு வெரி மச்.."

"இட்ஸ் ஆல் ரைட்.."

https://t.me/tamilpdfebooks

பேசிக் கொண்டிருந்தவனின் மூளையில் மின்னலடித்தது.. அவன் மனதில் மழையில் குடையைப் பிடித்துக் கொண்டு நின்றவள் அனாமிகா என்ற அழைப்பிற்கு திரும்பாத காட்சி வந்து நின்றது..

அவள் சொன்ன முகவரியில் அவன் இறக்கி விட்ட போது அவள் வீட்டுக்குள் போய்விட.. வேறு ஒருவர் வந்து அவனிடம் யார் என்று கேட்கிறார்.. அவன் அனாமிகாவின் தோழியின் கணவன் என்று சொல்கிறான்.. அனாமிகாவா அப்படி யாரும் இங்கே இல்லையே என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அனாமிகா வீட்டுக்குள் இருந்து வெளியே வருகிறாள்..

'உங்க ஹெட் ஆபிஸ் எங்கே இருக்கு..?'

'நியூயார்க்கில் இருக்கு..'

'நரேந்திரா... அந்த ராதாகிருஷ்ணன் உன் பெண்டாட்டியை நியூயார்க்குக்கு வருகிறயா.. ஓடிப் போயிரலாம்ன்னு கேட்கிறான்ப்பா..'

'அவங்க ஜீன்ஸ் பேண்டும் காட்டன் சர்ட்டுமா நகைகளில்லாம செம அழகா இருப்பாங்கண்ணா... இண்டலெக்சுவல் பெர்சனாலிட்டி..'

அனைத்தும் ஒரே மையப் புள்ளியில் சேர்ந்ததில் நரேந்திரன் சொன்னான்..

"மிஸஸ் ராதா.. நான் உங்களைப் பார்க்கனுமே.."

மறுமுனை மௌனம் சாதித்ததில் நரேந்திரன் கண்களை மூடிக்கொண்டான்.. அனைத்தும் தெளிவானதில் அவனுக்குள் ஓர் அயர்வு வந்தது..

https://t.me/tamilpdfebooks

101

நீலவானை பிரிந்துசென்ற
நிலவாக ஒளிர்ந்து நிற்கும்..
அழகான ராட்சசி நீ....

“ஸோ... தி கிரேட் இண்டஸ்ட்ரியலிஸ்ட் நரேந்திரனுக்கு என்னைக் கண்டுபிடிக்க இத்தனை வருடங்களாகியிருக்கு..”

நேர் கொண்ட பார்வையுடன் சொன்னாள் ராதா.. அவளிடமிருந்த அந்த இயல்பான நிமிர்வில் நரேந்திரனுக்கு அவள்மீது மரியாதை வந்தது..

“அவள்தான் இடியாடிக்கா பிஹேவ் பண்ணியிருக் கான்னா நீங்களும் அதற்குத் துணை போயிருக்கீங்களே ராதா.. எனக்கொரு போன் பண்ணியிருக்கக் கூடாதா..?”

“ஊர்மிளா வேண்டாம்ன்னு தடுத்துட்டா.. பிராமிஸ் கேட்டா.. என்னால அவ பேச்சை மீற முடியாது..”

அவர்கள் ஒரு காபி ஷாப்பில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.. ராதாவின் முகத்தில் அதுநாள்வரை காணாத ஓர் அமைதியையும், நிம்மதியையும் அவன் கண்டான்.. அதைப்பற்றி அவளிடம் சொன்னபோது ஒப்புக் கொள்வதைப் போல அவள் தலையசைத்தாள்...

“ஒரு வகையில் இந்தப் பிரச்னையில் நானும் ஓர் அங்கமாகி இருந்தேன் மிஸ்டர் நரேந்திரன்.. என்

https://t.me/tamilpdfebooks

தோழியைப் பார்க்க வந்தேன்.. வந்த இடத்தில் அவளைச் சுற்றி சிலந்தி வலையைப் போல சதி பின்னிக் கிடந்தது.. அந்த சதியில் முக்கிய சவாலாக என் பெயரை அவங்க பயன்படுத்தியிருந்தாங்க.. ஊர்மிளா உணர்வு பூர்வமானவ.. ஈஸியா அவங்க விரிச்ச வலையிலே போய் மாட்டிக்கிட்டா.. அவ வெளியே வந்தால்தான் எனக்கும் நிம்மதின்னு தோணிருச்சு.. ஒருவகையில் உங்களின் வரவுக்காக நானும் காத்திருந்தேன் மிஸ்டர் நரேந்திரன்.. நீங்களும் வந்தீங்க.. ஊர்மிளாவின் நம்பிக்கையை உடைச்சுட்டிங்க.. எதைக் காரணமாய் வைத்து ஊர்மிளா வீட்டை விட்டு வெளியேறினாளோ... அந்தக் காரணமாய் நானே ஆனபிறகு என்னால் நியூயார்க்குக்கு திரும்ப முடியலை.."

"வாட்...? அப்போதிருந்து நீங்க இந்தியாவில்தான் இருக்கீங்களா..?"

"யெஸ்.. டெபுடேசனை கண்டினியு பண்ணிக் கொண்டு இந்தியாவில்தான் இருக்கிறேன்... என் ஹஸ்பெண்ட் சிக்ஸ் மன்த்ஸ்க்கு ஒருதடவை வந்து பார்த்து விட்டுப் போவார்.."

"என்னங்க இது..?"

நரேந்திரனுக்குள் குற்ற உணர்வு சூழ்ந்தது.. ஒரு பாவமும் அறியாத இந்த நல்ல பெண்.. அவனும், அவனுடைய மனைவியும் பிரிந்திருந்ததினால்.. கணவனைப் பிரிந்து இந்தியாவிலேயே தேங்கி விட்டாளா..?

"என்னால முடியலை மிஸ்டர் நரேந்திரன்.. ஊர்மிளா தஞ்சையில் இருந்தா.. நான் சென்னைக்கு டெபுடேசனை மாற்றிக்கிட்டேன்.. நானும் அமிர்தாவும் ஊர்மிளாவுக்கு துணையாய் நின்றோம்.."

https://t.me/tamilpdfebooks

அவன் யோசிக்காமல் கேட்ட ஒரு கேள்வியினால்.. அவன் மனைவி அவன் நிழலிருந்து விலகிச் சென்று தோழிகளின் நிழலில் நிற்க வேண்டி வந்து விட்டதே..

"ஊர்மிளாவைப் பார்க்க.. இல்லையில்லை.. உங்கள் மகனைப் பார்க்க நீங்க தஞ்சைக்கு வந்தீங்க... உங்க மகனுக்காக ஊர்மிளாவையும் சென்னைக்கு அழைத்து வந்தீங்க.."

"ஏங்க.. அவளுக்காக நான் அவளை அழைத்துக் கொண்டு வர மாட்டேன்னு எப்படிங்க நீங்க நினைக்கலாம்.."

"நான் நினைக்கலை மிஸ்டர் நரேந்திரன்.. உங்க வொய்ப் அப்படித்தான் நினைத்துக்கிட்டு இருக்கா.."

"அவ எதைத்தான் நினைக்க மாட்டா.. நினைக்க வேண்டிய என்னை நினைக்க மாட்டா.. தேவையில்லாத அத்தனை நினைவையும் நினைப்பா.."

நரேந்திரன் எரிச்சல்பட்டான்... ராதா லேசாக முறுவலித்தபடி அவள் முன்னாலிருந்த காபியை ஸ்பூனில் கலக்கினாள்..

"ஒரு போன்கால்... அதைக்கூட ஊர்மிளாவை அட்டெண்ட் பண்ண விடலை.. என் கண் முன்னால்தான் அத்தனையும் நடந்தது.. அன்றைக்கு ஊர்மிளா துடித்த துடிப்பை இன்னும் என்னால் மறக்க முடியலை.."

"இவ எதிர்த்துப் போராடியிருக்கனும்.."

"போராடலைன்னு உங்களுக்குத் தெரியுமா..? போராடியவளிடம்தான் அவங்க சவால் விட்டு அவளையும் அதில் சிக்க வைத்துட்டாங்களே..."

ராதா அனைத்தையும் சொன்னாள்.. பிரச்னையின் ஆணிவேரை அறிந்தவள் அவள் என்பதால் அதைப் பிட்டுப்

https://t.me/tamilpdfebooks

பிட்டு வைத்தாள்.. ஊர்மிளாவின் காதலை அகல்யா பணயம் வைக்க வைத்து விட்ட கதையை தெளிவு படுத்தினாள்..

"அவ உங்களைக் காதலிச்சா மிஸ்டர் நரேந்திரன்.. அந்த அளவு கடந்த காதலினாலே யார் என்ன சொன்னாலும் நீங்கள் அப்படிப்பட்ட கேள்வியை அகல்யாவின் முன்னால் அவளைப் பார்த்துக் கேட்க மாட்டிங்கன்னு நம்பினா.. அந்த நம்பிக்கையைத்தான் நீங்க உடைத்துட்டிங்க மிஸ்டர் நரேந்திரன்.."

"அவ வயிற்றில் என் குழந்தையிருந்ததை மறைக்கலாமா..?"

"மறைக்கலை.. அதைப் பற்றிச் சொன்னா.. அதைக் காரணம்காட்டி உங்க மனதை அவ திசைதிருப்பிட்டான்னு அகல்யா சொல்லிக்காட்டுவாங்கன்னு நினைச்சா.."

"சேச்சே.." அருவெறுத்தான் நரேந்திரன்..

"அதுக்குப் பின்னாலே அவளைத் தேடி நீங்க வருவீங்கன்னு தினம் தினம் அவ எதிர்பார்த்தா மிஸ்டர் நரேந்திரன்.. நீங்க வரலை.. அப்படி வந்தப்ப.. அவளுக்காக வராம உங்க மகனுக்காக வந்து நின்றிங்க.. அப்போதும் சுரேனின் ட்ரீட்மெண்ட் செலவுக்காகத்தான் உங்களிடம் உங்க மகனைப் பற்றி அவள் சொன்னாள்ன்னு பழி போட்டிங்க..."

"கோபத்தில் வந்த வார்த்தைங்க..."

"எப்படி வந்திருந்தாலும் வார்த்தை.. வார்த்தைதானே.."

இதமாக புன் முறுவல் செய்தபடி கூர்மையாக கேட்டாள் ராதா..

https://t.me/tamilpdfebooks

'இவள் கெட்டிக்காரி..' நரேந்திரன் சிலாகித்தான்..

பேச வேண்டியதையெல்லாம் பேசி முடித்து விட்ட மனநிறைவுடன் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள் ராதா.. நரேந்திரன்..

"தேங்க்ஸ்.." என்று மனமார நன்றி சொன்னான்..

"எதுக்கு..?"

"எல்லாத்துக்கும்.."

அவர்கள் புரிதலுடன் சிரித்துக் கொண்டார்கள்..

"இனி பெயரில்லாத அனாமிகாவாக நீங்கள் இருக்க வேண்டிய அவசியம் இருக்காது.." நரேந்திரன் சொன்னான்..

"ஷ்யூர்.." என்றாள் ராதா...

"அன்றைக்கு உங்களோட ரிலேடிவ் அனாமிகான்னு யாரும் இங்கே இல்லையேன்னு என்னை சந்தேகமாய் ஓர் பார்வை பார்த்தார் பாருங்க.. மறக்க முடியாது..."

இப்போது அவர்கள் பலமாக சிரித்தார்கள்.. சிரித்து முடிந்த நரேந்திரன்.

"பட்.. அவரோட அந்தக் கொஸ்டின்தான் எனக்கு உங்களை அடையாம் காண்பிச்சது.." என்றான்..

"இனி நான் நிம்மதியாக நியூயார்க்குக்கு ரிட்டர்ன் ஆகலாம்.." என்றாள் ராதா..

அவர்கள் எழுந்து நின்று கை குலுக்கிப் பிரிந்தார்கள்.. எதிரெதிர் திசைகளில் கார்களில் பறந்தார்கள்..

நரேந்திரன் வீட்டுக்குப் போன போது ஊர்மிளா சித்ரலேகாவுடன் சமையலறையில் வேலையாக இருந்தாள்.. ராஜேந்திரனுடன் விளையாடிக் கொண்டிருந் சுரேந்திரன்.. நரேந்திரனைக் கண்டதும்...

https://t.me/tamilpdfebooks

"டாடி.." என்று தாவினான்..

அவனைத் தூக்கி உச்சி முகர்ந்து கன்னத்தில் முத்தமிட்ட நரேந்திரனின் மனம் விம்மியது.. இந்த மகனை வயிற்றில் சுமந்தவளை அதைச் சொல்ல விடாமல் அகல்யா துரத்தியடித்தாளா..?

மகனை இறக்கி விட்டவன் கண்கள் சிவக்க சமையலறைக்குப் போனான்.. அவனைக் கண்டதும் ஊர்மிளாவின் உடலில் தோன்றிய விறைப்பை உணர்ந்தவனுக்கு வேதனையாக இருந்தது..

"என் பிரண்ட் வீட்டுக்குப் போகனும்.. வா.."

ஊர்மிளாவை அழைத்தான்.. என்னையா அழைக்கிறான் என்ற ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தவள் நகரவில்லை..

"இப்ப அவ வரப்போகிறாளா இல்லையா பாட்டி..?" நரேந்திரன் உறுமினான்..

"போயிட்டு வாம்மா.." சித்ரலேகா சிபாரிசு செய்தாள்..

ஊர்மிளா அப்போதும் தயங்கினாள்..

"ஏனாம்.. இவ ஹஸ்பெண்ட் ஏதாவது சொல்லிரு வானோன்னு பயப்படறாளா பாட்டி..?" என்று கேட்டு வைத்தான் நரேந்திரன்..

'எதுக்கெடுத்தாலும் இதை ஒன்னைக் கேட்டிருவான்..' ஊர்மிளாவின் முகம் குங்குமமானது..

"வழக்கமில்லாத வழக்கமெல்லாம் எதற்கு பாட்டி..?" என்றாள்..

"இனி வழக்கப் படுத்திக் கொள்ளச் சொல்லுங்க பாட்டி.." என்றான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

"சுரேன் அழுவான்.." ஊர்மிளா அடுத்த காரணத்தைத் தேடினாள்..

"இது ஆளில்லாத வனாந்தரம் பாரு.. சுரேனைப் பார்த்துக்க ஆளில்லாமல் இருக்கிறதுக்கு.." அதற்கும் மடிப்படித்தான் நரேந்திரன்..

"சும்மா அவளைக் கிண்டல் பண்ணாதே நரேன்.." சித்ரலேகா ஊர்மிளாவுக்காக பிரிந்து கொண்டு வந்தாள்..

"அவளைக் கிண்டல் பண்ணனும்னு எனக்கு மட்டும் வேண்டுதலா இருக்கு பாட்டி..? கிளம்பச் சொன்னா அசைகிறாளான்னு பாருங்களேன்.. அது இதுன்னு அழிச்சாட்டியம் பண்ணிக்கிட்டே நிற்கிறா.." பல்லைக் கடித்தான் நரேந்திரன்..

ஒரு வழியாய் ஊர்மிளா அவனுடன் காரில் ஏறினாள்.. அவன் முகம் பார்க்காமல் சாலையை வெறித்துக் கொண்டிருந்தவளுக்கு கார் போகும் பாதை எது என்று தெரியவில்லை... சற்றுப் பொறுத்துத்தான் அதை உணர்ந்தாள்..

'இது அகல்யாவோட வீட்டுக்குப் போகிற பாதை அல்லவா..?'

ஊர்மிளாவின் முகம் மாறிவிட்டது... அவள் கோபத்துடன் கார் கதவைத் திறக்கப் போனாள்... நரேந்திரனின் கை அவள் கையை இறுக்கி சிறை பிடித்தது.. அவள் திமிறினாள்..

"விடுங்க என்னை.. அந்த வீட்டில என் காலடியை வைக்க மாட்டேன்.."

"வைத்தவுடனே வந்து விடப் போகிறோம்.."

https://t.me/tamilpdfebooks

"இங்கேதான் கூப்பிட்டுக்கிட்டு வர்றீங்கன்னு ஏன் தாத்தா, பாட்டியிடம் சொல்லலை..? அவங்களுக்குத் தெரிந்திருந்தா என்னை அனுப்பி வைத்திருக்க மாட்டாங்கள்ல.."

"அதனால்தான் சொல்லலை..."

பிடிவாதமாய் பேசியபடி அகல்யாவின் வீட்டு போர்டிகோவில் காரை நிறுத்தினான் நரேந்திரன்.. வாசலில் நின்ற செக்யூரிட்டி முதல்.. கார் டிரைவர் ரமேஷ் வரை அவன் முன்னால் ஓடி வந்து நின்றார்கள்.. அவர்களைப் பார்த்து..

"உள்ளே வாங்க.." என்று சொல்லி விட்டு ஊர்மிளாவை கைப்பிடியாய் பிடித்தபடி வேகமாக வீட்டுக்குள் போனான்..

புயல் வரப் போவதை யூகித்தவளாக அடுப்பை அணைத்துவிட்டு ஹாலுக்கு வந்தாள் வனிதா.. அவள் பின்னால் வந்து நின்ற மாதுரி..

"யாருக்கா அவங்க..?" என்று சின்னப் பப்பாவைப் போல ஊர்மிளாவைக் காட்டிக் கேட்டு வைத்தாள்..

"அக்காவா..?" வனிதா முறைத்த முறைப்பில்..

"ஹி..ஹி.. வனிதா.." என்று சிரித்து வைத்தாள்..

"அடங்கவே மாட்டேன்கிறாளே.." வனிதா அங்கலாய்த்தாள்..

நரேந்திரன் வந்திருக்கும் செய்தியறிந்த அருண் குமாரும்.. அர்ச்சனாவும் தடதடவென்று மாடிப்படிகளில் இறங்கி வந்தார்கள்..

"அண்ணி.. எப்படியிருக்கீங்க..?" ஆவலுடன் வந்த அர்ச்சனா..

https://t.me/tamilpdfebooks

"போதும்.." என்ற நரேந்திரனின் கடுகடுப்பில் அப்படியே நின்று விட்டாள்...

"நரேன்.. வாப்பா..."

இருகைகளையும் விரித்தபடி ஆனந்தமயமாக அவளுடைய அறையிலிருந்து விரைந்து வந்தாள் அகல்யா..

"இந்தக் குடும்பத்துக்கு தலைவன் நீதான்ப்பா.. நீ சொல்லி நான் மாட்டேன்னு சொல்லிருவேனா..? அர்ச்சனாவை யாருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கனும்.. எங்கே கல்யாணம் பண்ணிக் கொடுக்கனுமுன்னு உனக்குத் தெரியாதா..? அவ நீ வளர்த்த குழந்தைப்பா.. கடைசிவரைக்கும் உன் சிறகுக் கடியில இருக்கப் போகிறவ.. அண்ணனா நீ இருக்கிறப்ப.. அவசரப்பட்டு நான் எந்த முடிவையும் எடுக்கக் கூடாதுதான்.. மன்னிச்சிருப்பா.. நீ இந்த வீட்டிலேயே இருந்திருந்தா இப்படியெல்லாம் நடந்திருக்காது.. நம்ம வீட்டை விட்டு நீ வெளியில போனதால்தான் இவ்வளவும் நடந்திருச்சு.. போனது போகட்டும்.. இனி குடும்பப் பொறுப்பை எடுத்துக்க நீ வந்திட்ட.. நான் எதிலயும் தலையிடாம ஒதுங்கி நின்னுக்கறேன்.."

அகலமாக பேசிய அகல்யா நரேந்திரனின் முதுகுக்குப் பின்னாலிருந்து வெளிப்பட்ட ஊர்மிளாவைக் கண்டதும் வாயடைத்துப் போனாள்..

"என்ன..? டிராமா போடறிங்களா..?" கடுமையாகக் கேட்டான் நரேந்திரன்..

"டிராமாவா..? நானா..?" அகல்யா விதிர்த்துப் போனவளைப் போல உடம்பைக் குலுக்க..

https://t.me/tamilpdfebooks

"அடச்சே..!" என்றான் நரேந்திரன்..

அருண்குமார் தாங்க முடியாத சங்கடத்துடன்..

"அம்மா.." என்று ஆட்சேபக் குரலை எழுப்பி அகல்யாவின் விதிர்த்தலை நிறுத்தி வைத்தான்..

"ஆயிரம்தான் சொல்லு வனிதா.. நடிப்புன்னு வந்துட்டா இந்தம்மா ஊர்வசி அவார்டை வாங்கிட்டுத்தான் மறுவேலை பார்ப்பாங்க.." மாதுரி பாராட்டி விட்டு..

"உன்னை விடவா..?" என்ற வனிதாவின் குத்தலை வாங்கிக் கட்டிக் கொண்டாள்..

"ஹலோ.. நானொன்னும் உங்க மகளின் கல்யாண ஏற்பாடை தடுத்த நிறுத்த இங்கே வரலை.. உங்க மகளை நீங்க யாருக்கு வேண்டும்னாலும் மேரேஜ் பண்ணிக் குடுங்க.. எனக்கென்ன வந்தது..?" எடுத்தெறிந்து பேசினான் நரேந்திரன்..

"இப்படிப் பேசாதேப்பா.. நீதானேப்பா இவளுக்கு அண்ணன்.." அகல்யா மூக்கைச் சிந்தினாள்..

"கூடப்பிறந்த அண்ணன் அருண்குமார் மட்டும் தான்.. நானில்லை.. அவனோட தங்கைக்கு ஒன்றுன்னா அவன் தட்டிக் கேட்டுக்குவான்.. எனக்கெதற்கு அந்த வேலை..? நான் வந்த வேலையே வேறு.." பல்லைக் கடித்தான் நரேந்திரன்..

'எதுக்கு வந்திருக்கான்..?' அகல்யா கண்கள் இடுங்க ஊர்மிளாவை முறைத்தாள்..

'இந்தச் சிறுக்கி எதையாவது ஓதிவிட்டுக் கூப்பிட்டுக் கிட்டு வந்திருப்பாளோ.. இருக்காதே.. இது நேர்மை

https://t.me/tamilpdfebooks

அது இதுன்னு பைத்தியக்காரத்தனமா பினாத்திக்கிட்டு இருக்கிறவளாச்சே.. இவ சொல்லியிருக்க மாட்டா...'

எதுவாக இருக்கும் என்று அனுமானிக்க முடியாமல் தலை காய்ந்து போனாள் அகல்யா.. நரேந்திரன் வீட்டு வேலையாள்களை வரிசையாக நிற்கச் சொன்னான்.. மறுபுறம் அருண்குமாரையும் அர்ச்சனாவையும் நிற்கச் சொன்னான்.. கேட்டான்..

"சொல்லுங்க.. இந்த வீட்டுக்கு வந்து போன ராதாகிருஷ்ணன் யார்..?"

ஊர்மிளா அசைவற்று நின்று விட்டாள்.. வேலையாள்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.. அருண்குமாரும்.. அர்ச்சனாவும் அதையே செய்தார்கள்..

"அப்படி யாரும் இங்கே வரலையேங்கய்யா.."

"நல்லா யோசிச்சுப் பதில் சொல்லுங்க.. ராதாங்கிற பெயரில யாராவது வந்து போனாங்களா..?"

"ஆமாங்கய்யா.. அம்மாவோட கூடப் படிச்ச சிநேகிதி ஒருத்தங்க ராதான்னு சொன்னாங்க.. நீங்க வெளிநாட்டுக்குப் போயிருந்தப்ப அவங்கதான் இங்கே வந்திருந்தாங்க.."

"அருண்.. அர்ச்சனா..?"

"இது என்ன கேள்வின்னே எங்களுக்குத் தெரியலண்ணா.. ராதாங்கிற அண்ணியோட பிரண்டைத்தான் எங்களுக்குத் தெரியும்.. யார் அந்த ராதாகிருஷ்ணன்..?"

"அதை உன் அம்மாவிடம் கேளுடா அருண்.."

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் ரௌத்திரமாக அகல்யாவின் பக்கம் திரும்பினான்.. அவனது சிவந்த கோபமான விழிகளில் நடுநடுங்கிப் போனாள் அகல்யா...

"சொல்லு... யார் அந்த ராதாகிருஷ்ணன்..?" ஒருமையில் அவளை அழைத்துக் கேள்வி கேட்டான் நரேந்திரன்..

"அது வந்து நரேன்.. சும்மா விளையாட்டுக்கு.." அந்த நிலையிலும் பசப்பினாள் அகல்யா..

"கொன்று புதைச்சிருவேன்.." ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தான் நரேந்திரன்..

"அன்றைக்கு நான் இவளை கேள்வி கேட்டது உன் பேச்சை நம்பியில்லை.. இவளுடைய பிரண்ட் வந்ததை என்னிடம் போட்டுக் கொடுக்க உனக்கு எவ்வளவு தைரியம்ன்னு திட்டி விடலாம்ன்னுதான் கேட்டேன்.. அதுக்குப் பின்னாலே நீ எவ்வளவு சூழ்ச்சிகளைப் பண்ணி வைச்சிருக்க.. என் வொய்பின் செல்போனை தூக்கி ஒளித்து வைக்கனும்னா நீ எப்பேற்பட்ட பிறவி.."

"நரேன்.."

"என் பெயரைச் சொல்லாதே.. நீ செய்திருக்கிற இந்த கேடு கெட்ட வேலையை உன் பிள்ளைகளும் வேலைக்காரங்களும் தெரிந்துக்கனும்னுதான் இங்கே வந்தேன்.. இல்லேன்னா உன்னைப் போல பிறவிகள் இருக்கிற இடத்தில என் காலடிகூடப் படாது.. ச்சீ.. நீயெல்லாம் ஒரு மனுசி.."

நரேந்திரன் பேச வேண்டிய அளவுக்கு பேசித் தீர்த்து விட்டான்.. அத்தனை பேச்சுக்களையும் வீட்டு வேலையாள்களின் முன்னிலையில் பேசித் தீர்த்தான்.

அகல்யாவின் பிள்ளைகளே அவளை புழுவைப் பார்ப்பதைப் போல பார்த்தார்கள்..

“பேசாம நீங்க பாய்சனைக் குடிச்சிருங்கம்மா.. அர்ச்சனாவுக்கு நான் வேற இடத்தில மாப்பிள்ளை பார்த்து நிச்சயம் பண்ணிட்டேன்..” என்று சொல்லி விட்டான் அருண்குமார்..

அதைக் கேட்ட வீட்டு வேலையாள்களின் நமட்டுச் சிரிப்பில் அகல்யா இடிந்து போனாள்.. அவளைத் துச்சமாகப் பார்த்தபடி நரேந்திரனைப் பின் தொடர்ந்து வெளியேறிய ஊர்மிளாவின் நடையில் வெற்றிச் செய்தி இருந்தது..

102

உன் உயிரில் எனைக் கரைத்து
என் உயிரில் கலந்து விட்ட
அழகான ராட்சசி நீ....

சாலையோர மரங்களின் நிழலில் நரேந்திரனின் கார் நின்றிருந்தது.. அவனுடைய வலிமையான கரம்.. அவளுடைய தளிர் விரல்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டது.. ஊர்மிளா விரல்களை உறுவிக் கொள்ள வில்லை.. மௌனமாக இருந்தாள்..

“பேசு ஊர்மிளா..” நரேந்திரன் குரல் கரகரத்தது..

“இத்தனை நாள்களாகத்தான் என்னிடம் பேச உனக்கு எதுவுமே இல்லை இப்ப என்னடி..? மனம் திருந்தி

https://t.me/tamilpdfebooks

உன்னிடம் மன்னிப்புக் கேட்டு வந்திருக்கிறேன் ஊர்மிளா.. மன்னிக்க மாட்டாயா..?"

ஊர்மிளாவின் கண்கள் கலங்கின.. இமையோர நீர்த்துளிகள் அவன் கரத்தின்மீது விழுந்து உதிர்ந்தன..

"தாயில்லாப் பிள்ளைடி.. உன்னையே தஞ்சம்ன்னு அடைக்கலம் கேட்டு வந்திருக்கிறேன்.. அடைக்கலம் தர மாட்டாயா..?"

நரேந்திரன் விட்ட அஸ்திரம் மிகச் சரியாக தன் வேலையைச் செய்தது.. தேம்பியபடி அடைக்கலம் கேட்ட நரேந்திரனிடம் அடைக்கலம் புகுந்தாள் ஊர்மிளா..

தேம்பிய மனைவியை இழுத்து அணைத்துக் கொண்டான் நரேந்திரன்.. அவன் முகத்தில் பழைய வெளிச்சம் மீண்டு வந்திருந்தது.. மனைவியின் முடி கோதியவன் அவள் கூந்தலில் முகம் புதைத்தான்..

'எத்தனை நாளாச்சு..'

அவன் உடலில் தாபம் பொங்கியது.. வேட்கையுடன் அவளை ஆளத்துடித்தவன் அவள் காதோரமாக பேசினான்..

"நீயில்லாத வாழ்க்கை எனக்க வாழ்க்கையா இருந்த தில்லை ஊர்மிளா.. என் கேள்விக்கு பதில் சொல்லாம நீ விலகிப் போனதை என்னால் தாங்கிக்க முடியலை.. இவ்வளவுதானா உன் காதல் என்றிருந்தது.. என்மேல் உனக்கு நினைவில்லையான்னு கோபம்.. கோபமா வந்தது.. நீ என்னைத் தேடலைன்னு நான் நினைத்தேன்.."

"நானும் அப்படித்தான்.." ஊர்மிளா முணுமுணுத்தாள்..

"உன் அப்பா என்னிடம் சண்டை போட்டிருக்கனும்டி.. அந்தச் சாக்கிலாவது நான் உன்னைப் பார்த்திருப்பேன்.. அதற்கும் வழிஇல்லாம அவரும் பேசாம இருந்துட்டார்.."

https://t.me/tamilpdfebooks

"எப்படிப் பேசுவார்..? வீட்டை விட்டுப் போன பெண்டாட்டி எங்கே போனா.. என்ன ஆனான்னு தேடி அலையாத புருசனிடம் என்னத்தைக் கேட்டு அவர் சண்டை போடுவார்..?"

ஊர்மிளாவின் குரலில் இருந்த விரக்தியில் நரேந்திரன் குற்ற உணர்வைக் கொண்டான்..

"மன்னிச்சிருடி.." இறைஞ்சினான்..

ஊர்மிளா கருணையுடன் அவனை அரவணைத்துக் கொண்டாள்.. அவன் காதலித்த அந்த அழகான ராட்சசியின் முகம் தேவதையின் முகத்தைப் போல சுடர் விட்டுப் பிரகாசித்தது..

"உங்களிடம் நானும்.. என்னிடம் நீங்களும் மன்னிப்புக் கேட்கனும்னா நம்ம வாழ்க்கை முழுவதும் மன்னிப்புக் கேட்பதிலேயே கழிஞ்சு போயிரும்.. போனதை விட்டுத் தள்ளுங்க.."

"உன்னால் முடியுமா..?"

"இனி முடியும்.. அகல்யா என்னிடம் விட்ட சவாலில் நான் ஜெயிச்சுட்டேன்.. அது போதும் எனக்கு.."

"என்மேல் உனக்கு வருத்தமே இல்லையா.?"

"அது இருக்கு நிறைய.. பட்... அதுவும்கூட போகப் போக சரியாகிரும்ன்னு நினைக்கிறேன்.. ஏன்னா.."

"ஏன்னா..?"

"ஐ லவ் யு மிஸ்டர் நரேந்திரன்.."

கண்களில் காதல் வழியச் சொன்னாள் ஊர்மிளா.. எந்தக் காதலை அவள் கண்களில் நரேந்திரன் தேடினானோ.. அந்தக் காதல் அவள் கண்களில் நிரம்பி வழிந்தது.. நரேந்திரனின் அடி மனதில் ஆசை எழுந்தது.. அவன் தேடிய

https://t.me/tamilpdfebooks

காதலை அவள் கண்களில் கண்டு விட்டவனின் உடல் அவளைத் தழுவிக் கொள்ளத் துடித்தது..

"உனக்காக உன்னை சென்னைக்கு அழைச்சுட்டு வரலை.. என் மகனுக்காகத்தான் அழைச்சுக்கிட்டு வந்தேன்னு சொன்னியாமே.."

"ஆமாம்.. அதற்கென்னவாம்..?"

"பழிவாங்காதேடி.. உனக்கே தெரியும்... நான் உன்மேலே எவ்வளவு பைத்தியமா இருந்தேன்னு.. நான் என்ன நினைச்சேன் தெரியுமா..?"

"சொன்னால்தானே தெரியும்.."

"உன் மகனுக்காகத்தான் நீ என் பின்னால் வந்தேன்னு மனசுக்குள்ளே புழுங்கிக்கிட்டு இருந்தேன்.."

இருவரின் மனத்தாங்கலும் ஒரே விதமான கோபதாபத்துடன் இருப்பதை புரிந்து கொண்டவர்கள்.. ஒருவரையொருவர் காதலுடன் பார்த்துக கொண்டார்கள்..

"சுரேனோட ட்ரீட்மெண்ட் செலவுக்காகத்தான் நான் உங்களுக்கு தகவல் சொன்னேன்னு சொன்னீங்க.."

"அது கோபத்தில் வந்த வார்த்தைன்னு உனக்கே தெரியும்... வருத்தத்திலே பேசினதை நீ பெரிசா எடுத்துக்குவியா..? நீ கூடத்தான் நான் உனக்கு வாங்கிக் கொடுத்திருந்த வைர நகைகளை தொட்டுப் பார்க்காமல் விட்டுவிட்டுப் போன... அந்த சிச்சுவேசனில அந்த நகைகளிலே ஒன்னு உன்னிடம் இருந்தாக்கூடப் போதும்.. நீ கலங்கி நின்னிருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது.."

"அதுசரி.. உங்களையே விட்டுவிட்டுப் போகிறவ.. நகைகளை விட்டு விட்டுப் போக மாட்டேனா..?"

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளாவின் கேள்வியில் அவள் நெற்றியில் முத்தமிட்டான் நரேந்திரன்.. அவள் உடல் சிலிர்த்தது.. அதை அவன் உடல் உணர்ந்தது.. சூடேறும் உடலை கட்டுக்குள் வைத்திருக்க அவன் பெரும் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது..

"நான் கன்சீவ் ஆகியிருந்தைச் சொல்லியிருந்தா் என்னைப் போக விட்டிருக்க மாட்டேன்னு நீங்க சொன்னீங்க.. எனக்காக நீங்க என்னைத் தடுத்து நிறுத்தனும்னு நினைக்கலை.. உங்க குழந்தைக்காகத்தானே நினைச்சீங்க..?" ஊர்மிளா துயரத்துடன் கேட்டாள்..

"அப்படியில்லைடி.. நீ கன்சீவ் ஆகியிருக்கிறதைச் சொல்லியிருந்தா.. அகல்யாவின் விளையாட்டுக்கே அங்கே இடமிருந்திருக்காது.. நேரே உன்னைக் கொண்டு போய் பாட்டியிடம் சேர்த்திருப்பேன்.. அந்த அர்த்தத்தில் தான் நான் சொன்னேன்.." விளக்கம் சொன்னான் நரேந்திரன்..

"உங்க மகன் பிறந்திருக்கிறதைச் சொல்லியிருந்தா.. என்னைத்தேடி வந்திருப்பீங்கன்னும் சொன்னீங்க.."

"எனக்குக் காரணம் வேண்டாமாடி..? எனக்கும் ரோசம் இருக்காதா..? நான் வேண்டாம்ன்னு விட்டு விட்டுப் போன பெண்டாட்டியை இழுத்துக் கொண்டு வந்து என் கைபிடிக்குள் அடக்கிக்க எனக்கும் காரணம் தேவைப்பட்டுச்சு... அப்படிக் காரணம் கிடைத்ததும் உன்னை 'ப்லேக்' பண்ணி என் கண்ட்ரோலுக்குள் கொண்டு வந்தேனா இல்லையா..?"

பேசினார்கள்.. அத்தனை நாள்களாக அவர்கள் இருவரின் மனதிலும் புதைந்து கிடந்த காதலைக் கொட்டிக் கவிழ்த்து விட்டார்கள்.. வீட்டுக்குப் போனபோது சித்ரலேகா.. வாசலிலேயே காத்திருந்தாள்..

https://t.me/tamilpdfebooks

"பாட்டி..."

முகம் சிவக்க வந்து அவளைக் கட்டிக் கொண்ட ஊர்மிளாவின் சந்தோசம் விவரத்தை முரசறிவிக்க.. அவள்..

"நரேன்.." என்று மகிழ்ந்து போனாள்..

"நீங்க சொன்னதை வைத்துத்தான் தேடிப் போனேன் பாட்டி.."

"யாரை..?" என்று முறைத்தாள் ஊர்மிளா...

"உண்மையைடி.. உன்னையே தேடி வராதவன்.. வேற யாரைடி தேடிப் போயிருப்பேன்.." நரேந்திரன் மிரள்வதைப் போலப் பாவனை செய்தான்..

அன்றைய இரவில் சித்ரலேகா சுரேந்திரனை அவர்களின் அறையில் படுக்க வைத்துக் கொண்டாள்..

மழை கொட்டிக் கொண்டிருந்தது.. வலுத்த மழையின் ஓசையைக் கேட்டபடி மாடிப்படியில் கால் வைத்த ஊர்மிளாவின் மனம் புதுமணப்பெண்ணைப் போல படபடத்தது.. கை, கால்கள் வெடவெடக்க.. ஊர்மிளா மாடிக்குப் போனாள்.. நரேந்திரனின் வேட்கை ததும்பிய பார்வையை சந்தித்தவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.. அவளுக்காகவே காத்திருந்த நரேந்திரன் கதவை மூடித் தாழிட்டான்.. அவன் ஆசையுடன் அவளை அணுகிய போதெல்லாம் அவள் மறுத்து விலகி விட்டதை நினைத்துப் பார்த்தபடி அனைத்து வேட்கைகளையும் ஒட்டு மொத்தமாக திரட்டியவனாக அவளை நெருங்கினான்..

தப்பிக்கும் மார்க்கம் இல்லாமல் அகப்பட்டு விட்டதைப் போல உணர்ந்தாள் ஊர்மிளா.. இது அவள் விரும்பிய அடைக்கலம்.. என்பதில் அவள் விரல்கள் நடுங்கின.. வெற்றுமார்புடன் இருந்த நரேந்திரன்.. முகம் துடைத்துக் கொண்டிருந்த துவாலையை அருகிலிருந்த சோபாவின் மீது

https://t.me/tamilpdfebooks

போட்டு விட்டு அவளை நெருங்கினான் அவளை அணைத்து முத்தம் கொடுத்தவன்..

"அப்புறம்..?" என்றான்..

ஊர்மிளாவின் முகம் சிவந்து விட்டது.. அத்து மீறிய அவன் கைகள் பழைய தேநிலவு நாள்களுக்கு அவளை அழைத்துச் சென்றன.. வருடக் கணக்கில் அவனுக்குள் புதைந்திருந்த உணர்வுகள் கரையுடைத்ததில் ஊர்மிளா அடித்துக செல்லப்பட்டாள்.. மூச்சுத் திணற அந்த வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தவளை ஆக்ரமித்து திருப்தி கண்ட நரேந்திரன் விடியலின் போது விலகிப் படுத்து அவள் காதுகளில் முணுமுணுத்தான்..

"நீ அழகான ராட்சசிடி.."

ராம்குமார் டிபார்ட்மெண்டல் ஸ்டோரைச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.. அவனருகில் நெருங்கிய கனத்த காலடி சப்தத்தில் திரும்பினான்..

"உங்களிடம் பேசனுமே.." என்றபடி நரேந்திரன் அங்கே நின்றிருந்தான்.

அவன் என்ன பேசப்போகிறான் என்பதை ராம்குமார் யூகித்து விட்டாலும்.. எதுவும் சொல்லாமல் தலையை அசைத்து நரேந்திரனை மரியாதையாக வரவேற்றபடி அலுவலக அறைக்குள் நுழைந்தான்.. இருவரும் எதிரும் புதிருமாக அமர்ந்தார்கள்..

"என்ன சாப்பிடறீங்க..? காபி ஆர் கூல்டிரிங்ஸ்..?" ராம்குமார் கேட்டான்..

"நான் காபி சாப்பிட வரலை ராம்குமார்.. அர்ச்சனாவைப் பற்றிப் பேச வந்தேன்.." நேரடியாக விவரத்திற்கு வந்தான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

“அர்ச்சனா என் அப்பாவுடைய அக்கா மகள்.. அவளைப் பற்றிப் பேச என்ன இருக்கு..?” வறண்ட குரலில் கேட்டான் ராம்குமார்..

“உங்களுக்கும், அவளுக்கும் இடையில் இருக்கிற காதல் இருக்கு..” அழுத்தம் திருத்தமாக சொன்னான் நரேந்திரன்..

“இல்லை சார்.. அது வேலைக்கு ஆகாது..” ராம்குமார் மறுத்தான்..

“ஏன்..?” பிடிவாதமாக வினவினான் நரேந்திரன்..

“அகல்யா அத்தையோட குணத்தைப் பத்தி நான் சொல்லித்தான் நீங்க தெரிந்துக்கனுமா..? பட்டுத் தெரிந்திருப்பீங்களே சார்..”

வினயமாக எடுத்துரைத்தான் ராம்குமார்.. அவன் எப்போதுமே நரேந்திரனை ‘சார்’ என்றுதான் அழைப்பான்.. அதை உடைத்து அவனை ‘அத்தான்’ என்ற உறவு முறையைச் சொல்லி அழைக்கும்படி அகல்யா மல்லுக் கட்டிப் பார்ப்பாள்.. அதற்கான காரணம் ராம்குமாரின் மீதான அக்கறையும், சொந்தமுமல்ல.. அகல்யாவின் தம்பி மகன் நரேந்திரனை அத்தான் என்று அழைக்காமல் சார் என்று அழைக்கிறான் என்ற விவரம் வெளியில் பரவி விடக் கூடாது என்பதற்காக..

அதை உணர்ந்தவனைப் போல நாசுக்காய் அகல்யாவின் வற்புறுத்தலைத் தட்டிக் கழித்து விடுவான் ராம்குமார்..

எப்போதுமே தள்ளி நின்று இடைவெளியை பாதுகாக்கும் அவனது தன்மையில் நரேந்திரனுக்கு மரியாதை உண்டு.. அப்படிப்பட்ட ராம்குமார் அர்ச்சனாவைக் காதலித்தும் அவள் அகல்யாவின் மகள் என்பதற்காக மறுப்பதில் அவனது மரியாதை அதிகரித்தது..

https://t.me/tamilpdfebooks

"என் வீடு நிம்மதியாய் இருக்கனம்னா நாங்க அகல்யா அத்தையை விட்டு தள்ளி நிற்கிறதுதான் நல்லது சார்.."

"தள்ளியே நில்லுங்க.. உங்களை யார் தடுத்தது..? அதை அர்ச்சனாவின் கழுத்தில் தாலியைக் கட்டி விட்டுச் செய்யுங்களேன்.."

"அது எப்படி சார்..?"

"அது அப்படித்தான் ராம்குமார்.. பெண்கள் பிறந்த வீட்டை விட புகுந்த வீட்டுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுப்பாங்க.. மேரேஜ் முடிந்ததும் அர்ச்சனா உங்களுடன் உங்க வீட்டுக்கு வாழ வந்து விடுவா.. அதுக்கப்புறம் நீங்கதான் அவளுக்கு உலகம்.."

நரேந்திரன் பேசிப் பேசி ராம்குமாரின் மறுப்புக்களைக் கரைத்தான்.. அகல்யாவின் பெண்ணாக பிறந்த குற்றத்தைத் தவிர அர்ச்சனா வேறு என்ன குற்றம் செய்தாள் என்று கேட்டான்.. பெற்றவள் செய்த பாவத்தின் சுமையை பெண்ணின் தலையில் ஏற்ற வேண்டுமா என்ற கேள்வியை ராம்குமாரின் முன்னால் வைத்தான்..

நரேந்திரனின் கிடுக்கிப்பிடி போர்முறையில் நியாயவாதியான ராம்குமார் சரணடைந்தான்..

"ஆனாலும்.. அகல்யா அத்தை இதற்குச் சம்மதிக்கனுமே.." என்றான்..

"அது சம்மதத்தை யார் கேட்டது..? அருண்குமார்தான் அவங்க வீட்டில் எல்லாமும்.. நீங்க அவனிடம் பெண் கேளுங்க.." நிலைமையை உணர்த்தினான் நரேந்திரன்...

"ஆச்சரியமாய் இருக்கே.. அகல்யா அத்தையைக் கூட ஓரம் கட்டி உட்கார வைக்க முடியுமா..?"

https://t.me/tamilpdfebooks

“இப்போதைக்கு முடிந்திருக்கிறது.. அது எப்போதும் நிலைத்து நிற்பது உங்கள் கையிலும்.. அருணின் கையிலும் இருக்கு..” என்றான் நரேந்திரன்..

இந்த ஒன்றிற்காகவே அர்ச்சனாவை திருமணம் முடித்தாக வேண்டும் என்ற உறுதி ராம்குமாருக்குள் வந்தது..

“ரம்யாவின் மேரேஜ் முடிந்ததும்தான் நான் என் கல்யாணத்தைப் பத்தி யோசிக்கனும்..” ராம்குமார் திட்டவட்டமாக சொல்லிவிட்டான்..

நரேந்திரன் அதற்கும் வழி வகை செய்திருந்தான்.. மும்பையில் இருந்த அவனின் உறவினர் வீட்டுப் பையனை ரம்யாவுக்கு பரிந்துரை செய்திருப்பதாக கூறினான்..

“உங்க தம்பியின் நினைவு வரவில்லையா..? இல்லை.. ரம்யாவை விட உயர்த்தியான இடத்திலிருந்து பெண் தேடுகி றீர்களா..?” ராம்குமார் மெலிதான கோபத்துடன் கேட்டான்..

“பெண் கொடுத்து பெண் எடுக்கிறது எப்பேற்பட்ட ஸ்ட்ராங்கான பிணைப்புன்னு எனக்கும் தெரியும் ராம்குமார்.. பட்.. அருணும் ரம்யாவும் இதை விரும்ப மாட்டாங்க.. நீங்க இதை ரம்யாவிடமே பேசித் தெளிவு பண்ணிக்கங்க..” அமைதியாக சொன்னான் நரேந்திரன்..

நரேந்திரனின் கணிப்பு மிகச் சரியானதாக இருந்தது.

“அதே வீட்டில் அருணின் கண்ணுக்கு முன்னாலே நான் நரேந்திரனை மயக்க டிரை பண்ணினேன் அண்ணா.. இதைச் சொல்கிறதுக்காக நீ என்னை மன்னிச்சிரு.. அப்ப எனக்கு அது தப்பாவே தெரியலை.. நரேந்திரனுக்கு டைவர்ஸ் ஆகிருச்சுன்னு நினைத்தேன்.. யாரையோ கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு அவரை கல்யாணம் பண்ணிக்கிட்டா

https://t.me/tamilpdfebooks

அகல்யா அத்தையை ஒரு வழி பண்ணி ஓரம் கட்டி உட்கார வைக்கலாம்ன்னு பிளான் போட்டேன்.."

அகல்யாவை ஓரம் கட்டி உட்கார வைப்பதற்காக தங்கை எப்பேற்பட்ட முயற்சியில் இறங்கியிருக்கிறாள் என்பதில் ராம்குமாருக்குள் தீ கனன்றது..

"என்னை மன்னிச்சிரு.. நரேந்திரனை மயக்க நினைச்சிட்டு அருண்குமாரை கல்யாணம் பண்ணிக்க என்னால் முடியாது.."

ரம்யாவின் குணத்தை நரேந்திரன் புரிந்து வைத்திருக்கிறான் என்பதில் அவன் மீதான மதிப்பு ராம்குமாருக்குள் அதிகரித்தது.. அவன் நரேந்திரன் சொன்ன மும்பை வரனின் வீட்டில் போய் திருமணப் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கினான்.. ரம்யாவின் திருமணம் முடிந்ததும் அர்ச்சனாவைப் பெண் கேட்டுப் போனான்..

"அதுக்கென்ன அத்தான்.. அடுத்த முகூர்த்ததிலேயே கல்யாணத்தை நடத்தி விடலாம்.." என்றான் அருண்குமார்.

அகல்யாவை யாருமே சட்டை செய்யவில்லை.. அர்ச்சனாவின் திருமணத்துக்கு கூட்டத்தோடு கூட்டமாக நரேந்திரனும் ஊர்மிளாவும் சென்று ஆசிர்வதித்து விட்டு வந்தார்கள்.. அர்ச்சனாவிற்கு திருமணப் பரிசாக வைர நகை செட் ஒன்றை வாங்கி பரிசளித்தான் நரேந்திரன்..

ராதா நியூயார்க்கிற்கு திரும்பினாள்.. அவள் திரும்பு வதற்கு முன்னால் காவேரிக் கரையில் தோழிகள் ஒன்று சேர்ந்து பேச வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.. நரேந்திரன் ஊர்மிளாவையும்.. சுரேந்திரனையும் அழைத்துக் கொண்டு மாமனார் வீட்டிற்குப் போனான்.. கணவன், குழந்தையென்று மகள் குடும்பசகிதம் வந்து இறங்கியதில் பூங்குழலி பூரித்து

https://t.me/tamilpdfebooks

விட்டாள்.. சோமசுந்தரமோ சுரேந்திரனுக்கு பொதுவுடமையைப் பற்றிய பாடத்தைப் போதிக்க ஆரம்பித்து விட்டார்..

காவேரி நதிக்கரையில் அமிர்தா, ராதா, ஊர்மிளா மூவரும் நடந்தபடி பேசிக் களித்தார்கள்.. தங்களின் தோழியின் வாழ்வு செம்மையாகி விட்டதில் ராதாவுக்கும், அமிர்தாவுக்கும் மன நிறைவு ஏற்பட்டது..

வெகுநேரம் பேசிக் கொண்டிருந்த ராதாவின் முகத்தில் நிம்மதி தெரிந்தது.. அவள் தோழிகளிடம் விடைபெற்று நியூயார்க்கிற்குக் கிளம்பிப் போனாள்..

"என்னால் அவளும் ஹஸ்பெண்டைப் பிரிஞ்சு நின்னா" நெகிழ்வுடன் சொன்னாள் ஊர்மிளா..

"அவ மனசில ஒரு கில்ட்டி கான்சியஸ்.."

முறுவலித்த அமிர்தாவும் டாட்டா சொல்லி விட்டு தஞ்சைக்குக் கிளம்பினாள்..

தோழிகளுடன் பேசிவிட்டு வீடு திரும்பிய ஊர்மிளாவை கையில் தடித்த புத்தகங்களுடன் எதிர் கொண்டான் நரேந்திரன்..

"இன்னைக்குள்ள இதைப் படிச்சு முடிக்கனுமாம்.. மாமனார் படுத்தறார்டி.."

ஊர்மிளா 'களுக்' என்று சிரித்தாள்.. அவளை அப்பிக் கொண்டவன்..

"நீ அழகான ராட்சசிடி.." என்றபடி அவளை ஆக்ரமித்தான்.

- முற்றும் -

https://t.me/tamilpdfebooks

லட்சுமி பாலாஜி பதிப்பகம்